ANGAYAR MALAR


ார்ச் '94 ரூ. 7/-

மங்கையர் மலர்



HIMACHAL TOURISM

சுற்றுலா சிறப்பிதழ்




அழகின் உருவம் சிரிக்கின்றது.
என்ன இந்த மென்மை
மிருதுவான டால்க் தன்மை
தொட்டுப் பாருங்கள் அதன் அருமை.
கனவின் உணர்வு, சுகந்த வாசனை
நுகருங்கள் இதன் மேன்மையை.
TIPS & TOES
TALC PLUS
LAVENDER FRAGRANCE
மென்மை என்றாலே இனிமை தானே!
புதிய
TIPS & TOES
TALC PLUS
லாவண்டர் மற்றும் ரோஜா வாசனைகளில்
Mudra:TT:1943:TM

சில பிரச்னைகள்; சில வார்த்தைகள்!

ஒரு விஷயம் விஷம் போல பரவிவருகிறது இப்போது. சாதாரண விஷம் இல்லை. அப்படியே மூளையை அரித்துக் கேவலமான சகதியில் தள்ளி அருவருப்பையே ஆடையாகப் போர்த்திக் கொள்ளும் விஷம்.

வானொலியோ, டி.வி.யோ, திரைப்படமோ, சாலை களிலோ... கேட்கச் சகிக்கவில்லை திரைப்படப் பாடல்கள். காதல் என்னும் மென்மையான உணர்வினை அழகாக, காவியமாகச் சொன்ன பாடல்கள் என்ற நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறி மூக்கல், முனகல் பாடல்களாக வர ஆரம்பித்தன. அந்த நிலையும் போய் இன்று மகா கேவலமாக வெளிப்படையாக உறவைப் பற்றிக் கூறும் பாடல்கள். ஆண்டவனே, அவற்றை உதாரணமாக எடுத்துக் சொல்லலாம் என்றால் கூட அதனால் மங்கையர் மலர் பக்கங்களே அழுக்காகி விடுமோ என்று தோன்றுகிறது.

திரைப்படப் பாடல்கள்தான்.... வேண்டும் என்று தியேட்டருக்குச் செல்பவர்கள் காதில் மட்டும் விழுந்தால் பரவாயில்லையே.. அருவருப்பாக ஒதுங்கிவிடலாம். படம் பார்க்காமல் இருக்கலாம். டி.வி.யிலே போட்டால் டி.வி.யை அணைத்து விடலாம். ஆனால் சாலையில் போகும்போது கடைகளிலே அலறுகின்றன. விழாக்களிலே 'இந்தப் பாடல்கள்' தெருவெல்லாம் முழக்கமிடுகின்றன. கூட வருபவரின் முகத்தைப் பார்க்கவே கூச வேண்டியதாக இருக்கிறது. அதுவும் குழந்தைகளோடு சென்று விட்டால் இன்னும் கேட்கவே வேண்டாம்.



சமீபத்தில் நெய்வேலியில் மகளிர் மருத்துவர் சந்திப்பிற்காகச் சென்றிருந்தோம். விழா நடக்கும் அரங்கத்தைப் பார்வையிடச் சென்ற போது அதன் பொறுப்பாளர் மேஜர் கே. நாராயண மூர்த்தியிடம் பேசிக் கொண்டிருந்தோம்.

'விழா மதியம் தேவையானவர்கள் டாக்டர்களைத் தனி யாக சந்தித்துப் பேசவும், இளம் பெண்களுக்கான தனி அரங்கமும் உள்ளது. மற்றவர்கள் சும்மா தானே இருப்பார்கள்? அந்த இரண்டு மணி நேரமும் போரடிக்காமல் இருக்க ஏதேனும் நடனம், மிமிக்ரி, நிகழ்ச்சிகள் நடத்தலாம் என்றிருக்கிறோம்' என்ற போது அவருக்கு வந்ததே கோபம்-

''இந்த மாதிரி பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பார்த்துதான் நம்முடைய நாடே குட்டிச் சுவராகி விட்டது. நடனம் என்றால் யாரா

மஞ்சுளா ரமேஷ்

வது வந்து சினிமாப் பாட்டுக்கு உடம்பை வளைத்து வளைத்து நடனம் ஆடப்போகிறார்கள். மிமிக்ரி என்றால் அரசியல் தலைவர்களைப் போலப் பேசுவார்கள். இதனால் என்ன பயன்? இதனால் நாம் காண்பவர்களுக்கு எந்த வகையில் சேவை செய்கிறோம். நம்முடைய நாட்டிற்கு என்ன பிரயோஜனம்? நாம் நம்முடைய குழந்தைகளுக்கு எதை விட்டுப் போகப் போகிறோம்? இந்த சினிமா பாடல்களையா? டிஸ்கோ டான்ஸையா? இந்தக் கலாசாரத்தையா நாம் நம்முடைய சொத்தாக வழங்கப் போகிறோம்?''என்றார். எத்தனை சத்யமான வார்த்தைகள். கேவலத்திலும் கேவலம் மகாகேவலமாக இன்றைய பாடல் கள் உள்ளன. இதைப் பற்றிச் சமீபத்தில் கூட ஒரு மாதர்சங்கம் விவாதங்கள் நடத்தியது. அதைப் பற்றிய நீளமான விளக்கங்களும் மற்ற பத்திரிகைகளில் வந்தன. பதிலுக்குப் பதில் விவாதிப்பதால், அழகாக மறுப்புரை சொல்லி விடுவதால் கேவலங்களை மூடி விடமுடியாது.

பதில் சொல்பவர்களின் வாதங்களை படித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஏன் நம்ம கோயில்களில் இல்லையா, இலக்கியப் பாடல்களில் இல்லையா? எங்கே ஆபாசம் இல்லை என்றெல்லாம் கொடி கட்டுகிறார்கள். தேவையானவர்கள் தேவையான இடத்தில் எடுத்துக் கொள்ளும் படியாகத்தான் பெரியவர்கள் வைத்திருந்தார்கள். இப்படித் தெருத்தெருவாக 'உறவுப் பிரசாரம்' செய்து கொண்டு இருக்கவில்லை. பெண்கள் சங்கங்களோ, சங்கங்களில் இல்லாத பெண்களோ இனியும் சும்மா இருப்பதில் அர்த்தமில்லை. இதற்கு ஏதேனும் செய்தே ஆகவேண்டும். ஒவ்வொருவரும் இதைப்பற்றித் தங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

இனிபாடல்களை எழுதியவர்களை கூப்பிட்டுப் பேச வைப்பதில் அர்த்தமில்லை. இவர்கள் பெண், மனைவியெல்லாம் இதைக் கேட்டால் கூச மாட்டார்களா என்று சத்தம் போடுவதில் அர்த்தமில்லை. அவர்கள் வீட்டிலுள்ள பெண்மணிகளை கூப்பிட்டு நாம் பேச வேண்டும். அவர்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என நாம் தெரிந்து கொள்ளவேண்டும். 'உங்கப்பா இப்படி எழுதுகிறாரே நீ ஏன் சும்மா இருக்கிறாய்' எனக் கேட்க வேண்டும். 'உங்கள் கணவர் இப்படி படுக்கயறையை நடுத்தெருவில் விரிக்கிறாரே, உங்களுக்குத் தர்மசங்கடமாக இல்லையா?' என மனைவியை விசாரிக்க வேண்டும். அதை இங்கிருக்கின்ற மாதர்சங்கங்கள் செய்யுமானால் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும்.

இதை எழுதும்போது மனம் மீண்டும் மீண்டும் கொதிக்கிறது. எத்தனை கேவலம், எத்தனை கேவலம்! நான் இங்கே ஒரு வரியைக் கூட உதாரணமாகச் சொல்ல விரும்பவில்லை. பாடலாசிரியர்களே, வேண்டாம் இந்தப் பிழைப்பு. காசு கிடைக்கிறது என்பதற்காக யாரும் எந்தத் தொழிலையும் செய்து விடுவதில்லை. மனிதனாக வாழ கௌரவமாக வாழ பணம் வேண்டும், புகழ் வேண்டும்தான். அதற்காக தெருவெல்லாம் ப்ளூ ஃபிலிம் காட்ட வேண்டாம், உங்களையெல்லாம் கை கூப்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

பாடலாசிரியர்களான நாங்கள்தான் செய்கிறோமா என உடனே விவாதம் தான் கிளம்புகிறது. அதை நினைக்கும்போது தான் வேதனையாக இருக்கிறது. தவறுகள் உள்ளன என்றால் உடனே மேடையேறி பதில் சொல்லத்தான் ஆயத்தமாகிறார்கள் இங்கே. திரைப்படக் காட்சிகளிலே, வசனங்களிலே எல்லாவற்றிலேயும் விரசம் மிகுதியாகத்தான் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் கதைகளிலே, கதைகளின் படங்களிலே என வரிசையாக சொல்லிக் கொண்டே போகலாம்.

நாங்கள் எது ஆபாசம் என்ற பட்டிமன்றத்தை விரும்பவில்லை. விவாதம்பேச விரும்பவில்லை. இந்த நச்சுக் காளானைப் பரப்பாதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறோம்.

இளைய தலைமுறைக்கு நம்மால் ஆன, நல்லதைச் சொல்லவேண்டும். நம் வீட்டில் பிறந்த குழந்தைக்குப் பாலைக் கொடுக்க விரும்புவோம். சத்தான உணவினைக் கொடுத்து, நல்ல பள்ளிக்கு அனுப்பி நல்ல மகனாக, மகளாக அவர்களை வளர்க்கத் தானே விரும்புகிறோம்? அதை விடுத்து மகளையும், மகனையும் அரைகுறை ஆடையுடன் அசிங்கமாகப் பாடவா சொல்லுவோம்? நம் கையாலேயே போதை மருந்துகளைக் கொடுப்போமா??


கேவலமான வார்த்தைகளைப் பிரயோகிப்பவர் யாராயிருந்தாலும் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். உங்கள் குழந்தைகள் நன்றாக வளரவேண்டும் என்று தானே நினைக்கிறீர்கள்? அதேபோல ஊரிலுள்ள குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டாமா? உங்களைப் பெற்ற இந்தத் தாய்த் திருநாடு நன்றாக இருக்க வேண்டாமா?

ப்ளீஸ், நம் சமுதாயத்தை பெரியவர்களாக இருப்பவர்கள் நல்ல வழியில் அழைத்துச் செல்லுங்கள். புழுக்கள் நெளியும் சாக்கடையில் நடத்திச் செல்லாதீர்கள். அதிலே உங்கள் குழந்தைகளும் இருக்கிறார்கள். மறக்காதீர்கள்.

உத்திரகோசமங்கையில் உள்ள மிகவும் பழைமையான சிவன் கோவிலில் ஓர் அழகிய மரகதச் சிலை உள்ளது. இவ்வூர் பரமக்குடிக்கு 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

எல்லா ஆரோக்கிய பானங்களுமே உங்கள் குழந்தைக்கு ஊட்டச் சத்து தருகின்றன. எவ்வளவு என்பது தான் கேள்வி?





சரியான கேள்வி. வழக்கமான ஆரோக்கிய பானங்கள் இதில் கொஞ்சம், அதில் கொஞ்சமாக சத்துக்களைத் தருகின்றன. ஆனால் அது போதுமா? குறிப்பாக வேலையிலும் விளையாட்டிலும் மிக அதிகச் சக்தியைச் செலவிட வேண்டிய உங்கள் குழந்தை. ஆரோக்கியமாகவும் வலுவாகவும் வளர்ந்திட ஆரோக்கிய பானம் அதிகச் சக்தி தரவேண்டும் அல்லவா?

அறிமுகப்படுத்துகிறோம் நெஸ்லே போனஸ்



குழந்தை ஊட்டச் சத்தில் சர்வதேச நிபுணர்களான நெஸ்லேயின் சிறப்பான தயாரிப்பு புதிய போனஸ். வளரும் குழந்தைக்கு வேண்டிய கொழுப்புச் சத்து, கார்போஹைட்ரேட்ஸ், தாதுப் பொருட்கள், வைட்டமின்கள், கால்ஷியம், மினரல்கள், கூடுதல் புரோட்டீன் ஆகிய ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

போனஸ் கூடுதல் புரோட்டீன் தருகிறது



சில ஆரோக்கிய பானங்களில் உள்ளதை விட இரு மடங்கு அதிக புரோட்டீன்-33% கொண்டது போனஸ். இரண்டு தம்ளர் போனஸ் குடித்தாலே போதும் தினசரி புரோட்டீன் தேவையில் பாதி கிடைத்து விடுகிறது.*

கூடுதல் புரோட்டீன், அதிக வளர்ச்சி



தரமான புரோட்டீன்கள் உடம்பின் தசைத் திசுக்களையும் முக்கிய திரவங்களையும் உருவாக்குகின்றன. எனவே, புரோட்டீன் செறிந்த உணவைக் குழந்தைகளுக்குத் தரவேண்டும் என்கிறார் டாக்டர். தரமான புரோட்டீன் இயற்கையாக உள்ள சோயாவில் இருந்து போனஸ் தயாரிக்கப்படுகிறது. அது உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவாகவும் வளர உதவுகிறது.

பாலின் சத்தான நற்பயன்கள்


பாலின் கிரீம் சத்து முழுமையாக உள்ள போனஸ், மிகவும் துடிப்பான குழந்தைகளுக்கும் கூட சக்தி தருகிறது. எலும்புகளும் பற்களும் வலுவாக வளர்வதற்கு இன்றியமையாத கால்ஷியமும் இதில் உள்ளது.

குழந்தைக்கும் பிரியமான சுவை

தன்னிகரற்ற போனஸ் சுவையை உங்கள் குழந்தை எந்த நேரமும் விரும்பும். ஏற்கனவே இனிப்பூட்டப்பட்டது. என்றாலும், சிறிது சர்க்கரை சேர்த்தால் சுவை அதிகரிக்கும்.

நீங்களும் விரும்புவீர்கள்

ஒரு தம்ளர் தண்ணீரில் 3 டேபிள்ஸ்பூன் போனஸ் கலந்தாலே போதும். கட்டியோ பசையோ இல்லை. சுலபத்தில் ஆரோக்கிய பானம் தயார். பாலுடனும் போனஸ் கலக்கலாம். விலை பற்றிக் கவலை வேண்டாம். நீங்கள் வாங்கக் கூடிய விலைதான். புதிய நெஸ்லே போனஸ், கூடுதல் புரோட்டீனுடன். உங்கள் குழந்தைக்கு ஊட்டச்சத்து அதிகம் தேவைப்படும்போது, அதிகம் அளிக்கும் ஆரோக்கிய பானம் தர வேண்டாமா?





* 40% of protein requirement for age group 4-6 years. (ICMR Report 1992)

புதிய யுகத்தின் ஆரோக்கிய பானம்.

Mudra/NES:0035-TML



பாலியஸ்டர் பட்டில்
வண்ணங்கள் விளையாடின
இப்பொழுது
ஜார்ஜெட், ஷிஃபானில்
வானவில்லே விளையாடுகிறது.
பேன்ஸி பிரிண்டட், Alisha, Natasha, Gold line,
Hi-Tech, Gold mist, Gold, Monarch, Amazon. Fax
போன்ற எண்ணற்ற ஷிபான்
மற்றும் ஜார்ஜெட் புடவைகளை
அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கிறது
சாரதா கலெக்ஷன்ஸ்.
Sharda® Collections
எல்லா பிரபல ஜவுளிக் கடைகளிலும் கிடைக்கும்.
ZION/SC/003

✱ திருமதி



ஒரு சொல்லைக் கேட்டவுடன் சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருமே மகிழ முடியுமென்றால் அந்தச் சொல் 'சுற்றுலா' என்பதைத் தவிர வேறொன்றாக இருக்கவே முடியாது.

மனித மனமும், மனித வாழ்க்கையும் பல்வேறு உணர்வுகளாலும், எண்ணங்களாலும், இன்னல்களாலும் சூழப்படும் போது, நமக்குத் தேவைப் படுகிற ஒரு மாற்று மருந்து, ஒரு மாறுபட்ட சூழலிலிருந்துதான் கிடைக்கும். அது ஒரு சுற்றுலாஸ்தலமாக, இயற்கை வளமை மிக்கதாக, இனிமையானதாக இருப்பதோடு, குடும்பத்தோடு சென்று மகிழ்வோடு கண்டு களிக்கக் கூடியதாயிருக்கும்போது நாம் அடையும் ஆனந்தத்துக்கு அளவே இல்லை.



வேற்று ஊரில், வேறுபட்ட சூழ்நிலையில், நம்மோடு பழக்கமேயில்லாத வேற்று மனிதர்களிடம் நாம் என்ன உதவியை எதிர்பார்க்க முடியும்; கேட்க முடியும்? குடும்பத்துடன் குதூகலிக்க வேண்டி வேற்றிடத்துக்குச் சுற்றுலா போய் விட்டு, சரியான விவரங்கள் கிடைத்தாலும், சரியாக எதையும், எல்லாவற்றையும் பார்த்து ரசிக்க முடியாமல், அல்லது சரியான வழிகாட்டிகளை அமர்த்திக் கொள்ளாமல் பல இடங்களில் ஏமாற்றப்பட்டு, காயப்பட்டு, அதனால் மன நிம்மதியிழந்து சுற்றுலா, வேதனை உலாவாக மாறி விட, தவித்துப் போய் ஊர் திரும்பியவர்கள் எத்தனை பேர்.

அதற்குக் காரணம் நமக்கு 'மேப் ரீடிங்' என்னும் பழக்கமே கிடையாது. நாம் ஒரு ஊருக்குப் போக வேண்டும் என்று நினைக்கிறோம் என வைத்துக் கொள்வோம். உடனே அந்த நாடோ, நகரமோ, இருக்கிற 'மேப்'பை வாங்கிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் அந்த ஊர், அதன் அருகேயுள்ள ஊர்கள் முதலியவைகளை அறிந்து கொண்டு செவ்வனே திட்டமிட முடியும். இல்லையென்றால், யாராவது,

"அடேடே, அவ்வளவு தூரம் போனீங்களே... அதுக்குப் பக்கத்துலதான்... கோயில் இருக்கு. ரொம்ப ஃபேமஸ் ஆச்சே! பார்க்கலியா!"

என்னும்போது அசடு வழிவது ஒரு பக்கம். அடடா நல்ல வாய்ப்பை இழந்து விட்டோமே, இனிமே திரும்ப எப்போ போகப்போகிறோம் என வருத்தம் ஏற்படும். எந்த ஊருக்குப் பக்கத்தில் எது இருக்கிறது எனத் தெரிந்து கொண்டால் நேர விரயம், பணவிரயம் தவிர்க்கலாம். இல்லையென்றால் சுற்றிச் சுற்றி வந்து கொண்டே இருக்க வேண்டியதுதான்.

'மேப்' வழிகாட்டுதலோடு ஊருக்குப் போனால் மனதில் பதியும். அந்த ஊர்களை நாம் என்றும் மறக்கவும் மாட்டோம். 'அங்கே போய் விசாரிச்சா போச்சு' என்



பது தவறான எண்ணம்.

அதே போல நம் குழந்தைகளுக்கும் 'மேப் ரீடிங்'கைப் பழக்கப்படுத்த வேண்டும். எதையும் துல்லியமாகத் தெரிந்து கொண்டு செயல்பட அவர்களுக்கு இந்தப் பழக்கம் வெகுவாகக் கைகொடுக்கும்.

எனவே சுற்றுலா செல்ல திட்டமிடுவதற்கு முன்பாகவே நாம் வாங்க வேண்டியது மேப், கைடு இவைகளைத்தான்.

வரைபடம் (Map) மற்றும் வழிகாட்டிகள் (Guide) தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற டி.டி.கே நிறுவனத்தின், டி.டி மேப்ஸ் அண்டு பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்-ன் அகில இந்திய விற்பனைப் பிரிவின் மானேஜரான திரு.சி.கிருபாநிதியைச் சந்தித்த போது கிடைத்த சில சுவையான தகவல்கள் இதோ:-

''மேப்' என்றாலே, பெரியதாக, மடித்து மடித்து, மடித்த இடமெல்லாம் நைந்து கிழிந்து போயிருக்கும், சரியான தகவல்கள் இல்லாமல் போயியாய் இருக்கும் என்கிற எண்ணத்தை மாற்றி, சர்வே ஆஃப் இந்தியா மற்றும் டிபென்ஸ் துறையின் அனுமதியுடனான அங்கீகாரம் பெற்ற, பர்பெக்ட் மேப், கைட்ஸ் தயாரிப்பில் புகழ்பெற்றிருக்கிறோம் நாங்கள். பேப்பர் மேப் போய், லின்தெடிக் மேப் தயாரிப்பின் காலமிது. காலத்தாலும், மடிப்பினாலும், நீராலும் அழியாத அழிக்க முடியாத மேப் இது. விலை சற்று அதிகம் என்றாலும் உழைப்பு அதிகம்.

நூறும் இருநூறும் கொடுத்து அமர்த்திக் கொள்ளும் கைடுகளை விட அதிக விஷயங்களை இந்த கைடுகள் தருகின்றன. அவர்கள் சொல்லாத பலவற்றையும் கூட தவறேயில்லாமல் நாங்கள் சொல்கிறோம். சரியான பஸ் எண்களுடன் கூடிய கைடுகளை முதன் முறையாக சென்னைக்கு தயார் செய்திருக்கிறோம். இது மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பதால், மேற்கொண்டு எல்லா மெட்ரோ பாலிடன் சிடிகளுக்கும் இது போன்ற மேப் கைட்ஸ் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம்.

கைடுகளில் பார்க்க வேண்டிய இடங்கள், அதன் சிறப்புகள், அது அமைந்துள்ள இடம், அதன் வரலாற்றுப் பின்னனி இவற்றோடு ஹோட்டல்கள், பார்க்குகள், ஷாப்பிங் சென்டர்கள் போன்ற மற்றெல்லா தேவையான விவரங்களும் கூட கொடுக்கப்பட்டிருப்பதால் வெளியூர் செல்கிற, வெளிநாடு செல்கிற நம் மக்களுக்கு ஏமாறாமல் இருக்க இது உதவும்.

மேலும் இந்த கைடுகள் புத்தக வடிவில் தருவதால் (with Map) கையோடு எடுத்துச் செல்வது சுலபம், உபயோகிக்க சுலபம். விலையும் குறைவு. கங்கை நதியைப் படத்தில் குறிக்கும் போது அரை மி.மீட்டர் இடம் மாற்றி குறித்து விட்டாலும் கூட, மிர்சாபூர் வெள்ளத்தில் மூழ்கி விடும். (If the River Ganga is even half a mm off on a map, mirzapur could be flooded) என்று விளம்பரம் செய்கிற நாங்கள், எவ்வளவு கவனமாக இதைத் தயாரிக்க வேண்டும் என்பது புரியுமே உங்களுக்கு!

ஆனால் முன்பு போல இல்லை இப்போது. 'மேப்' கைடுகளின் பயன்பற்றி தெரிந்து வைத்திருக்கிறார்கள். நான் வெளியில் டூர் செல்லும் போது கவனிக்கிறேன். நூறில் பத்துப் பேர் இப்போது கைடு உபயோகிக்கின்றனர். இது ஒரு நல்ல மாற்றம் தான். அதே போல இக்காலக் குழந்தைகளும் எதற்கெடுத்தாலும் பெற்றோரைக் கேட்டுக் கொண்டிருப்பதை விட்டு தானே மேப் வாங்கி, கைடு வாங்கி வைத்துக் கொண்டு ஊர்களைப் பற்றித் தீர்மானிக்கிறார்கள். இதுவும் ஓர் ஆரோக்கியமான அழகான மாற்றம் தானே!

அதே போல ஒவ்வொரு வருடமும் நாங்கள் புத்தகக் கண்காட்சியில் ஸ்டால்கள் போடும் போது இளைஞர்கள் எந்த நாடு எங்கு இருக்கிறது என்று பேசிக் கொள்வதைப் பார்க்கும்போது மனதுக்கு நிறைவாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது.

மேலை நாட்டினரிடம் 'மேப் ரீடிங்' பழக்கம் சிறுவயதிலிருந்தே உண்டு. அதேபோல நம் குழந்தைகளுக்கும் அந்தப் பழக்கம் வரவேண்டும்.''

வழிகாட்ட யாருமில்லையே, எதுவுமில்லையே என்கிற மனத்தாங்கலையும், ஆதங்கத்தையும் முற்றிலுமாக மாற்றவென்ற வந்திருக்கின்ற இந்த வழிகாட்டும் வழிகாட்டிகளின் வழிகாட்டலோடு நாமும் இந்தக் கோடைக்கு குடும்பத்தோடு சுற்றுலா சென்று குதூகலித்து மகிழலாமே!

-கே. பாக்ய லக்ஷ்மி

மாதுளம்பழ ஜூஸ்

தேவையான பொருட்கள் :
பழுத்த மாதுளம்பழம்,
சர்க்கரை (ருசிக்குத் தகுந்தாற்போல்)


செய்முறை :
செய்வது மிக எளிது!

தோலி ஏதுமின்றி மாதுளை முத்துக்களைத் தனித்தனியாக உதிர்த்துக் கொள்ளவும். ஒரு பழத்திற்கு $\frac{1}{4}$ கப் தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் அரை முதல் 1 நிமிடம் சுற்றினால் விதை, சாறு பிரிந்துவிடும். வடிக்கட்டி, சக்கையைப் பிழிந்து சாறு எடுத்து, சர்க்கரை சேர்த்து நன்கு கலக்கிப் பருகலாம். குளிர்பதனப் பெட்டி இருப்பின் குளிர்வித்துப் பருகலாம். சிறந்த ருசியான இந்த ஜூஸ் உடல்நலத்துக்கும் உகந்த பானம்.

- ஜயந்தி ஸ்ரீநிவாஸன்

JFA Wallunit

OUR SHOW ROOM IS OPP. PILOT THEATRE **ONLY**



For **"FREE COLOUR CATALOGUE"** kindly write to us and mention **"OPP. PILOT THEATRE"** in capitals, boldly on your envelope.

JFA Wallunits are elegantly designed, sturdy, **Display cum Storage Units,** designed to solve your space problem by utilising more vertical space and less floor space.

JFA Wallunits have enough **display** provision for mementos, crockery, table top photo frame, Television, V.C.R., Music Systems etc. and **storage** space for books, handtools, besides items of daily and occasional use.

JFA Wallunits are available in different models.

DISPLAYS PROUDLY
JFA Wallunit
STORES SAFELY

Dedicated to solve your space problem

JFA (TM) **JAYABHARATHAM FURNITURE & APPLIANCES PVT. LTD.**
OPP. PILOT THEATRE, 18, ROYAPETTAH HIGH ROAD, MADRAS – 600 014.
PHONE: 8261384, 8260933. TLX: 041-6401 ESCM IN. FAX: 91-44-8261332


We accept Credit cards.

கடந்த பதினைந்து நாட்களில் பாகி துரும்பாய்த் தேய்ந்து விட்டிருந்தாள். குடும்பமே நொந்திருந்தது. உயர்ந்த பொருட்களிலிருந்து உடைந்த பிளாஸ்டிக் பக்கெட் வரை எல்லாவற்றையும் இப்படி மல்லிகா திருடிக் கொண்டு சென்று விட்டாளே, புதுக் குடித்தனம் போல் இனி ஒவ்வொன்றாய் வாங்க வேண்டுமே! பாகி மாமியார் கூட இப்போது மாறி விட்டிருந்தார்.

''நீ ஒண்ணும் மனத்தை அலட்டிக் கொள்ளாதே. அந்த மல்லிகா கையைப் பாம்பு கொத்த. இந்தப் பொருட்கள் எல்லாம் கண்டிப்பாய்த் திரும்பக் கிடைத்து விடும், பாரேன். எப்படி அப்படிச் சொல்றேன்னா, எல்லாம் என் பிள்ளை உழைச்ச காசு. அவன் நல்ல மனசுக்கு ஒரு துரும்பைக் கூட யாரும் எடுத்துண்டு போக முடியாது'' எனத் தன் பழைய கர்வம் சிறிது கலந்த விதத்தில் ஆறுதலாய்ப் பேசினாள்.

பாகிக்கு இதையெல்லாம் எதிர்த்துப் போர்க் கொடி பிடிக்க சக்தியில்லை. தினமும் குடும்பத்தோடு அருகிலிருக்கும் போலீஸ் ஸ்டேஷன் சென்று வரவே நேரம் போயிற்று. சும்மா சொல்லக் கூடாது. போலீஸ் அதிகாரிகளும் அதிக அக்கறையுடனே இந்தத் திருட்டைப் பற்றி விசாரித்தனர். பல பிரபல கொள்ளைக்காரிகளின் போட்டோக்களைக் காண்பித்தனர். மல்லிகா பற்றிய குறிப்புகளை அதில் பார்த்த பாகிக்கு இப்படிப்பட்டவளை வீட்டில் சேர்த்து தான் எப்படிப்பட்ட முட்டாள்தனமான வேலை செய்து விட்டோம் என்பது புரிந்தது. ''கடுகடுன்னு பேசினாலும் மாமியார் பொறுப்பில் இருந்தவரை வீட்டில் ஒரு சல்லிக் காசு தொலையவில்லை. என்ன சொன்னாலும் பெரியவங்க பெரியவங்கதான்'' என போலீஸ் ஸ்டேஷன் பெஞ்சில் அமர்ந்து குதூகல ஸ்டைலில் பாகி பேச இராமநாதன் மயங்கியே விட்டார்.

''இறைவா! உன் கருணையோ கருணை, ஒரு கதவு மூடினாலும் மற்றொரு கதவு



வீராங்கனை பாகி

திறக்கப்படும் என்பது இதனைத்தானோ? நீரா யுத்தமாய் இருந்த என் வீடு இனி அமைதிப் பூங்கா ஆகிவிட்டதே! பணம் போனால் என்ன, இந்த மகிழ்ச்சியை என்னைப் போல் பெற்ற அதிர்ஷ்டசாலி யார் இருக்க முடியும்? இன்ஸ்பெக்டர் சார், இன்ஸ்பெக்டர் சார், அந்த மல்லிகாவைக் கண்டு பிடிக்க வேண்டாம், விட்டு



டுங்க. என் குடும்பத்துக்கு அவங்க தெய்வம் மாதிரி. அதற்கான நன்றிக் கடனா நான் எங்க கேஸைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். திருடர்கள் வாழ்க, திருடிகள் வாழ்க'' என மகிழ்ச்சியில் ஏதேதோ பேச, இன்ஸ்பெக்டர் சற்று சந்தேகத்துடன் இராமதாஸை நோக்கினார்.

பாகியோ ''இன்ஸ்பெக்டர் சார், அவர் அப்படித்தான். ஏதாவது சம்பந்தம் இல்லாமல் பேசுவார். இந்த மல்லிகாவைப் பிடித்தே ஆக வேண்டும். இது நமக்கு மட்டும் உதவி என நினைக்கக் கூடாது. ஊருக்கே பெரிய உதவியாய் அமையும்'' என வீர உரை நிகழ்த்த இராமதாஸுக்கு இடது கண் துடித்தது.

பாகி வீட்டில் இருந்து போன நாளாய் நாகி நாளொரு கடிதம் பாகிக்கு எழுதினாள். ''பாகி, ஏதோ அங்குதான் இப்படி திருடு, கொள்ளை என்று நினைக்காதே. உலகிலேயே அதிகக் குற்றங்கள் நடக்கும் நகரம்

டாக்டர் கமலி ஸ்ரீபால்

நியூயார்க்தான். எல்லாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்ட வாழ்வுதான். சமீபத்தில் இங்கு ரோடில் செல்லும் பெண்மணியைத் துப்பாக்கியைக் காட்டிப் பணம் கொடு என்று ஒருவன் மிரட்டினானாம். அவளிடம் குறைவாகத்தான் பணம் இருந்ததாம். அதனால் கோபப்பட்டு அவளைச் சுட்டு விட்டுப் போய் விட்டான் அந்தப் பாவி. இந்த மட்டும் மல்லிகா எல்லோரையும் ஒன்றும் செய்யாமல் போனாளே! உன் தொலைந்து போன பொருட்கள் விரைவில் கிடைக்க என் பிரார்த்தனைகள்.

அன்பு நாகி.

கடிதத்தைப் படித்த பாகி ஊக்கம் பெற்றாள். தினமும் தமிழ் நாளேடுகளில் வரும் திருட்டினைப் பற்றிய விவரங்கள், பெண்மணிகளின் போட்டோக்களைச் சேர்த்தாள்.

அவசர அவசரமாகத் தன் மாதர் சங்க அங்கத்தினர்களைக் கூட்டினாள். "வெளிநாடுகளில் எல்லோருக்கும் துப்பாக்கி. எளிதில் சுட்டு விடுகின்றார்கள். மிக மிகக் குறைந்த அளவு குற்றங்கள் நிகழும் நாடு ஜப்பானும், இஸ்ரேலும்தான். ஒரே மொழி, இனம், கலாசாரம், வாழ்க்கைப் போராட்டம் என்பவை கூட இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்" என்று அரை மணி வெளிநாட்டுத் திருட்டுக்களைப் பற்றிப் பேசினாள்.

"நம் ஏரியாவைப் பொறுத்தவரை தினமும் ஒவ்வொரு பெண்மணியும் வாரமொரு முறை அவளது கணவருடன் பல தெருக்களில் ரோந்து காவல் வரவேண்டும். சந்தேகத்திற்குள்ளான ஆட்களைப் பிடித்துப் போலீசில் தரவேண்டும். பாகியும், இம் மாதர் சங்க அங்கத்தினர்களும் வாழும் ஏரியா திருடர்களின் மூக்கக் காற்று கூட நுழைய முடியாத அரணாக மாற வேண்டும். தற்காப்புக்காக கைத்தடி, மிளகாய்ப் பொடி, அரை பிளேடு இவற்றினை வைத்துக் கொள்ளலாம்" என அனைத்து அங்கத்தினர்களாலும் ஒருமனதாய் முடிவு செய்யப்பட்டது.

பாகி வாழ் ஏரியாவின் ஆண் மக்களில் சிலர் இராமதாஸைக் கண்டு எரிச்சல் கொண்டனர். "எல்லாம் இவன் பெண்டாட்டியால் வந்த வினை. நாமெல்லாம் வீடு மாறிப் போய் விடலாமா என்று இருக்கு. இவன் பெண்டாட்டியால நமக்குத் தூக்கம், நிம்மதி எல்லாம் கெட்டது" எனக் கரித்தனர்.

கோலாகலமாக வீராங்கனைகளின் இராக் காவல் ரோந்து அவரவர் கணவன்மார்களுடன் துவங்க ஏரியா நித்திய கல்யாண கோலமாயிற்று. செக்யூரிடி நிறுவனங்களும், காவல் துறையினரும் 'பெண் புலி' என பாகியைப் புகழ்ந்தனர். இவர்களின் காவல் ரோந்தினை வேடிக்கை பார்க்கப் பல ஏரியாக்களிலிருந்து மக்கள் கார்களில் வந்து சென்றனர். இராமதாஸுக்குத்தான் இரவுக் கண் விழிப்பு தாங்கொணாத் தொந்தரவாய் இருந்தது. எவ்வளவோ பாகியைக் கெஞ்சிப் பார்த்தார். "பாகி, சரியாத் தூங்கி எவ்வளவோ நாளாச்சு. சேர்ந்த மாதிரி இரண்டு நாள் தூங்கணும்னு ஆசையா இருக்கு. இதென்ன உத்தியோகம். நீ ரொம்பதான் எல்லாத்தையும் இழுத்து விட்டுண்டு திரியறே" என்று புலம்பினார்.

"ஸ்ஸ்... சும்மா வாங்க. மனுஷனுக்கு வீரம் இருக்க வேண்டாமா?" என இராமதாஸின் கையைத் தரதரவெனப் பற்றி இழுத்தபடி தலையில் ஹெல்மெட், ஒரு கையில் குண்டாந்தடியுடன் பாகி ரோந்துப் பணியினைத் தொடர்ந்தாள்.

ரோடு மூலையில் நின்றிருந்த ஒரு காரிலிருந்து கையைக் காட்டி யாரோ இருவர் இராமதாஸ், பாகியை அழைத்தனர். இருட்டில் சரியாய் ஒன்றும் தெரியாதிருக்கவே இராமதாஸ் அக்காரினை நோக்கிச் சென்றார். பேசியவர்கள் இந்தி போல் வேறு மொழியில் பேசினாலும் இராமதாஸுக்குப் புரிந்தது. அவர்கள் கார் திடீரென மக்கர் செய்துவிட்டது. இராமதாஸும் அந்த மற்றொரு பையனும் (பாகியை அவர்கள் இருட்டில் ஆண் என நினைத்துவிட்டனர்) கொஞ்சம் காரைத் தள்ளி ஸ்டார்ட் செய்ய வேண்டும் என்பது அவர்களின் வேண்டுகோள். இராமதாஸும் பாகியும் எவ்வளவோ காரைத் தள்ளியும் கார் ஸ்டார்ட் ஆகவில்லை. அக்காரில் வந்தவர்கள் அதிகம் பதற்றப்படுவதைப் போல் தோன்றியது.

பாகிக்கு இளகிய மனது. "என்ன கஷ்டமோ, அவசரமோ?" என நினைத்து வேகமாய்ச் சென்று அருகிலிருந்த போலீஸ் ரோந்து பெட்ரோல் வண்டியினை உதவிக்கு அழைக்க விஷயமே தலைகீழாய் மாறியது. காரில் இருந்தவர்கள் ஓட, போலீஸ் துரத்திப் பிடிக்க, மறுநாள் செய்தித் தாள்களில் "வெகு நாட்களாகத் தேடப்பட்டு வந்த பெங்கால் திருடர்கள் நேற்று இரவு பிடிபட்டனர். வீராங்கனை பாகியின் சாதனை" எனக் கொட்டை எழுத்துக்களும், பாகி, இராமதாஸ், கேடிகளின் புகைப்படங்களும் வெளியாயின. பாகிக்கோ தாங்கொணா மகிழ்ச்சி. "பாருங்க, நம் முயற்சிக்குக் கடவுள் தந்த பரிசு" என மகிழ, பாகியின் மாமியார் பாகிக்குத் திருஷ்டி சுற்றிப் போட, இராமதாஸோ, "குருவி உட்காரப் பனங்காய் விழுந்தது என்பது இதுதானோ?" என யோசித்தார்.

பாகியின் வீடு மறுபடியும் களை கட்டியது. பாகி மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளில் பேச அழைக்கப்பட்டாள்.

பாகி அன்று கோவின் தீவிர கண்காணிப்பினால் திருடர்களில் குறிப்பாக மாரியப்பனுக்குக் கை ஒடிந்தாற்போல் இருந்தது. எப்பேர்ப்பட்ட பெயர் தனக்கு. இப்பொழுது தன்னால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லையே என்ற தன்மானம் தலைதூக்கியது. தன் கீழ் பயிற்சி பெற்றுவரும் திருடர்களின் முன்னால் தனக்குச் சற்று தலைகுனிவோ என்ற ஐயம் கூட எழுந்தது.

மிகச்சிறந்த பொருள்கள் கூட மாறத்தான் வேண்டும்...

சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னர் சுமித் ஒரு சமையலறைப் புரட்சியைத் தொடங்கி வைத்தது... அதுதான் சுமித் மிக்சர்.

இப்போது காலம் மாறிவிட்டது. இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்ய மேலும் முன்னேறிய, இன்னும் அதிக வழிகளில் செயல்படக் கூடிய ஒரு மெஷின் அவசியமாகிறது. அது முன்னதைவிடச் சிறப்பாகச் செயல்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எனவே, இதோ ஒரு இரண்டாவது புரட்சி. சமையலறைச் சாதனங்களில் ஒரு புதிய சாதனை — புதிய ஏஷியா கிச்சன் மெஷின்.

புதிய செயல்வடிவம், பலவகைச் செயல்திறன்

ஏஷியா கிச்சன் மெஷின் வெறும் மிக்சர் மட்டுமல்ல. சமையலறைத் தேவைகளான ஒரு புதிய செயல் வடிவமும் கூட. மிக மிக முன்னேறிய அமைப்பு, பலவகைச் செயல்திறன் கொண்டது. எனவே, அரைப்பதற்கான இதர எல்லா முறைகளுக்கும் ஒரு மாற்றாக விளங்குகிறது. அம்மியையும் கல்லுரலையும் ஆட்டுக்கல்லையும் உலக்கையையும் மட்டுமே பயன்படுத்திச் செய்து வந்த எல்லாக் காரியங்களையுமே மிகச் சுலபமாகச் செய்து முடித்து விடுகிறது...

இட்லியையும் தோசையும் தண்ணீர் இல்லாமலே விரைவாக அரைக்கலாம். தேங்காய், பருப்பு, மிளகாய், புளி ஆகியவற்றை மசாலாவுக்காக அரைக்கலாம். பருப்பு வகைகளையும் முழு தானியங்களையும் மாவாக அரைக்கலாம். கடுகு, காபி, கடலைகள், மசாலா சாமான்கள் ஆகியவற்றைச் சிறிய அளவிலும் அதிக அளவிலும் பொடிக்கலாம். ஊற வைத்த பருப்புகளையும் அரிசியையும் மாவாக அரைக்கலாம்.

ஏஷியா கிச்சன் மெஷின் அரைப்பதற்கென்று ஒரு விசேஷ ஜார் கொண்டது. இது தவிர, ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாரும் உள்ளது. கடைய, கலக்க, ஒன்று திரட்ட, நன்கு பதக்க, இன்னும் இது போன்ற பல செயல்களுக்கான மூன்று பிளேடுகளுடன்.

மிகச் சிறந்த வடிவமைப்பு. எளிதில் பயன்படுத்த உதவும் அம்சங்கள்.

அரைப்பதற்கான இதர முறைகளை விடச் சிறப்பாகச் செயல்பட, ஏஷியா கிச்சன் மெஷினைப் போல இன்னொரு மிக்சர் இல்லை என்பதை நிரூபிக்கும் அம்சங்கள்:

- அரைக்கும் போதே கிளறிவிடும் ஸ்டாப்பர்
- ஜாரினுள் போடுவதற்கு உதவும் ஃபீடர்
- அதிகப் பாதுகாப்புக்கு எலெக்ட்ரிகல் இண்டர்லாக்கிங் சிஸ்டம்
- உடையாத பிளாஸ்டிக்கினாலான போல், தட்டையான மூடி மற்றும் ஜார் ஹவுஸிங்
- கடுமையான உழைப்புக்கு சக்திவாய்ந்த ஹெவி-டூட்டி சுமித் மோட்டார்
- சிறந்த அரைப்பதற்கேற்ற தனித்திறன்

எல்லாவற்றுக்கும் மேலாக, நம்பகமான, உடனடி சேவையும் கூட.

உங்கள் அருகாமையில் உள்ள சுமித் விற்பனை நிலையத்தில் ஏஷியா கிச்சன் மெஷின் செயல்படுவதை நேரில் காணுங்கள்.

Sumeet®

ஏஷியா கிச்சன் மெஷின்

மிக்சர் மட்டுமல்ல, இல்லத்து சமையலறை சாதனங்களில் ஒரு புதிய சாதனை.

...அவை மேலும் சிறக்க



தொழில்நுட்பக் கூட்டுறவு & புரொமோட்டர்ஸ் ப்ராண்ட் லைசென்ஸ் வழங்குவோர்:
சுமித் ரிஸர்ச் & ஹோல்டிங்ஸ் லிமிடெட்.
தயாரிப்போர்: பவர் கண்ட்ரோல் & அப்ளையன்ஸஸ் கம்பெனி
F-11, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 058

R K SWAMY/BBDO RCAC 12184

இந்த பாகியை எப்படிச் சரிகட்டுவது என இரகசிய ஆலோசனைக் கூட்டம் நடத்தினான் மாரி.

கூட்டாளிகளில் ஒருவன் கொடுத்த ஐடியா, "ஏன் தலைவா, நம்ம திருட்டுல இவ்வளவு % பங்கு, நீ சும்மா இருன்னு சொல்லிடுவோமா?"

"இல்லை, இல்லை, அந்தப் பொம்பளைகிட்ட அதெல்லாம் நடக்காது. ச்சே, பிக்பாக்கெட் கூட இப்பவெல்லாம் ஈஸியா அடிக்க முடியலே. அதோட மாமியார்தான் அதுக்கு ஃபுல் சப்போர்ட். அந்தப் பொம்பளையக் கடத்திக்கிட்டு வந்துதான் அந்தப் பாகியை மிரட்டணும். அதுக்கு நம்ம கூட்டத்தில யார் இருக்காங்க. அந்தக் கிழவியை சாமர்த்தியமா கடத்திக்கிட்டு வர யாரால முடியும்?"

வேலுச்சாமி துள்ளியெழுந்தான். "தலைவரே, என்ன, எங்க திறமையில் உங்களுக்கு அப்படிச் சந்தேகம்? நான் போய் அந்தக் கிழவியை இப்பவே கடத்திக்கிட்டு வந்து விடுகிறேன்" வேலுச்சாமி மாயமாய் மறைந்தான்.

கொடூரவ லுங்கியும், மீசையுமாய் வந்து நின்ற வேலுச்சாமியைப் பார்த்த பாகியின் மாமியார், "யாரப்பா நீ, கொள்ளை, திருடு கன்ஸல்டேஷன் எல்லாம் நாளைக்குக் காலை 10 மணிக்குள் அப்பாயின்ட்மெண்ட் வாங்கிக்கிட்டுப் பிறகு வா" என நிதானமாய்க் கூறினாள்.

"ஆயா, உன்னைக் கடத்திக்கிட்டுப் போக வந்திருக்கேன்."

பாகியின் மாமியாருக்கு ஆச்சரியம். "என்னையா கடத்திக்கிட்டுப் போக வந்திருக்கே? நீ எந்த நாடு, எதில் கடத்திக்கிட்டுப் போக வந்திருக்கே? ப்ளேனா, காரா, தீவிரவாதிகளால் கடத்தப்பட்டால் எனக்குக் கூடுதல் மதிப்பாய் இருக்கும். சரிசரி, நான் கையில் இரண்டு மாற்றுப் புடைவை எடுத்துக்கிட்டு வரேன். என்னைக் கொண்டு போகும் இடத்தில் கலர் டீ. வி. இருக்கா? என்னைப் பற்றிச் செய்தி போட்டோ வரும். அதுக்கு ஏற்பாடு பண்ணிடு. ஸ்டவ், சாமான் தனியாக் கொடுத்துடு. நானே சமைச்சுக்கிட்டு உனக்கும் தர்றேன். இப்படி நாயா அலையறே. ஒருநாள் நல்ல சாப்பாடு சாப்பிட்டிருப்பியா? கையோட 12 இளநீர், நாலு டஜன் சாத்துக்குடி (தோலு மெலிசா) வாங்கிக் கொண்டு வா. எனக்கு அப்பப்போ பழரசம் குடிக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். அப்புறம்..."

வேலுச்சாமி குழம்பினான். வீட்டைப் பூட்டிய பாகியின் மாமியார் காரில் வந்து அமர்ந்தாள். "கிளம்பு, கிளம்பு. அவங்ககிட்டே வேற சாவி இருக்கு. தூ... என்ன ஓட்டைகார் இது? ஏஸி வேண்டாமோ? எல்லாம் என் தலையெழுத்து."

"நான் கொஞ்சம் ஹார்ட் பேஷண்ட். எனக்கு ஏதாவது ஆச்சன்னா உனக்குத் தூக்குதான். என்னை யாரும் கூட்டிக் கொண்டு போக வரமாட்டாங்க. உன் பாடு திண்டாட்டம்தான். ஏன் இப்படித் துப்பு இல்லாம வேலை பண்ணி வலிய மாட்டிக்கிறீங்க" என்ற பாகியின் மாமியார் சாய்ந்து படுத்து உறங்க ஆரம்பித்தார்.

மாரியப்பனும், வேலுச்சாமியும் திகைத்தனர். இந்தக் குடும்பமே வீரக் குடும்பமோ? நாமே வலிய வம்பில் மாட்டிக் கொண்டு விட்டோமோ எனத் தோன்றியது. யாரும் கிழவியைத் தேடி வரவுமில்லை. கிழவியும் வீட்டுக்குப் போக வேண்டுமென்று ஒரு தடவை கூடக் கேட்கவில்லை. மாறாக ராஜமரியாதையாய் வாழ்கிறாளே!

மாரியப்பன் ஒரு முடிவுக்கு வந்தான். தனியே சென்று இராமதாஸைச் சந்தித்தான். "சார், நீ தெய்வம். எப்படித்தான் இந்த இரண்டு பொம்பளைங்ககிட்டேயும் காலம் தள்ளினியோ? நீதான் பெரிய வீரன். உன்னை மாதிரி சகிப்புத் தன்மை உள்ள ஆளுங்க எங்க கும்பல்ல இருந்திருந்தா நாங்க உலகப் புகழ் திருடங்க ஆயிருப்போம். ம். அதுக்கெல்லாம் அதிர்ஷ்டம் வேணும். உன் அம்மாவை நீ தனியா வந்து எப்படியாச்சும் கூட்டிக்கிட்டுப் போயிடு. நாங்க ஊரை விட்டே போயிடறோம்."

விஷயத்தை அறிந்த பாகி ஒப்புக் கொள்ள மறுத்தாள். "என்ன நினைத்தீர்கள்? என் உயிருக்கு மேலான மாமியாரின் உயிர் போனாலும் பரவாயில்லை. மாரியப்பன் எப்படியாவது மல்லிகாவையும் என் தொலைந்த பொருட்களையும் கொண்டு வந்து கொடுத்தால்தான் உங்க அம்மாவை வீட்டுக்குள் ஏற்பேன். மாரியப்பனும் சரணடைய வேண்டும். அவனே அவன் தண்டனையை முடிவு செய்து கொள்ளட்டும். சிறைச்சாலையா அல்லது என் மாமியார் மிரட்டலில் இருப்பதா எது என அவனே முடிவு செய்யட்டும்."

மாரியப்பன் கும்பலுக்குச் சிறைச்சாலையே சொர்க்கம் என அனுபவம் விளக்கியது. மாரியப்பன் தலைமையில் தேடப்பட்ட மல்லிகா கிடைத்தாள். பொருட்கள் மீட்கப்பட்டன. மாமியாரும், மருமகளும் சாதித்த பெருமையில் மகிழ்ந்தனர். நாகியின் ஊக்கமே தன் சாதனைகளுக்குக் காரணம் என பாகி கூறி வெளிநாட்டில் இருந்தாலும் தமிழ்ப் பெண்ணின் உடலில் இந்திய வீர இரத்தமே ஓடும் என முழங்க அனைவரும் தலையசைத்தனர்.


இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுபவை ஹைதராபாத்தும் செகந்தராபாத்தும் ஆகும். இவற்றின் வயது 400 ஆண்டுகள். இதில் செகந்தராபாத் இந்தியாவின் '[illegible]' எனப்படும்.



''சொட்டு நீலத்துடன்''
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.
பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன் தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே இந்த இலவசப் பரிசுகள் :
ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி
நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?
உஜாலாவின் நான்கு ''துளிகளே'' போதும் ஒரு லிட்டர் நீருக்கு.
உபயோகிப்பவர்களுக்கு
ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST
UJALA
FOR
SUPER WHITENESS OF
JYOTHY LABORATORIES
Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.
உஜாலா

உண்ண மறுக்கும் உங்கள் குழந்தையின் பசியைத் தூண்ட நியுபான் — ஓமம் கலந்தது.





அனுபவமிக்க அன்னையும் தன் பாப்பாவின் பசியைத் தூண்ட ஓமத்தைத் துணை கொண்டாள் அன்று. அதே ஓமம் வந்துவிட்டது நியுபான் ரூபத்தில் இன்று. ஆம்... ஓமம்தான் நியுபானின் வேதம். ஓமத்தோடு வசம்பு, அதிமதுரம், கடுக்காய், ஏலக்காய் போன்ற சிறந்த மூலிகைகளும் தேவையான அளவு சேர்க்கப்பட்டுள்ளன.

வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல் இவற்றை நீக்கி வயிற்றை சீர் செய்ய உதவும் ஓர் மாமருந்து நியுபான். நியுபான் பாப்பாவின் பசியைத் தூண்டுவதோடு அதன் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சிக்கும் ஆதாரமாய் அமைகிறது.

எந்த ஒரு பின் விளைவுகளும் இல்லாத, என்றும் பாதுகாப்பான நியுபான் பாப்பாவின் விருப்பமான ஒன்று. நியுபான் பாப்பாவின் பசியைத் தூண்டும்.

நியுபான்

குழந்தைகளின் பசியைத் தூண்டும்.

PHARM PRODUCTS

தஞ்சாவூர் 613 007.

Insight-3201

யாதும் ஊரே; யாவரும் கேளிர்!

'சுற்றுலா'. இன்று மக்களிடையே அதிகமாக அடிபடும் வார்த்தை. 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற புற நானூற்று சொற்றொடர் இன்று கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிறது. பல இடங்களுக்குச் சென்று வந்துள்ளவர்கள் சுற்றுலாவைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

திருமதி நாட்சாயினி ராமதாஸ்: ''நான் இந்தியாவில் பல இடங்களுக்கும் கனடா, அமெரிக்கா போன்ற இடங்களுக்கும் சென்று வந்துள்ளேன். வெளியில் சென்று பார்க்கும் போது தான் நாம் இவ்வளவு நாள் கிணற்றுத் தவளையாக இருந்திருக்கிறோம் என்பது புரிந்தது. சுற்றுலா செல்ல காசு செலவாகும்தான். ஆனால் 'மன நிறைவு' என்கிற வரவு மிகப் பெரியது.

இந்தியாவையும் வெளிநாடுகளையும் ஒப்பு நோக்காமல் இருக்க முடியவில்லை. சுற்றுலா பயணிகளுக்கு வெளிநாட்டில் அதிகமான வசதி செய்து





• நாட்சாயினி



கொடுத்துள்ளார்கள். அதுவும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு விமான டிக்கெட் எல்லாம் 50% தான். தங்குமிட வசதிகளிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. இந்தியாவைப் போல் ஒவ்வொரு ஓட்டலாக அலைய வேண்டாம். ஓர் இடத்தில் விசாரித்தால் போதும் நம்முடைய தேவையைச் சொல்லி விட்டால் எங்கு இடம் இருக்கும் என்று சொல்லிவிடுவார்கள். இரவு 12மணி 1மணி ஆனாலும் கவலைப் பட வேண்டாம். சுற்றுலாப் பயணிகளை 'கைடு'கள் மொய்த்துக் கொண்டு விடுவதை இந்தியாவில் நாம் பார்க்கிறோம். அங்கெல்லாம் நாம் கூப்பிட்டால்தான் வருவார்கள். கைடும் அவசியமில்லை. அந்தந்த இடங்களில் 'ரெக்கார்டு' பண்ணிய செய்திகளும் அவர்கள் கொடுக்கும் ஃபாம்லெட்களும் நமக்கு வழி காட்டும். மேலும் அங்குள்ள மக்கள் வெளிநாட்டுப் பயணிகளுக்கு மிக அதிகமான மரியாதைக் கொடுக்கிறார்கள். முன்பின் தெரியாதவராயிருந்தாலும் 'வெல்கம்


டு அவர் வாண்ட்' என்றும் பிரியும் போது 'ஹாவ் எ நைஸ் டே' என்றும் முகமலரக் கூறுகிறார்கள். நம் நாட்டிலும் இதுபோல ஒரு சூழ்நிலையை நம் மக்கள் முயன்றால் உருவாக்கலாம். நம் மக்களிடம் கல்வியறிவு அதிகமானால் கண்டிப்பாக நம் நாட்டிலும் இன்னும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்க்கலாம்.''

திருமதி ஜானகி வெங்கிட சுப்ரமணியன்: ''நான் சிறு வயதிலிருந்தே தோழிகளுடன் பல இடங்களுக்குச் செல்வேன். என் பெற்றோரும் அதை அனுமதித்தனர். இப்பொழுது எனக்கு 76 வயது ஆகிறது. திருமணத்திற்குப் பிறகும் என் ஆசைகளுக்குத் தடை போடாத கணவர் கிடைத்தது என் மிகப் பெரிய அதிர்ஷ்டம். குழந்தைகளை என் கணவரிடம் விட்டு விட்டுத்தான் செல்வேன். 'பேக்கேஜ் டூரில்' போவேன். சுற்றுலா செல்லும் போது நம் மனதில் இருக்கும் கவலைகளெல்லாம் மறந்து விடும். எல்லோரும் ஒரே ஜாதியோ, ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களோ அல்லர். பல மதங்களைச் சேர்ந்தவர்களும், பல மொழி பேசுபவர்களும் இருப்பார்கள். ஆனால் அங்கே எல்லோரிடமும் ஒருமைப்பாடு வளர்கிறது. சென்ற இடங்களில் சாப்பாடு இல்லாமல் வெறும் தண்ணீர் மட்டுமே குடித்துவிட்டு எவ்வளவோ முறை இருக்கிறோம். ஆனால் அதெல்லாம் பெரிதாக தெரிந்ததில்லை.

நான் இந்தியாவில் ஒரே இடத்திற்கு 2,3 முறை சென்றிருக்கிறேன். முன்பு பார்த்ததற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும் வித்தியாசம் தெரிகிறது. நம் அரசாங்கம் பலவசதிகளைப் பண்ணிக் கொடுத்திருக்கிறது. முன்பெல்லாம் விளக்கும் இருக்காது. ஆள் நடமாட்டமும் இருக்காது. ஆனால் இப்பொழுது பாதுகாப்பிற்கு போலீஸ்காரர்களை கூட அமர்த்தி இருக்கிறார்கள். இந்தியாவில் பல இடங்களைப் பார்த்து விட்டேன். 40 வருடமாக சுற்றுலா சென்று கொண்டிருக்கும் நான் என் மகளின் அழைப்பின் பேரில் அமெரிக்கா செல்கிறேன். என் வாழ்நாளில் அதிக பட்சமாக எவ்வளவு இடங்கள் பார்க்க முடியுமோ அவ்வளவு இடங்களையும் பார்க்க வேண்டும்.''

திருமதி பாலாமணிகிருஷ்ணன் : ''சுற்றுலா என்பது குடும்பத்தாருடன் சென்றால்தான் நன்றாக இருக்கும். தனியாகச் சென்றால் ரசிக்காது. நான் சில இடங்களுக்குச் சென்று இருக்கிறேன். நான் போக ஆசைப் பட்டாலும் என் கணவருக்கும் குழந்தைகளுக்கும் நேரம் கிடைப்பதில்லை. அவர்கள் கூப்பிடும் போது எனக்கு ஆபீஸில் லீவு கிடைக்காது. மேலும் சுற்றுலா என்றால் பணத்தைப் பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது. குடும்பத்துடன் செல்வதானால் செலவு எவ்வளவு ஆகும். போய் வந்த பிறகு அந்தச் செலவை சமாளிப்பதற்குள் திண்டாடி விடுவோம். 10நாள் வெளியில் சென்று விட்டால் ஆபீஸில் பதினோராவது நாள் குவிந்திருக்கும் வேலைகள் ஆளை அசத்தி விடும். இவையெல்லாம் பார்க்கும்போது ஆசை இருந்தாலும் அதை வெளிக்காட்ட முடிவதில்லை.''

பேட்டி: புஷ்பா ரமணி



இந்தியாவில் உள்ள அழகிய மலைவாசஸ்தலங்களில் ஒன்றான கொடைக்கானல் மதுரையிலிருந்து 121 கி. மீ. தொலைவில் உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள இது கடல் மட்டத்திலிருந்து 2130 மீட்டர் உயரத்தில் உள்ளது.



"அமிர்தாஞ்சன் கோல்ட் ரப் தரும் இணையற்ற இதமான விரைவான நிவாரணம்"
(என் இரு 'குழந்தை'களுக்கும்!)
அவருக்கு ஜலதோஷம் வந்தா... குழந்தை மாதிரியேதான்... சிடுசிடுப்பு, முரண்டு; ஆறுதலா இதமா ஏதாவது செய்தே ஆகணும்!
அமிர்தாஞ்சன் கோல்ட் ரப் தான் குடும்ப முழுவதுக்கும் சரியான கோல்ட் ரப். எவ்வளவு இதம். எவ்வளவு மென்மை.
அதே சமயம் ரொம்ப ரொம்ப திறன்மிக்கது.
அமிர்தாஞ்சன் கோல்ட் ரப்
ஜலதோஷத்திலிருந்து துரித நிவாரணம்
டும்பத்திற்கான கோல்ட் ரப்.
Amrutanjan's Cold Rub
Amrutanjan's Cold Rub
HTA-7068

சின்னப் பெண்

ஜன்னலருகில் நின்றபடி சிகரெட்டைப் பற்ற வைத்து வெளியே ஊதியபடியே திரும்பி கட்டிலில் படுத்திருந்த சாந்தியைப் பார்த்தேன். கலைந்து கிடந்தாலும் அழகு அழகுதான். அவளுடைய கண்கள், மூக்கு, கன்னம், முகம், ஒடுங்கிக் கிடந்த உடல் விலகியிருந்த உடை என்று நிதானமாய் அளந்தேன். தூங்கும் போது யாருக்குமே ஒரு பரிதாபக் களை வந்து விடுகிறது. ஏதோ கற்பனை கண்ட வாழ்வு கிடைத்துவிட்ட திருப்தியில் தன்னை முழுதுமாய் என்னிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாய் சஞ்சலமின்றி தூங்குகிறாளே, இவளிடம் இன்றாவது எதிர்காலத் திட்டங்களைக் கூறிவிட வேண்டும். விஷயங்களை ஜீரணிக்க இவளுக்கு எப்படியும் ஓரிரு நாட்களாகும். நாளை தேனிலவு முடிந்து ஊர் திரும்பி நடைமுறை வாழ்க்கை ஆரம்பிக்கும் போது சாந்தி தெளிவாக இருக்க வேண்டும். அது முக்கியம்.

புகையை ஆழமாக இழுத்து வெளியே விட்டேன். நேற்று நடந்தது போலிருக்கிறது பதினைந்து நாட்களாகி விட்டதே திருமணம் முடிந்து. நினைக்கவே பிரமிப்பாக இருந்தது. இத்தனை நாட்களாக சாந்தியிடம் முழுவதுமாக என்னைப் பற்றிப் பேசவில்லை. அவளைப் பற்றியும் கேட்கவில்லை.

வீட்டில் எங்கே பேசவிட்டார்கள்! அறைக்குள் இருந்தாலும் குசுகுசுத்தபடி பேச எனக்குப் பிடிக்காது. கொஞ்சம் சத்தமாய்ப் பேசினாலும் வெளியே கிழங்கள் விமர்சனம் செய்யக் காத்திருந்தனர். சீர் விருந்து வரிசை அது இது என்று பத்து நாட்கள் ஓட்டி விட்டனர். சரி தேனிலவில் பேசிக் கொள்ளலாம் என்று ஒத்திப் போட வேண்டியிருந்தது.



-பெ.நாயகி



திருமணமே திடுதிப்பென்று முடிந்ததுதானே! சரியாய்ச் சொன்னால் போன மாதம் இந்நேரம் திருமணம் பற்றிய எண்ணமாய் இருந்தது. இன்ஜினியரிங் முடித்துவிட்டு குஜராத்தில் ஓ.என்.ஜி.ஸியில் சேர்ந்து மூன்று வருடங்கள் ஓடிவிட்டிருந்தன. அப்பாவும் அம்மாவும் கல்யாணம் கல்யாணம் என்று அரித்துக் கொண்டே இருந்தார்கள். வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறைதான் தமிழ்நாடு திருமணமா, அடுத்த தடவை வரும் போது பார்க்கலாம் என்று சொல்லிச் சொல்லியே மூன்று வருடம் ஓட்டியது எளிதாய் இருந்தது.

போனமுறை வந்திருந்த போது அம்மா கொஞ்சம் அழுத்திக் கேட்டதால் சரி சொல்லியிருந்தேன். ஆனால் திடுதிப்பென்று ஒரு கடிதம் ஒரு போட்டோவுடன் வந்த போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்பா எழுதியிருந்தார் ''திருமணம்'' உறுதி செய்தாகிவிட்டது. பெண்வீட்டார் உன்னைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறார்களாம். போட்டோ பார்த்து சரி சொல்லி விட்டார்கள். பெண்ணை நாங்கள் பார்த்து விட்டோம். நீ பார்க்க வேண்டுமென்பது அவசியமில்லை என்று நினைக்கிறேன். அநாவசிய நேர விரயம். நீ பார்த்து புதிதாய் என்ன கண்டுபிடிக்கப் போகிறாய்? அதிக பட்சமாக அழகுதான் எடைபோட முடியும். அதையும் உன் சார்பில் தம்பி பார்த்து ஓ.கே. சொல்லிவிட்டான். எனவே வருகிற பதினான்காம் தேதி திருமணம். லீவு போட்டு

தமிழ்நாட்டிலேயே மிகவும் பழைமையான நகரம். இதன் வயது 2500 ஆண்டுகளுக்கும் மேலாகும். அந்தக் காலத்தில் குலசேகரப் பாண்டியன் கட்டிய பெரிய கோவிலையும், காட்டை அழித்து அவன் தாமரைப்பூ வடிவத்தில் உருவாக்கிய நகரையும் - சிவபெருமானே நேரில் வந்து ஆசீர்வதிக்க - அங்கே புனிதமான 'தேன் மழை' பொழிந்ததாம். அதனால் அந்த நகரம் மதுராபுரி என வழங்கப்பட்டு, இன்று மதுரையாகிவிட்டது.



விட்டு வந்து சேர்''. கடிதம் கையில் கிடைத்த போது தேதி நான்கு.

மனத்தின் ஓரத்தில் 'கல்யாணத்தை நிறுத்துங்கள் பெண்ணை நான் பார்த்துப் பேச வேண்டும். என் எதிர்காலத் திட்டங்களைப் புரிய வைக்க வேண்டும். என்னுடைய இன்றைய நிலையை வைத்து ஏதாவது கற்பனையில் இந்தத் திருமணம் நடைபெறுவதை நான் விரும்பவில்லை' என்று தந்தி கொடுத்து விடலாமா என்று எழுந்த எண்ணம் அவ்வளவு உறுதியாக இல்லாமல் போவதற்குக் கூடவே வந்திருந்த போட்டோவும் ஒரு காரணம். பார்த்துப் பேசினாலுமே என்ன புரியவைத்து விட முடியும் என்று தோன்ற பேசாமல் லீவு அப்ளிகேஷன் எழுதினேன்.

திருமணமான புதிய நாட்களில் படபடப்பாக நான் பேச முயன்ற போதெல்லாம் சாந்தி அமைதியாகவே இருந்ததாகப் பட்டது. சின்னப் பெண். எப்படிப் பட்டவள் என்றும் புரியவில்லை. அவளைப் பற்றி அவளுடைய தோழிகளும் உறவினர்களும் சொன்னவற்றை வைத்து ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. நான் சொல்லப் போவதை யோசித்துப் பார்த்துப் புரிந்து கொள்வாளா என்பதில் எனக்கும் சந்தேகம். அவசரத்தில் பேச வேண்டாம் என்று தள்ளிப் போட்டேன்.

புரண்டு படுத்த சாந்தி விழித்துப் பார்த்தாள். அருகில் நான் இல்லாததால் எழுந்து என்னைப் பார்த்து புன்னகை செய்தாள். ''என்ன சீக்கிரம் எழுந்திருச்சிட்டீங்க?'' என்று கேட்டாள். ''உடம்புக்கு ஒன்னுமில்லியே?''

சராசரி பெண்ணின் கேள்விகள்! சிரித்தேன். ''குட்மார்னிங்'' என்றேன். ''காப்பி சொல்லவா?'' என்று கேட்டேன்.

''ம். சொல்லுங்க நான் பாத்ரூம் போயிட்டு வந்திர்றேன்'' என்று நடந்து பாத்ரூமினுள் நுழைந்து கொண்டாள்.

நான் காப்பிக்கு ஆர்டர் செய்து அவள் வரக் காத்திருந்தேன்.

காப்பியை உறிஞ்சியவாறே ஜன்னலருகில் என் எதிரே வந்து அமர்ந்தாள். ''என்ன தீவிர சிந்தனை?' என்று கேட்டாள்.

''சாந்தி! உன் கிட்ட கொஞ்சம் பேசணும். நீ புரிஞ்சுக்க முயற்சி பண்ணு. உனக்கு வயசும் அனுபவமும் கம்மி. ஆனா என்னை நம்பு உன்னை என்னிக்கும் கைவிட மாட்டேன். ஆனா என் வாழ்வு தாழ்வுகளில் கூட வரும் பக்குவம் உனக்கு வரவேண்டும்.'' என்று பீடிகை போட்டேன்.

புரியாதவளாய் அப்பாவியாய் என்னை ஏறிட்டாள்.

''சாந்தி! நான் இன்ஜினியர் என்பதால்தான் உங்கப்பா இவ்வளவு செலவழித்துக் கல்யாணம் செய்து கொடுத்தாரா?''

''அஃப்கோர்ஸ்! எந்தப் பெண்ணுடைய அப்பாவுமே செய்யறதுதான். அதுவும் நீங்க வெளி மாநிலத்தில் அதுவும் பெரிய கம்பெனில கைநிறைய சம்பாதிக்கிறவர்ங்கறதால கொஞ்சம் ஸ்பெஷல்.''

சிரித்தேன். ''கல்யாணத்துக்கு முன்னே நான் பார்க்கக் கூட வரலை. உங்க வீட்டாருக்கும் என்னைப் பார்க்கணும்னு தோன்றவே இல்லையா?''

''இருந்ததுதான். உங்கப்பாதான் சொன்னார். அவனுக்கு லீவு அதிகம் கிடையாது. இப்போ பெண் பார்க்க ஒரு தடவை வந்து போனான் என்றால் கல்யாணத்துக்கு அப்புறம் விருந்து அது இதுன்னு இருக்க முடியாமல் அவசரமா ஓடிடுவான். அப்படி இப்படின்னு பயமுறுத்தினார். எங்கப்பா என் கிட்ட கேட்டார். நான் என்ன சொல்ல முடியும்? சரின்னேன்.''

முதன்முறையாக சாந்தி தொடர்ந்து பேசிக் கேட்கிறேன். பேசும் போது தலையை ஆட்டி ஆட்டி அவள் பேசுவது அழகாய் இருந்ததால் குறுக்கே பேசாமல் இருந்தேன்.

''அதற்காக எங்கப்பா ஒன்றும் கண்ணை மூடிட்டு தள்ளிடலை. உங்க ஓ.என்.ஜி.சியோட குஜராத் அங்க்லேஷ்வர் ப்ராஜக்ட்டில் எங்க அப்பாவோட நண்பர் ஒருத்தர் சீஃப் இன்ஜினியரா இருக்கார்.

பார்க் டவுன்
பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. போன்:582676; 564354

கனகதாரா முதலீட்டுத் திட்டம்

உங்கள் குழந்தைச் செல்வங்களை கோடீஸ்வரனாக்குங்கள்!

ரூ. 50,000/- செலுத்துவீர். 10 ஆண்டுகளில் **ரூ. 50,000/-ஐ** திரும்பப் பெறுவீர்.

மீண்டும் 20ம் ஆண்டு நிறைவில் ரூபாய் **ஒரு கோடியை** பெறுவீர்.

(ரூ. 12,500/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்)

வெகுமதி முதலீட்டுத் திட்டம்

ரூ. 580/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் **ரூ. 40,000/-** பெறுவீர்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	•5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும். உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம் 15 ஆண்டுகள்

வைப்புத் தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ. 6,320/-	ரூ. 6,000/-	ரூ. 6,000/-	ரூ. 56,320/-
ரூ. 25,280/-	ரூ. 24,000/-	ரூ. 24,000/-	ரூ. 2,25,280/-

பென்ஷனர் நலத் திட்டம் - வட்டி 19 1/2%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் **ரூ. 1,25,000/-** பெறலாம்

ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் **ரூ. 1,50,000/-** பெறலாம்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

SURESH

கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.

வட்டி விதம் ரூ. 1.85

கௌரவ ஆலோசகர்:

P. பாலசுப்ரமணியம், B.Sc.

முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

(Friday Weekly Holiday)

இயக்குனர் குழுத் தலைவர்:


R. விவேகானந்தன், B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours :
Week days 8.30 a.m. to 12.30 p.m. &
2.00 p.m. to 6.00 p.m.
Sunday 8.30 a.m. to 12 noon.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி



எனது நம்பிக்கை "சனோலா"வில் செய்த உணவில் தான்.





சனோலா —
வாங்குவதற்கேற்ப
எளிதான
அளவுகளில்
கிடைக்கிறது.





நான் ஒரு புதுமைப் பெண். தன்னம்பிக்கை, அறிவுதிறன், தனித்தன்மை நிறைந்த உணர்ச்சிகளின் பிரதிபலிப்பு.

என்னுடைய வழிமுறைகளை நன்கு உணர்ந்ததுடன், என் குடும்பத்திற்கும், எனக்கும் தேவையான நன்மைகள் அறிந்து செயல்படுவதில் மிக உறுதியாக இருக்கிறேன்.

நான் சமையலுக்கு உபயோகிப்பது,
சுவையான, ஆரோக்கியமான,
நம்பிக்கைத்தரும்

சனோலா

தமிழ்நாடு அக்ரோ
இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பரேஷன் லிமிடெட்
"அக்ரோ ஹவுஸ்",
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை-600 032.

அவர்மூலமா உங்களைப் பற்றி முழுசா விசாரிச்சுட்டுத்தான் சரின்னார். உங்க ப்ராஜக்ட்டில் உங்களுக்கு நல்ல பேராமே! உங்க ஜி.எம். உங்களை பர்ஸனல் அஸிஸ்டன்ட் மாதிரி வச்சிருக்காராமே. அவர் சொன்னாராம். இந்தப் பையனுக்கு எதிர்காலம் ரொம்ப ஒளிமயமா இருக்கும்னு.''

பெருமையாய் புன்னகைத்தபடியே, ''சப்போஸ் இந்த வேலையை நான் விட்டுட்டா என்ன பண்ணுவே?'' என்று கேட்டேன் பளிச்சென்று.

சாந்தி கொஞ்சம் அதிர்ச்சியடைந்த தாய்த் தோன்றியது.

''ஆம் சாந்தி! எனக்கு இந்த மாதிரி யாரோ ஒருவரிடம் வேலை பார்க்கறது பிடிக்கலை. நான் ரொம்ப நாள் இந்த உத்தியோகத்தில் இருக்க மாட்டேன்.''

சாந்தி ஒன்றும் பேசவில்லை.

''ஐயாம் சாரி சாந்தி! கல்யாணத்துக்கு முன்னால என்னோட ப்ளான் என்னன்னா பெண்ணைப் பார்க்கப் போகும் போதே அவளிடம் இதனைச் சொல்லி அவள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே திருமணத்துக்கு சம்மதம் தெரிவிக்கும் உரிமையை அவளுக்கு வழங்க வேண்டும் என்பதுதான். நான் செய்த தப்பு இதனை என் வீட்டில் சொல்லி வைக்காததுதான். அதனால்தான் நம் கல்யாணம் கொஞ்சம் அவசரக் கல்யாணமாப் போச்சு'' என்று நிறுத்தினேன்.

''இதனை கல்யாணத்துக்கு முன்னே சொல்றதுனால என்ன லாபம்?''

''சொன்னேனே! உதாரணத்துக்கு உங்க வீட்டையே எடுத்துக்கோ. நான் இப்போ எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர். இன்னும் மேலே மேலே ப்ரமோஷன் எல்லாம் வாங்கி பெரிய ஆள் ஆவேன். ஒரு செக்யூர்ட் ஜாப். நல்ல சம்பளம்னு தானே உன்னைக் கட்டிக் கொடுத்தார்கள். நான் வேலையை விட்டுவிடப் போகிறவன் என்றால் கொஞ்சம் யோசித்திருப்பார்கள் இல்லையா? அதையும் மீறி பரவாயில்லை என்று கல்யாணம் நடந்திருந்தாலும் நீயும் மனதளவில் அந்த ஒரு நிலைக்குத் தயாராய் இருப்பாய் இல்லையா? எல்லாவற்றிற்கும் மேலாக நான் வேலையை விடப் போகிற நேரத்தில் உன் வீட்டார் 'மாப்ளே! அப்படி எல்லாம் பண்ணிடாதீங்க'ன்னு என் கையைப் பிடித்து பஞ்சாயத்து பேசற மாதிரி ஸீனெல்லாம் க்ரியேட் ஆகாமல் தவிர்க்கலாம் இல்லையா?''

கொஞ்ச நேரம் பயங்கரமான அமைதி.

''சரி! வேலையை விட்டுட்டு என்ன பண்ணுவீங்க?'' என்று கேட்டாள் கொஞ்சம் தெளிந்தவளாய்.

''தட்ஸ் குட்! சொந்த பிஸினஸ் ஏதாவது. நிறைய பண்ண முடியும். நான் ஆபீஸ்ல செலவழிக்கிற மூளையையும் நேரத்தையும் சொந்தத் தொழிலில் இன்வெஸ்ட் பண்ணினால் ஒரே வருடத்தில்... ஐயா... விஷ்க்... எங்கேயோ போயிடுவேன்'' என்றேன் கை சொடுக்கிக் காட்டியபடி. ''என் ஃப்ரெண்ட்ஸ் நாலைந்து பேர் இப்போ ஜம்னு பிஸினஸ் பண்றாங்க தெரியுமா?''


அவள் இன்னும் சிந்தனையில் இருந்தாள். அவளைப் பார்க்க கொஞ்சம் பாவமாக இருந்தது. சின்னப் பெண்! நான் இன்னும் மெதுவாகச் சொல்லியிருக்கலாமோ? மிரண்டு விட்டாளோ! பாவம்! இன்ஜினியர் பெண்டாட்டி அதுவும் வடநாட்டில் என்பதில் நிறைய கற்பனைகளை வளர்த்திருக்கலாம். ஒவ்வொரு முறை ஊருக்குப் போகும் போதெல்லாம் தோழிகளிடம் புதிது புதிதாய்க் கதைகள் சொல்ல முடியும் என்றெல்லாம் கனவுகள் கண்டிருக்கலாம். எல்லாம் ஒரே கணையில் நான் வீழ்த்தி விட்டேனோ என்று நினைக்கையில் கொஞ்சம்



மதுரை நகரைப் பற்றி....

இராமாயணத்திலும், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலும் காணப்படுகின்றது. மெகஸ்தனிஸ் (கி. பி. 302), பிளினி (கி. பி. 77), டோலமி (கி. பி. 140), மார்கோபோலோ (கி. பி. 1293), படுடா (கி. பி. 1333) ஆகியோர் மதுரைக்கு விஜயம் செய்து அதைப் பற்றிக் குறிப்புகள் எழுதி வைத்துள்ளனர்.

மதுரை சுந்தரேஸ்வரர் கோவிலின் கிழக்குக் கோபுரம் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மிகவும் உயரமான தெற்குக் கோபுரம் 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதன்மீது நின்று பார்த்தால் கோவிலின் மற்ற கோபுரங்கள் மட்டுமில்லாமல் மதுரை நகரின் அழகிய தோற்றம் முழுமையும் தெரியும்.



சங்கடம் இருந்தாலும், ஐ நுடின்ட் ஹெல்ப் இட். இல்லையா!

சாந்தி மெல்ல நிமிர்ந்தாள். ''என்ன பிஸினெஸ் பண்ணுவீங்க? எங்கே பண்ணுவீங்க?''

சிரித்தேன். ''அதெல்லாம் நிர்மானித்துக் கொள்ளலாம்.''

''பிறகு இப்போதே இவ்வளவு சொல்ல வேண்டிய அவசியம்?''

''இருக்கிறது சாந்தி! பிஸினெஸ் என்பது ஜஸ்ட் ஓவர்நைட் சமாசாரம் இல்லை. சைபரிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய விஷயம். நான் வேலையை விட்டு விட்டு பிஸினெஸ் ஆரம்பித்து அது கொஞ்சம் சூடு பிடிக்க வேண்டிய இடைப்பட்ட நேரம் இருக்கிறதே அது ரொம்பக் கொடுமையானது. அந்த நேரத்தில் எகனாமிகலாக நான் முழுக்க முழுக்க உன்னை டிபன்ட் பண்ணவேண்டி இருக்கலாம். நீ வேலைக்குக் கூடப் போக வேண்டியிருக்கலாம். உன் நகைகள் என் சேமிப்பு எல்லாவற்றிலும் நான் கைவைக்க வேண்டியிருக்கலாம். நான் எழுவதற்குக் கொஞ்ச நாள் தாமதமாகலாம். அதற்கெல்லாம் நீ தயாராகிக் கொள்ள வேண்டும். நீ ஒரு கிராஜுவேட் என்பது மகிழ்ச்சியான சமாசாரம். கூடவே கரஸ்பான்டன்ஸ் கோர்ஸில் பி.எட்., எம். எட்., என்று படித்துக் கொள். ஷார்ட்ஹான்ட், டைப்ரரைட்டிங் கிளாஸ், ஸ்போக்கன் இங்கிலீஷ் கோர்ஸ் எல்லாவற்றிற்கும் சேர்த்து விடுகிறேன். எல்லா வகையிலும் நீ தயாராகிக் கொள். ஓ.கே?'' என்றேன். என் மனத்தில் உள்ளவற்றை அவளுக்குத் தெளிவாகப் புரிய வைத்து விட்டேன் என்கிற திருப்தி வந்தது.

ரொம்ப நேரம் சாந்தி ஒன்றுமே பேசவில்லை. பிறகு மெல்லக் கேட்டாள். ''உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா?''

ஓஹோவென்று சிரித்தேன். ''நீ ஒவ்வொரு கேள்வியிலும் சின்னப் பெண் என்பதை நிரூபித்துக் கொண்டே வருகிறாய். நான் எதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், நீ சமையல்கட்டை விட்டே வெளியே இன்னும் வரவில்லை. நான் இன்றைக்கே ஏன் இவ்வளவு சொன்னேன் என்றால், உனக்கு இந்த விஷயங்கள் புரிந்து ஜீரணமாக இரண்டு நாட்கள் ஆகும். நாளை இரவு நாம் திரும்பும் போதாவது நீ தெளிவாயிருக்க வேண்டும் என்றுதான்.''

''நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள். உங்களுக்குச் சமையல் தெரியுமா?'' என்றாள் சாந்தி விடாமல்.

''தெரியாது'', என்றேன். ''குஜராத்தில் நான் ஓட்டலில்தான் சாப்பிடுகிறேன்.''

''நான் சொல்லித் தர்றேன் பழகிக்குவீங்களா?''


''அதான் நீ இருக்கியே உனக்கு முடியாத போது ஓட்டல் இருக்கவே இருக்கு'' என்றேன்.

''நீங்க சொல்ற க்ளாஸஸ் கோர்ஸ் எல்லாம் நான் சேருகிறேன், நீங்களும் சமையல் கத்துக்கறதுக்கு சம்மதம் என்றால்'' என்றாள் கொஞ்சம் அழுத்தமாக.

''புல்ஷிட்! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?'' என்றேன் கொஞ்சம் கோபமாக.

''நீங்க கோபப் படாமல் பொறுமையாக நான் சொல்வதை எல்லாம் கேட்பீர்கள் என்றால் சொல்கிறேன்'' என்று நிறுத்தினாள். குரல் கொஞ்சம் அடிபட்ட மாதிரி தோன்றியது.

எனக்கு யோசித்துப் பார்த்ததில் பாவமாக இருந்தது. இவளிடம் போய்க் கோபித்திருக்கக் கூடாது என்று தோன்றியது. சொல்லட்டுமே என்னதான் சொல்கிறாள் என்று பார்ப்போமே அவளுடைய ஒவ்வொரு


Dhanalakshmi
Because the future of your children is of more than just academic interest to you.
INVEST IN DHANA VIDYA DEPOSIT CERTIFICATE
You have great plans for your children. You want to give them the best of everything. And that includes an education that gives them the competitive edge. To do that you need to think ahead. And act. Invest in Dhana Vidya Deposit Certificate and give your children the greatest gift you could possibly give. The gift of the future.
For six decades and more Dhanalakshmi Bank has helped thousands of people chart the course of their future with a sense of pride and achievement.
Come, be a part of the Dhanalakshmi family.
Get in touch. We'll be with you all the way.
BANK FOR THE FUTURE
THE DHANALAKSHMI BANK LIMITED
Corporate Office : Thrissur
CHAIRMAN : V. HARIHARAN
08-E2-104-93

சந்தேகத்தையும் தீர்த்து வைக்க வேண்டியது என் கடமை அல்லவா?

''சொல்'' என்றேன் மென்மையாக.

'' என் வார்த்தைகளில் கடுமை இருந்தால் மன்னிச்சுடுங்க. எனக்கென்னவோ நீங்க அந்த கற்பனைகளில் அதிகம் வாழுகின்ற தியரிடிகல் ஆசாமியாகவே படறீங்க. உங்க சிந்தனைகளில் ப்ராக்டிகாலிட்டி ரொம்ப குறைவாக இருக்கிறது. உங்க திட்டங்கள் நிறைவேற மற்றவங்க எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு தரணும்னு கணக்குப் போடறீங்களே தவிர உங்களுடைய சுய ஒத்துழைப்பு எவ்வளவு அவசியம்னு உங்களுக்குத் தெரியவே இல்லை. மற்றவங்க உங்க இஷ்டத்துக்கு மாறுவதை விட நீங்க மாறுவது எளிது. அதுக்குக் கூட நீங்கள் தயாரா இல்லை. பிஸினெஸ் பண்ணுவதற்கு மனைவி நகை தரணுமே பணம் தரணுமே மாமனார் மறுப்பு சொல்லாம இருக்கணுமேன்னு கவலைப்படத் தெரிஞ்ச உங்களுக்கு பிஸினெஸ் பண்ண ஒரு ப்ராஜக்ட் வேணுமே என்கிற சிறு விஷயம் கூடத் தெரியலை. டிஸைடே பண்ணலை நீங்க இதுவரை. இவ்வளவு ஏன், கழுத்தைச் சுத்தி காதைத் தொடுகிற அளவுக்கு வளர விடாமல் இந்த மிக முக்கிய விஷயத்தை உங்கப்பாவிடமே பேசுகிற தைரியம் உங்களுக்கு இல்லை. எல்லாத்துக்கும் மேலே எதையும் இளக்காரமாய் நினைக்காத தன்மையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வெற்றிகரமாக பிஸினெஸ் பண்றவங்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய குணங்கள். உங்களுக்குக் கல்யாணத்திலிருந்து பண வசதியிலிருந்து, ரிஸ்கிலிருந்து எல்லாமே நீங்க கஷ்டமே படாமல் உங்கள் சார்பில் யாராவது செய்து தந்தால் நல்லது. இதெல்லாம் ஒரு பிஸினெஸ் மேனுக்கு உரிய இலக்கணங்கள் இல்லை என்று எனக்குப் படுது.''

உறைந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

எழுந்து என் அருகில் வந்து என் தலையில் கை வைத்து அருகில் இழுத்துக் கொண்டபடி சொன்னாள்.

''எல்லாரும் எல்லாம் பண்ண முடியாதுங்க. நம்ம நேச்சருக்கு ஒத்துப் போகிற விஷயத்தில்தான் வெற்றிபெற முயற்சிக்கணும். தட்டைப் பல்லை வைத்துக் கொண்டு பசுமாடு மாமிசமும் சாப்பிட முடியாது. கோரைப் பல்லை வைத்துக் கொண்டு புலி புல்லும் சாப்பிட முடியாது.''

அவள் சொன்ன விஷயங்கள் ஜீரணமாக எனக்குத்தான் இரண்டு நாட்கள் தேவைப்பட்டது.

கல்யாணத்துக்கப்புறம் என் வேலைத் திறன் இன்னும் கூடியிருப்பதாக என் ஜி. எம். பாராட்டும் போதெல்லாம் சாந்தியை நினைத்துக் கொண்டேன்.

EASY TO COOK



FOOD IDEAS



FOR CHILDREN

GOKULAM

The monthly magazine for children

GOKULAM' (ENGLISH), 47, JAWAHARLAL NEHRU ROAD,
EKKADUTHANGAL, MADRAS - 600 097

96 PAGES
FOR JUST
Rs. 3!



தமிழக அரசின் சுற்றுலாத் துறை இயக்குநர் திருமதி சிவகாமியுடன் ஒரு பேட்டி -

“சுற்றுலாவால் நாட்டுப்பற்றும், மதநல்லிணக்கமும் வளரும்!”

★ சுற்றுலா செல்வதால் மக்களுக்கு என்னென்ன நன்மைகள்?

பயணிகள் பல புதிய விஷயங்களை அறிகிறார்கள். புதிய பகுதிகள், அங்குள்ள மக்களின் பின்னணி மற்றும் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்கின்றனர். கிணற்றுத்தவளையாகவே இருந்து விடாமல் பல பகுதிகளுக்குப் பயணம் செல்வதன் மூலம் நாட்டின் பல்வேறு பரிமாணங்களை அவர்களால் அறிய முடிகிறது. பெரும்பாலும் சுற்றுலாத் தலங்களும், அந்த இடங்களுக்குச் செல்லும் வழிகளும் இயற்கைவளம் மிக்கதாக இருப்பதால் அவை உடலுக்கும் மனதுக்கும் தெம்பூட்டுகின்றன. கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற சரித்திரச் சின்னங்களைப் பார்க்கும் போது இந்திய பாரம்பரியத்தில் பெருமை கொள்ளும் பயணிகளின் மனதில் நாட்டுப் பற்றும், தான் ஓர் இந்தியன் என்ற நியாயமான கர்வமும் வளர்கின்றன.

★ மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் சுற்றுலா சிறப்புகளும் வளர்ச்சியும் எப்படி இருக்கின்றன?

பிரகாசமாக உள்ளன. உதாரணமாக சென்னைக்கு அருகிலேயே உள்ள இடங்களில் படகுச் சவாரி (முட்டுக்காடு), மலையேற்றம் (திருக்கழுக்குன்றம்), கடற்கரையின் பின்னணியில் சரித்திரக் கோயில்கள் (மகாபலிபுரம்), பறவைகள் சரணாலயம் (வேடந்தாங்கல்) இப்படி இத்தனை சுற்று

லாக் கவர்ச்சிகளையும் ஓரிரு நாட்களில் பார்க்க முடியுமே. அதே போல் சிதம்பரம், திருநள்ளாறு, நாகூர், வேளாங்கண்ணி ஆலயம் இப்படி அருகருகே அமைந்துள்ள பல்வேறு பிரபல மதத் தலங்கள் மத நல்லிணக்கத்தை வலியுறுத்துவதாக இருக்கின்றன. ஆண்டுக்குப் பத்திலிருந்து இருபது சதவீதமென்ற வகையில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதற்கேற்ற அளவில் அவர்களுக்கான செளகரியங்களை அளிக்க அரசு முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

★ பொதுவான சுற்றுலாவாக இல்லாமல் சில குறிப்பிட்ட தனி ரசனைகள் கொண்டவர்களுக்காக வித்தியாசமான சுற்றுலாக்களை தமிழக அரசு அமைத்துத் தருகிறதா?


கடல் நகரங்களை மட்டும் கண்டு ரசிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் சிலர் விரும்புவதுண்டு. ராமேஸ்வரம் கடலோரப் பகுதிகளில் இவர்களை வழிகாட்டியுடன் அனுமதிக்கிறோம். அதேபோல் நடனப் பள்ளிகளைப் பற்றி அறிய, அருங்காட்சியகங்களைப் பார்வையிட, சிற்பச் சிறப்புகளைக் கண்டு ரசிக்க, பல்வேறு மலர்களைப் பற்றி அறிய, குறிப்பிட்ட ஆமையினங்களைக் கண்டுகொள்ள - இப்படிக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக எங்களை அணுகுபவர்களுக்குச் சரியான உதவியும், வழிகாட்டலும் செய்து தர எங்கள் துறை தயாராக இருக்கிறது. பல்வேறு அட்வென்ச்சர் சுற்றுலாக்களையும் யூத் ஹாஸ்டல் குழுவினருடன் இணைந்து நடத்துகிறோம்.

★ வெளி நாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறீர்கள். அங்கே உள்ள எந்த சிறப்பு அம்சங்களை நம் அரசும் சுற்றுலா மையங்களில் செயல்படுத்த வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியது?

சமீபத்தில் பெர்லினுக்குச் சென்ற போது அங்குள்ள சுற்றுலா மையங்களில் தங்குமிடங்களின் கட்டணம் குறைவானதாகவே உள்ளது என்பதை உணர முடிந்தது. தவிர ஸ்டார் ஓட்டல்கள் அல்லாத சிறு உணவு மையங்கள் மற்றும் தங்குமிடங்கள் கூட வெகு சுத்தமாகக் காட்சியளித்தன. முக்கியமாக ரயில்வே நிலையங்களில் இறங்கும் போதே அந்தப் பகுதியிலுள்ள பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றிய விவரங்கள், வரைபடத்துடன் அறிவிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் நாமும் இன்னமும் அதிக அளவில் பின்பற்ற வேண்டும் என்று தோன்றியது. நம் நாட்டில் சிறந்த சரித்திரச் சின்னங்கள் கூட சரியாகப் பராமரிக்கப்படுகின்றன என்று சொல்ல முடியாது. அவற்றைச் சுற்றியுள்ள புல்வெளிகள் வெகு அழகாகப் பராமரிக்கப்படலாம். பொது மக்களும் சுற்றுலாத் தலங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பல சுற்றுலாத் தலங்களைச் (கோயில்கள் உட்பட) சுற்றி வசவசவென்று கடைகள் உருவாகி விடுகின்றன. சில சமயம் இவைகள் அந்த இடத்தின் அழகையே குலைக்கின்றன.

★ உண்மைதான். ஆனால் தேவைப்படும் மாறுதல்களைக் கொண்டு வர நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறீர்கள்?

தொடர்புள்ள மற்ற துறைகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி தேவையான மாற்றங்களை உருவாக்க முயற்சிக்கிறோம். ஹரியானாவில் உள்ள நெடுஞ்சாலைகளில் சுமார் ஐம்பது கிலோமீட்டர்களுக்கு ஒரு மோட்டல் இருக்கிறது ('மோட்டல்' என்றால் குளியலறை, கழிவறை, ஓய்வெடுக்க நாற்காலிகள், நிழற்குடைகள், சிற்றுண்டி சாலை ஆகியவற்றைக் கொண்டது). இதனால் நடுவில் ஓரிரு மணி நேரங்கள் ஓய்வும் புத்துணர்ச்சியும் தேவை என்றால் அதற்காக ஓட்டல்களில் அறை எடுத்துப் பணத்தைச் செலவழிக்காமல் இதுபோன்ற மோட்டல்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது போல் தமிழ்நாட்டிலும் பல்வேறு இடங்களில் மோட்டல்கள் கட்ட வேண்டும் என்



துணிகளில் எண்ணெய் கறையோ,
கிரீஸ் தாரோ பட்டு விட்டால்
அவற்றைத் துவைக்கும் போது
சிறிது சொட்டு நீலகிரி தைலம்
(யூகலிப்டஸ் ஆயில்) விட்டுக்
கழுவினால், கறைகள் போய்விடும்.
பெட்ரோல், கெரசின் என்று
தேடிக் கொண்டிருக்க வேண்டாம்.

- அனுபல்லவி

காளி சமையலறை சாதனம் - உங்கள் சிறப்பைப் பறைசாற்ற உதவும்.



பெயர் ....
முகவரி ....
....
....

அனுப்ப வேண்டிய முகவரி :
காளி பிரான்ட்ஸ், மதராஸ் ரோடு,
கும்பகோணம் 612 002.

நீங்கள்... சமையல் கலையில் தேர்ச்சி பெற்ற நாகரீக நங்கை. சிறந்தவையே உங்களுக்குத் திருப்தி தரும்.

காளி காப்பர் பாட்டம் சமையலறை சாதனங்கள்-மிக உயர்ந்த தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மற்றும் காப்பர் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட இவை மட்டுமே ISI முத்திரை கொண்டவை. கிட்டதட்ட கடந்த 50 ஆண்டுகளில் 25-க்கு மேற்பட்ட வகைகளில் சாதனங்களை வடிவமைத்துள்ளது காளி. அனைத்தையுமே வாங்க வேண்டும் என்ற ஆவல் அனைவருக்கும் உருவாகும். இவற்றால் ஏற்படும் பெருமையை அனுபவித்து மகிழுங்கள்.



இந்தக் கூப்பனை அனுப்புங்கள். உங்களை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்கிறோம். இலவசமாக! புதுப்புது சமையல் குறிப்புகள் ஒவ்வொரு மாதமும் உங்களுக்கு அனுப்பி வைக்கப் படும்! சமையல் குறிப்புப் போட்டிகளில் பரிசுகளை வெல்லும் வாய்ப்பும் உண்டு. இப்போதே பதிவு செய்து கொள்ளுங்கள்.

kali®

அனைவருக்கும் விருப்பம்
ஒரு சிலருக்கே அதிர்ஷ்டம்!

FOUNTAINHEAD-0775-93

காளி பிரான்ட்ஸ், 426 பி, மதராஸ் ரோடு, கும்பகோணம் 612 002.
தொ.பே.: 21149, 21109, ஃபேக்ஸ் : 435-21048

உலகத் தரம் வாய்ந்த காப்பர் பாட்டம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

ஸ்வாமிக்குப் பானகம் நைவேத்தியம் செய்யும்பொழுது அதனுடன் ஒரு துளி எலுமிச்சம் பழத்தையும் பிழிந்து பாருங்கள்! அதன் சுவையே தனிதான்!

- விமலா

பது என் விருப்பம். தமிழகத்திலும் சில இடங்களில் சமீபத்தில் மோட்டல், ஓய்வி டங்கள், ஓட்டல்கள் ஆகியவற்றை சுற்றுலாத் துறையினர் எழுப்பியுள்ளோம். திருத்தணி, மகாபலிபுரம், குன்னூர், ராமேஸ்வரம் போன்றவை அவற்றில் சில. எங்களது சுற்றுலா அலுவலகங்கள் மகாபலிபுரம், பூம்புகார், சேலம், ஊட்டி, கன்னியாகுமரி, ராமேஸ்வரம் போன்ற இடங்களில் உள்ளன. பயணிகள் இங்கே அணுகினால் அந்தப் பகுதியின் எல்லாச் சுற்றுலா விவரங்களையும் அறியலாம். அதேபோல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலகம் 143, அண்ணா சாலையில் இயங்குகிறது. அங்கு அணுகியும் வேண்டிய விவரங்களைப் பொது மக்கள் பெறலாம்.

டாக்டர் பூர்ணிமா சாஸ்திரி

இணை இயக்குனர் (சுற்றுலா - தென்னிந்தியா), இந்திய அரசு

★ சுற்றுலா செல்ல விரும்புபவர்களுக்கு அரசு குறிப்பாக எந்த விதங்களில் உதவுகிறது?

இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இம் மாநிலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் பல்வேறு 'கண்டக்டட் டூர்'களை நடத்துகின்றனர். வெளிநாட்டு வருமானத்தினரை மனதில் கொண்டுதான் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. தனியாகக் கார் வேண்டுமென்றாலும், சுற்றுலாத் தலங்களுக்கான வழிகளை நன்கு அறிந்த கார்ரோட்டிகளை இந்தச் சுற்றுலாக் கழகங்கள் அனுப்பி வைப்பார்கள்.

அதுமட்டுமல்ல எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்று நீங்களே நிர்மானித்துக் கொண்டு இவர்களை அணுகினால் அந்த இடங்களை எந்த வரிசையில் பார்க்கலாம், என்னென்ன முன்னேற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும், நீங்கள் அங்கு செல்ல எண்ணியிருக்கும் காலத்தில் அந்த இடங்களின் தட்பவெப்பம் எப்படி, சுற்றுலாவுக்கு மொத்தம் எவ்வளவு நாட்களாகும் போன்ற விவரங்களை அறிய முடியும். அரசின் சுற்றுலாக் கழகங்கள் மட்டுமல்ல, சில தனியார் நிறுவனங்களுக்கும் இப்படி டூர் ஏற்பாடு செய்ய அரசு அனுமதி அளித்திருக்கிறது.

உங்கள் மொத்த பட்ஜெட் இவ்வளவுதான் என்று கூறி அதற்குத் தகுந்தமாதிரி ஒரு நல்ல சுற்றுலா திட்டத்தை உருவாக்கித் தரச் சொன்னாலும் சுற்றுலாக் கழகங்கள் உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றும்.


இப்போதெல்லாம் காலனிகளும், ஃப்ளாட் சிஸ்டங்களும் அதிகமாகி விட்டன. இவற்றில் சில குடும்பங்கள் சேர்ந்து கொண்டு (சுமார் 40 பேர்) தனியாக அவர்கள் விருப்பத்துக்குச் சில இடங்களுக்குச் சுற்றுலா செல்ல விரும்பினாலும் அதற்கான பஸ் மற்றும் ஓட்டுனர்களை வாடகைக்கு வழங்குகிறார்கள்.

இந்தியாவிலுள்ள 'இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்' பல அலுவலகங்களை நீங்கள் அணுகி பல்வேறு சுற்றுலா மையங்களின் சிறப்பு அம்சங்களை அறியலாம். அங்கு கையேடுகளையும், வழிகாட்டிப் புத்தகங்களையும் இலவசமாகவே பெறலாம். சென்னையில் இந்த அலுவலகம் 154, அண்ணா சாலையில் உள்ளது.

★ புதிய சுற்றுலா மையங்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

நம் நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இடங்கள் எக்கச்சக்கமாக உள்ளன. பல இடங்களில் கொஞ்சம் கொஞ்சம் புதிய சுற்றுலாத் தலங்களைப் பிரபலப் படுத்தினால் பரவலாக ஓரளவு சௌகரியங்களையே செய்ய முடிகிறது. இதனால் தொடக்க காலத்தில் அங்கு செல்லும் பயணிகள் ''அந்த இடத்தைச் சரியாகவே டெவலப் செய்யவில்லை. அதற்குள் பெரிசாக விளம்பரம் கொடுத்துட்டாங்க'' என்கிற வகையில் கருதுகிறார்கள். இதனால் குறிப்பிட்ட பகுதிகளில் இனம் கண்டு கொள்ளப்பட்ட சில புதிய சுற்றுலாத் தலங்களை நன்கு டெவலப் செய்த பின் அடுத்த பட்டியலைக் கையிலெடுத்துக் கொள்வது புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். எங்கோ தனியாக உள்ளடங்கிய ஒரு இடம் சுற்றுலாவுக்கு ஏற்றதாக இருக்கிறது என்றால் அதைவிட ஏற்கெனவே உள்ள சுற்றுலா மையங்களி

பெறுவீர் சான்மேக் கி:ப்ட் கார்டு.



5வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்ட்

எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை இது.

இந்த கிஃப்ட் கார்ட் பெறுவதைத் தொடர்ந்து சான்மேக் சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப் நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை பெறலாம்.

அறிமுகம்

விசேஷ சீட்டு குரூப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

SANMAC CHITS
MEETS YOUR NEEDS

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம்

'லக்ஷ்மி டவர்ஸ்', 27, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, (எஸ்ஸோ பேஜஸ் அருகில்), மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 8258637, 8251232.

கிளை அலுவலகங்கள்: சென்னை அண்ணா சாலை, போன்: 8277363 • தி.நகர், போன்: 8278515, 8258637 • அசோக்நகர், போன்: 4824757 • மயிலாப்பூர், போன்: 4992488 • அண்ணாநகர் மேற்கு, போன்: 6214454 • மேற்கு தாம்பரம், போன்: 401934 (PP) • புரசைவாக்கம், போன்: 6425036, மதுரை போன்: 23334 • கோயம்புத்தூர் போன்: 46375 • திருச்சி போன்: 25324 • திருவண்ணாமலை போன்: 22922, 23333 • கும்பகோணம்: • திருநெல்வேலி போன்: 322032.

BID FOR A BETTER LIFE

லிருந்து பெரிதும் தள்ளி இல்லாமல் இருக்கும் ஏதாவது இடம் சுற்றுலாவுக்கு ஏற்றது என்பது தெரியவருமானால் அதை முதலில் வளர்க்கிறோம்.

★ ஊட்டியும் கொடைக்கானலும் கோடையில் நிரம்பி வழிகின்றன. வேறு புதிய மலைப் பிரதேசங்களை தமிழகத்தில் பிரபலப்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளலாமே?

ஏற்காடு இவற்றிற்கு ஏற்கெனவே ஒரு மாற்றாக விளங்குகிறது. சமீபத்தில் ஏலகிரி மலை சுற்றுலாவுக்கு ஏற்றது என்று கண்டு கொண்டு, அதன் உச்சியில் பயணிகள் தங்குமிடம் ஒன்றையும் கட்ட அரசு நிதி உதவி செய்தது. கொல்லிமலையும் நல்ல ஸ்கோப் உள்ள மலைப்பகுதி.

ஆனால் ஒன்று. ஏற்கெனவே உள்ள பிரபலமான மலைவாசஸ்தலங்களில் பயணிகளுக்கான (ஓட்டல், மோட்டல் போன்ற) சௌகரியங்களை அறிமுகம் செய்து பிரபலப்படுத்துவதிலும் சரி, சில எல்லைகள் உண்டு. இயற்கைச் சூழலை இந்த முயற்சிகள் கெடுத்து விடக் கூடாது என்பதையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

கோடையில் நல்ல க்ளைமேட்டைப் பெற பெங்களூர், ஹாசன், மைசூர் போன்ற உயர்வான பகுதிகளுக்குப் போனாலே போதும் என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். பார்க்க வேண்டிய இடங்களும் உண்டு, தட்ப வெப்பம் ஏற்றது, என்று அமைந்துள்ள இதுபோன்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து கோடை விடுமுறையில் சில நாட்களைக் கழிக்கலாமே.

★ சுற்றுலா என்றாலே அது வெளிநாட்டினர் இங்கு வந்து செல்வதுதான் என்கிற வகையில்தான் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்கிற எண்ணம் நிலவுகிறதே!

சொல்லப்போனால், இந்தியாவே பரந்து விரிந்த தேசமாக இருப்பதனாலோ என்னவோ உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (சென்ற ஆண்டு 650 லட்சம்) எப்போதும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை விட (சென்ற ஆண்டு 18 லட்சம்) அதிகமாகவே இருக்கிறது.

அதேசமயம் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளை சிறப்பாகக் கவனிப்பதில் எந்தத் தவறுமில்லை. இந்தியாவின் மதிப்பை வெளிநாடுகளில் உயர்த்தும் வகையில் உதவ எங்களால் முடிகிறது என்பதில் எனக்கு மகிழ்ச்சியே. இந்தியப் பண்பாடு, தத்துவம், வாழ்க்கைமுறை ஆகியவற்றிலெல்லாம் மேலை நாட்டினருக்கு பெருவிருப்பம் உண்டு. எல்லாத் தரப்பு மக்களுடனும் பழக முடிகிறது என்பதைச் சிறப்பாகவே கருதுபவன் நான்.

தேசிய செயல் திட்டத்தின்படி 1995க்குள் இருமடங்கு தங்குமிடங்களைச் சுற்றுலாப் பயணிகளுக்காக நிறுவ வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த இலக்கை தமிழ்நாடு இப்பொழுதே எட்டி விட்டது. ஆனால் அதற்குப் பெருமளவில் உதவியவர்கள் தனியார் துறையினர்தான்.

★ என்னதான் கணவன் மனைவி இருவரும் சம்பாதித்தாலும், குடும்பத்தோடு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஒரு சுற்றுலா போய்விட்டு வந்தால் நிறையப் பணம் தேவைப்படுமளவுக்குத்தானே இப்போது தங்குமிடங்களின் வாடகை மற்றும் உணவுக் கட்டணம் இருக்கின்றன. இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் நிதியுதவி மூலம் கட்டப்பட்ட ஓட்டல்களின் நிலையையும் மனத்தில் கொண்டுதான் இந்த ஆதங்கத்தை வெளியிடுகிறோம்.


வெளிநாட்டுப் பயணிகள் ஓரிடத்தில் தங்கும் போது சில அதிகப்படி சௌகரியங்களை எதிர்பார்க்கிறார்கள். அவற்றை அளிக்கும் போது அது போன்ற தங்குமிடங்களுக்குச் சற்று அதிகக் கட்டணம் வசூலிக்க வேண்டியிருக்கிறது. அதே சமயம் குறைவான கட்டணம் கொண்ட அறைகளும், உணவு வகைகளும் கிடைக்குமாறும் செய்கிறோம்.

நடுத்தரக் குடும்பங்களுக்கு ஒரு யோசனை. மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை சுற்றுலாவுக்கென்று ஒதுக்கி விட வேண்டும். குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தினால் ஆண்டுக்கொரு முறை உல்லாசப் பயணம் போகும் உற்சாகத்தில் கணிசமாக சேர்ப்பார்கள். வெளிநாடுகளில் இப்படி சுற்றுலாவுக்கென்றே சேமிக்கும் பழக்கம் மிக சகஜம். இங்கும் அதைப் பின்பற்ற வேண்டும்.

பேட்டி : ஜி. எஸ். எஸ்.

வீட்டில் எறும்புப் புத்து இருந்தால் அங்கே கொஞ்சம் பெருங்காயத் தூளைத் தூவி விடுங்கள். அவ்வளவுதான் பல நாட்களுக்கு வீட்டில் எறும்புப் புத்தே வைக்காது, அதன் தொல்லையும் இருக்காது.

- அனுபல்லவி



கென்ஸ் ஒன்றே போதும் பேன்களே வராது எப்போதும்



கென்ஸ் — பேன்களின் முழுமையான எதிரி.
கென்ஸ், பேன்களை ஒழிக்கும். ஈறுகளை அழிக்கும்.
மல்லிகை மணம் கமழும் எண்ணெயில்
உருவாகும் கென்ஸ், கேசத்திற்கு நறுமணம்
நல்கும். எனவே சக்தி வாய்ந்த கென்ஸைப்
பயன்படுத்தி பேன் உங்கள் நலத்தை
பாதிக்காத வண்ணம் பேணுங்கள்.

பெரியவர்களும் உபயோகிக்கலாம்.

கேசத்திற்குத் தேவையான அளவு எடுத்துத்
தலையிலும், மயிர்க்கால்களிலும் நன்கு தடவி 20
நிமிடங்கள் ஊற வைக்கவும். பின்னர் தலையை
நன்கு அலசிக் குளிக்கவும். இவ்வாறு வாரம் ஒரு
முறை செய்தால் போதும். அப்புறம் பாருங்கள்
பேன்களின் எல்லையில்லாத தொல்லை இனி
இல்லவே இல்லை.

கென்ஸ் — பேன்களை வானுலகு அனுப்பும்.

கென்ஸ் 15, 55 மி.லி. அளவுகளில் கிடைக்கும்.



கென்ஸ்

PHARM PRODUCTS

தஞ்சாவூர் 613 007.

Insight-3803


பளிச்சிடும்
வெள்ளையில் மிகக்
கருமையான வரிகள்
கருப்பு-வெள்ளை கோனார்க் டிவியை
நினைவுபடுத்துகின்றன...
பளிச்சிடும் வெள்ளையில் மிகக் கருமையான வரிகள். மிக அபூர்வமான இந்த வெள்ளைப் புலிகள் இயற்கைக்கு மாறாகப் பிறவி எடுத்தவை என்னும் கருத்து இனி இல்லை. உண்மையில் இவற்றை விலை மதிப்பற்ற பொக்கிஷமாகக் கருதி, இவை இப்போது ஒரிஸ்ஸாவில் பிரத்தியேகமாகப் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப் படுகின்றன.
மிக நவீன கருப்பு-வெள்ளை கோனார்க் டிவி செட்டும் ஒரிஸ்ஸாவிலிருந்தே வருகிறது. தனித்தன்மை வாய்ந்த வெள்ளைப் புலியைப் போலவே இதுவும் சம்பிரமானது.
இந்தியாவில் கருப்பு-வெள்ளை டிவி தயாரிப்பில் முன்னோடியான கோனார்க் டெலிவிஷன் லிமிடெட் அவ்வப்போது மிக நவீன சிறப்பு அம்சங்களையும் சேர்த்துப் பல்வேறு வகைகளில் மிக உயர்ந்த தரமான கருப்பு-வெள்ளை டிவி செட்டுகளை மிகச் சிறந்த முறையில் தயாரிப்பதில் வியப்பு ஏதும் இல்லை.
மிடுக்கான தோற்றமும் சம்பிரமான நடையும் கொண்ட வெள்ளைப் புலிதான் உண்மையிலேயே பேரரசன். அதுபோலத்தான் கருப்பு-வெள்ளை கோனார்க் டிவி. (தனித்தன்மை வாய்ந்த பல்வேறு வகையான கலர் டிவி மாடல்களும் கிடைக்கின்றன).
KONARK TV
கோனார்க் டெலிவிஷன் லிமிடெட்
ஆர்த்தி சேம்பர்ஸ், 189, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலை பேசி: சேல்ஸ் & சர்வீஸ்: 8261421.
டெலக்ஸ்: 041-6288.
பேரரசன் ஆளுகை முன்னாலே, அரசர் அணி பின்னாலே
ADEPT: KTV: 205: TAM: 94

இந்த மாதம் எப்படி? மார்ச் '94



மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

நல்லதொரு சூழ்நிலை மாதத்தின் முற்பகுதியில் நிலவுவதால் புது முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். தொழில் முறையிலும் சரி, பணிபுரியும் அலுவலகத்திலும் சரி, உங்களுக்கு அனுகூலமான நிலையே காணப்படுகிறது. சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கு இருந்தத் தடையொன்று தற்போது நீங்கிவிடும். பணியில் மாற்றம் கேட்க விரும்புவர்கள் அதை உடனடியாகச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் தாய்வழி உறவினர் ஒருவரால் மன வேதனை அடையத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடைபெறலாம். எனவே புதன்கிழமைதோறும் வைணவக் கோவிலுக்குச் செல்லுவது நல்லது. அல்லது ஆயிரம் நாமங்களைக் கொண்டு, ஆதிசேஷன் மடியில் உறங்கும் பெருமாளின் தோத்திரத்தைக் கூறுங்கள். தொல்லை அகலும். கேது கோபத்தைத் தூண்டக் கூடிய நிகழ்ச்சிகளை உருவாக்கலாம். அத்துடன் ராகுவும் கூட அதற்கு அனுகூலமாக நிற்கலாம். எனவே, திட்டமிட்டுச் செயல்படுங்கள். திடீர்க் கோபத்திற்கு ஆளாகாமல் அமைதி காத்திடுங்கள். இது எத்துறையினருக்கும் எந்த நிலையினருக்கும் பொருந்தும். வீண் விரயத்திற்கும் கூட வாய்ப்பு உள்ளது. எனவே காலைக் கதிரவனைக் கைதொழுது வணங்கிப் பின் செயல்படத் தொடங்குங்கள். தடங்கல்களும், தனவிரயமும் ஏற்படாது. வாழ்க்கைத் துணைக்குரிய சுக்கிரன், புத்திரகாரகனாகிய குருவுடன் பரிவர்த்தனைப் பெறுவதால் சிரமங்கள் இருந்தாலும் சிறப்பான மாதமாகவே அமையும். 9 - க்குடைய குருவும், 10க்குரிய சனியைப் பார்ப்பதால் தரும கருமாதிபதி யோகம். நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

இராசிநாதன் இலாபத்தில் இருப்பதும், இராசிக்குரிய யோககாரனாகிய சனீஸ்வரன் 10 ல் இருப்பதும், அந்த சனியுடன் சம்பந்தப்பட்ட மற்ற கிரங்களைக் குரு பார்ப்பதும், மாதத்தின் முதல் பகுதியில் உங்களுக்கு நல்ல பலன்களே நடக்க வேண்டும். அத்துடன் மாதத்தின் பிற்பகுதியில் இலாபத்தில் மூன்று கிரகங்கள் கூடுவதும் நல்லதே. எனவே, ஆறாம் இடத்தில் குரு இருக்கிறார் என்ற சஞ்சலம் தேவையில்லை. கேதுவால் சில குழப்பங்கள் மனப்போராட்டம் ஏற்பட்டாலும் சமாளிக்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள். குடும்பத்தில் பிரச்னைகள் அதிகம் தோன்ற வாய்ப்பில்லை. சிலரை நம்புகிறீர்கள். ஆனால், அவர்களால் பயனில்லை. யாரை வெறுக்கிறீர்களோ, அவர்கள் வந்து உதவும் நிலை ஏற்படலாம். காகத்திற்குத் தண்ணீரையும் அன்னத்தையும் வையுங்கள். காகத்தின் தாகத்தையும் தீர்த்து, அதன் மூலம் உங்களது பொருளாதார நிலையினாலோ அல்லது வேறு காரணத்தாலோ ஏற்பட்டுள்ள சோகத்தையும் தீர்த்து வைப்பார் சனிபகவான். விடிந்ததும் விநாயகரைத் தரிசியுங்கள். வினையைத் தருபவனும் அவனே, தீர்ப்பவனும் அவனே! அல்லவா? மற்றபடி மாதத்தின் புதன் நீச்சம் பெறுகின்ற காலம் எனினும் உச்சம் பெற்றுள்ள சுக்கிரன் உங்களது பிரச்னைகளை அச்சமின்றித் தீர்க்க உதவுவார்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

மிதுன ராசிக்குரிய புத்திரஸ்தானாதிபதியாகிய சுக்கிரன், புத்திரகாரகனாகிய குருவின் வீட்டில் இருக்க, அவரைப் புத்திரஸ்தா

ஷத்திலிருந்து குரு பார்ப்பதுடன், பரிவர்த்தனையும் பெறுவது புத்திரர்கள் தேர்வுக்குரிய இந்தக் காலத்தில் அவர்களாகவே நன்கு கவனித்துப் படிப்பார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே, அளவிற்கு மீறி அக் குழந்தைகளைப் படிப்பிலேயே கவனம் செலுத்தும்படி கண்டிப்புடன் எச்சரிக்காதீர்கள். அதனால் விரயத்தில் உள்ள கேது, சுக்கிரனின் ரிஷப ராசியிலிருந்து விதண்டாவாதம் செய்யத் தூண்டி, குழந்தைகள் மேல் வெறுப்பு கொள்ளும்படி செய்யலாம். மற்றபடி தனஸ்தானத்திலிருக்கும் மூன்று கிரகங்களும், இராசியும் உதவும் நிலையில், குரு பார்வையுடன் விளங்குவதால் சுபநிகழ்ச்சிகள், உரிய முறையில் பதவி உயர்வு, அல்லது மாற்றம், அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் என எத்துறையினர்க்கும் ஏற்றமுடையதாக அமைந்தாலும், திரையுலகத் தாரகைகளும், எழுத்துலகமேதைகளும் கூடுதலான நன்மை அல்லது பாராட்டு, புது ஒப்பந்தம் என மகிழ்ச்சியில் திளைக்கும் வாய்ப்பினைப் பெறுவார்கள். வாகனம் ஒன்றை வாங்குவீர்கள். ராகு திசை நடப்பவர்களுக்கு நிச்சயம் அது கைகூடி வரும். சுக்கிரனால் சுகமும் உண்டு. சுபநிகழ்ச்சிக்கும் இடமுண்டு. இந்த மாதம் வீடோ, நிலமோ, வாங்க முயற்சி செய்யுங்களேன். நல்ல நேரம் எனக்கூறினாலும், முயற்சி உங்களுடையதாகத்தானே இருக்க வேண்டும். அது இல்லாமல் பழியை ஜோதிடர்கள் மேலோ, விதியின் மேலோ போட்டுப் பயனில்லை அல்லவா?

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

அஷ்டமத்தில் மூன்று கிரகங்கள் உள்ளனவே, என்ன கஷ்டம் வருமோ, நஷ்டம் வருமோ என நடுங்க வேண்டிய அவசியம் இல்லை. எரிபொருள் துறையினர், கலைத்துறையினர் ஏற்றம் பெறுவார்கள் என்றாலும் கூடவே அலைச்சலும் விரயமும் இருக்கத்தான் செய்யும். குடும்ப சுகத்திற்குச் சுக்கிரனின் அருள் இருப்பதால் தாம்பத்திய உறவிலும், சரி, குழந்தைகளின் நலனிலும் சரி குறையேதும் இல்லை. மாதத்தின் பிற்பகுதியில் அங்காரகன் அஷ்டமத்தை அடைவதற்கு முன் ஒரு வீட்டைப் பற்றியோ, நிலத்தைப் பற்றியோ இருந்த பிரச்னை ஒன்றை சுமுகமாக முடித்து வைப்பார். அலுவலகங்களில் பணிபுரியும் அன்பர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். இந்த மாதத்தில் சற்று கவனமுடன் அவர்கள் பணி புரிய வேண்டியது அவசியம். ஆருயிர் நண்பனாயினும் பண விஷயத்தில் சற்றுக் கவனமுடன் நடந்து கொள்ளுங்கள். கஜகேசரி யோக அமைப்பு இருப்பதால் எதையும் சாதுரியமாகச் சமாளித்து விடலாம். சுக்கிரனும், செவ்வாயும் உச்சமடைந்துள்ள மாதத்தின் முற்பகுதியில், செவ்வாய் தோஷமிருந்து அதன் காரணமாகவே தடைபட்டிருந்த திருமணம், தங்கு தடையின்றி எதிர்பாராத விதத்தில் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்த நிலைக்கு மாறாகப் பதவியைப் பெற்று ராஜயோகத்தை அனுபவிக்க இருக்கிறீர்கள். கேது கொடுக்கிறாரோ இல்லையோ, கண்டிப்பாகக் கெடுக்க மாட்டார். ஆனால் அனுஷம், கேட்டை நட்சத்திர நாட்களில் மனச்சஞ்சலம் ஏற்படலாம். அதனால் நரசிம்ம ஸ்தோத்திரத்தைப் படிக்கவும்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

மண்காரனாகிய மங்களன் எனும் அங்காரகன் ஆறில் உச்சம் பெற்றும், கட்டிடத்திற்கும் மனமகிழ்ச்சிக்கும் காரணமாக நிற்கும் சுக்கிரன் எட்டில் உச்சமடைந்தும் காணப்படுவதால், வீடு, மனை வாங்கும் யோகம் ஏற்படுவதுடன் குடும்பத்தில் மகிழ்ச்சியும், மனநிறைவும் காணப்படும். ஏழில் ஆட்சி பெற்ற சனீஸ்வரனுடன் புதன் சூரியன் கூடி நின்று புத ஆதித்தாய யோகத்தைத் தருவதால் எத்துறையினில் உள்ளவர்



உளுந்து வடை செய்யும்பொழுது,
அரைத்த மாவுடன் சிறிது ஊற
வைத்த பயத்தம்பருப்பைச் சேர்த்து,
கலந்து வடை செய்து பாருங்கள்.
சாப்பிடச் சுவையாகவும், அதே
சமயத்தில் மொறுமொறுவென்றும்
இருக்கும்.

- ஆர். பாலா



நீங்கள் ஒரு விருந்திற்குச் சென்றிருக்கிறீர்கள். அங்கு வந்திருக்கும் ஒரு முக்கியமான நபரை உங்களது நண்பர் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

அம்மனிதர் உங்களிடம் சகஜமாக இங்கிலீஷில் பேசத்துவங்குகிறார்.

அவரிடம் என்ன பேச வேண்டும் என்பது தெரிந்தும் அதை இங்கிலீஷில் எப்படிப் பேசுவது என்று தெரியாமல், அவர் சொல்வதற்கெல்லாம் Yes, Yes, No, No என்று ஏதாவது சொல்லிச் சமாளிக்க வேண்டிய தர்மசங்கடமான நிலமை ஏற்படுகிறதல்லவா?

இதுபோன்று, ஆங்கிலத்தில் 'பேச வேண்டிய கட்டாயமான சூழ்நிலைகள் ஏற்படும் போது நமது எண்ண்ணங்களை வெளிப்படுத்த முடியாமல்,

ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயத்தினால், வாயை மூடிக்கொண்டு, தலைகுனிந்து நிற்கும் அவல நிலை தொடர இனியும் அனுமதிக்கலாமா?

உங்களில் பலர் நினைப்பது போல ஆங்கிலம் ஒரு கடினமான மொழி அல்ல. முயற்சியும், முறையான பயிற்சியும் இருந்தால் இம்மொழியை மிகச் சுலபமாகக் கற்றுக்கொண்டு, சரளமாகப் பேசும் ஆற்றலை நிச்சயம் பெற முடியும்.

அடிப்படையிலிருந்து துவங்கி, ஆங்கில இலக்கணத்தைப் படிப்படியாக, எளிய முறையில் சொல்லித் தந்து, தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கம் சிறிதுமின்றி, மடைதிறந்த வெள்ளம் போல் ஆங்கிலத்தில் சகஜமாகப் பேச விவேகானந்தா கல்வி நிலையம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறது.

இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்து பயனடைந்துள்ள ஒப்பற்ற பயிற்சி முறை இது!

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில், தபால் மூலம், மிகக் குறைந்த கட்டணத்தில் நீங்களும் இப்பயற்சியினை மேற்கொள்ளலாம் **'நேர்முகப் பயிற்சியும் உண்டு'**

உங்களை நாடி வந்துள்ள இந்த நல்ல வாய்ப்பினை நீங்களும் பயன்படுத்திக் கொண்டு தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெறுங்கள்

இன்றே கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி. நகர், சென்னை-17.

3 ஃபேஸ் மின்சாரம் உபயோகிப்பவர் கவனத்திற்கு...



ஒரு ஃபேஸில் மின்சாரம்வராதபோது ஒரு பகுதி இருட்டடைப்பு ஆகுமென்ற கவலையே இல்லை.

உடனடியாக நவீன

MAX POWER

ஆட்டோமேடிக் ஃபேஸ் சேன்ஜர் வாங்கிப் பொருத்துங்கள்.

- வீடுகள்
- கல்யாணமண்டபங்கள்
- அலுவலகங்களுக்கு இன்றியமையாதது.

விற்பனையாளர் :

அருணா ஏஜென்ஸீஸ்,


11, பி.பி.வி. கோயில் தெரு, மயிலை, சென்னை-4. போன் : 841254

● அபிராமி எலக்ட்ரிகல்ஸ், திருச்சி -8, போன் : 48967 ● மீரா எலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர் - 18, போன்: 32366 ● விநாஸ் எலக்ட்ரிகல்ஸ், ஈரோடு - 1, போன் : 72676 ● அந்தமோகன் எலக்ட்ரிகல்ஸ், சேலம் - 1, போன்: 64422 ● இப்ராஹிம் எலக்ட்ரிகல்ஸ், மதுரை - 2, போன் : 38245 ● ஜோதி எலக்ட்ரிகல்ஸ், கரூர் - 1, போன் : 23724. ● பிரகாஷ் எலக்ட்ரிகல்ஸ், மாயவரம் - 1, போன்: 2493 ● S. தங்கசாமி செட்டி & கோ, காரைக்கால் - 602, போன்: 2253 ● சாமு எலக்ட்ரிகல்ஸ், கும்பகோணம் - 1, போன் : 20649 ● ஸ்ரீ விஜய் ஹார்டுவேர்ஸ் & எலக்ட்ரிகல்ஸ், வேலூர் - 4, போன் : 23429/23960 ● P.R.R. கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்டிரீஸ், செவ்வாய்ப்பேட்டை, சேலம் - 2, போன் : 50546/55097 ● ஆறான் ஸ்டோர்ஸ், ராஜபாளையம் - 117, போன் : 22407 ● மஹாவீர் எலக்ட்ரிகல்ஸ், பட்டுக்கோட்டை, போன் : 22248 ● ராசி எலக்ட்ரிகல்ஸ், தஞ்சாவூர் - 1, போன் : 21177 ● மணி எலக்ட்ரிகல்ஸ், விழுப்புரம், போன் : 2550. ● ஹரிதா சேல்ஸ் கார்ப்பரேஷன், புரசைவாக்கம், சென்னை - 600007. போன் : 6424393

A well-deserved rest
A well-earned interest

20% p.a.

For further details contact:



The Pensioner Benefit Deposit Scheme from RPS Benefit Fund Ltd.

20% interest, cent percent reliability

RPS BENEFIT FUND LIMITED

(Declared as "NIDHI" by the Central Government)

Vijay Shanthi Complex, First Floor, No. 16, Ramanathan Street, T.Nagar, Madras-17. Ph: 441554


Branches: RR Complex, 11/1, East Kalmandapam Road, (Behind Police Station), Royapuram, Madras-600 013. Ph. 556164.

Harmony Building, 433-F, D.B. Road, R.S. Puram, Coimbatore-2. Ph: 43576.

381/2, 1st Floor, Sampige Road, (Opp. City Central Library) Malleswaram, Bangalore – 560 003. Ph:366433

கொத்துமல்லித் தழைகளை எடுத்து ரசத்தில் போட்டதும் தண்டுகளை எறியாதீர்கள். அவற்றை மூன்று நாட்கள் வரை சேர்த்து நான்காம் நாள், தழைக்குப் பதில் தண்டுகளை நன்றாய் அலம்பி மொத்தமாய்க் கட்டு போல் நூலில் கட்டி ரசத்தில் போடுங்கள். சிறிது நேரம் கழித்து எடுத்துப் போட்டுவிடலாம். வீணாகாமல் எல்லாச் சாறும் இறங்கியிருக்கும்.

– கி. மஞ்சுளா



களுக்கும் ஏற்றமும், இவர்களை எதிர்ப்பவர்களுக்கு ஏமாற்றமும் உண்டாகும் நிலை தெரிகிறது. மாதத்தின் முற்பகுதியில் பெரியதொரு சோதனையில் வெற்றி பெறுவீர்கள். அதனால் உங்களுக்குப் பதவி உயர்வோ, அல்லது பட்டம் ஒன்றோ கிடைக்கும். திரையுலகத்தைச் சேர்ந்தவர்கள் புது ஒப்பந்தத்திற்குத் தயாராக இருக்கலாம். இதுவரை உங்களுக்குப் பலவிதத்திலும் மனவேதனை தந்து கொண்டிருந்த ஒருவர் விதியின் காரணமாக உங்களைவிட்டு விலகுவதுடன் உங்களுக்கு மனநிம்மதியும் ஏற்பட வழி வகுப்பார். அது உங்கள் தோழியாகக் கூட இருக்கலாம். அல்லது அடைக்கலம் கேட்டு வந்தவராகவும் இருக்கலாம். ராகுவும், கேதுவும் உச்சம் பெற்றுள்ள செவ்வாய், சுக்கிரன் வீட்டில் இருப்பதால் உங்களுக்குக் கொடுக்காவிட்டாலும், வரும் துன்பங்களைத் தடுக்கத்தான் உதவுவார்கள். மாதத்தின் கடைசி நான்கு நாட்களுக்கும், வேலைபளுவினால் டென்ஷன் இருக்கலாம். பொதுவாக சிம்ம ராசிக்காரராகிய நீங்கள் ஏற்படும் எத்தகைய எதிர்நீச்சலிலும் எதிரிகளை வீழ்த்தி மற்றவர்களால் வாழ்த்தப்படுவீர்கள். கவலை தேவையில்லை.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

இந்த ராசியில் பிறந்துள்ள கன்னிப் பெண்களுக்கு இதுவரை ஏதேதோ தோஷங்களைக் கூறித் திருமணத் தடங்கல் ஏற்படுத்தியவர்கள் அது யாராக இருந்தாலும், இந்த மாதத்தில் உங்களுக்கு நடக்கவிருக்கும் நிச்சய தாம்பூலத்தைக் கண்டு உங்களை விட்டு நழுவிவிடுவார்கள். பேசாமல் அவர்களைக் கைக்கழுவி விட்டு திருமண மேடைக்குச் செல்லத் தயாராக இருங்கள். இதுவரை உங்களில் சிலருக்கு இருந்த மயக்கம், அது மதுவினாலோ, அல்லது மாது ஒருத்தியினாலோ ஏற்பட்டிருந்தாலும், இந்த மாதத்தின் பிற்பகுதியில் அதிலிருந்து விடுபட்டு, குடும்பத்தில் குதூகலம் நிலவும் வண்ணம் உங்களுக்குப் புது வாழ்க்கை ஒன்று அமையும். எனவே இனியேனும் அதை உணர்ந்து நடந்து கொண்டால் நன்மையுண்டு. குருவக்கிர பரிவர்த்தனையும், உங்களுக்கு நன்மையே செய்யும். எனவே, துர்க்கை அல்லது ஐயனாரப்பன் போன்ற காவல் தெய்வங்களை வணங்குவது நல்லது. அதனால் மாதத்தின் கடைசி வாரத்தில் நீச்சம் பெறும் உங்கள் ராசிநாதன், உச்சம் பெற்றுள்ள சுக்கிரனுடன் சேருவதால் பொருளாதார நிலையோ, குழந்தைகளின் படிப்போ பாதிக்காது. ஒருமுறை திருப்பதி சென்று வருவது நல்லது.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

குருசந்திரன் சேர்க்கை, இராசிநாதன் உச்சம், சுகஸ்தானத்தில் அங்காரகன், சுகஸ்தானாதிபதியாகிய சனி ஜந்தில் ஆட்சியில் இப்பது ஆகியவை உங்கள் குடும்பத்தின் அன்றாட சுகமும், குழந்தைகளின் நலனும் நன்றாகவே அமைந்திருக்கும் என்பதைக் காட்டுகின்றன. தாயார் விஷயமாக நடக்கும் சுபநிகழ்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். சகோதரியின் திருமணம் நடைபெற இருக்கும் இந்த நேரத்தில் சுபச்செலவுகளைச் செய்தே ஆக வேண்டிய நிலை உங்களுக்கு உண்டு. பாம்புக்கிரகங்களால் சில வம்புகள் வரலாம். ஆனால் உச்ச சுக்கிரன் அதைச் சமாளிக்கும் தெம்பை உங்களுக்குத் தருவார். பூர்விக சொத்து, அது நிலமாகவோ, வீடாகவோ கூட உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது. அதுபற்றிய வழக்கில் உங்களுக்கு நீதி கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை சற்று மனதைப் பாதிக்கும். ஆயினும், எதிர்பாராத உதவி வந்து, உங்களுக்கு மன நிம்மதியைத் தரும். அலுவலகப் பெண்கள், மற்றும் அடிக்கடி பிரயாணத்தில் இருப்பவர்கள் உங்கள் கைப்பையை நன்கு

கவனமுடன் கொண்டு செல்லுங்கள். இல்லையேல், எதையும் தனதாக நினைக்கும் தாராள மனதுடைய ஒருவன் உங்கள் பையைக் கவனமாக எடுத்துக் கொண்டு போகலாம். அதன் பிறகு பை போய் விட்டதே என்று கையைப் பிசைந்து கொண்டு மற்றவர்களின் ஆறுதலைப் பெறுவீர்கள். இது தேவையா? இல்லையெனில் விநாயகரையும், துர்க்கையையும் துதி செய்யுங்கள். விதியை வெல்லும் வழி கிடைக்கும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

உங்கள் இராசிக்குரிய நாதன் மாதத்தின் கடைசியில் மகரத்திற்குச் சென்று ஆட்சி சனீஸ்வரருடன் சேருகின்றார். தசாபுத்திகள் நன்கு அமைந்தவர்களுக்கு யோகம் அடிக்கும். குழந்தைகளின் நலனும், மனைவியின் உடல்நலமும் நன்கு அமையும். அதுமட்டுமல்ல, குரு, சுக்கிர பரிவர்த்தனை உங்கள் பொருளாதார நிலையை அவதிக்கு ஆளாக்காது என்றாலும், இராகுவும், கேதுவும் சேர்ந்தே சற்றுச் சிரமத்தைத் தரலாம். குறிப்பாக மாதத்தின் கடைசி வாரத்தில் முருகனுக்கும் அங்காரகனுக்கும் அர்ச்சனை செய்வது நலமெனத் தெரிகிறது. தகப்பனாரின் உடல்நிலை பாதிக்கப்படலாம். திடீர்ப் பிரயாணம் ஒன்று ஏற்படும். வேலை சம்பந்தமான மாற்றமும் வரலாம். ஆனால் அதனால் அனுகூலமே உண்டு. மற்றபடி வீடோ, மனையோ, அல்லது வாகனமோ வாங்கும் யோகம் மாதத்தின் முதல் பகுதியில் உண்டு. பயன்படுத்திக் கொள்ளுங்கள். எரிபொருள் துறையினர் ஏற்றம் பெறலாம். தாய்மாமன் வகையைச் சார்ந்த ஒருவரால் மாதத்தின் கடைசியில் சற்றுக் கவலை உண்டாகும். இந்த இராசியைச் சேர்ந்த நடிகர்கள் நடித்த படம் சக்கைப் போடு போடும். ஆனால் அதனால் வருகின்ற புது ஒப்பந்தத்தில் சற்றுக் கவனமுடன் கையெழுத்திடுங்கள்.

தனுசு ராசி :


மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

மாதத்தின் முதல் பகுதியில் ஏற்பட்ட சிறு சலனமொன்று, பிற்பகுதியில் அங்காரகன் அருளால் நல்ல நிலைமையில் தெளிவு பெறுவதுடன், உங்களது அபிலாஷைகளில் ஒன்று பூர்த்தியும் ஆகும். அது நீண்டகாலமாகத் தடைபட்டு வந்த உங்களது புதல்வன், அல்லது புதல்வியின் திருமணமாகவோ அல்லது அவர்களது நிலையான உத்தியோக சம்பந்தமாகவோ இருக்கலாம். உங்கள் இராசி நாதனாகிய குருவும், தற்போது கோட்சார ரீதியாகக் குரு அமர்ந்திருக்கும் சுக்கிரனும் பரிவர்த்தனைப் பெற்றதன் காரணமாகப் புத்திரனால் தாயும், தாயினால் சேயும் குடும்பத்தில் விசேடமான நன்மையை உண்டாக்குவார்கள். சுபநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடாகும். அல்லது திடீரென நிச்சயம் செய்யப்பட்டு ஒரு திருமணம் கூட குடும்பத்தில் நடக்கலாம். ஆட்சிச் சனி உங்களுக்கு ஒரு புதுத் தொழிலைத் தர இருக்கிறார். அது இரும்பு சம்பந்தமாகவும் இருக்கலாம். அல்லது இராசாயனம் சம்பந்தமாகவும் அமையலாம். செவ்வாய் உச்சம் பெற்றதால் கடன்கள் தீர்க்கப்படும். புது நகைகள் வாங்கும் யோகமும் உண்டு. சகோதரர்களால் உங்களுக்கும், உங்களால் சகோதரர்களுக்கும் நன்மை ஏற்படும். திருடுபோக இருந்த ஒரு பொருளைத் தக்க சமயத்தில் காப்பாற்றிக் கொள்வீர்கள். விருச்சிக ராகு விரயத்தைக் கொடுத்துக் கெடுப்பார். ஆனால் கெடுக்கும் கேதுவோ தேவையானதைக் கொடுத்துக் காப்பார். நேர்த்தியான கிரக சஞ்சாரம். கொடுத்து வைத்தவர்கள். அனுபவியுங்கள். அதே சமயம் அன்னை அபிராமியைத் திருக்கடையூரில் தரிசனம் செய்து விட்டு வாருங்களேன்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, ,2 - ஆம் பாதங்கள்.


மாதத்தின் முற்பகுதியில் சற்று அமைதி குறையலாம். புதன் சஞ்சாரம் அனுகூலமாக இல்லை. ஆட்சியில் உள்ள சனியும், இராசியில் உள்ள உச்ச அங்காரகனும் ஓரளவுக்கு நன்மையே செய்வார்கள். எனினும் மாதத்தின் பிற்பகுதி நல்லநிலையைக் கொடுக்கும். இது எந்தத் துறையினர்க்கும் பொருந்தும். குறிப்பாக ரசாயனத் துறையினர்க்கு



பஜ்ஜி செய்யும்பொழுது செய்வதற்குச் சற்று முன்னர் 2 ஸ்பூன் உளுத்தம்பருப்பை ஊற வைத்து மிக்ஸியில் சின்ன ஜாரில் அரைத்து கடலை மாவு, மிளகாய்ப் பொடி, பெருங்காயம் இவற்றுடன் கலந்து பஜ்ஜி செய்தால் கூடுதல் சுவையுடன் மொறுமொறுவென்று இருக்கும்.

- ஆர். உஷா

உங்களது சமையலறைக்கு தேவையான அனைத்துரகப் பொருட்கள் - பாத்திரங்கள் வாங்கிட





இதோ, துரித சமையலுக்கு செம்பு அடிப்பாகமுள்ள எவர்சில்வர் பாத்திரங்கள், ரைஸ் குக்கர்கள், வறுக்க - பொரிக்க - வதக்க வேக வைக்க தேவையான பிரஷர் பேன்கள், வாட்டர் பில்டர்கள், மற்றும் பல எவர்சில்வர் பித்தளை, செம்பு, அலுமினியம் மற்றும் அனைத்துரக உலோக பாத்திரங்களும் திருமண விசேஷங்களுக்கும் மற்றும் ஹோட்டல்களுக்கு தேவையான அலுமினிய பாத்திரங்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.

* சிறந்த தரம்
* நியாயமான விலை.

தயாரிப்பாளர் மற்றும் விற்பனையாளர் :

தி கோல்டன் மெட்டல் கார்ப்பரேஷன்
79, நைனியப்பன் நாயக்கன் தெரு, சென்னை-3 போன்: 561723, 561724

எங்களது பாத்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடைவீர்!

Best Compliments : SUNDAR LODGE Ph: 563252, 564224

இப்பொழுது விற்பனையில்

பொருளாதாரம்



தொழில் முனைவோரின் கையேடு

தமிழில் தரமான வணிக இதழ்

விலை ரூ. 2

எல்லா கடைகளிலும் கிடைக்கிறது.

1 ஆண்டு சந்தா ரூ.20
2 ஆண்டு சந்தா ரூ.35

த.பெ. எண்: 3478
அண்ணாநகர்,
சென்னை - 600 040

(D.D./M.O. மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்)

Basis Communications



ஒரு நாள் எனது சகோதரர் சப்பாத்தி டிபன் செய்யச் சொன்னபோது தொட்டுக் கொள்ள ஒன்றும் சரியாக இல்லை. பீட்ரூட்தான் இருந்தது. அதனைத் தோல் சீவி, கழுவிவிட்டு, சீவியில் சீவி வேகவைத்து உளுத்தம் பருப்பு, மிளகாய், பெருங்காயம் இவற்றை வறுத்து, தேங்காய் சேர்த்து அரைத்து கூட்டு செய்தபோது உனக்கு எனக்கு என்று சப்பாத்தி பறந்து விட்டது.

- ஆர். உஷா

ஏற்பட்ட எந்தவித நஷ்டத்தையும், உச்ச அங்காரகனும், ஆட்சிச் சனியும், திருப்பித் தருவதற்கான வாய்ப்பு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. எனவே, நீண்டகாலமாக பைசல் ஆகாத வழக்கோ, அல்லது திருமணத் தடையோ நீங்குகின்ற காலகட்டம் உதயமாகியுள்ளது. சுக்கிரனால் சுகமுண்டு. புதிய பதவி ஒன்று கிடைக்கலாம். அதன் மூலம் இழந்த கௌரவத்தை மீண்டும் பெறலாம். கண் சற்று பாதிக்கப்படலாம்.

வைணவத்தலத்திற்குச் சென்றுச் சடகோபனைத் தரிசியுங்கள். குறிப்பாக பரீட்சை எழுதும் மாணவ மாணவிகள் அவசியம் விநாயகரையும், புதனையும் சேவியுங்கள். புதன் தசை நடப்பவர்கள் மரகதக் கல் ஒன்றை மோதிரத்தில் பதித்து அணியுங்கள். கல் விரலில் படும்படி பின்பக்கம் தகடு வைக்காமல் மோதிரம் செய்வது நல்லது. சனி திசை நடப்பவர்களும் நீலக்கல் அணியுங்கள். சனீஸ்வர ஸ்துதியும், சடகோபரந்தாதியும் படிப்பது நல்லது. அரசுப் பணியாளர்கள் வங்கி ஊழியர்கள், இரசாயனத் தொழில் துறையினர் மாதத்தின் முதலிரண்டு வாரங்களுக்கு எந்த விஷயத்திலும் கவனத்துடன் நடப்பது நல்லது.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் மகிழ்ச்சியான நிலை உண்டு. குடும்ப சுகம், குழந்தைகளின் படிப்பில் முன்னேற்றம் என நல்ல சூழ்நிலையே உருவாகும். எதிர்பாராத தனலாபமும் சுக்கிரனாலோ, சந்திரன் கடகராசியிலும் தனுர் ராசியிலும் சஞ்சரிக்கும் தினங்களிலோ உண்டாகும். அது ஒரு பரிசாகவும் வரலாம். அல்லது உங்கள் தாய்வீட்டுச் சொத்தாகவும் கிடைக்கலாம். அதே சமயம் சற்று மன அலைச்சலும், அயர்வும் ஏற்படலாம். கடைசி இரண்டு வாரங்கள் சற்று குழப்பத்தைத் தரலாம். எனினும் ராசிநாதனுக்கும் அதில் உள்ள கிரகங்களுக்கும் குருபார்வை இருப்பதும், 9 க்குரிய சுக்கிரனும், 10க்குரிய சனியும் உச்சம் பெற்று தரும கருமாதிபதியோகத்தைத் தர இருப்பதும் இதுவரை குடும்பத்தில் இருந்த கடனும், உடல்நலக்குறைவும், நீங்கி மனதில் மகிழ்ச்சி ஏற்படக் காரணமாக அமையும். மகளுக்கும் திருமணம் நிச்சயமாகலாம். விஷ்ணு சகஸ்ரநாமமும், ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரமும் பாராயணம் செய்யுங்கள். அல்லது வடமொழி தெரியாதவர்கள் இசைத்தட்டு மூலம் கேளுங்கள். நல்லதொரு காலகட்டம் ஆரம்பமாகும். $7\frac{1}{2}$ சனியினால் ஏற்படும் சஞ்சலங்கள் குறையலாம். சிறந்த தசாபுத்திகள் நடப்பவர்களுக்குக் குறையேதுமில்லை.

மீன ராசி :


பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

ஆட்சி குருவும், இராசி நாதன் அமர்ந்துள்ள துலாராசிக்கு அதிபதியான சுக்கிரனும் பரிவர்த்தனை பெற்றுள்ளது நல்லது. குழந்தையின் படிப்பு, குடும்ப சுகம் மற்றும் தொழில் மேன்மை ஆகியவை நன்முறையிலேயே இருக்கும். கவலைப்படத் தேவையில்லை. செவ்வாயினால் செழிப்பு உண்டு. ஆடல், பாடல் கலைஞர்களும், விளையாட்டு வீரர்களும் பரிசும், பாராட்டும் பெறுவர். இந்த இராசியில் பிறந்துள்ள நடிப்புத் துறையினர்க்கு நல்லதோர் ஆரம்பம் உண்டு. பொருளாதாரத்தில் இருந்த தேக்க நிலை நீங்கலாம். நகை வாங்கலாம். அல்லது வங்கியில் அடகு வைத்திருந்தால் மீட்கலாம். மூன்றாம் இடத்துக் கேதுவால் நன்மையே ஏற்படும். அஷ்டமத்தில் குரு இருப்பதோ, அல்லது விரயத்தில் சனி இருப்பதோ பற்றிய குழப்பங்கள் தேவையில்லை. குருவின் பார்வை பெறும் சனி, குரு சுக்கிர பரிவர்த்தனை ஆகியவை குடும்ப சுகத்திற்கும், வீடுமனை வாங்க அங்காரகன் அருளும் இருப்பதும், இந்த இராசிக்காரர்களுக்கு இருந்த பொருளாதார தேக்கத்தை

நீக்கி, ஆக்கப்பூர்வமான நிலையை உண்டாக்கும். எனவே, நவக்கிரகநாயகர்களுக்குரிய கோலத்தை வீட்டில் முன், அல்லது பூஜை அறையில் அன்றாடம் போட்டு, விளக்கேற்றுங்கள். ஒருமுறை ஆலங்குடிக்கும், மோகனூர் நாலடியான் சன்னதிக்கும், திருநள்ளாருக்கும் சென்று வருவது நல்லது. முடியாதவர்கள் உங்கள் ஊரில் உள்ள நவக்கிரக சன்னதிக்குச் சென்று ஏக காலத்தில் எல்லா கிரகங்களுக்கும் அர்ச்சனை செய்யலாமே. ஒன்றுமே செய்ய முடியாதவர்கள் ஒரு கைப்பிடி அருகம்புல்லை யானை முகத்தானுக்கு அர்ப்பணம் செய்யுங்களேன். கல்லிலுள் உள்ள தெய்வத்திற்குப் புல்லால் பூசனை செய்யக் காசு பணமா செலவழிக்க வேண்டும்?

யாருக்கு யார் அடிமை?

அது ஒரு திட்டமிட்ட சிறிய குடும்பம். பள்ளிக்குச் செல்லும் ஆணும், பெண்ணுமாக இரண்டு குழந்தைகள். கணவனுக்கு அரசுப் பணி. மனைவிக்கு வங்கி ஒன்றில் வேலை. அவள் காலையில் சீக்கிரமே எழுந்து சமையல் முதல் பலவேலைகளைக் கவனித்து விட்டுச் சரியாக எட்டு மணிக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்றுப் பள்ளியில் விட்டு விட்டு அப்படியே வங்கிக்குச் சென்று விடுவாள். அவனோ பத்து மணிக்கு அலுவலகத்துக்குப் போக வேண்டியவன். அவனும் சீக்கிரமே எழுந்து, முடிந்த மட்டும் மனைவிக்கு அன்றாடப் பணிகளில் உதவி செய்வதுண்டு. அவள் சென்றவுடன், அவள் விட்டுவைத்திருந்த அரைகுறைப் பணிகளை முடித்துப் பிறகு அலுவலகம் செல்லுவான். ஒரு நாள் அவனது தாயார் திடீரென்று காலை 9 மணிக்கு அவன் வீட்டிற்கு வந்தார். அப்பொழுதுதான் அவன், மனைவி அலசி வைத்திருந்த குழந்தைகள் துணி, அவளது புடைவை என அனைத்தையும் கொடியில் உலர்த்திக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த அந்த அம்மையார், அவன் மனைவிக்கு அடிமையாகி விட்டான் என்றும், அவளது புடைவையை கூட அவனே துவைத்துக் காய வைக்கும் அளவுக்கு வீட்டு வேலையை அவன் செய்ய, அவளோ ஜாம் ஜாம்மென்று வங்கிக்குப் போய் வருகிறாள் என்றும், இதையெல்லாம் அவன் தலையெழுத்து என்றும் ஏதேதோ பொரிந்துத் தள்ளினார். அவனோ அனுபவப் பூர்வமான வாழ்க்கை நிலையினைக் கூறி, யாருக்கும் யாரும் அடிமை இல்லை என்றும் நகர வாழ்க்கையில் யதார்த்த அவசர நிலையை எடுத்துக் கூறிப் பார்த்தான். அதை எதையும் காதில் வாங்காமல் அந்த அம்மையார் வந்த வழியில் நடையைக் கட்டினார். யார் எதைக் கூறினாலும் பொருட்படுத்தாத அளவிற்கு அந்த ஆதர்சத்



தம்பதிகளுக்குள் ஒற்றுமை இருந்தது. விட்டுக் கொடுக்கும் தன்மை அமைந்திருந்தது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடத்தும் இத்தகைய வாழ்க்கை அனைவருக்கும் அமைகிறதா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கைரேகைக் கலை உதவுமா! எனப் பலர் கேட்பதுண்டு. உதவும் என்பதை இந்தப் பகுதியில் அறியலாம்.


நல்லதொரு அனுசரணை மிகுந்த குடும்பத்தில் உள்ள பெண்களின் இடது கையில் புத்தி ரேகையும், இருதய ரேகையும் படத்தில் (a-b) (c-d) உள்ளது போல் சீரான இடைவெளி விட்டுச் செல்வதுடன், புத்தி ஆயுள் ரேகை குரு மேட்டின் கீழ் ஒன்றாக (J) இணைந்து காணப்படும். அத்துடன் தாரா ரேகை (x-y) ஒரே நேராக புதன் மேட்டிற்குக் கீழே நன்கு நீண்டு புதன் மேட்டின் மேல் படிந்திருக்க வேண்டும். ஆண்களாயினும், பெண்களாயினும் ஆயுள் ரேகை நன்கு வளைந்து (L-F) சுக்கிர மேட்டின் கீழ் படிந்திருக்க வேண்டும். அப்படி இருப்பவர்களுக்கு குடும்பத்தில் ஈடுபாடும், உலக ஆசா பாசங்களிலும், பாசபந்தங்களிலும் மிகுந்த ஈடுபாடும் இருக்கும். ஆக தாம்பத்திய வாழ்க்கைக்குத் தேவையான விட்டுக் கொடுக்கும் தன்மை, நல்ல இதயம், உண்மையான காதல் தன்மை ஆகியவைகளை மேலே கூறப்பட்ட இருதய, புத்தி, ஆயுள் ரேகைகளும், தாராரேகையும் நன்கு எடுத்துக்காட்டிவிடும். அப்படிப்பட்ட உள்ளங்கைகளை உடைய பெண்ணை எப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக்கினாலும், அவர்கள் நன்கு வாழ்ந்து காட்டுவார்கள். அவர்கள் வாழ்க்கையில் யாருக்கு யார் அடிமை என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அதுபோலவே ஆண்களின் கையில் இதே போன்ற ரேகைகள் இருந்தால் அவர்கள் வீட்டில் மட்டுமல்லாமல் தான் பணிபுரியும் இடங்களிலும் எல்லோரிடமும் நன்கு பழகி நல்லதொரு இடத்தை எல்லோர் உள்ளங்களிலும் பெற்றிருப்பார். அவர்கள் ஜாதகத்திலும் சுக்கிரன், புதன், குரு ஆகியவர்கள் நல்ல இடங்களிலும், சந்திரனுக்குக் கேந்திரங்களிலும் அமர்ந்திருப்பார்கள் எனலாம்.

– ஜெயலட்சுமி கிருஷ்ணன்

துணிச்சல் சுற்றுலா போக துணிச்சல் உண்டா?



"அட, இந்த சிற்றோடை சில்லென்று பாதத்தைத் தொடும்போது எவ்வளவு அற்புதமாக இருக்கிறது", "அந்தப் பக்கம் பாரேன் எவ்வளவு பெரிய பூ", "அதுதான் நீலகிரி தார் என்ற மானினம். இது ரொம்ப அரிதாகிக் கொண்டு வருகிற விலங்கினமாம்", இப்படியெல்லாம் பேசிக் கொண்டே சும்மா ஒரு நாலைந்து நாட்கள் மலைப்பகுதிகளில் பொதுவாக மக்கள் (சுற்றுலாப் பயணிகள் உட்பட) கால்படாத பரிசுத்தமான இடங்களில் - அதுவும் மலைப்பகுதிகளில் - போய்விட்டு வந்தால் எப்படி இருக்கும்? இரவுகளில் காட்டுப் பகுதிகளில் (போதிய பாதுகாப்புடன்தான்) டெண்ட்டில் தங்கும் அனுபவம் எப்படி? நினைக்கும்போதே துள்ளிக் குதிக்கத் தோன்றுகிறதா? அப்படியானால் நீங்கள்




'ட்ரெக்கிங்' சுற்றுலாக்களில் சேரலாம். வடக்கிலுள்ள குலு, மணாலி போன்ற மலைப் பகுதிகளில் இவை ரொம்பப் பிரபலம். தென் இந்தியாவிலும் இவை பெருகி வருகின்றன.

ட்ரெக்கிங் மட்டுமல்ல, மலையேற்றம், ஏரியில் கட்டைகளைப் பிடித்தபடி படகின் பின்புறம் செல்லும் விண்ட்-ஸர்ஃபிங், பாரா-க்ளைடிங் போன்ற பலவித அட்வென்ச்சர் சுற்றுலாக்களும் நமக்கருகிலேயே ஆண்டுதோறும் நடைபெறுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா?

டிசம்பரில் கோவாவில் ட்ரெக்கிங் சுற்றுலாக்கள் நடைபெறுவது வழக்கம். அதேபோல் மத்தியப் பிரதேசத்திலுள்ள பச்மாரியில் சைக்கிள் சுற்றுலாவும் நடக்கும்.

நம் தமிழ்நாட்டில் ஊட்டியில் ஒவ்வொரு வருடமும் 'கோடைவிழா' வைத் தமிழக அரசு ஏற்பாடு செய்கிறது. இது ஒவ்வொரு

ஆண்டும் மே பத்தாம் தேதியிலிருந்து ஆறு நாட்கள் நடக்கும். பலவிதக் கலைவிழாக்கள் நடைபெறும் இந்த நாட்களில் சந்தடி இல்லாமல் ட்ரெக்கிங் சுற்றுலாவும் நடைபெறும். பார்சன் பள்ளத்தாக்கிலிருந்து கிளம்பும் இந்தச் சுற்றுலாக்கள் மூன்று வெவ்வேறு வழிகள் மூலமாக முதுமலையை அடைகின்றன. இந்த வழிகளில் ஒன்றைப் பார்ப்போம். பார்சன் பள்ளத்தாக்கிலிருந்து முக்குர்த்தி ஏரிக்குச் செல்லலாம். இது மிகச் சுத்தமான ஏரி. அங்கிருந்து பாண்டியார் மலைப் பகுதி. பிறகு அங்கிருந்து பைகாரா நீர் வீழ்ச்சி (இதை சற்றே தூரத்திலிருந்து பல வித சினிமாக் காமிராக்கள் பகாசுரப் பசியோடு படம் பிடித்து நமக்குத் திரையில் காட்டியிருக்கின்றன), பிறகு வனவிலங்குகள் சரணாலயமாக விளங்கும் முதுமலையோடு பயணம் முடிவடைகிறது.



போன வருடம் குன்னூரில் 'தேயிலை சுற்றுலா விழா' நடந்தது. இனி இது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ம் தேதியிலிருந்து பிப்ரவரி 2 ம் தேதி வரை நடக்கும். இதில் ட்ரெக்கிங்கை தமிழக, ஆந்திர, கேரள சுற்றுலா அமைச்சகங்கள் மற்றும் யூத் ஹாஸ்டல் கூட்டமைப்பு இணைந்து நடத்துகின்றன.

கொடைக்கானலிலும் மழைக்கால ட்ரெக்கிங் உண்டு. நான்கு நாட்கள். ஐந்து குழுக்கள். பூம்பாறை, பெரிஜம் ஏரி, மரியார் ஷோலா, கவுஞ்சி என்று இயற்கையன்னை பூத்துக் குலுங்கும் வழிகளில் அமைந்திருக்கிறது இந்த ட்ரெக்கிங்.

ஏலகிரி மலைக்கருகே ஜலகம்பாறை என்ற நீர்வீழ்ச்சி உள்ளது. இங்கே ஒவ்வொரு பொங்கல் விடுமுறையின் போதும் மூன்று நாட்கள் மலையேற்றப் பயிற்சி தரப்படுகிறது.

இந்த ஆண்டிலிருந்து ஏப்ரல் 14 ம் தேதியிலிருந்து ஆறு நாட்களுக்கு மலையேற்றத்தை ஊட்டியில் பார்சன் பள்ளத்தாக்கின் அருகிலுள்ள முக்குர்த்தி மலைமுகட்டில் செய்யலாம்.

நவம்பர் மாதங்களில் மாமல்லபுரத்திலிருந்து கோவளம் வரை கடற்கரையோர நடையை குழுக்களாக நடத்தவும் திட்டமிருக்கிறது.

அந்த மாதத்தில்தான் கடல் மணல் நடக்கும் வெப்பத்தில் இருக்கும்.

ஜூலை மாதத்தில் 'குற்றாலச் சாரல் விழா' நடக்கும் போது முண்டந்துறை (புலிகள் சரணாலயம்) பகுதியிலிருந்து மலைப்பகுதிக்கு ட்ரெக்கிங் செல்லலாம்.

ரெட்ஹில்ஸ்க்கருகே உள்ள பழவேற்காட்டிலிருந்து சற்று தள்ளி இருப்பது புலிக்காடு ஏரி. இதில்

'விண்ட் ஸர்ஃபிங்' செய்யலாம் சுமார் 45 நிமிடங்களுக்கு. இது ஏற்கெனவே முட்டுக்காடு ஏரியில் நடைபெற்றது. ஆனால் அங்கு சில பகுதிகளில் நீர் போதிய ஆழம் இல்லாததால் புலிக்காடு ஏரியில் இந்த வசதிகளைச் செய்திருக்கிறார்கள்.

முன்பு ராணுவத்தினருக்கு மட்டுமே இருந்தது 'பாராஸெய்லிங்' ஜீப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டருடன் நாம் இணைய, ஜீப் நகரும் போது விசையில் ஹெலிகாப்டர் விரியும். நாம் விண்ணுக்கு மேலும் சில நூறு அடிகள் நெருக்கமாக சில நிமிடங்கள் செல்லலாம்.

பல ஆண்டுகளாகவே இந்தியாவில் 'அட்வெஞ்சர்' சுற்றுலாக்களை நடத்தி வருகிறது இளைஞர் விடுதிக் கூட்டமைப்பு (யூத் ஹாஸ்டல்ஸ் அஸோஸியேஷன்). இந்த அமைப்பின் செயலாளராகப் பணிபுரியும் திரு எஸ். வெங்கட்நாராயணனிடம் துணிச்சலாகப் புதுமைச் சுற்றுலாக்களில் கலந்து கொள்ளும் ஆர்வம் கொண்ட வாசகர்கள் சார்பாக சில கேள்விகள் கேட்டோம்.

* இதுபோன்ற அட்வெஞ்சர் சுற்று லாக்களில் கலந்து கொள்ள ஏதாவது வயது வரம்பு உண்டா?

ஏழு வயதிலிருந்து எழுபது வயது வரை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். மனதளவில் உற்சாகமானவராக இருந்தால் போதும். என்றாலும் மருத்துவச் சான்றிதழ் தேவை. ஏனென்றால் தீவிர இதய நோய் மற்றும் ஆழ்ந்த ஆஸ்த்மா தொல்லை உள்ளவர்களுக்கு மலையேற்றம் ரிஸ்கானதாயிற்றே. மற்றபடி குடும்பத்துடன் இவற்றில் கலந்து கொள்பவர்கள் அதிகமாகி வருகிறார்கள்.

* அரசும், உங்கள் அமைப்பும் இணைந்து இதுபோன்ற சுற்றுலாக்களை நடத்துகிறீர்கள். யாருக்கு எந்தவிதப் பங்கு?

எந்த இடம், எவ்வளவு நாட்கள், ஒரு குழுவில் எவ்வளவு பேர் என்பதை நாங்கள் நிர்ணயிப்போம். அரசும் சில குறிப்பிட்ட கால கட்டத்தில் குறிப்பிட்ட சுற்றுலா மையத்தில் இவற்றை நடத்தப் பரிந்துரை செய்யும். பயிற்சியாளர், குழுத் தலைவர் ஆகியோர் எங்களால் நியமிக்கப்படுவார்கள். உதாரணமாக மலையேற்றத்திற்கான பயிற்சி வகுப்பு உத்தரகாசி, டார்ஜிலிங் மற்றும் மனாலி ஆகிய இடங்களில் மட்டுமே இந்தியாவில் உள்ளது. இங்கு பயிற்சி பெற்ற ஒருவரைத் தான் நாங்கள் நியமிப்போம்.

கடந்த சில ஆண்டுகளாக அரசும் எங்களை உற்சாகப்படுத்துவதோடு உதவிகளும் செய்கிறது. இந்த விதத்தில் அரசின் ஐந்து பிரிவுகளும் (வனத்துறை, விளையாட்டுத் துறை, கல்வித்துறை, சுற்றுப்புறச்சூழல் துறை, சுற்றுலாத் துறை) எங்களுடன் ஒத்துழைக்க வேண்டியிருக்கும். இது போன்ற சுற்றுலாக்களுக்கான விளம்பரச் செலவை அரசு ஏற்றுக் கொள்கிறது. கேம்ப்புகளின் போது வனத்துறையின் ஓய்வகங்கள்,



கோவையிலிருந்து 102 கிலோமீட்டர் தொலைவில் ஆனைமலைத் தொடரில் (மேற்குத் தொடர்ச்சி மலையில்) அமைந்துள்ள வால்பாறை நல்ல 'பிக்னிக் ஸ்பாட்'. இங்குள்ள வெங்கடேசப் பெருமான் கோவிலின் தோட்டத்தில் காண்பது போன்ற (பெரிய) அளவில் ரோஜாப் பூக்களை வேறெங்கும் காண முடியாது. வால்பாறை ஏழைகளின் ஊட்டி எனப்படும்.

ஸ்தாபிதம் : 1986 | போன் : 8250770

ஸ்ரீமதி சிட்பண்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

பதிவு அலுவலகம் : 34-B, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம் சென்னை – 34.

8 ஆம் ஆண்டை நோக்கி

வெற்றி நடைபோடும்
ஸ்ரீமதி சீட்டில்
இன்றே சேர்ந்து பயன் பெறுவீர்!

எங்களது புதிய சீட்டு குருப்புகள் :

குருப்	மாதங்கள்	சந்தா ரூ.	சீட்டு மொத்த மதிப்பு ரூ.	மு.ஒ.ஆணை எண்
SL	50	2000	1,00,000	1782/93
SJ	50	1000	50,000	1779/93
SA	40	500	20,000	1778/93
SB	40	250	10,000	1784/93
SC	40	125	5,000	1780/93
SK	25	1000	25,000	1783/93
SF	25	400	10,000	1781/93

நிர்வாகஸ்தர்கள் :

- சுரேஷ் மல்துகார்
  சேர்மன்
- P. கிருஷ்ண மூர்த்தி
  எக்ஸிக்யூடிவ் டைரக்டர்
- திலீப் பண்டாரி
  மானேஜிங் டைரக்டர்
- M.R. ராமகிருஷ்ணன்
  டைரக்டர்

சீட்டில் சேருபவர்களுக்கு சிறப்பான பரிசுகள் வழங்கப்படும்

KAN ADS

பின்துறையின் விருந்தினர் இல்லம், போன்ற இடங்களில் இரவுகளில் தங்க அனுமதிக்கப்படுகிறோம்.

★ 'ட்ரெக்கிங்' போன்ற சுற்றுலாக்களால் என்ன பயன்? அப்போது எந்தெந்த விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்?

குழுக்களாகச் செல்லும்போது புதுநட்புக்கள் பிறக்கின்றன. முக்கியமாக, மாசுபடாத இயற்கையை - மலைமுகடு, ஓடை, பூக்கள், வன விலங்குகள், - பார்த்து மனதைப் பறிகொடுக்கும் அனுபவமே அலாதி தான். சூட்கேஸையெல்லாம் கையிலெடுத்துக் கொண்டு நடக்க முடியாது. முதுகுப் பக்கமாகத் தொங்க விட்டுக் கொள்ளும் பையை நாங்கள் தருவோம். கம்பளிகள் மாலை மற்றும் இரவு வேளைகளில் தேவைப்படும். என்றாலும் இவற்றைத் தூக்கிக் கொண்டு அலைய வேண்டியதில்லை. அங்கங்கே உள்ள எங்கள் கேம்ப்பிலேயே இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். சில இடங்களில் கயிற்றின் உதவியும் தேவைப்படும் என்பதால் அதுவும் எடுத்துச் செல்ல வேண்டும்.

முதல் நாளில் அதிக தூரம் நடக்க வைக்க மாட்டோம். ஏனென்றால் அந்த க்ளைமேட்டை உடல் ஏற்றுக் கொள்கிறதா என்பதைப் பார்க்க அந்தக் கால அளவு வேண்டும். இது போன்ற அட்வெஞ்சர் சுற்றுலாக்களில் கலந்து கொண்டால் தொடர்ந்து ஒரு ஆண்டுக்கு அந்த மன உற்சாகம் தொடருகிறது என்பது இவற்றில் கலந்து கொண்டவர்களின் அனுபவ பூர்வமான கருத்து.

அதுபோல் இத்தகைய சுற்றுலாக்களில் சில விஷயங்களில் மிகவும் கடுமையாக இருப்போம். புகை பிடிப்பதோ, மது அருந்துவதோ, போதைமருந்து பயன்படுத்தவோ கூடாது. கூட்டமாகத்தான் செல்ல வேண்டும். எக்காரணம் கொண்டும் குப்பைகளை வழியில் போடக் கூடாது.

★ இது போன்ற சுற்றுலாக்களில் மக்கள் எந்த அளவு ஈடுபாடு காட்டுகிறார்கள்?

நிறைய. சென்றமுறை நீலகிரி மலையில் ஏற்பாடு செய்திருந்த ட்ரெக்கிங் சுற்றுலாவுக்காக விண்ணப்பம் செய்தவர்களில் சுமார் 60 விண்ணப்பங்களை நிராகரிக்கும்படி ஆகிவிட்டது. ஏனென்றால் ஒரு குழுவுக்கு 25 பேர் என்று பத்து குழுக்களை மட்டுமே அப்படி அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருந்தோம்.


கோடையில் நிறைய பேர் ட்ரெக்கிங்கில் கலந்து கொள்ள வந்து ஏமாற நேர்வதால், செப்டம்பர் மாதம் தசராவின் போதும் ட்ரெக்கிங்கை ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்போது மழைக்காலம் அல்ல.

இவற்றிற்கான கட்டணமும் நியாயமானதாகவே இருக்கும். உதாரணமாக சென்ற முறை நான்கு நாட்களுக்கான ட்ரெக்கிங்குக்கு 550 ரூபாய் வசூல் செய்தோம். இந்தக் கட்டணத்தில் உணவுக்கான தொகையும் சேர்ந்தது.

ஏமாற்றத்தைத் தவிர்க்க, எந்தவித அட்வெஞ்சர் சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்புகிறீர்களோ அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னமேயே உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்வது நல்லது.

– அருண் சரண்யா

'ஆனை மலை'யில் – பொள்ளாச்சியிலிருந்து 37 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள 'டாப் ஸ்லிப்' சுற்றுலா செல்ல ஒரு நல்ல இடமாகும்.





புதிய
ஆல் க்ளியர் க்ளினிக்®
உங்கள் தலையின் சருமத்திற்கு ஈரப்பசை தந்து பொடுகைப் போக்குகிறது.

புதிய ஆல் க்ளியர் க்ளினிக் ஷாம்பூ – இணையற்ற பொடுகுக் கட்டுப் படுத்தும் திறத்தை வழங்குகிறது. மேம்போக்காக வேலை செய்யும் சாதாரண நிவாரணிகள் போலன்றி, புதிய ஆல் க்ளியர் க்ளினிக் முதல் உபயோகத்திலேயே பொடுகிலிருந்து விடுதலை அளிக்கிறது. இதன் இதமான ஃபார்முலா ஆற்றல்மிக்கது. இதை வழக்கமாக உபயோகித்தால் தலையின் சருமத்தில் ஈரப்பசையை நீடிக்கச் செய்து, ஷாம்பூ உபயோகித்து குளித்தபின் நிலைத்துநின்று பொடுகுகளை எதிர்க்கிறது. சாதாரண நிவாரணிகளைப் போலன்றி, இது தலை அரிப்பையும், செதிள் செதிளாய் உதிர்தலையும் கட்டுப்படுத்துகிறது.

முறையான உபயோக சோதனை

சாதாரண நிவாரணிகளினால், உங்களுக்குப் பொடுகு மீண்டும் ஏற்படுகிறது. புதிய ஆல் க்ளியர் க்ளினிக் பொடுகு மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்கிறது. ஆகவே புதிய





ஆல் க்ளியர் க்ளினிக்கை வழக்கமாக உபயோகிப்பீர். அது தலையை ஆரோக்கியமுடன் வைக்கிறது. அருமையான தலைமுடியை வழங்கி, மீண்டும் பொடுகுத் தொல்லை ஏற்படாது காக்கிறது.

ஆல் க்ளியர் க்ளினிக்®

பொடுகைக் கட்டுப்படுத்தும் ஷாம்பூ

பொ டு கை க்

க ட் டு ப் ப டு த் த

இ ணை ய ற் ற து



UMS

ஸ்டெபிலைஸர்



“எடுத்துச் சென்றேன்
TDP
ஆதாயம்
+ 10 வருட உத்திரவாதம்”

(உண்மையான மனநிம்மதியை எடுத்துச் சென்றேன்)



MUDRA : UMS : Tam : 514 : 93

நீங்கள் ஒரு ஸ்டெபிலைஸரை வாங்கும் முன் சிந்திப்பீர் ஒரு கணம்... அதில், யு எம் எஸ்-ஸைப் போல TDP (டைம் டிலே புரோகிராம்) ஆதாயம் உள்ளதா என்று. ஏனெனில் உங்களுடைய ஃப்ரிட்ஜ், வாக்குவம் க்ளீனர், வாஷிங் மிஷின் போன்ற 500 VA வரை மின்சாரம் உபயோகிக்கப்படும் உபகரணங்களுக்கு அடிக்கடி ஏற்படும் பழுதிற்கும், நீண்டகால பராமரிப்பு இல்லாத ஓட்டத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை யு எம் எஸ்-ஸின் டிடிபி ஆதாயம் உணர்த்துகிறது. ஒவ்வொரு மின் ஏற்றத்தாழ்வுக்கும் பின், சீரான மின்னோட்டம் உங்கள் உபகரணத்திற்குள் சென்றடையும் முன் சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. அங்கே உங்களுக்காக யு எம் எஸ்-ஸின் டிடிபி ஆதாயம் வேலை செய்கிறது. யு எம் எஸ் ஸ்டெபிலைஸரின் சிறப்பு இண்டிகேட்டர் ஒவ்வொரு சமயமும் உங்களுக்கு டிடிபி ஆதாயம் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அடையாளம் காட்டுகிறது. மேலும், யு எம் எஸ் ஸ்டெபிலைஸரின் சிறப்பு தொழில் நுட்ப வல்லமை பெற்ற யு எம் எஸ் நிறுவனத்தின் தயாரிப்பு என்பதிலேயே விளங்கும். யு எம் எஸ் ஸ்டெபிலைஸர் மட்டுமே பூச்சியோ பூஞ்சியோ நுழைய முடியாதவாறு சீல் செய்யப்பட்ட டை காஸ்ட் மேல் பாகத்தைக் கொண்டது. இதன் உள்ளே அமைக்கப்பட்டிருக்கும் செதில் போன்ற அமைப்புக்கள் மூலம் வெப்பம் எளிதாக வெளியேறுகிறது.

UMS ஸ்டெபிலைஸர் தன்னைக் காக்கும் உங்கள் உபகரணத்தையும் காத்திடும்.

டி.வி./வி.சி.ஆர்.களுக்கு ஏற்ற பிரத்யேகமான மாடல் உள்ளது.

விதவிதமான வண்ணங்களில் கிடைக்கும்.

யு எம் எஸ் ரேடியோ பேக்டரி பிரைவேட் லிமிடெட் தபால் பெட்டி எண் : 3771, அவினாசி ரோடு, கோயமுத்தூர் - 641 018. போன் : 213377, 213378 கிளைகள் ● 165, கிரீம்ஸ் ரோடு, சென்னை - 600 006. போன் : 8273339, 8275871, 8278061 ● 25, கக்கன் வீதி, செனாய் நகர், மதுரை - 625 020. போன் : 44727

✱ சுவாமிநாதன்






✱ ரூபி

'சுற்றுலா துறை' உல்லாசப் பிரயாணங்களை ஏற்பாடு செய்யும் துறை. நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அள்ளி அள்ளி ஈட்டித் தரும் கற்பகத்தரு. அதனால்தான் இன்று உலக நாடுகளெல்லாம் இத் தொழிலில் கண்ணில் எண்ணெயை விட்டுக் கொண்டு பக்கத்து நாடு என்ன செய்கிறது என்று கண்காணித்துக் கொண்டே போட்டா போட்டியோடு முனைப்புடன் முன்னேறி வருகின்றன. (வளருகின்றன) உல்லாசப் பிரயாணங்களின் உயிர் மூச்சே போக்குவரத்துத் துறைதான். அதிலும் தரமும், தகுதியும் உடைய பல சலுகைகளை அளித்து, மேற்கொள்ளும் பயணத்தைத் துரிதமாகவும் திறமையாகவும் ஒரு போக்குவரத்து நிர்வகிக்குமேயானால் - சுற்றுலா ஒரு நாட்டின் பொருளாதார நிலையையே தூக்கி நிறுத்திவிடும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுவிடும்.

நம்மவர்கள் உல்லாச பிரயாண தொழிலை முன்னேற்றும் வகையில் சுற்றுலா பயணிகளுக்கு (வெளிநாட்டினர் மற்றும் தாய் நாட்டினருக்கு) என்ன என்ன சலுகைகள் வசதிகள் செய்து கொடுக்கிறார்கள் என்று அறிய போக்குவரத்துத் துறைகளின் (விமானம், ரயில் மற்றும் பேருந்து) மக்கள் தொடர்பு அதிகாரிகளைச் சந்தித்தோம்-

சுற்றுலா போக என்ன சலுகை?



தென்னக ரயில்வேயின் மக்கள் தொடர்பு அதிகாரி திரு ப.ஷண்முகம்:-

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டின் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2லிருந்து 3மில்லியனாக உயர்ந்திருப்பதற்குக் காரணம் இந்தத் தலைமுறையினரின் பல ஊர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம், தானாகவே வேலையிலிருந்து நிரந்தர ஓய்வு பெறுவது, போதுமான நிதி வசதி, போன்றவையாகும். வருகின்ற பயணிகளில் 80% பேர் தங்களின் சுற்றுப் பயணத்திற்கு ரெயில் மார்க்கத்தைத்தான் தேர்ந்தெடுக்கின்றனர். ஏனெனில் ரெயில் கட்டணம் பயணிகளின் பர்ஸை பதம் பார்க்காமல் 'ரீஸனபிள்' ஆக இருப்பதுடன் பயணமும் துரிதமாகவும், வசதியாகவும் இருக்கும்.

சுற்றுலா பயணிகளின் வரைபடத்தில் ரயில் போக்குவரத்து பற்றி வரவில்லையானால் அது பருப்பு இல்லாத கல்யாணம் மாதிரி. வெளிநாட்டுப் பயணிகளுக்கும் அல்லது வெளிநாட்டில் தங்கியிருக்கும் இந்திய பயணிகளுக்கும் 'Indrail Pass' என்கிற பயணச் சீட்டை வழங்குகிறது. இது ஒரு 'கிரடிட் கார்ட்' மாதிரி. இதை அமெரிக்க டாலர், பவுண்ட் ஸ்டர்லிங் அல்லது மாற்றிக் கொள்ளக் கூடிய வெளிநாட்டு நாணயங்களை கொடுத்து (செல்லத்தக்க வெளிநாட்டு அனுமதிச் சீட்டினை காண்பித்தும்) பெற்றுக் கொள்ளலாம். இந்த அட்டை வைத்திருப்பவர் தேவலோக நாரதர் மாதிரி எங்கே வேண்டுமானாலும், எந்த ரயிலிலும் விருப்பம் போல் பயணத்தை மேற்கொள்ளலாம் அந்த அட்டையில் குறிப்பிட்ட கால அளவு வரை. ராஜதானி விரைவு ரயிலிலும் பயணம் செய்யலாம். அதில் அளிக்கப்படும் உணவு, படுக்கை வசதி, போன்றவையாவும் இலவசமாக வழங்கப்படும். அது மட்டுமல்ல அதி விரைவு மற்றும் குளுகுளு வசதி கொண்ட 2-டயர் ரயிலில் எந்தக் கட்டணமும் கொடுக்காமல் பயணத்தைத் தொடர இந்த 'கார்டு' வசதி அளிக்கிறது. இந்த அட்டையை இந்தியாவின் பிரதான நகரங்களான டெல்லி, பம்பாய், பெங்களூர், சென்னை, கல்கத்தா தவிர செகந்தராபாத், பெங்களூர், ராமேஸ்வரம், திருவனந்தபுரம் போன்ற பிரயாண இடங்களில் மட்டுமின்றி முக்கியமான உல்லாச இடங்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் (agent) பெறலாம். ஒரு வருடம் முன்பே கூட பதிவு செய்து கொள்ளக் கூடிய கம்ப்யூட்டர் வசதி இதற்கு உண்டு.

தற்போது பிராட்-கேஜில் உள்ள இவ்வசதியை மீட்டர் கேஜிலும் அதாவது தெற்குப் பகுதியில் உள்ள முக்கிய பிரயாண இடங்களை இணைத்து விடலாம் என்கிற எண்ணத்தில் தென்னக ரயில்வே திட்டமிட்டுள்ளது.


அடுத்து உள்நாட்டுப் பயணிகளுக்கு ரெயில்வே என்ன சலுகைகள் அளிக்கிறது என்று தெரிந்து கொள்வோம். ஒரு குழுவாக பயணங்களை மேற் கொள்பவர்களுக்குக் கட்டணத்தில் சலுகை, மலைவாசஸ்தலங்களும் செல்பவர்களுக்குச் சலுகை. ஆசிரியர்கள், மாணவர்கள் குழுக்கென பிரயாணச் சலுகை. இப்படி பல சலுகைகளை வாரி வழங்குகிறது நம் ரெயில்வே துறை. சுற்றுலா பயணிகள் உடல் ஊன முற்று இருந்தாலோ, அல்லது புற்றுநோய் மற்றும் காச நோய் இருந்தாலோ அவர்களுக்குக் கட்டணத்தில் அதிகக் கழிவு கிடைக்கும்.

உல்லாசப் பயணிகளுக்காகவும், புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்காகவும்,



கிழக்கில் கங்கையும், மேற்கில் யமுனையும் மாலையாகச் சூழ்ந்துள்ள வானை முட்டும் வண்ணம் ஓங்கி வளர்ந்துள்ள சிவாலிக் குன்றுகளின் மடியில் அமைந்துள்ளதுதான் 'டூன்' பள்ளத்தாக்கு. இங்கு சஹஸ்ரதாரா நீர்வீழ்ச்சி, கொள்ளைக்காரன் குகை, லக்ஷ்மண் சித்தி, மால்சிமான் பூங்கா ஆகியவை பார்க்க வேண்டிய இடங்கள்.





மற்றும் விடுமுறை பயணிகளுக்காகவும் மட்டுமின்றி பயணிகள் நெரிசல் அதிகமாகும் போது பிரத்தியேக ரயில்களை விடுகின்றன நம் தென்னக ரயில்வே. 'சில இடங்களில் சுற்றுலா இடத்திற்குச் செல்ல பஸ் 'பயணச் சீட்டையும் வழங்குகிறோம்'

அது மட்டுமல்ல ஊர்புதிசாச்சே எங்கே போய் யாரை விசாரிப்பது பாஷை தெரியாத ஊரில் என்று பயணிகள் கவலைபட வேண்டாம். அதற்கும் பயணிகளுக்குத் தகவல்கள் சொல்லும் பூத்தும், சுற்றுலா இடங்களைப் பற்றிக் கூறும் புத்தகமும் ஒவ்வொரு பிரதான ரயில் நிலையத்திலும் கிடைப்பதோடு- இருக்கின்ற இடத்திற்கு அருகாமையில் உள்ள ரயில் நிலையம் அதனை அடைய எந்த மார்க்கத்தில் செல்லலாம், எவ்வளவு தூரம், கட்டணம் எவ்வளவு என்பதுடன் ஓய்வு அறை, தங்கும் மற்றும் சாப்பாட்டு வசதிகள் போன்ற விவரங்களைக் கூறும் சுற்றுலா பயண - (பாம்ப்லெட்) துண்டுப் புத்தகமும் கொடுக்கிறோம்.

“விமானம் மூலமாகவோ, இருப்புப் பாதை மூலமாகவோ, பயணிகள் அடைய முடியாத சுற்றுலா இடங்களுக்கு அவர்களை நேரிடையாக விரைவாக அழைத்துச் செல்ல வல்லது பேருந்து தடயம் ஒன்றுதான். எனவேதான் 1980ம் ஆண்டு 276 பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இன்று தொலைதூர மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிகளைக் கருத்திற் கொண்டு 949 பேருந்துகளுடன் தொலை தூரத்தில் உள்ள மாவட்ட தலைநகரங்களையும் இணைத்துச் செயலாற்றுகின்றது,'' என்று கூறுகிறார் திருவள்ளுவர் போக்குவரத்துத் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றும் திரு ஷப்பீ.

''ஏழை மக்களின் பொருளாதார வசதியை கருத்திற் கொண்டுதான் கட்டணவிகிதமே நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் சலுகைகள் என்று தனிப்பட்ட முறையில் எந்த


உங்கள் திறமைக்கான
உற்ற துணைவன்
கோரஸ்
பர்மாக்ளீன் ஸில்க் ரிப்பன்
டைப்ரைட்டர்களுக்காக
நீங்கள் திறமையாளர் மற்றும் நீங்கள் அன்றாடம் செய்து முடிக்கும் வேலை இதைப் பிரதிபலிக்கிறது. இந்த வெற்றியில் உங்களுக்கு உற்ற துணைவன் கோரஸ் வழங்கும் சிறப்பான டைப்ரைட்டர் ரிப்பன்.
பர்மாக்ளீன் ஸில்க், சூப்பர் ஃபைன் பருத்தி கொண்டது. சீராக மை தடவப்பட்டது மற்றும் சுத்தமானது. அதிக நாட்கள் உழைக்கக் கூடிய இந்த ரிப்பன் உங்கள் திறமைக்கு ஈடுகொடுக்கக் கூடியது. டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட்களுக்காக 60 & 120 மீட்டர் ரோல்களிலும் கிடைக்கிறது. மற்றும் கோரஸ் தையான் ரிப்பன் உங்கள் எலக்ட்ரானிக்ஸ் டெலக்ஸ் மற்றும் டெலிப்ரின்டர்களுக்கு மிகவும் உகந்தது.
உங்களுக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுங்கள். அனைத்து ஸ்டேஷனரி கடைகளில் கிடைக்கிறது.
கோரஸ் (இந்தியா) லிட்., பம்பாய் 400 018
கிளைகள் இந்தியா முழுவதும்
கோரஸ்

AKA/615 – TM


கேசவர்த்தினி...
நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான
பரம்பரை இரகசியம்
கைவட்டமளிக்கும் கேசவர்த்தினி கூந்தல் தைலம்.
நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் சிறிதளவு கேசவர்த்தினியை கலந்து தேய்த்தால், உங்கள் கூந்தல் நீண்டு, ஒளி கொண்டு இகழுவதைக் காண்பீர்கள்.
மேலும் உங்கள் கூந்தல் அடர்த்தியாகவும், கருமையாகவும் காணப்படும்.
இன்றே ஒரு பாட்டில் கேசவர்த்தினியை வாங்குங்கள் ஆறே மாதங்களில் அழகு மிளிர்ந்த கூந்தலை பெறுங்கள்.
KESAVARDHINI
கேசவர்த்தினி
கூந்தல் தைலம்
கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், சென்னை-600 087

வகையினருக்கும் அளிப்பதில்லை இந்தத் துறை.''

''அப்படியானால் சுற்றுலா பயணிகளைக் கவர நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

உல்லாசப் பயணிகளோ அல்லது யாத்திரீகர்களோ ஒரு குழுவாக சுமார் 40,45 பேர் ஓர் இடத்திற்கு அல்லது பல இடங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் அவர்களுக்கு எங்கள் பேருந்தை வாடகைக்குத் தருகிறோம். 24 மணி நேரத்திற்கு 1 பேருந்திற்கு வாங்கப்படும் கட்டணம் ரூ. 4700. 400 கிமீ வரை செல்ல அனுமதியுண்டு. நேரத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப செலுத்த வேண்டிய கட்டணம் மாறுபடும். பிரதான பஸ் நிலையத்திலிருந்து உல்லாச இடங்களுக்கு நேரிடையாகச் செல்ல பஸ் வசதி தமிழ்நாடு முழுவதுமுண்டு.

பயணிகளின் வசதியைப் பொருத்து ஒரு மாதம் முன்னமே கூட திட்டமிட்டு பயணச் சீட்டினை பெற பதிவு செய்து கொள்ளலாம். சில சமயங்களில் அவசர நிலைக்கு இருபத்திநான்கு மணிநேரம் முன்னதாகக் கூட பதிவு செய்ய அனுமதிக்கிறோம்.''

இரு மாவட்டங்களுக்கிடையில் இடைப்பட்ட தூரத்தில் 'மோட்டல்' என்று சொல்லக்கூடிய ஓய்வு வகை உணவு விடுதியை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பல இடங்களில் நடத்துகிறது. பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நாட்களில் கூடுதல் பேருந்துகளை விடுகிறோம்.

''சரி, போக்குவரத்தில் பயணிகளுக்கு வசதிகளெல்லாம் எப்படி?''

''வெளிநாட்டினரே புகழ்கின்ற அளவிற்குச் சேவையைப் பொறுத்தவரை நாங்கள் என்றுமே நெம்பர் ஒன்தான் இதற்காகவே நான்குமுறை தேசிய விருதினை பெற்றிருக்கிறோம். தற்போது புதிதாக (முதலமைச்சர் பெயரில்) ஆரம்பித்திருக்கும் போக்குவரத்துக் கழகத்தில் சுகமான இனிமையான பயணத்திற்கேற்ப பேருந் தினை வடிவமைத்துள்ளோம். அதுமட்டுமல்ல பழைய வசதிகளைத் தவிர பயணத்தின் போது பயணிகளின் தேவைக்கேற்ப தேநீர், காபி மற்றும் சூப் கூட வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். ஓட்டுநர், நடத்துனர் தவிர இவ்வகைப் பேருந்தில் ஓர் உதவியாளரும் இருப்பது ஒரு சிறப்பம்சம்.

''இத்துறையின் எதிர்காலத் திட்டம்?''

''உண்டு. சுற்றுலா இடங்களைப் பற்றி தகவல்களைக் கூறும் புத்தகம்-பேருந்துகளைப் பற்றிய விவரங்கள் அடங்கிய அட்டவணைக் குறிப்பு, இவற்றுடன் உல்லாசப் பயணிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில், 'டூரிஸம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' உடன் ஒப்பந்த அடிப்படையில் பல திட்டங்களை செயல்படுத்த முனைந்துள்ளோம்''

'டூரிஸம்' மூலம் நாட்டிற்கு பணத்தை அதுவும் அந்நியச் செலாவணியை அட்சய பாத்திரமாய் அள்ளித்தருவது விமான போக்குவரத்துத் துறைதான். அதனால் தானோ என்னவோ உள்நாட்டினரை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பல சலுகைத் திட்டங்களை வகுத்திருக்கிறது நமது விமான போக்குவரத்துத் துறை. அதைப் பற்றி விளக்குகிறார் அத்துறையில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றும் திரு சுவாமிநாதன் :-

Discover India – 21 நாட்கள் சுற்றுப்பயணம். அமெரிக்க நாணயத்தில் 400 டாலர்கள் செலுத்தினால் போதும். இந்தியாவின் முக்கிய இடங்கள் அனைத்திற்கும் சென்று பார்க்கலாம். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை

பலவித காட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டது போன்ற தோற்றம் கொண்ட மலைவாசஸ்தலம் முஸோரி. இங்கிருந்தபடியே பனி மூடிய இமயமலைச் சிகரங்களைக் காண முடியும். 1827 இல் 'காப்டன் யங்' என்னும் ராணுவ அதிகாரி அடுக்கு மலைகளிடையே உள்ள இந்த இடத்தைக் கண்டு இதை மலைவாசஸ்தலமாக்கத் திட்டமிட்டார். இங்கு ஆண்டு முழுவதுமே சீஸன். கங்கோத்ரி, யமுனோத்ரி போன்ற இடங்களுக்கு முஸோரி வழியாகத்தான் செல்ல வேண்டும்.



யுடன். ஒரு முறை சென்று விட்ட விமான தளத்தினை மறுமுறை அது இணைக்கும் வழியாய் இருந்தாலொழிய - மீண்டும் செல்லக் கூடாது.

2 'India Wonder fact' - இந்தச் சலுகையின் கீழ் நம் பாரதத்தை நான்காக தெற்கு - வடக்கு - மேற்கு- கிழக்கு எனத் தனித் தனியாக பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் 200 டாலர்கள் மட்டுமே வசூலிக்கிறார்கள். இதன் கால அளவு 7 நாட்கள் மட்டுமே. எந்த இந்திய விமானத்திலும் பயணம் மேற்கொள்ள இவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

3 'Common Interest Group'

ஒரு குழுவாக 10 பேருக்கு மேல் வெளிநாட்டினர் பயணம் செய்ய விரும்பினால் பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் தள்ளுபடி கிடைக்கும்.

4 இந்தியாவில் படிக்கும், மேலை நாட்டு மாணவ மாணவிகளுக்கு பயணக் கட்டணத்தில் 25 சதவிகிதம் வரை தள்ளுபடி உண்டு.

5 தென்னிந்தியாவில் முக்கிய இடங்களை 21 நாட்களில் சுற்றிப் பார்க்க விரும்பும் வெளிநாட்டினருக்குக் கட்டணத்தில் 30 சதவிகிதம் தள்ளுபடி கிடைக்கும். இதை South India Excursion Fare' என்கிறார்கள். மேற்கூறிய அத்தனை சலுகைகளும் அமெரிக்க டாலர்களுக்கு இணைத்தே கூறப்பட்டவையாகும்.''

"அப்போ உள்நாட்டினருக்கு ஒன்றுமே இல்லையா?"

''அடிப்படைக் கட்டணம், எரிவாயு கட்டணம், உள்நாட்டு வான் பயணக் கட்டணம், பயணிகள் சேவைக் கட்டணம் இந்த நான்கும் அடிப்படையாக வைத்துத்தான் ஒரு கட்டணத்தின் விலையை நிர்ணயிக்கிறோம். வயதிற்கேற்ப பார்த்தால் பயணிகளுக்குக் கட்டணத்தில் சில சலுகைகள் உண்டு. இரண்டு வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்குக் கட்டணத்தில் 10% வாங்குகிறோம். இரண்டிலிருந்து 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 50% குறைத்தும், மாணவ மாணவிகளுக்கு கட்டணத்தில் 50% சலுகையும் தருகிறோம். 15 குழந்தைகளுடன் ஒரு ஆசிரியர் வெளிநாட்டுப் பயணம் செல்ல விரும்பினால் அந்த ஆசிரியர் இலவசமாக பயணம் செல்லலாம்.

சுற்றுலா பயணிகள் எங்களுடன் பயணம் செய்து முடித்தவுடன் நேராக இந்திய சுற்றுலா கழகம் நடத்தும் விடுதியில் சென்று தங்கினால் அறை வாடகைக் கட்டணத்தில் 15% தள்ளுபடி தருகிறோம்.

கணவன், மனைவி அல்லது அண்ணன், தங்கை அல்லது தம்பி (30 வயதிற்குட் பட்ட இருவர்) அந்தமான் தீவிற்குச் சென்று வர விரும்பினால் கட்டணத்தில் 100ரூ சலுகை பெறலாம். இவ்வசதி கல்கத்தா விமான தளத்திலும் உண்டு''

வாசகிகளே! ரயிலோ, பஸ்ஸோ இல்லை ஆகாய விமானமோ எதன் மூலம் பயணம் செய்தாலும் எங்கெங்கே என்ன என்ன சலுகைகளை எப்படி பெறலாம் என்று முன்னதாகவே முழுமையாகத் தெரிந்து கொள்ளுங்கள் - அதில் மிச்சமாகும் பணத்தில் இன்னும் கொஞ்சம் அதிக இடங்களையும் பார்க்கலாமே!

– கீதா மோஹன்

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : வெயிலுக்கேற்ற உணவு கடைசி தேதி : 15.3.'94

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

ஸ்பெஷல்

பரோட்டா

தேவையான பொருட்கள் :

மைதா மாவு - 1/2 கிலோ
கோதுமை மாவு - 1/4 கிலோ
உப்பு - தேவையான அளவு
சர்க்கரை - 2 டீஸ்பூன்
ரீபைண்ட் ஆயில் - 1 கப்
டால்டா - 200 கிராம்

செய்முறை :

1. அகன்ற பாத்திரத்தில் மைதா மாவு, கோதுமை மாவு, உப்பு, சர்க்கரை போட்டு நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

2. பிறகு தண்ணீர் ஊற்றி மாவு மிகவும் மிருதுவாக இருக்குமாறு பிசைந்து கொள்ள வேண்டும்.

3. பிசைந்த மாவு உருண்டையின் மேல் 1/2 கப் ரீபைண்ட் ஆயில் ஊற்றி பிசைந்து 1/2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

டால்டா பேஸ்ட் :

1. 200 கிராம் டால்டாவை உருக்க வைத்து 1/2 கப் ரீபைண்ட் ஆயில் சேர்க்கவும்.

2. டால்டாவும் எண்ணெயும் நன்கு ஆறியவுடன் ஒரு கரண்டி மைதா மாவை அதில் போட்டு கட்டி இல்லாமல் நன்றாகக் கலந்து கொள்ளவும்.

பரோட்டா செய்யும் முறை :

1. பிசைந்து வைத்துள்ள மாவுக் கலவையை ஒரு பெரிய எலுமிச்சம் பழம் அளவுக்கு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

2. ஒரு உருண்டையை எடுத்து சப்பாத்தி தட்டுவது போல் பெரிய வட்டமாக மெல்லியதாக தட்டிக் கொள்ளவும்.

3. அதன் மீது 2 டீஸ்பூன் டால்டா பேஸ்ட் போட்டு முழுவதும் தடவி விட வேண்டும்.

4. பிறகு புடைவைக்குக் கொசுவம் வைப்பது போல் டால்டா பேஸ்ட் தடவி வைத்துள்ள பரோட்டா மாவை கையில் தூக்கிக் கொசுவம் வைக்க வேண்டும்.



5. இப்பொழுது நீளமாக வரும் அதை அப்படியே சுருட்டி வைக்க வேண்டும்.

6. பிறகு இந்த முறைபோல் எல்லா மாவு உருண்டைகளையும் செய்து தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

7. ½ மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

8. நாம் சாப்பிடும் போது சுருட்டி வைத்துள்ள மாவு உருண்டையை சிறிது கனமாக வட்டமாக தட்டி கொள்ள வேண்டும்.

9. தோசை கல்லை நன்றாக சூடு செய்ய வேண்டும்.

10. தட்டி வைத்துள்ள பரோட்டாவை தோசைகல்லில் போட வேண்டும்.

11. தீயை சிறியதாக வைத்துவிட வேண்டும்.

12. பொன்னிறமாக சிவந்ததும் திருப்பிப் போட்டு சிவக்க விடவேண்டும்.

13. இரண்டு பக்கமும் சிவந்த பிறகு ரீபைண்ட ஆயில், டால்டா அல்லது வெண்ணெய் சுற்றி ஊற்றி அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் முறுகலாக, மிருதுவாகச் சுட்டு எடுத்து பறிமாறலாம்.

14. பரோட்டாவிற்கு பட்டர் பனீர் மசாலா மிகவும் நன்றாக இருக்கும்.

பட்டர் பனீர் மசாலா

தேவையான பொருட்கள் :

பால்கட்டி - 150 கிராம்
மைதா - 1 கரண்டி (மூன்று டீஸ்பூன்)
வெண்ணெய் - 100 கிராம்
ரீபைண்ட் ஆயில் - 4 கரண்டி
பால் - 1 கப்
பெங்களூர் தக்காளி - 3
வெங்காயம் - 3
மிளகாய்த் தூள், சீரகத்தூள்,
மிளகுத்தூள் - 1 டீஸ்பூன் தனித்தனியாக
கரம் மசாலா - ¼ டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
இஞ்சி பூண்டு அரைத்தது
- 3 டீஸ்பூன்

செய்முறை :

பால்கட்டி

1. 1 லிட்டர் பாலை நன்றாகக் காய்ச்சி கொதிக்கும் போது ½ கப் தயிர் ஊற்ற வேண்டும்.

2. பால்கட்டியும், தண்ணீரும் தனித்தனியாக பிரிந்துவிடும்.

3. பாத்திரத்தின் மேல் துணி போட்டு திரிந்த பால் கலவையை ஊற்ற வேண்டும்.

4. தண்ணீர் கிண்ணத்தில் இறங்கி விடும்.

5. துணியில் இருக்கும் கலவையை இறுக்க கயிறில் மூட்டை போல் கட்டி விட வேண்டும்.

6. 20 நிமிடம் கழித்து கயிற்றைப் பிரித்து சிறிய சதுரமாக வெட்டிக் கொள்ளவும்.

மசாலா செய்யும் முறை :

1. வெங்காயம், தக்காளியைத் தண்ணீர் போடாமல் அரைத்துக் கொள்ள வேண்டும்.

2. எண்ணெய்யை நன்றாகக் காய வைக்க வேண்டும்.

3. அரைத்து வைத்துள்ள வெங்காயம், தக்காளியை அதில் போட்டு நன்றாக வதக்க வேண்டும்.

4. பிறகு இஞ்சி பூண்டு அரைத்து வைத்ததை போட்டு வதக்க வேண்டும்.

5. பிறகு மிளகாய்த்தூள், சீரகத்தூள், மிளகுத்தூள் போட்டு நன்றாக வதக்க வேண்டும்.

6. கரம் மசாலா, கொத்துமல்லி போட்டு வதக்கி இறக்க வேண்டும்.

வெள்ளை சாஸ் :

1. கடாயில் 100 கிராம் வெண்ணெய் கட செய்து 1 கரண்டி மைதா போட்டு சிறிது நேரம் வறுத்துக் கொண்டு 1 டம்ளர் பால் ஊற்றி நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். பிறகு சிறிய தீயில் வைத்து சாஸ் திக்காக கட்டியாகும் வரை கரண்டியால் கிண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.


2. செய்து வைத்துள்ள சாஸை மசாலாவில் கலக்க வேண்டும்.

3. அடுப்பில் சிறிய தீயில் வைத்துச் சிறிது நேரம் கிண்ட வேண்டும்.

4. கடைசியாக வெட்டி வைத்துள்ள பால் கட்டியை போட்டு இறக்க வேண்டும்.

5. பட்டர் பனீர் மசாலா பரோட்டாவிற்கு ஏற்ற மசாலா.

- யு. அருள்மொழி



பெண்களின் பின்னலுக்கு
மட்டும்தான் ரப்பர் பேண்டா?
குத்துவிளக்கு, காமாட்சி அம்மன்
விளக்கின் மேல் துணியில் ரப்பர் பேண்டைச்
சுற்றிப் பூ வைத்தால்
கீழே விழாது.
- திருமதி சுப்ரமணியம்

"LKS GOLD" IS CASH IN HAND

பொன்னின் பெருமை

பெண்ணின் பெருமை





தலைமுறை தலைமுறையாக
தரம்மிக்க நகைகளை விற்பனை
செய்து வருவதில் நிகரற்று விளங்குவது,
எல்.கே.எஸ் கோல்டு ஹவுஸ்

ONLY AT
T. NAGAR

The Big Shop

L.K.S
GOLD HOUSE

60, USMAN ROAD, T.NAGAR, MADRAS - 600 017.
PHONE: 440440, 445455, 445055, 443323
WE HAVE NO BRANCHES AT MADRAS

ADSTART

★ OPEN ON SUNDAYS — 10 AM to 1 PM



* ஊட்டி

சில மலை

சிம்லா

வடமேற்கு இமாலயத் தொடரில் அமைந்துள்ள இடம் இமாச்சலப் பிரதேசத்தின் தலைநகர். ஊசியிலைக் காடுகளால் இந்த மலைத் தொடர் மேலும் அழகு பெறுகிறது.

சீஸன் - ஏப்ரலிலிருந்து பாதி ஜுன் வரை, மற்றும் பாதி செப்டம்பரிலிருந்து நவம்பர் வரை.

சிம்லா

செல்வது எப்படி?

சிம்லாவிலிருந்து 23 கி.மீ தொலைவில் ஜுபூர் ஹட்டி என்ற விமான நிலையம் உள்ளது. குலு, சண்டிகர், டெல்லி ஆகிய இடங்களிலிருந்து இந்த நிலையத்துக்கு விமானங்கள் சென்று வருகின்றன. ரயிலில் செல்ல வேண்டுமானால் கல்கா என்ற ரயில் நிலையத்திலிருந்து சிம்லாவுக்குச் செல்லலாம். 90 கி.மீ தொலைவு. குறுகிய ரயில் பாதை. (கல்காவிலிருந்து இந்தியாவின் முக்கிய பெருநகரங்கள் எல்லாம் ரயில் பாதையில் இணைக்கப்பட்டுள்ளன).

சில முக்கிய இடங்களிலிருந்து சிம்லா எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?

டெல்லியிலிருந்து-249 கி.மீ. சண்டிகரிலிருந்து - 117கி.மீ. அம்பாலாவிலிருந்து - 151 கி.மீ. டேராடூனிலிருந்து -240 கி.மீ.(இந்த இடங்களிலிருந்து சிம்லாவுக்கு நேரடி பஸ்கள் உண்டு).

சுற்றிப் பார்க்க இமாச்சலப் பிரதேச அரசு கீழ்க் கண்ட கண்டக்டட் டூர்களை ஏற்பாடு செய்துள்ளது.



* ஏற்காடு



✱ நைனிடால்

டூர் — 1

காலை பத்து மணிக்குக் கிளம்பி மாலை ஐந்து மணிக்குத் திரும்பும். அழைத்துச் செல்லும் இடங்கள்- வனப்பூக்கள் கூடம், இந்திரா ஓய்வகம், மற்றும் இயற்கை யெழில் கொஞ்சும் பகுதிகளான ஃபாரு, மஷோப்ரா, க்ரெயிக்னனோ, பழ ஆராய்ச்சி நிலையம் கட்டணம் - அறுபது ரூபாய் (பஸ் ஸென்றால்), 430 ரூபாய் (காரென்றால்)

டூர் — 2

காலை பத்து மணி- மாலை ஐந்து மணி (புதன், வெள்ளி, ஞாயிறு மட்டும்) இடங்கள் - ஃபாரு, நியோக், மாடியனா, நர்கண்டா கட்டணம் - 70 ரூபாய் (பஸ்), 825 ரூபாய் (கார்)

டூர் — 3

(திங்கள், வியாழன் மற்றும் சனிக் கிழமைகளில்) காலை 9 மணி முதல் மாலை 5 வரை. இடங்கள் - செயில், குஃப்ரி, இந்திரா ஓய்வகம், வியாரி பங்களா. கட்ட ணம் - 70 ரூபாய் (பஸ்), 500 ரூபாய் (கார்). தங்குமிடம் ஒரு நாளைக்கு 300 ரூபாயி லிருந்து 1600 ரூபாய் வரை

மேலே டூர்களில் குறிப்பிட்டவற்றைத் தவிர ஜாகூ மலை, சாத்விக் நீர்வீழ்ச்சி, தாராதேவி கோயில், தெங்கு மாதா கோயில், திபெத்திய விகாரம் ஆகியவையெல்லாம் கூட பார்க்கக் கூடியவைதான். முக்கிய பஸ் நிலையத்திலிருந்து சுமார் 12 கிலோ மீட்ட ருக்குள் இவை அடங்கும். கோல்ஃப், மீன் பிடித்தல், பனிச்சறுக்கு (இது ஜனவரியி லிருந்து மார்ச் வரைதான்) ட்ரெக்கிங் ஆகிய வையும் உண்டு.

கொடைக்கானல்

மதுரைக்கருகே உள்ள பழனிமலைத் தொடரில் அமைந்துள்ளது இந்த மலை வாசஸ்தலம். உயரம் - 2,133 மீட்டர்கள். சீஸன்- ஏப்ரலிலிருந்து ஜூன் வரை, செப் டம்பரிலிருந்து அக்டோபர் வரை. அருகி லுள்ள விமான நிலையம் மதுரை (120 கிமீ) அருகிலுள்ள ரயில் நிலையம் கொடைக் கானல் சாலை (80கிமீ) தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தினமும் இருவேளைகள் கண்டக்டட் டூர் நடத்துகிறது. பெரியவர் களுக்கான கட்டணம் 45 ரூபாய்; குழந்தை களுக்கான கட்டணம் 25 ரூபாய்.

பார்க்க வேண்டிய இடங்கள் :

60 ஏக்கர் பரப்பில் பரந்துள்ள கொடைக் கானல் ஏரி. படகுச் சவாரி உண்டு. அனுமதி யுடன் மீன்பிடிக்கலாம்.

மதுரையின் அற்புதத் தோற்றத்தை உய ரத்திலிருந்தே காட்டும் 'கோக்கர்ஸ் வாக்' வான்கோளவியல் நோக்கம்- தலைசிறந்த

வாசஸ்தலங்கள்

ஒன்று - சீஸனின்போது காலை 10 முதல் 12.30 வரையிலும், இரவு 7லிருந்து 9 மணி வரையும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மற்ற மாதங்களில் வெள்ளிக்கிழமை மட்டும் காலை 10 முதல் 12.30 வரை அனுமதிக்கப்படுவர்.


ஃபேரி ஃபால்ஸ் என்ற சுற்றுலா மையம்.

குறிஞ்சி ஆண்டவர் கோயில்.

பசுமைப் பள்ளத்தாக்குப் பகுதியிலிருந்து பார்த்தால் வைகை அணைத்திட்ட இடங்களின் அற்புதத் தோற்றம் காணலாம்.

பில்லர் ராக்ஸ் என்ற பகுதியில் மிக உயர்ந்த பாறைகளையும், குகைகளையும் பார்க்கலாம்.

சற்றுத் தள்ளி அமைந்த பகுதிகள் என்றால் பெர்ஜம் ஏரி (24 கிமீ)யைச் சொல்லலாம்.



✱ கும்பு மலை

நைனிடால்

உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இருபுறங்களிலும் மலைகள் எழும்ப, இடையே பள்ளத்தாக்கில் அமைந்துள்ள அற்புத ஏரிகள்தான் இந்த மலை வாசஸ்தலத்தின் சிறப்பு.

டில்லியிலிருந்து 320 கிமீ தொலைவில் உள்ளது. நைனிடாலுக்கு மிக அருகே உள்ள ரயில் நிலையம் என்று கதோகோடம் (35கிமீ) என்ற ரயில் நிலையத்தைச் சொல்லலாம். கதோகோடம் ஆக்ரா, பரேலி, லக்னோ ஆகிய இடங்களோடு ரயில்பாதையால் இணைந்தது.

தங்குமிட வாடகை - ஒரு நாளைக்கு 250 லிருந்து 1000 வரை,

✱ தால் ஏரி



♦ பனி மூடிய கைலாச மலை



நைனி ஏரி சிறுநீரக வடிவில் உள்ளது. ஆனால் சுத்தமான நீர். ஏரிக்கரையோரம் நடப்பதே தனி அனுபவம். பீம்டால், நெளகுசிய ஏரி என்று ஏகப்பட்ட அற்புதமான நீர்நிலைகள். பிரபல 'ஜிம் கார்பெட் தேசியப் பூங்கா'வும் இங்குதான் அமைந்திருக்கிறது. திரிசூல் மாஸிஃப் என்ற மூன்று சிகரங்கள் கொண்ட மலை, நந்தாதேவி சரணாலயம், பேரிநாக் தேயிலைத் தோட்டங்கள் ஆகியவை கூடுதல் கவர்ச்சிகள்.

மகாபலேஷ்வர்

மேற்கிந்திய மலைத்தொடரில் மிக உயர்ந்த மலைப் பகுதி இதுதான். மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. உயரம் 1372 மீட்டர்கள். சீஸன் - அக்டோபரிலிருந்து மே வரை.

பூனாவிலிருந்து 120 கி.மீ. மிக அருகிலுள்ள ரயில்வே நிலையம் (47கி.மீ) சதாரா என்றாலும் சௌகரியமான ரயில்வே நிலையம் பூனாதான்.

மகாராட்டிர அரசு நடத்தும் கண்டக்டட் டூர்களைப் பற்றிய விவரங்கள்:-

மகாபலேஷ்வர் தர்ஷன் - பகல் 2.15 லிருந்து 7.00 வரை- தினமும் - கட்டணம் 30 ரூபாய்.

பஞ்சாக்னி தர்ஷன் - காலை 10.15 லிருந்து 1.45 வரை - தினமும் - கட்டணம் 30 ரூபாய்

ப்ரதாப்காட் தர்ஷன் - காலை 6.45 லிருந்து 10.45 வரை - தினமும் - கட்டணம் 30 ரூபாய்

சுற்றுலா இடங்கள் - சினாமேன்ஸ் நீர் வீழ்ச்சி, தோபி நீர் வீழ்ச்சி, யானைத்தலை, வேட்டைக்காரன் முனை, லிங்க் மாலா நீர் வீழ்ச்சி, வென்னா ஏரி, கோதுமை ஆராய்ச்சி மையம், கன்னாட் சிகரம்.

வென்னா ஏரியில் படகுச் சவாரியும், மீன் பிடித்தலும் உண்டு. சில குறிப்பிட்ட இடங்களை வாடகை சைக்கிளிலும் சுற்றிப் பார்க்கலாம். ஒரு தினத்துக்கான சைக்கிள் வாடகை 15 ரூபாய்.

ஊட்டி

மலைராணி என்று அழைக்கப்படுவது. 2, 240 மீட்டர் உயரத்தில் நீலகிரி மலைத் தொடரில் அமைந்துள்ளது.

சீஸன் - ஏப்ரலி லிருந்து ஜூன் வரை. செப்டம்பரிலிருந்து அக்டோபர் வரை. அருகிலுள்ள விமான நிலையம் கோயம்புத்தூர் (105 கி.மீ) அருகிலுள்ள ரயில் நிலையம் (குறுகிய ரயில்பாதை) மேட்டுப்பாளையம்.

மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னை, கோவை ஆகிய இடங்களுக்கு ரயில் வசதிகள் உண்டு.

தமிழ்நாடு அரசு சுற்றுலாக் கழகம் கண்டக்டட் டூர் தினமும் நடத்துகிறது. காலை 8.30மணிக்குக் கிளம்பி இரவு எட்டு மணிக்கு முடிவடையும் இந்தப் பயணத்தில் பார்க்கக் கூடிய இடங்கள் இவைதான் - ஏரி, நீலகிரி மலையின் மிக உயர்ந்த சிகரமான தொட்டபெட்டா சிகரம், பொட்டானிகல் தோட்டம், முதுமலை வனவிலங்குகள் சரணாலயம்.

பார்க்கத் தகுந்த வேறு சில இடங்கள் - டைகர் ஹில், வாலி வ்யூ ஏரி, வில்சன் மீன்பண்ணை, தூய ஸ்டீபன் மாதாலயம், மார்லிமுண்ட் ஏரி, கல்ஹட்டி அருவி ஆகியவை.

சீஸனில் குதிரைப் பந்தயங்கள் நடக்கும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 முதல் சுமார் ஒரு மாதத்துக்குக் கோடை விழா நடக்கும். அப்போது மலர்க் கண்காட்சி, நாய்க் கண்காட்சி, காய்கறிக் கண்காட்சி, படகுப் பந்தயம் என்று ஊட்டி அமர்க்களப்படும்.

டார்ஜிலிங்

கஞ்சன்சங்கா, எவரெஸ்ட் ஆகியவற்றுக்கிடையே அமைந்துள்ளது டார்ஜிலிங். பிரம்மாண்டமான திபேத்திய புத்த விகாரங்கள், இமாலயப் பழங்குடிகள் பலரின் குடியிருப்புகள், போன்றவை இந்த இடத்தின் பழங்காலப் பெருமையையும் காட்டிக் காட்டுகின்றன. உயரம் - 2134 மீட்டர்

சீஸன் - ஏப்ரலிலிருந்து ஜூன் பாதி வரை. செப்டம்பரிலிருந்து நவம்பர் வரை.

செல்வது எப்படி?

மிக அருகிலுள்ள விமான நிலையமே 96கி.மீ (பக்தோக்ரா விமான நிலையம்). கல்கத்தா, டெல்லி, பாட்னா, கௌஹாத்தி

ஆகிய இடங்களிலிருந்து இங்கு விமானப் போக்குவரத்து உண்டு.

கல்கத்தாவிலிருந்து 651 கிமீ தொலைவிலுள்ளது டார்ஜிலிங். கல்கத்தாவிலிருந்து சிலிகுரி என்ற இடத்துக்கு தினமும் பஸ் செல்கிறது. அங்கிருந்து அருகே உள்ள புதிய ஜல்பைகுரி ரயில்வே நிலையம்தான் டார்ஜிலிங் மலைத் தொடரின் அடிவாரம். குறுகலான ரயில்பாதையில் 7 மணி நேரத்தில் டார்ஜிலிங்கை அடையலாம்.


ஜல்பைகுரி என்ற மலையடிவார ரயில் நிலையத்திலிருந்து வித்தியாசமான சிறு ரயிலில் குறுகலான ரயில்பாதையில் சுமார் ஏழு மணி நேரம் பயணம் செய்தால் டார்ஜிலிங்கை அடையலாம். பயணத்தின்போது கண்ணில் படும் காட்சிகள் கல்பத்தில் நினைவை விட்டு அகலாது.

பலவிதமான எக்கச்சக்கமான ஹோட்டல்கள். சீஸனில்லாதபோது வெறும் 40 ரூபாய் என்றிருக்கும் தங்குமிட வாடகை சீஸனின்போது ஐந்து பங்காவது ஆகிவிடும்.

40 ரூபாய் செலுத்தினால் மேற்கு வங்க அரசு ஏற்பாடு செய்யும் கண்டக்டட் டூரில் பங்கு பெறலாம். ஆனால் தினமும் குறைந்தது இவ்வளவு நபராவது சேர வேண்டுமென்கிறார்கள். இல்லையென்றால் மினி வேன்களில் பயணம் செய்யலாம்.

பார்க்க வேண்டிய இடங்கள் - டைகர் ஹில், கூம் புத்த விகாரம், இமாலய மலையேறும் நிலையம், கயிற்றுரயில் பயணம் (15 ரூபாய்க்கு எட்டு கிலோ மீட்டர் அந்தரங்கத்தில் தொங்கும் ரயிலில் பயணம் செய்யலாம்), லேபாங்க் குதிரைப் பந்தய மைதானம், தேயிலை எஸ்டேட், செஞ்சால் ஏரி, திர்தம் கோயில்.

● ஊட்டியின் புகழ்பெற்ற தோட்டம்



ஏற்காடு

சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் குன்றுகளில் அமைந்துள்ளது. எந்த மாதத்திலும் இங்கு சுற்றுலா செல்லலாம். ஏனென்றால் இந்தச் சிறு அமைதியான மலைவாசஸ்தலத்தில் கோடையின்போது புழுங்குவதும் இல்லை. குளிர்காலத்தின் போது நடுக்கி எடுப்பதும் இல்லை.

உயரம் - 1515 மீட்டர்கள்.

திருச்சி(163கிமீ), கோவை (190 கிமீ) போன்ற இடங்களிலிருந்து விமானத்தில் வரலாம். சேலம் ரயில்வே நிலையத்திலிருந்து 35 கிமீ தூரம்.

பார்க்க வேண்டிய இடங்கள் - ஏற்காடு ஏரி- அமைதியான இந்த ஏரியில் பயணம் செய்யும்போது இரண்டு பக்கங்களிலும் பசுமைத் தோட்டங்கள் கண்ணுக்கு விருந்து. அண்ணா பூங்கா, லேடீஸ் சீட் (அற்புதக் தோற்றம் தரும் மலைப்பகுதி), கிள்ளியூர் அருவி, கோட்டை, கரடி குகை, சேர்வராயன் கோயில்.

லோனாவாலா

பம்பாய் மற்றும் பூனாவிலிருந்து சுலபமாக அடையக் கூடிய இந்த மலைவாசஸ்தலம் உடல் ஆரோக்கியத்துக்கும் மிகவும் ஏற்றது என்ற கருத்து உண்டு. 1817ல் எல்பின்ஸ்டன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இடத்தில் இப்போது பல உடல் ஆரோக்கிய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 625 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த மலைவாசஸ்தலத்தின் சீஸன் அக்டோபரிலிருந்து மே வரை.

பூனாவிலிருந்து 67 கிமீ. பம்பாயிலிருந்து 80 கி. மீ.


லோனாவாலாவில் ரிக்ஷாக்களும், ப்ரைவேட் டாக்ஸிகளும் கணிசமாக உண்டு.

பார்க்க வேண்டிய இடங்கள்- துங்கர்லி ஏரி, லோனாவாலா ஏரி, புஷி ஏரி, வால்வன் அணை, சூரிய அஸ்தமன முனை, யோகா ஆஸ்ரமம், பாஜா புத்தக் குகைகள்.

லோனாவாலாவின் மிக அருகே உள்ள மற்ற இரு மலைவாசஸ்தலங்கள் கண்ட்லா மற்றும் கர்லா.

- அருண் சரண்யா

ங்கூ...ங்கூ...கா...கா... என்னும் மழலை விரைவிலேயே அ ஆ இ என்று கூறிடும் வழி.



உங்கள் சின்னஞ்சிறுசு, நாட்கள் போனதே தெரியாது, உரக்க கூச்சலிட்டுக் குப்புறத்துக்கொண்ட குழந்தை, கலகலவென சிரித்து தத்தித்தத்தி நடக்கத் துவங்கும். சீக்கிரமே, அவன் உங்களிடம் அது என்ன... இது என்ன என்று ஆயிரம் கேட்கத் துவங்குவான். ஆகாயம் ஏன் நீலமாயிருக்கிறது ? வான வில் எப்படி வருது? அந்த மாமாவுக்கு மீசை எங்கிருந்து வந்தது ?

அவனுடைய அறிவுப் பசிக்கு அளியுங்கள் அன்றாடம் ஒரு முட்டை. ஏனெனில் முட்டையில் உன்னத தரமுள்ள புரதமும் ஃபோஸ்பரஸும் அடங்கியுள்ளன: சுறுசுறுப்பான மூளை வளர்ச்சிக்குத் தேவையானவை இவைகள்தான்.

அவனுக்கு இன்னும் ஏராளமானவற்றை அளிக்கவல்லது முட்டை. ஆரோக்கியமான



முட்டை சாட்: இவ்வகையான ... மற்றும் 30-க்கும் மேலான முட்டை சமையல் குறிப்புகள் அடங்கிய சிறு புத்தகத்திற்கு எழுதவும் NECC அஞ்சல் பெட்டி எண் 833, புனே-411 004.

சருமத்திற்கும் நல்ல கண் பார்வைக்கும் வைட்டமின் 'A' செறிந்துள்ளது. நல்ல ஜீரண சக்தியையும் நிலையான நரம்புகளையும் பெற்றிட உதவும் வைட்டமின் 'B' சத்துகளின் அனைத்து வகைகளும் உள்ளன. வலுவான எலும்புகளைப் பெற வைட்டமின் 'D' அடங்கியுள்ளது. அதோடுமட்டுமா, நல்ல ஆரோக்கியமான இரத்தத்திற்கு அத்தியாவசியமான இரும்புச்சத்து மிகுந்துள்ளது.

ஆகவே உடைத்திடுவீர் அன்றாடம் தவறாமல் ஒரு முட்டை.

அதனால் உருவாகும் குழந்தையின் திண்மையான உடல் வளர்ச்சி.

நித்தம் ஒரு முட்டை.

NECC

நேஷனல் எக்
கோ-ஆர்டினேஷன் கமிட்டி

Enterprise/NECC/177/B/Tm

பரவசமூட்டும் ருசியுடன்



• சினிமா நட்சத்திரம் கௌதமி

THANGAM PHILIP'S

MELAM ©

மேளம் மசாலாக்கள்

• இறைச்சி • கோழி • மீன் • கரம் மசாலா • வறுத்த இறைச்சி மற்றும் மாட்டிறைச்சி • தண்டூரி • முட்டை • விண்டாலூ • பிரியாணி • சாம்பார் • மிளகுத் தண்ணி சூப் • சன்னா • ஊறுகாய் கலவை • ரசம் • காய்கறி மசாலா • சட்னி பொடி • மெட்ராஸ் கறிப் பொடி மற்றும் தனி மிளகாய், மிளகு, தனியா, சுக்கு, சீரகம், மஞ்சள் பொடிகள்.

சூப்பர் ஸ்டாக்கிஸ்டுகள் :

சென்னை : ஸ்ரீ மஹாவீர் ஏஜென்ஸீஸ், போன் : 552046
சேலம் : ஜனதா ஏஜென்ஸீஸ், போன் : 62136
புதுவை : ஜனதா ஏஜென்ஸீஸ்.
கோவை : மாத்யூ அண்ட் கோ, போன் : 41665

எம். வி. ஜே. ஃபுட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், எச். பி. எண்: 7,
பனம்பிள்ளி நகர், கொச்சின் - 682 016. ஃபேக்ஸ் (91) 484 - 310072

தொடர்கதை

2

பரிய காயத்ரி

ஸ்ரீவேணுகோபாலன்

காலம் சென்ற டி.ஸி. 10 விமானம் 11.41.04 வரை ரேடியோ தொடர்பில் இருந்தது.

கண்ட்ரோல் டவரில் உள்ளவர்கள் இரண்டாவது ராடார் திரையில் டி.ஸி.10ன் அறிகுறிகள் மறைவதைப் பார்த்தார்கள்.

முதல் ராடாரில் மெல்லிதான வெள்ளி போன்ற வெளிச்சம் சிறிது நேரம் தங்கி யிருந்துவிட்டு, மறைந்தது! டி.ஸி.10 விமானத்தில் துண்டிக்கப்பட்ட பகுதி அது என்று பின்னர் தெரியவந்தது.

விமானத்திற்கு ஏதோ நடந்துவிட்டது என்பதை உணர்ந்தார்கள்.

ஆபத்து அலாரம் ஒலிக்கப்பட்டது. பல துறைகளுக்கும் செய்திகள் பறந்தன.

தேடும் விமானங்கள் இரவில் புறப்பட்டுச் சென்றன.

காலை ஒன்பது மணிக்குத்தான் ஜவ்வாது மலையின் கிராமத்திலிருந்து முதல் செய்தி வந்தது. கிராமத்தார்கள்தான் இறந்த விமானத்தை முதலில் கண்டுபிடித்தார்கள்.

பிறகு கார், வேன், லாரி, ஆம்புலன்ஸ் இத்யாதிகளும் ஒரு ஹெலிகாப்டரும் புறப்பட்டுச் சென்றன.

பதினோரு மணிக்கு விமானம் சிதறிய இடத்தை அடைந்தார்கள்.

யாரும் உயிர் பிழைக்கவில்லை!

விசாரணை கமிஷன் உடனே கூட்டப்பட்டது. அமெரிக்காவிலிருந்து டி.ஸி. 10 வல்லுநர்கள் வந்தார்கள்.

சம்பவ நிகழ்ச்சிகளை அந்தக் கமிட்டி மூன்று மாதம் ஆராய்ந்தது! கார்கோ கதவில் கோளாறைக் கண்டுபிடித்தது. தனது தீர்மான முடிவை கமிட்டி வெளியிட்டது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, புவியியல் நிபுணர் குழு ஒன்று ஜவ்வாது மலைக்குச் சென்றது.

அந்தப் பிரதேசத்திலுள்ள கனிமங்களைக் கண்டு பிடிப்பதற்காகப் போயிருந்தார்கள்.

வனப்பகுதியில் அவர்கள் அலையும் போது, அதிசயமாய் ஒரு பாறையில் ஒரு இடுக்கில் பெரிய பை ஒன்றைப் பார்த்தார்கள்.

அது ஒரு பாறையில் தொத்திக்கொண்டு இடுங்கி இருந்தது!

ஒரு சிப்பந்தி அந்த பத்தடிப் பாறையில் ஏறி பையை இழுத்தார். வெளியே வந்தது. அதிகாரிகளும் மற்றவர்களும் அதைப் பார்த்தார்கள்.

''இது ஒரு தபால் பை!'' என்றார் ஒருவர். பை மீது மட்கிய எழுத்துக்களைக் கண்டு பிடித்து விட்டார்கள்.

தபால் பை அங்கே எப்படி வந்தது?

அதே சிப்பந்திகள் முந்திய தினங்களில் அந்தப் பகுதியில் ஒரு பழைய பேனா, மட்கிய சோப்புகள் பெட்டி, தலை சவுரி, ஒரு கிழிந்த புத்தகம் இவற்றைக் கண்டு பிடித்தார்கள். இரண்டு கனமான தகடுகளும் கிடைத்தன.

கன்னிக் காடுகள் இவை! இந்த அரிதான இடத்திற்கு யாரும் வருவதற்கு சந்தர்ப்பம் கிடையாது. அந்தப் புவியியல் நிபுணர்களே மிகவும் கஷ்டப்பட்டு அங்கே வந்திருந்தார்கள். இதில் எப்படி ஒரு பெண்ணுடைய சவுரி கிடைக்க முடியும்? எப்படி இங்கே ஒரு பெண் வர முடியும்?

தபால் பையும் அவர்கள் கண்டுபிடிப்பில் சேரவே ஓர் அதிகாரிக்கு ஞானோதயம் வந்தது.

''எட்டு வருஷங்களுக்கு முன்னாலே இங்கே விமான விபத்து நடந்தது. அதிலிருந்து விழுந்த பொருள்கள்தான் இவை!'' என்றார்.

தபால் பையை அவர்கள் பெங்களூருக்குத் திரும்பும்போது, எடுத்துச் சென்று போஸ்டல் அதிகாரியிடம் ஒப்படைத்தார்கள்.

தபால் அதிகாரிகள் ஆவலோடு அதைத் திறந்து பார்த்ததில் உள்ளே கடிதங்கள் பாதிக்கப்படாமல் இருந்தன.

இவற்றை அந்தந்த விலாசத்தாருக்கு அனுப்பி விடுவது என்று முடிவு செய்தார்கள்.

''தாமதித்த டெலிவரி' என்று ஒரு முத்திரை குத்தி அந்தந்த ஊர்களுக்கு அவைகளை அனுப்பினார்கள்.

''ஆபீசுக்கு சீக்கிரம் போகணும்'' என்று பிரசாத் சொன்ன நொடியில்,

வசந்தா மேலே பேசவில்லை.

அவசரமாக சமையலில் நுழைந்தாள்.

ஒரு மூச்சுடன் காரியத்தில் இறங்க,

சில நிமிடங்களில் அடுப்பிலிருந்து வாசனை நெடிகள் கழிந்து வந்தன.

'இன்னும் ரெண்டு நிமிஷம், ஒரு விருந்தே ரெடி' என்று நினைக்கும் சமயம்... வாசல் கேட் திறக்கும் சப்தமும், பீம்பீம் என்று பியட் வெளியே நழுவும் சப்தமும் கேட்டன.



வசந்தாவிடம் ஒரு சந்தேகம் எழுந்தது.

தாளித்த கரண்டியுடன் ஹாலுக்கு வந்து, ''பிரசாத்! பிரசாத்!...'' ஆரோகணத்தில் அழைத்தாள்.

பதில் இல்லை.

அதற்கு மாற்றாக பீம்பீம் என்று கார் மெல்லிதாக இழையும் சப்தம் தூரத்தில் கேட்டது.

திடுக்கிட்டு நின்றாள். பார்வை அப்படியே ஊன்றியது. சுற்றுப்புறம் மங்கலாகியது.

பின்னர் மெதுவாகத் திரும்பினாள்.

சோபாவில் உடம்பை இறக்க, கையிலிருந்த கரண்டி கீழே நெடுஞ்சாணாக விழுந்தது.

பிரசாத் ஏன் இப்படிச் செய்கிறார்?

'சபாபதி' என்ற பெயரைச் சொன்னால் மாறிவிடுகிறாரே! அவருக்கு ஏன் அந்தப் பரபரப்பு!

ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். இல்லையா? அதற்குக்கூட நான் உரிமை இல்லாதவள் ஆகிவிட்டேனா! சபாபதியைக் கண்டால் இவருக்கு ஏன் பயம்?

அவன் பெயரை அறிவித்து விட்டால் போதும்.

முகம் அப்படியே கறுத்து விடுகிறதே!

அப்படி என்ன நடந்து விட்டது இவருக்கு!

சபாபதியின் விவகாரத்தில் இவருக்கு ஏதாவது பங்கு உண்டோ?

நெஞ்சில் ஒரு சின்ன சந்தேகம் முளைவிட்டு வலித்தது.அந்தப் பழைய கோர்ட்டுக் காட்சி மனசில் படம் போட்டது.



ராமகிருஷ்ணா ஸ்வீட்ஸ்


நெ. 31, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை - 600 007. போன் : 6426507.

இனிப்பு வகைகள் : பாதாம் அல்வா, கோதுமை அல்வா, ஜாங்கிரி, ரஸ மலாய், ரஸகுல்லா, மங்களூர் போளி, சோன்பப்டி.

கார வகைகள் : மிக்சர், முந்திரி பக்கோடா, சீடை, மிளகு வடை, தட்டை, தேன்குழல், வெஜிடபிள் சமோசா, கைமுறுக்கு, அதிரசம்.

மேற்கண்ட இனிப்பு, கார வகைகளை மிகவும் நல்ல முறையில் தரமான பொருட்களைக் கொண்டு ருசியுடன் தயாரித்து வழங்குகிறோம்.

ராமகிருஷ்ணா குரூப் ஆப் ஸ்வீட்ஸ்,



புரசைவாக்கம்,
கிளைகள் : 29, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி.
7, சர்தார் பட்டேல் ரோடு, அடையாறு.
142, ஆற்காடு சாலை, வடபழனி (100 அடி சாலை அருகில்).
AD, 3/1 IIவது அவென்யூ (புளூஸ்டார் பஸ் ஸ்டாப் அருகில்)
அண்ணாநகர், சென்னை - 600 040

தேவீர் விருந்து, மற்றும் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் சப்ளை செய்யப்படும்.

மேலும் கேஷ்யூநட் கத்லி, மோதிபாக், சம்சம், செம்பகலி, மேங்கோ, பெங்காலி சுவீட்ஸ், ஸ்பெஷல் மில்க் சுவீட்ஸ், சோன் அல்வா, அனைத்து ஸ்வீட்களும் நல்ல முறையில் செய்து தரப்படும்.

ஸ்ரீ துர்க்கை அம்மன் துணை

தனலஷ்மி  சாரிஸ்

தேவேந்திரா கங்குடி தயாரிப்பாளர்

மூன்றாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டுச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை கங்குடி காட்டன் சேலைகளுக்கு 10% சதவிதமும் மற்ற அனைத்து ரகப் புடைவைகளுக்கு 5% சதவிதம் சிறப்புத் தள்ளுபடி விற்பனை. 1.3.94 முதல் 5.3.94 வரை விற்பனை நடைபெறுகிறது. எங்கள் கடையின் சிறப்பு அம்சம் கங்குடி சேலைகள் நாங்களே தயாரிப்பதால் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரை விலையிலும் விற்பனை செய்கிறோம்.

எங்கள் கடை விலாசம் :
நெ.7, டாக்டர் நாயர் ரோடு,
(வாணி மஹால் அருகில்) கங்கா மருத்துவமனை எதிரில்)
தி. நகர், சென்னை – 17. போன் : 8281327

15 ஏக்கர் நிலத்தில் பரந்து விரிந்துள்ளது இராமேஸ்வரத்தில் உள்ள இராம நாதஸ்வாமி கோவில். இங்குள்ள லிங்கம் பற்றித் தனியான வரலாறு உண்டு. ஸ்ரீராமன் தான் பூஜை செய்ய வென 'கைலாசத்திலிருந்து' லிங்கம் கொண்டு வரச் சொல்ல - உடனே புறப்பட்டுச் சென்ற அனுமன் பூஜை செய்யவெனக் குறிப்பிட்ட வேளைக்குள் திரும்பி வராத காரணத்தால் சீதாப் பிராட்டி மணலினால் செய்து கொடுத்த லிங்கத்தையே வைத்து இராவணனைக் கொன்ற பாவம் தீர பூஜை செய்தாராம் இராமன்.



கூண்டில் சபாபதி வெறித்த கோலத்தில் நின்றான். கூண்டைக் சரியாக அவனால் பற்றிக் கொள்ள முடியவில்லை. கை பதறியது. முகத்தில் அழுகை உறைந்திருந்தது.

''நான் கொலை செய்யலை சார்! நான் செய்யலை என்னை விட்டுடுங்க. நான் நிரபராதி! சத்தியமாகச் சொல்றேன்! நான் நிரபராதி!'' என்று அவன் அழுதது நினைவுக்கு வந்தது.

அவன் உருகுவதையும், பதறுவதையும், ''சார், சார்! என்று கெஞ்சுவதையும் பார்த்தால் அவன் சொல்வது உண்மையோ! என்று நினைக்க வைத்தது.

கூண்டில் டமார் டமார் என்று தலையை இடித்துக் கொண்டான். பக்கத்தில் இருந்த போலிஸ் அவனைப் பிடித்து நிறுத்த வேண்டி வந்தது.

கோர்ட் அப்போது நிசப்தமாகியது. எல்லோரும் ஏதோ விதத்தில் பாதிக்கப் பட்டவர்கள் போலத் தோன்றினார்கள்.

சற்றுத் தள்ளி சபாபதியின் மனைவி கௌரி, வெறிப்பது போல் ஒரு பார்வை பார்த்திருந்தாள். அவளுக்கு இருபத்தாறு வயது இருக்கும்!

பிரசாத் அந்த இருவர் மீதும் பார்வையைத் திருப்பவில்லை. வெறும் காற்றிலே பேசுவது போல் பேசினான்.

''சொல்லுங்க!சொல்லுங்க!''என்றார் அரசாங்க வக்கீல் சற்று அதட்டலாக.

''சபாபதிதாங்க! போறதைப் பார்த்தேங்க!''என்றான் பிரசாத் அழுத்தமாக. சபையில் துளி சப்தம் இல்லை.

ஒரு 'ஸ்டில்' படம் போல் அந்தக் காட்சி!

வசந்தா கூட கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

''முக்கிய சாட்சி பிராசாத் தான். அது போதும்'' என்று சொன்னார் நீதிபதி தமது முடிவுகளை உறுதிப்படுத்திக் கொண்டே!

''ஆயுள் தண்டனை!'' என்றார்.

இடி விழுந்தது போல் சபாபதி விழுந்தான்.

அந்தத் தீர்ப்பு, சபாபதியை மட்டும் அல்ல, பிரசாத்தையும் பாதித்திருக்க வேண்டும். அன்றிலிருந்துதான் அந்தத் திடீர் பிரமைகள் அவளிடம் தோன்ற ஆரம்பித்தன.

பொருத்தமில்லாத திடீர் நடவடிக்கைகளும் ஆரம்பித்தன.

எத்தனை முறை அவைகளைப் பார்த்து வசந்தா அலுத்தாகி விட்டது.

கனத்த மூச்சு ஒன்று அவளிடமிருந்து மெள்ள வழுவியது.

போன் மணி அடித்தது.

சோபாவில் நகர்ந்து ரிஸீவரை எடுத்தாள்.

''மேடம்! நான் மகாலட்சுமி பேசறேன்!''என்றது குரல்! மகாலெட்சுமி அவளிடம் ஜுனியராக வேலை பார்த்தாள்.

''என்ன மகா?''

''பத்து மணிக்கு வந்துடுங்க! கேஸ் இருக்கு!''

''வரேன்!''

போனை வைத்தாள். எழுந்திருக்க எண்ணினாள். ஆனால் முடியவில்லை. எதுவும் அவள் செய்ய விரும்பவில்லை. எதுவும் நினைக்க விரும்பவில்லை. ஒரு ஜடம் போல இருக்க விரும்பினாள்.

வீடு சப்தம் இழந்து வெறும் கூடு போல் தென்பட்டது.

வெளிப்புறமும், வெளி உலகமும் ஏதோ சம்பந்தமில்லாதது போல் தோன்றின.

''மம்பி'' என்று மிருதுவான குரல் ஒன்று அவளை உலுப்பியது. திரும்பினாள். பெண் லதா பள்ளி யூனிபாரத்தோடு நின் றாள்.

சட்டென்று அவளது கையை இழுத்து, மடியில் அமர்த்தினாள். ''நீயே குளிச்சு, நீயே சாப்பிட்டுட்டியா?'' என்று தன்னை மீறும் துக்க உணர்வுடன் கேட்டாள்.

கண்களில் நீர் வந்தது.

''பிரட் ஜாம் சாப்பிட்டுட்டு, மத்தியா னத்துக்கும் சாதமும் தயிரும் எடுத்துக் கிட்டேன்''.

அவள் தலைமீது வசந்தா வாஞ்சையாக ஒரு முத்தம் வைத்தாள்.

லதா, -அவள் ஒரு தன் நிறைவுக்காரி, -தனக்குத் தானே எல்லாம் செய்து கொள் வாள். இந்த வீட்டில் அவள் ஒரு யோகி- யாருடனும் சம்பந்தப் படாதவள். ஆச்சரிய மாக அப்படி ஒரு தோற்றம் கொடுப் பாள்.

வாசலை நோக்கி அவள் போக, ஸ்கூல் வேனும் அங்கு வந்து நிற்க, அவள் ஒரு தென்றல் துணுக்கு போல் மறைந்து போனாள்.

என்ன சமர்த்துப் பெண், அம்மாவின் மனநிலை தெரிந்திருக்கிறதே!.... வசந்தா வின் கண்கள் மீண்டும் மங்கின.

மீண்டும் பிரசாந்தைப் பற்றிய கனமான எண்ணங்கள் வந்து மனதில் குவியும் போது.

மணி அடித்தது.

''ஹலோ''

முதலில் போனில் நிசப்தம்! பிறகு பிரசாந்தின் குரல் மெதுவாக உருவாகி யது.

''வசந்த்! நான் தான்...'' குரல் கரகரத்து வந்தது.

''ஓ! புரியுது!''

''ஸாரிவசந்தா!'' மீண்டும் பிரசாந் குரல் குழைவாகக் கேட்டது.

ஒரு ஆவேசமானக் கோபம் என்ன வெப்பமாக வந்தது அவளிடம்!

''ஓ!' என்று மட்டும் மீண்டும் சொன் னாள்.

அதில் வெப்பம் கொதித்தது.

'' உனக்குக் கோபம்னு நினைக் கிறேன்.''

''நான் கோபப்பட்டு என்ன ஆகப் போகிறது? இந்த சமூகத்திலே பிறந்துள்ள சராசரி பெண்பிறப்புதானே நான்!''

''ஏன் இப்படிப் பேசறே?''

''இதுக்கு மேலே சொல்லிக் கொள் றதுக்கு எனக்கு என்ன உரிமை இருக்கு!''

தன் குரலில் அழுகைப் பிசிறு தட்டி விடாமல் சிரமப்பட்டுக் கொண்டாள்.

''உனக்கு உரிமை இருக்கு வசந்த்!''

''இருக்குன்னு நினைக்கறீங்களே! அதுவே பெரிசு!''

''உண்மையிலே உரிமை இல்லையா?''


''இருந்திருந்தா ஒரு வார்த்தை சொல் லிக்காம போயிருவீங்களா? நான் கஷ்டப் பட்டு சமையல் பண்ணி வச்சிருக்கிறேன்!''

''அதுக்குக் கோபப்படுவேன்னு தெரி யும்! நான், சாப்பிட்டிருந்தா அரைமணி இழுத்திருக்கும்! 'சாப்பாடு வேண்டாம். கிளம்பறேன்னு' உன்கிட்டே சொல்லிட்டுப் போறதுக்குப் பயம்.''


''பயம் என்கிட்டேயா?... அல்லது...''

''உன்கிட்டேதான்! வேறே யார் கிட்டே கொள்ள முடியும்?''

''எனக்கு என்ன தெரியும்! யார் கிட்டே கொண்டிருக்கீங்களோ! அப்படி விழுந்த டிக்க ஓடினீங்க!''



52 ஸ்கொயர் கிலோமீட்டர் பரந்து விரிந்துள்ள தீவாகிய இராமேஸ்வரம் பாம்பன் பாலம் மூலம் நம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே உள்ள தூரம் 24 கி. மீ.தான். இராவணேஸ்வரனைக் கொன்ற பாவம் தீர - இராமபிரான் இங்கு வந்து மூழ்கி - சிவபெருமானைப் பூஜை செய்தாராம். இந்தியாவிலுள்ள முக்கியமான புண்ணியத் தலங்களுள் ஒன்று. இங்குள்ள 'அக்னி தீர்த்தத்தில்' மூழ்கினால் மட்டுமே 'புனித யாத்திரை' முழுமையாகும். இங்குள்ளதைப் போன்ற அமைதியான கடல் நம் நாட்டில் வேறு எங்கும் இல்லை.



இதோ அறிமுகமாகின்றது சகேலி. பக்க விளைவுகளிலிருந்து முழு பாதுகாப்பு தரும், முதல் நான்ஸ்டீராய்டல் கருத்தடை மாத்திரை. வாரம் ஒரு முறை பயன்படுத்தும் எளிய முறை. குமட்டல், தலைவலி, எடை கூடுதல் ஆகிய கவலைகளிலிருந்து உங்களுக்கு விடுதலை.

ஏன் பக்க விளைவுகளை உண்டாக்குவதில்லை?

சகேலி சென்ட்குரோமன் மருந்தினால் தயாரிக்கப்பட்டுள்ளமையால், பக்க விளைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லை. கடந்த 22 ஆண்டு காலமாக ஆராய்ச்சியில் ஈடுபட்ட லக்னோவில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்தின் தயாரிப்பே சகேலி.

சென்ட்குரோமன் நான்-ஸ்டீராய்டல் என்பதால் உடலை பாதிப்பதோ அல்லது எந்தவித மாற்றத்தை உண்டாக்குவதோ இல்லை. இது சினைப்படுத்தப்பட்ட பெண் கருவானது, கருப்பையில் தங்கி கருத்தரிப்பு நடைபெறுவதை தடுக்கின்றது. சகேலி, உங்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்புகளையும், பக்க விளைவுகள் இல்லாமலேயே தருகின்றது.

கவலை இல்லாத இன்பம்

சென்ட்குரோமன்
சகேலி
கருத்தடை மாத்திரை
வாரம் ஒரு முறை

வாரம் ஒரு முறை மட்டும்?

முதல் மூன்று மாதங்களுக்கு சகேலி வாரம் இருமுறை சாப்பிட வேண்டும். மாத்திரை சாப்பிட ஆரம்பித்த நான்காவது மாதத்திலிருந்து, சகேலியை வாரம் ஒரு முறை உண்டால் போதுமானதாகும். மருந்து உண்ணும் முறை குறிப்புகளை படித்து, இதனை எளிதாக பின்பற்றலாம்.

இனி குழந்தை வேண்டும் என நீங்கள் முடிவு செய்யும்போது, சகேலி பயன்படுத்துவதை நிறுத்திவிடவும். இதனால் நீங்கள் எப்போது விரும்புகின்றீர்களோ, அப்போது கர்ப்பம் தரித்துக் கொள்ளலாம். இதனால் நீங்கள் விரும்பும் வகையில், இடைவெளி விட்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பாக நீங்கள் இன்னும் அதிகம் அறிய விரும்பினால், அருகில் உள்ள மருத்துவரிடம் தொடர்பு கொள்ளவும்.

மேலும் விபரங்களுக்கு எழுதவும்:
மெடிக்கல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
பூஜாபுரம், திருவனந்தபுரம்-695012.

Mudra:HLL:489 TM

ANNUAL CLEARANCE SALE

திருமணம் மற்றும் பண்டிகைகளுக்கு
தரமான பட்டு, தரமான ஜரிகையுடன்
எங்கள் தறியில் தயாரிக்கப்பட்ட
காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள்

தறிவிலைக்கே வாங்க

மற்றும் கோராசில்க் (Kora Silk), பிரிண்டட் சில்க்
மைசூர் சில்க், பட்டுப்பாவாடைகள் வாங்க

Srinivas Silks

(House of Kanchipuram Silk Sarees)
'Luz Bazaar' No. 4 Ramakrishna Mutt Road, Mylapore, Madras - 600 004. Ph: 77566

எங்களுடைய பிரத்தியேக காட்டன் ஷோருமுக்கும் விஜயம் செய்யுங்கள்

VIA MEDIA / 2 / 94

எண்ணெய்
இல்லா சமையல்
ராஜாளி
நான்-ஸ்டிக்குக்வேர்

RAJALI
NON-STICK COOK WARE



தோசை செய்யுங்க
ஆம்லெட்டும்
செய்யுங்க
எண்ணெயே
இல்லாமல்
எளிதில்
சுத்தமாகும்
எரிபொருள்
சிக்கனம்
அதுதான்
ராஜாளி !

இல்லத்தரசியின்
இனிய துணை.

எல்லா பிரபல
பாத்திர கடைகளிலும்
கிடைக்கும்

RAJALI HOME EQUIPMENTS
50-A, Apparswamy Koil Street,
Tiruvottiyur, Madras-600 019.



இராமேஸ்வரம் தீவில் மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ளது 'ராம்ஜரோக்கா' கோவில். இந்த இடம் 'கந்தமதன பர்வதம்' எனப்படும். ஸ்ரீராமன் இலங்கை செல்லும் முன்பும், சென்று மீண்டபோதும் இங்கு வந்து தங்கி ஓய்வெடுத்துச் சென்றதனால் இப்பெயர் (ராம்ஜரோக்கா) ஏற்பட்டது. அனுமன் ஒரே மூச்சில் இங்கிருந்துதான் கடலைத் தாண்டி இலங்கை சென்றாராம். தீப்பற்ற வைக்கப்பட்ட வாலினால் இலங்கையையே பற்ற வைத்த அனுமன் திரும்பி வந்து தன் வாலை அணைத்து அமைதியடைந்ததும் இந்த இடத்தில்தான்! இந்தக் கோவிலில் உள்ள இராம பிரானின் பாதச் சுவடுகள் பூக்களாலும், செந்தூரத்தாலும் பூஜை செய்யப்படுகிறது.

''சத்தியமா, யார் கிட்டேயும் பயம் கிடையாது!''

''பின்னே ஏன் அவசரம்?''

''ஆபீஸ்லே நேத்திக்கே ஒரு க்ரைஸிஸ்! காலையில் நான் இங்கே வந்தாகணும்!

''அதை முன்னாடியே ஒழுங்கா சொல்லிட்டுப் போயிருக்கலாம் இல்லே?''

''சொல்லி இருப்பேன்! இதுவரை உன்கிட்டம் சொன்னது இல்லை! இதைப் போல நீயும் கேட்டதும் இல்லை!''

''கேட்காவிட்டாலும் சொல்ல வேண்டாமோ?''

'' சரி, அதை நான் புரிஞ்சுக்கிடலை! இனிமே சொல்றேன்! இப்போ ஒண்ணு சொல்லத்தான் கூப்பிட்டேன்!''

''என்ன?''

''இப்போ நான் சேலம் புறப்பட்டுட்டு இருக்கேன்?''

''சேலமா! பிஸினஸ்ஸா?... அல்லது''

''பிஸினஸ் தான்!''

''உங்க கம்பெனிக்கு சேலத்திலே ஒரு பிராஞ்ச் இருக்குதா?''

''இருக்கு!''

''எனக்கு இதுவரைக்கும் தெரியாதே!''

''இருக்கு உன்கிட்டே சொல்றதுக்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்காது!''

'சந்தர்ப்பம் நிறைய இருந்திருக்கு. நீங்க தான் சொன்னதில்லை. பொதுவாச் சொல்றேன். பிரசாத்! மத்த மனைவியர்கள் தங்கள் தங்கள் கணவன் மாரோட பிஸினஸ் விஷயம் எல்லாம் தெரிஞ்சுதான் இருக்காங்க! எனக்குத்தான் தெரியலை!''

''அந்தக் கணவன்கள் வேண்டாததெல்லாம் சொல்வாங்க! தற்பெருமை அடிக்கக் கிறதுக்காக!''

''பிரசாத்! ஒரு விஷயம் தெரியுமா? உங்களை நான் முழுசா தெரிஞ்சுக்கலை! எனக்குத் தெரிஞ்சதெல்லாம், இப்படி நீங்க வீட்டிலே ஒரு குஷியாப் பேசி ஒரு இமேஜ் காண்பிக்கறீங்களே அது ஒண்ணுதான் தெரியும்''

சிரித்தான் பிரசாத். ''அதுதான் என் குணம்! என் ஸ்பெஷாலிடி!''

''சிரிக்காதீங்க! நான் ஸீரியஸா பேசறேன்! நீங்க ஆபீஸ்லே என்ன செய்யறீங்கன்னு கூட எனக்கு எதுவும் தெரியாது. பிரசாத்...நான்...''

''ஒரு நிமிஷம்... வசந்தா... இதெல்லாம் ஒரு அற்ப...''

''நோ...நோ...! நிச்சயம் அற்பம் இல்லை. நீங்க ஆர்.எம்.இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்லே வைஸ்பிரசிடெண்ட் ஆக இருக்கீங்கன்னு தெரியும். அதுக்கு பல பிராஞ்சுக்கள் இருக்கும்ன்னும் தெரியும். உங்களுக்கு மாதம் பத்தாயிரம் சம்பளம்! வீடு, கார், போன் எல்லாம் கம்பெனி செலவு என்றெல்லாம் தெரியும். உங்க போனஸ்தான் எவ்வளவுன்னு தெரியாது.''

''அது எனக்கே தெரியாது! ஒரு வருஷம் கம்பெனிக்கு நல்ல வருமானம் இருக்கும். அப்போ அதிக போனஸ் கிடைக்கும்! ஒரு வருடம் மோசமாய்ப் போயிடும். போனஸ் கம்மி ஆகிடும். ரொம்ப சிம்பிள்! இந்த விஷயம் புரிஞ்சுக்க''

''பிரசாத்! நீங்க கேலி பண்றீங்க!''

''நோ,நோ கேலி! உனக்குத் தெரிஞ்சிருக்கணும்ன்னா ஆயிரம் விஷயம் சொல்றேன். உனக்குக் கவலையே வேண்டாம். ஆனா..மைகாட்.... நேரம்...ரொம்ப ஆயிடுச்சு. மற்ற டைரக்டர்கள் காத்துக் கிடப்பாங்க! நான் வரேன்.. முடிஞ்சா போன் செய்யறேன்! வரட்டுமா. ஒரு 'சியர்' சொல்லு!''

''போயிட்டு வாங்க''

போனை வைத்தாள்.

அவசர அவசரமாக கோர்ட்டுக்குப் புறப்பட்டாள்.

வாசலில் நிழல் தட்டியது...தபால்காரர் நின்றார்.

''போஸ்ட் வந்திருக்குங்க!''

அந்த விசித்திரமான 'போஸ்ட்' வந்திருந்தது.

(தொடரும்)

"அகத்திக் கீரை உடம்புக்கு மிகவும் நல்லது என்பார்கள் பெரியவர்கள். அகத்திக் கீரையைக் கூட்டாகவோ பொரியலாகவோ செய்து சாப்பிட்டால் வயிற்றுப் புழுக்களை கொல்லும். அதே அகத்திக் கீரையைச் சாறு பிழிந்து ஒரு டம்ளரில் எடுத்துக் கொண்டு அதிலே ஒரு புழுவைப் போடுங்கள். அது நன்றாகக் கொழித்து வளரும்! அது ஏன்? நம் வாய் மற்றும் வயிற்றிலே சுரக்கும் நீர்களுடன் சேர்ந்து இரசாயன வினைபுரியும் போது அகத்திக் கீரைக்குப் புழுவைக் கொல்லும் சக்தி கிடைக்கிறது..." என்று சுவையாகச் சொன்னார் சித்த வைத்திய நிபுணர் பிரம்மானந்த ஸ்வாமிகள்.

சென்னை அண்ணாநகரில் (என்-8, இரண்டாவது அவின்யூ, முதல் மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை-40. போன்: 6264150) இயங்கி வரும் பதிவெண் சித்தர் மருத்துவ மனையின் தலைமை மருத்துவ

அநுபவம்

அழிந்து போகலாமா?

ராக இருக்கும் பிரம்மானந்த ஸ்வாமிகள் இன்றைக்கு நம்மிடையே வாழ்ந்து வரும் அரிய மருத்துவர். இவரிடம் இருக்கும் மருத்துவச் செய்திகளைக் கேட்கும்போது, 'ஐயோ, நம்மவர்கள் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்களே' என்று வருத்தமாக இருக்கிறது. எத்தனையோ அற்புதமான பழமையான மருந்துகளை நாம் இழந்து விட்டோம். ஆனால் நம்மிடம் இன்று சித்த மருத்துவத்தின் அரிய செய்திகளைத் தெரிந்து கொண்டு வாழும் பிரம்மானந்த ஸ்வாமிகளையாவது நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவரின் அருமையைத் தெரிந்து கொண்ட ஸ்நேகலதா இளங்கோவன் இவருக்காகவே இந்த மருத்துவமனையைத் தொடங்கி இருக்கிறார். ஸ்வாமிகளைத் தவிரவும் பல சித்த மருத்துவர்கள் இந்த மருத்துமனையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

ஒரே வேளை மருந்தில் மஞ்சள் காமாலையைக் குணப்படுத்தும் டாக்டர் முருகன் மூலநோயை முழுமையாகக் குணப்படுத்தும் டாக்டர் மத்தியாஸ் போன்றவர்கள் இருக்கிறார்கள். இங்கே கௌரவ மருத்துவராக வரும் டாக்டர் ரஞ்சித்சிங்,

"சித்த மருத்துவத்தில் கிடைக்காத நிவாரணமே கிடையாது. எல்லாமே எளிமையான மருந்துகள். பக்க விளைவுகளோ, நோய் குணமான பின் வேறு வகையான பின்விளைவுகளோ இதிலே வரவே வராது.



பிரம்மானந்த ஸ்வாமிகள்



ஸ்நேகலதா

பல தீராத வியாதிகளைத் தீர்க்க முடியும். நம் வீட்டில் இருக்கும் வெந்தயம் போன்ற வகைகளை கொண்டே உடலைச் சீர்திருத்தலாம். அதனால் தான் உணவே மருந்து என்ற கொள்கையை வைத்திருக்கிறோம்" என்கிறார். டாக்டர் சிவராமன் சித்த மருத்துவத்தில் பி. எச்டி. செய்து வருகிறார்!

ஸ்நேகலதா, "ஆரம்பத்தில் பிரம்மானந்த ஸ்வாமிகளின் சிறப்பிற்காகத்தான் இதை ஆரம்பித்தேன். பல மருத்துவர்களிடம் போய் தீராத வியாதியுள்ளவர்கள் இங்கே வந்து ஸ்வாமிகள் கையால் குணமாவதைப் பார்க்கும்போது கிடைக்கும் ஆத்ம

திருப்தி வேறு எதிலும் இல்லை. சிப்பை வைத்துச் சொரிந்து ரத்தம் ஒழுக வந்த சொரியாஸ்லிஸ் கேஸ், அமெரிக்கா போயும் தீராத நரம்பு வாதத்துடன் வந்த முதியவர், என்ன வியாதி என்றே கண்டு பிடிக்க முடியாமல் நாக்கில் ரத்தம் வரும் பையன்...இப்படி எத்தனையோ பேரை குணப்படுத்தி இருக்கிறார். ஆயிரக்கணக்கில் மற்ற இடங்களில் செலவு பண்ணி குணம் தெரியாமல் போய் இங்கே வந்து பூரண குணமடைந்து செல்லும்போது அவர்கள் கண்ணில் தெரியும் நன்றியுணர்வு...அதுதான் மிகப்பெரிய சன்மானம்....'' என்று முகம் மலர்ந்து சொல்கிறார்.

செயல்திறன் மிகுந்த, சுறுசுறுப்பான ஸ்நேகலதா அமைத்துள்ள இம்மருத்துவமனை இருபத்திநான்கு மணி நேரமும் இயங்குவது இதன் கூடுதல் சிறப்பு.

''பெண்கள் இன்று மிகவும் உடல் நலிந்து போயிருக்கிறார்கள். அவர்கள் ஆரோக்கியமாக வாழ சில யோசனைகள் சொல்லுங்களேன்...'' என்றவுடன் பிரம்மானந்த ஸ்வாமிகளுக்கு கோபம் வந்துவிட்டது.

''அப்படிப் பொத்தாம் பொதுவில் எதையுமே சொல்வது தவறு. அருகம்புல் ஜூஸ் உடம்புக்கு நல்லது என்பார்கள். எனக்குத் தெரிந்த அருகம்புல் ஜூஸ் குடித்த ஒரு பெண்மணிக்கு ஒரே வயிற்றுப் போக்கு ஆரம்பித்து விட்டது. நான் ஊரில் இல்லை. மருந்துவமனையில் சேர்த்து 'டிரிப்' போட்டார்கள். அப்புறம் நான் வந்து மருந்து கொடுத்து முழு குணமாக்கினேன். வாழைத்தண்டு சாறு குடிக்கவேண்டும் என்கிறார்கள். வாழைத் தண்டு சாறை பச்சையாகக் குடிக்கக் கூடாது. அந்தச் சாறைப் பிழிந்து அதிலே ஒரு கத்தியைப் போட்டு வையுங்கள். பதினைந்து நாளில் பொடிப் பொடியாகி விடும். ஆனால் அதே வாழைத் தண்டை வேகவைத்து பொரியலாக்கிச் சாப்பிடுங்கள். அப்பெண்டிசைடிஸ் வரவே வராது.

காரணம், இறைவன் குடல் வாலை ஒரு ஜலதாரை போல அமைத்திருக்கிறான். அதிலே அழுக்குகள் சேர்ந்து அது அடைத்துக் கொள்கிறது. வாழைத்தண்டை மாதத்தில் நாலுநாள் சாப்பிடுங்கள். அடைத்துள்ள அத்தனை கழிவுகளையும் கரைத்துக் கொண்டு வந்து விடும். அதேபோல வாழைப்பூ மாதத்திற்கு நான்கு நாட்கள் சாப்பிட வேண்டும். துவர்ப்புச்சுவை மிகவும் நல்லது.

எதற்கு இதையெல்லாம் சொல்கிறேன் என்றால் பொதுவாகக் குறிப்புகளைச் சொல்லக் கூடாது. சில உடம்புகளுக்கு ஒத்துக் கொள்ளும். ஆஸ்துமா, சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு ஒவ்வொரு மாதிரி இருக்கும்...''

''அது சரி. ஆனால் ஆரோக்கியமாக இருப்பவர்கள் சில நெறிமுறைகளைப் பின்பற்றலாம் இல்லையா....''

''ரொம்ப சரி. யாராயிருந்தாலும் காலையில் நான்கு மணியில் இருந்து ஐந்து மணிக்குள் எழுந்து விடுவது மிகச் சிறந்த பழக்கம். நம் உடலில் 96 வகை சக்திகள் உள்ளன. பூமியிலும் அவை உள்ளன. நாம் நாள் முழுவதும் செயல்படும் போது நிறைய சக்தி செலவழிகிறது. அதிகாலையில் இந்தச் சக்திகள் காற்றில் நிறைந்து காணப்படும். நாம் எழுந்து அமர்ந்து மூச்சுக் காற்றை இழுத்து வாங்கினால் நாம் இழந்த சக்தியைப் பெறலாம். அதுவே பிராணாயாமம் செய்து பழகினால் நூறு சதவீதம் இழந்த சக்தியைப் பெறலாம்.



அதேபோல காலையில் எழுந்தவுடன் நீராகாரம் சாப்பிட வேண்டும். இதென்ன பழைய கதை பேசுகிறாரே என நினைக்காதீர்கள். நீராகாரம் செய்வதில் கூட முறைகள் உள்ளன. சிவப்பு அரிசியோ, கைக்குத்தல் அரிசியோ கிடைத்தால் நல்லது. முதல்நாள் அதை வேக வைத்து நன்றாக ஆற விட வேண்டும். அதிலே இரண்டு பிடி எடுத்து உதிர்த்து, அதில் கொஞ்சம் உப்பு சேர்க்க வேண்டும். மறுநாள் காலையில் எழுந்து ஐந்து நிமிடம் மூச்சுப் பயிற்சி செய்துவிட்டு, இயற்கைக் கடன்களை முடித்துக் கொண்டு, இந்த நீராகாரத்தைச் சாப்பிட வேண்டும். சாதத்தை நன்கு பிசைந்து கலக்கி

விட்டு நீரை அவரவருக்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு சாப்பிட வேண்டும். இந்த உஷ்ணபிரதேசத்திற்கு இது அவ்வளவு சிறந்த உணவு. அப்புறம் அரைமணி கழித்து காப்பியோ எதுவோ சாப்பிட்டுக் கொள்ளலாம். அதே போல இரவு ஒன்பது மணிக்குத் தூங்கப் போய்விட வேண்டும். பனிரெண்டு மணி வரை கண்விழிப்பது இயற்கைக்கு விரோதமானது. உடல் இயக்கங்கள் இயற்கைக்கு விரோதமாக இயங்குவதால் விரைவில் சோர்ந்து விடும். இவையெல்லாம் பொதுவான குறிப்புகள்...''

''நீங்கள் சித்த வைத்தியத் துறைக்கு மிகச் சிறுவயதிலேயே வந்து விட்டீர்கள், இல்லையா?...''

''ஆமாம். என்னுடைய தந்தை பரம்பரை வைத்தியர். நானும் மூன்றாவது படிப்போடு பள்ளியை நிறுத்திக் கொண்டு தந்தைக்கு உதவியாக வந்துவிட்டேன். சித்த வைத்தியத்தின் மகத்துவம் சொல்லி முடியாது. எத்தனையோ அற்புதமான மருத்துவர்களை நானே பார்த்திருக்கிறேன்.

ஒருவர் இருந்தார். அவர் கட்டி வைத்தியர். சாதாரணமாக கட்டியை உடைத்து மருந்து போடுவது இயல்பான ஒன்று. உடைத்து அறுவை சிகிச்சை செய்ய முடியாத தலை, கைமூட்டு, கழுத்து இப்படிப்பட்ட இடங்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்..அவர் ஒரு குச்சியை வைத்து மந்திரித்து எளிதாக அறுவை சிகிச்சை செய்யக் கூடிய கைக்கோ, காலுக்கோ, கட்டியை இறக்கிக் கொண்டு வருவார்! பிறகு அதை உடைத்து மருந்து போடுவார்! இதை நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். அவர் ஆதரிக்க யாரும் இல்லாமல் வறுமையில் வாடி இறந்து போனார். இப்படி நம் இயற்கை வைத்தியச் செல்வங்கள் எத்தனையோ போய்விட்டன...''

''எய்ட்ஸுக்குக் கூட மருந்து இருக்கிறதா...?''

''எதற்கு நம் சித்த வைத்தியத்தில் மருந்து இல்லை? எய்ட்ஸுக்கும் மருந்து இருக்கிறது. பெயர்தான் வேறு. நாம் இனி மேல் புதிதாக எதையும் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. ஏற்கனவே சித்தர்கள் கண்டு பிடித்து வைத்திருக்கிறார்கள். மெய்ஞானத்தால் உணர்ந்து எழுதிவைத்து இருக்கிறார்கள். 'கட்டு' என்ற ஒருவகை பக்குவப்படுத்தப்பட்ட மருந்துகள் எக்ஸ்பயரி டேட்டே கிடையாது. 105டிகிரி காயும் வைரஸ் ஜுரம் உரைத்துப் போட்டால் ஓடிப் போகும். இந்தக் கட்டை நீர், நெருப்பு எதுவுமே அழிக்காது.எமர்ஜென்ஸி மருந்துகள் பல சித்த வைத்தியத்தில் உள்ளன. 'மூளை மாற்று ஆபரேஷன் சாத்தியமா?' என்கிறார்களே மேலைநாட்டு வல்லுநர்கள்? நம் அகஸ்தியர் 'சஸ்திரகிரியை' என்னும் நூலில் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்!''

கேட்ககேட்க வியப்பாக இருக்கிறது : ''எமர்ஜென்ஸி மருத்துவம் வேறு என்ன உண்டு?''

''இதைக் கவனமாகக் கேளுங்கள். பாம்புக் கடியோ, வேறு விதமான விஷக் கடியோ, மயக்கமோ வந்து விழுந்து விட்டார்களா? முதலுதவியாக 10மிளகு, அதே அளவு உப்பு, 4 வெத்திலை...இதை வெற்றிலையே போடாத ஒருவர் வாயால் மென்று (கண்டிப்பாக இதை வெளியே வைத்து சாறு எடுக்கக் கூடாது) அந்தச் சாற்றினை துணியில் போட்டு வடிகட்டி இரண்டு சொட்டு கண்களிலும், மூக்கிலும் விடுங்கள். 'ஐயோ' என எழுந்து உட்கார்ந்து விடுவான். பாம்பு கடித்து எல்லோரும் கைவிட்ட ஒருவனை (அவனுக்கு உயிர் இருந்ததை நான் தெரிந்து கொண்டேன்) நான் இந்த வகையில் பிழைக்க வைத்திருக்கிறேன். அவன் எழுந்த பிறகு உள்ளுக்கும் இதனைக் கொடுத்து கஞ்சி கொடுத்து பிறகு மருத்துவரிடம் கூட்டிச் செல்லலாம்''

இப்படி நிறைய சுவையான விஷயங்களைச் சொன்னார் பிரம்மானந்த ஸ்வாமிகள்.


இவருடைய ஆலோசனையுடன் பல மருத்துவர்கள் இங்கே சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார்கள். குறிப்பாகப் பெண்களுக்கு முப்பது வயதானாலே இடுப்பு வலி, கர்ப்பப்பை நோய்கள் வந்து விடுகின்றன. வர்ம சிகிச்சை மூலம் பெண்களுக்குப் பல நிவாரணங்களைத் தருகிறார்கள். குறிப்பாக மாதாந்திரத் தொந்திரவுகளுக்கு முழுமையான குணம் இந்தச் சித்த மருத்துவ முறையில் கிடைக்கிறதாம்.

நம் உஷ்ணப் பிரதேசத்திற்கு உகந்த மருத்துவமே உடலையும் பக்குவமாக்கும். அதுவும் நம் முன்னோர்கள் ஒரு கிடைத்தற்கரிய பொக்கிஷத்தை நம்மிடையே விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். அதைப் பேணி, நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நம் கடமை இல்லையா?

– ஜ்வாலா

இந்த இதழில் சுற்றுலா பற்றிய
துணுக்குகளைச் சேகரித்து வழங்கியவர் :
வைதேகி தேசிகன்.

உங்கள் இடநெருக்கடிக்கு ஒரு நவீன தீர்ப்பு. JFA வொண்டர்பெட்





எங்கள் ஷோரூம்
பைலட் தியேட்டர் எதிரில்
மட்டுமே உள்ளது

இது பகலில் சோபா மற்றும்
இரவில் கட்டில்.
இது இடத்தை மிச்சப்படுத்துகிறது.
இது விருந்தினர்க்கு
இரவில் படுக்கையும் கூட.
இதன் விலையோ குறைவு ஆனால்
உங்களுக்கு அளிப்பதோ அதிகம்.

பகலில் சோபா
JFA வொண்டர்பெட்
இரவில் கட்டில்

இடநெருக்கடிக்கு ஒரு நவீன தீர்ப்பு

ஜெயபாரதம் பர்னிச்சர் & அப்ளையன்சஸ் (பி) லிமிடெட்

பைலட் தியேட்டர் எதிரில் 18, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை - 600 014.
போன்: 8261384, 8260933. Telex: 041-6401 ESCM IN Fax: 91-44-8261332.

இலவச "கலர் கேட்லாக்கைப் பெற" எங்கள் விலாசத்திற்கு எழுதவும். உறையின் மீது "பைலட் தியேட்டர் எதிரில்" என்று மறக்காமல் குறிப்பிடவும்.

"சினிமா நட்சத்திரங்களுக்கு
கூந்தல் பிரச்சனையே
இல்லைனு யார் சொன்னது?

என்னோட கூந்தல் கூட
நுனில உடைஞ்சு போய்
சரியில்லாமத்தான்
இருந்தது...



...நான் அதுக்கு ஸ்பெஷல் கவனிப்பு கொடுக்கறவரை. அதுவும் வீட்டிலேயே!"

Meenakshi

"ஸன்ஸில்க் ஸலோன் ட்ரீட்மென்ட்டில் உள்ள புரோட்டீன் & பேந்தனால் தரும் இரட்டைப் பராமரிப்பைக் கண்டு கொண்டேன்".

"எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது என்னோட கூந்தல் நுனியெல்லாம் பிளவுபட்டிருந்தது. நல்லவேளையா அதை வீட்டிலேயே சரிபண்ண ஒரு நல்ல பொருளை கண்டுபிடிச்சிட்டேன். புதிய ஸன்ஸில்க் ஸலோன் ட்ரீட்மென்ட். இது புரோட்டீன் கூட பேந்தனால்ங்கற ஒரு விசேஷ பொருள் சேர்ந்த 2 இன் 1 ஷாம்பூவாக்கும்.


உங்களுக்குத் தெரியுமா பேந்தனால் கூந்தலின் ஒவ்வொரு இழையிலும் ஊடுருவி உள்ளே வேலை செய்கிறது. அதனால கூந்தலோட வெளிப்புறம் அற்புதமான பளபளப்பு பெறுது. நிஜமாவே ஸலோன் அழகு. நீங்களும் இதுப் போட்டுப் பாருங்க. அப்புறம் பாருங்க இது எப்படி உங்கள் கூந்தலை அழகா மாத்துதுன்னு."

புரோட்டீன் & பேந்தனால் இரட்டை பராமரிப்பு
உள்ளே ஊட்டமளித்து தரும் உறுதி.
வெளியில் அற்புதமான பளபளப்பு



பிளவுபட்ட நுனிகள் கூந்தல் அதிகமாக பழுதடைந்திருப்பதன் அறிகுறி. எனவே இதில் கவனம் செலுத்தாவிட்டால் கூந்தல் உதிர்ந்துபோக வாய்ப்புண்டு.

ஸன்ஸில்க் ஸலோன் ட்ரீட்மென்ட் இரு நிலைகளில் செயல்புரிகிறது. பேந்தனால் எனும் சாதனைக் கண்டுபிடிப்பு கூந்தலினுள் ஊடுருவி ஊட்டமளிக்கிறது. அதே சமயம் ஒரு விசேஷ ஃபார்முலா கூந்தலின் வெளிப்புறம் மிருதுத் தன்மையை அளிக்கிறது. இதனால் ஒவ்வொரு இழையும் அடிமுதல் நுனிவரை பளபளக்கிறது. தொடர்ந்து உபயோகித்தால் கூந்தல் சேதமடைவது வெகுவாய் குறையும்.





பலன்கள்:
பிளவுபட்ட நுனிகள் பிரச்சனை மறையும்.
உறுதியான, மென்மையான, பளபளப்பான, அழகாய் படியும் கூந்தல்.
நிஜமாகவே ஸலோன் அழகு கூந்தல்.

உங்கள் கூந்தலுக்கு தேர்ந்தெடுங்கள் நிபுணர் பராமரிப்பு

ஷாம்பூ வகை	கூந்தல் வகை	தரும் பலன்கள்
பீச் ஸன்ஸில்க் புரோட்டீன், பேந்தனால் உள்ளது	பிளவுபட்ட நுனிகள் சேதமான கூந்தல்	பிளவுபட்ட நுனிகளை சரி செய்ய உதவுகிறது
பச்சை ஸன்ஸில்க் விட்டமின் ஈ, பேந்தனால் உள்ளது	உறுதியற்ற சாதாரண கூந்தல்	கூந்தலுக்கு உறுதி தருகிறது
இளஞ்சிவப்பில் கோ கண்டிஷனர், பேந்தனால் உள்ளது	உலர்ந்த சொரசொரப்பான சிக்கலான கூந்தல்	சேதத்திலிருந்து காத்து கூந்தலை பாதுகாக்கிறது

ஸன்ஸில்க்
ஸலோன் ட்ரீட்மென்ட்

அழகான கூந்தலுக்கு நிபுணர் பராமரிப்பு.

தேர்ந்தெடுத்த நகரங்களில் கிடைக்கிறது

HTA 1624 TAM

புதிய இணைப்பு
"BEDSHEETS"

புதுமைத் திட்டம் No. 3
"லில்லி" உள்பாவாடைகள் மற்றும்
(BEDSHEETS) படுக்கை விரிப்புகள்

திட்டத்தின் விபரம் :

1. ரூ. 300/-ஐ D.D. அல்லது M.O. மூலம் P.R.C. கார்மெண்ட்ஸ் என்ற எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள். இத்திட்டத்தில் முதலில் வரும் 5000 உறுப்பினர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

2. பணம் கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகள் (Normal Size) உங்களுக்கு பதிவுத் தபால் மூலம் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கப்படும்.

3. நீங்கள் பணம் செலுத்தியதிலிருந்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகள் (Normal Size) ஆண்டுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு பதிவுத் தபால் மூலம் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கப்படும்.

4. பணம் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 84 மாதங்கள் (7 ஆண்டுகள்) நிறைவு பெற்றவுடன் ரூ. 600/- ஆக உங்களுக்கு வழங்கப்படும்.

5. நீங்கள் பணம் செலுத்தியவுடன் ரூ. 84/- மதிப்புள்ள இரண்டு 'லில்லி' உள்பாவாடைகளுடன் (Normal Size) 7 ஆண்டுகள் கழித்து ரூ. 600/- திரும்பப் பெறுவதற்கான Repayment Gaurantee Card உடனடியாக வழங்கப்படும்.

	நீங்கள் செலுத்தும் தொகை	பணம் செலுத்திய வுடன்	முதலாம் ஆண்டு இறுதியில்	இரண்டாம் ஆண்டு இறுதியில்	மூன்றாம் ஆண்டு இறுதியில்	நான்காம் ஆண்டு இறுதியில்	ஐந்தாம் ஆண்டு இறுதியில்	ஆறாம் ஆண்டு இறுதியில்	7 ஆண்டு முடிந்தவுடன் திரும்ப பெறும் தொகை	மொத்தம்
Normal Size அதிகபட்ச இடுப்பு சுற்றளவு 35"/88cm	ரூ. 300/-	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 84/- மதிப்பு	ரூ. 600/-	ரூ. 1188/-
Spl Size அதிகபட்ச இடுப்பு சுற்றளவு 40"/102 Cms.	ரூ. 350/-	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 100/- மதிப்பு	ரூ. 700/-	ரூ. 1400/-
பெட்ஷீட் 60 x 90 ஒன்று	ரூ. 400/-	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 115/- மதிப்பு	ரூ. 800/-	ரூ. 1605/-

பங்கு கொள்வீர்! *பயன் பெறுவீர்!!*

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

P.R.C. கார்மெண்ட்ஸ்

26, பிரதட்சணம் ரோடு, 'ஏ' பிளாட்,
கரூர் – 639 002. போன் : 21946

எங்கள் நிறுவனம் 1984-ல் பாரத பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு செயல் பட்டு வருகிறது.

குறிப்பு : ★ நீங்கள் செலுத்தும் தொகை முழுமையாக, 65 ஆண்டுகளாக மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் கரூர் 'தி லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிட்'-ல் டெபாசிட் செய்யப்படும்.

★ மேற்படி டெபாசிட் தொகையிலிருந்து எங்கள் நிறுவனத்தின் நடைமுறை மூலதனத்திற்காக (Working Capital) வங்கியிலிருந்து கடன் வசதி பெற்றுக் கொள்ளப்படும்.

★ Spl. Size (ஸ்பெசல் சைஸ்) வேண்டுவோர் ரூ. 350/- செலுத்தவும்.

★ 60 X 90 பெட்ஷீட் ஒன்று பெறுவதற்கு ரூ. 400/- செலுத்தவும்.

★ உங்களுக்கு தேவையான கலர் மற்றும் அளவுகளை குறிப்பிட்டு எழுதினால் அதன்படி உள்பாவாடைகள் அனுப்பி வைக்கப்படும்.

★ வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் இத் திட்டத்தில் பங்கு பெறலாம். 'லில்லி' உள்பாவாடைகள் மற்றும் இதர கடிதத் தொடர்புகள் அவர்களுடைய இந்தியாவில் உள்ள விலாசத்திற்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். D. D. கரூரில் மாற்றத்தக்க வகையில் அனுப்பவும்.

● இந்துமதி, எஸ். வி. டி. ஐயர்



புண்ணியஸ்தலங்களுக்கு, தனியாக, குடும்பத்தினருடன் செல்வதைக் காட்டிலும் குழுக்களாக சேர்ந்து செல்லும்போது நேரமும், பணமும் சேமிக்கப்படுவதோடு, பல மொழி, இனத்தவருடன் பழகி, நட்பு கொண்டு குதூகலமாக நம் நேரத்தைக் கழிக்கவும் முடிகிறது. வட இந்தியாவுக்குப் பாலம் அமைக்கும் யாத்திரை ஏஜன்ஸிகளில் வெள்ளிவிழாக் கொண்டாடிய பெருமை பெற்றுள்ள திருவல்லிக்கேணி 'ஸ்ரீமஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்' இதை ஒரு கைங்கர்யமாகவே செய்து வருகின்றது. ஜகத்குரு ஸ்ரீபரமாச்சார்யார் ஆசியுடன், தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதாரணமாக இதை நடத்தி வரும் திரு.எஸ்.வி.டி.ஐயர் அவர்களைத் தெரியாத ஆன்மீக வாதிகளே இல்லை எனலாம். யாத்திரீகர்களை வழி நடத்திச் செல்லும் முறை அதில் உள்ள கஷ்ட, நஷ்டங்கள். இன்ப துன்பங்கள் இவற்றை அவரும், அவரது நிறுவனத்தில் முக்கிய பங்கு வகிக்கும் அவரது மருமகள் திருமதி இந்துமதி சந்திர மௌலியும் விவரமாகக் கூறுகிறார்கள்...

''1965-ல் குடும்பத்தினருடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு டூர் சென்றேன். அலஹாபாதில் ஒரு சாஸ்திரிகள் வீட்டில் வைதீகக் காரியங்கள் நிமித்தமாகத் தங்கியபோது நாற்பது பேர் கொண்ட குழு ஒன்றை இரவு பதினோரு மணிக்கு அழைத்து வந்த அதன் மேனேஜர் தன் சமையல் காரனிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது. நான் அருகில் படுத்திருந்தும் எனக்குத் தமிழ்த் தெரியாது என்று நினைத்துப் பேசினார். ''குழுவில் அனைவரும் பணம் தந்துவிட்டனர். அதனால் பகலில் புளியோதரையும், இரவில் தயிர் சாதமும் தந்து விரட்டி விடலாம். கேட்டால் ஒரு இரவு உடம்பு சரியில்லையென்று நீ படுத்துவிட்டால் மறுநாள் முதல் பசிக் கொடுமைக்கு எதைப் போட்டாலும் சாப்பிடுவார்கள்'' என்று சொன்னார். என் மனம் பதைத்தது.

அந்த நாளில் யாத்திரை செல்பவர்கள் மானேஜரை நம்பி முழுப் பணமும் தர மாட்டார்கள். ஒவ்வொரு புண்ணியஸ்தலம்

ஆன்மிகப் பாலம் அமைப்போம்!



மன்னார் வளைகுடாவில் உள்ள சிறிய தீவான இராமேஸ்வரம் ஒரு புண்ணியத் தலமாக விளங்குகிறது. இந்தக் கோவிலில் உள்ள பிராகாரம் (இந்தியாவிலேயே) மிகவும் நீண்டது. கிழக்கு - மேற்காக 197 மீட்டரும், வடக்கு - தெற்காக 133 மீட்டரும் கொண்டுள்ளது. இது கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

வந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக தவணை முறையில் தருவார்கள். பரஸ்பரம் நம்பிக்கை, சட்டதிட்டங்கள் இல்லாமல் பயந்து தர்ம நியாயங்களுக்கு உட்பட்டுச் சென்றதால் டூரும் மிகச் சில நேரங்களில் சிலரால் மட்டும் நடத்தப்பட்டது. அன்று நான் அவரிடம் நியாயம் கேட்டேன். ஆயுள் காப்பீடு எடுத்து வரும்படி சொன்னீர்களா? என்ன கண்டிஷனில் அழைத்து வந்தீர்கள்? என்று கேட்டதுடன், எந்த ஊரில் எளிதாக, மலிவாகப் பொருள்கள் கிடைக்கும் என்று விவரித்து பொருளாதார பிரச்சினையின்றி நடத்த வழியும் சொன்னேன். உதாரணமாக ஆந்திராவில் உருளைக் கிழங்கு கிலோ ஒரு ரூபாய் அப்போது. பூரி உருளைக் கிழங்கு போடலாம். டில்லியில் எட்டு கிலோ தயிர் ஒரு ரூபாய் மோர்க்குழம்பு போட்டால் வட இந்தியா வந்ததும் நம் அயிட்டம் என்று சிலாகிப்பார்கள். நடத்தும் உங்களுக்கும் லாபம்தானே'' என்றேன்.

''கலகம் செய்ய வந்திருக்கிறீரா? உம் வேலையைப் பார்த்துக் கொண்டு போம். இவர்களிடம் பணம் வசூலிக்க நான் என்ன பாடு பட்டேன் தெரியுமா?''

என்று கத்தினார்.

ஒரு வேகத்தில் 'உமக்கென்ன தெரியும்? இதே சுற்றுலா டூர் நான் நடத்திக் காட்டுகிறேன்!' என்று பந்தயம் வைத்தேன். சாஸ்திரிகளிடம் என் விருப்பத்தைச் சொன்னேன். நன்றாக நடத்துங்கள் என்று ஆசி கூறி உதவுவதாகவும் கூறினார். ஒரு குழுவுடன் உடனே யாத்திரை சென்றேன். சிருங்கேரிப் பெரியவாளிடம் ஸ்ரீமுகம் கேட்டபோது ஒரு வருடம் நடத்திவிட்டு வரச் சொன்னார். மறு வருடம் சென்றபோது பிரபலமானவர் யார் வந்தார்கள்? என்றெல்லாம் விசாரித்த பிறகு 1968ல் ஸ்ரீமுகம் தந்து ஆசி கூறினார். தர்ம, ஸத்ய வழிப்படி நடத்தும் படி ஆணையிட்டார்.

1988ம் வருடம் வரை இரயில் பெட்டி ஒன்றை ஏற்பாடு செய்து கொள்வோம். ஊர் ஊராகப் போவோம். ஒரு ஊர் போய்ச் சேர்ந்து ஐந்து மணி நேரம் கட்டணம் கிடையாது. ஆனால் நாளாவட்டத்தில் இந்தத் திட்டம் செலவு அதிகம் பிடித்ததால் யோசித்துப் பழைய முறையை மாற்றி விரைவு ரயிலில் அழைத்துச் செல்ல ஆரம்பித்து விட்டோம்.''

தங்குமிடம், ஆகாரம், சுற்றிப் பார்க்க என்ன ஏற்பாடுகள் செய்கிறீர்கள்?

''கைதேர்ந்த தென் இந்திய பிராமணர்களால் வைதீக முறையில் சமையல் செய்து தருகிறோம். காலை காபி, டிபன், பகல் உணவு, மாலை காபி, இரவு உணவு அல்லது பலகாரம். சாப்பாட்டில் அளவு கிடையாது. காலை நேரம் ஆலய தரிசனங்களும், மாலையில் ஊர்சுற்றிக் காண்பித்தலும் எல்லாமே எங்கள் செலவில்தான். தங்குமிடமும் ஏற்பாடு செய்கிறோம். தங்களுக்குத் தேவையான படுக்கை, கம்பளி, உடைகள் மற்றும், குங்குமம், விபூதி வைதீகக் காரியங்களுக்காக பாத்திரங்கள் எடுத்துவர வேண்டும். ரயிலடியிலிருந்து அழைத்துச் செல்ல பஸ், ரிக்ஷா போன்றவைகள் இருக்கும். முதலுதவிப் பெட்டியும் வைத்திருப்போம். தலைவலி, ஜுரம், வயிற்றுப் போக்கு, அஜீரணத்துக்குச் சில மாத்திரைகளும் உண்டு. டிசம்பர், ஜனவரி தவிர (குளிர்காலம்) மற்ற பத்து மாதங்களும் டூர் உண்டு. அந்தந்த ஊரில் டாக்டர்கள் இருப்பதால் ஏதேனும் அவசரத் தேவையென்றால் அழைத்துச் செல்கிறோம். தங்குவதற்கு சத்திரங்கள், கெஸ்ட்ஹவுஸ், கம்யூனிட்டி ஹால் போன்றவை இருக்கும். இங்கிருந்து முன்னாலேயே நாம் தங்கும் தேதிகளை அந்தந்த ஊர்களில் சொல்லி புக்

வானதி வழங்கும் நாவல், சிறுகதைகள்

		ரூ. பை
சிந்தாமணி	மீ.ப. சோமு	17.00
நந்தவனம்	,,	65.00
விடிக்கதவு	,,	22.00
மாதுளங்கன்று	,,	20.00
ஐம்பொன் மெட்டி	,,	20.00
சேர சூரியன்	கோவி.மணிசேகரன்	40.00
வெள்ளைக்காக்கை	ஜெகசிற்பியன்	20.00
அன்பின் மறுபுறம்	,,	26.00
புவனமோகினி (சரித்திர நாவல்)	எஸ்.எல்.எஸ்.	38.00
அன்புச் சுழல் (சமூக நாவல்)	உமாச்சந்திரன்	65.00
அன்புள்ள அஜிதா	,,	24.00
தாரிணி	,,	24.00
பரிகாரம்	,,	35.00
சித்திரவல்லி (சரித்திர நாவல்)	விக்கிரமன்	32.00
சோழமகுடம்	,,	37.00
அதிர்ஷ்ட தேவதை	பி.வி.ஆர்.	27.00
நதிக்கு ஒரு கரைதான்	,,	28.00
உன்னைச்சுற்றி ஒரு சொர்க்கம்	,,	40.00
அரங்கம்	ஸுஜாதா விஜயராகவன்	55.00
ஐந்து வழி மூன்று வாசல்	இந்திரா சௌந்தர்ராஜன்	40.00
ஒன்றின் நிறம் இரண்டு	,,	28.00
தூங்காத தர்மங்கள்	,,	20.00
அம்மா என்றால் அன்பு	,,	25.00
காதல் யுத்தம்	,,	20.00
ஆயிரம் நிலவே வா	,,	
	எஸ்.சத்தியமூர்த்தி I.A.S.	35.00
மெட்டி	டைரக்டர் மகேந்திரன்	25.00
ஓ கிக்கி	,,	15.00
மருதாணி	,,	18.00
கல்லின் கருணை	துறைவன்	22.00
வேர்களைத் தேடி	வாஸந்தி	24.00
உருக மறுக்கும் மெழுகுவர்த்தி	அனுராதா ரமணன்	32.00
தூங்கும் நினைவுகள்	,,	15.00
மங்கலச் சுமை	எம்.எஸ்.பெருமாள்	22.00
விழியோரம் அருவி	ஆர்னிகா நாசர்	36.00
ஜீவ நதிகள் (மங்கையர் மலர் பரிசு நாவல்)	சியாமளாராவ்	20.00
நானும் உன்னோடு	எம்.வி.வெங்கட்ராம்	38.00
அகலிகை முதலிய அழகிகள்	,,	28.00
அப்புறம் என்ன ஆச்சு?	கந்தூர் பாகவதர்	16.00

		ரூ. பை
நினைவெல்லாம் நிர்மலா	ஏ. நடராஜன்	22.00
இதழ்கள்	லா.ச.ரா.	20.00
தயா	,,	25.00
மீனோட்டம்	,,	18.00
உத்தராயணம்	,,	20.00
ஜனனி	,,	27.00
பச்சைக் கனவு	,,	25.00
அபிதா	,,	15.00
என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு	,,	34.00
அலைகள்	,,	35.00
பொய்மான் கரடு	கல்கி	18.00
புதுப்பாட்டு புதுமெட்டு	இருகூரான்	32.00
மகாநந்தா (மராட்டிய நாவல்) தமிழில்	சரஸ்வதி ராம்நாத்	20.00
நந்தினி சாகித்திய அகாடமி பரிசு (சிந்தி மொழி நாவல்) மூல ஆசிரியர்: கிருஷ்ண கட்வானி தமிழில்	சரஸ்வதி ராம்நாத்	20.00
கேட்டதெல்லாம் போதும்	ர.சு.நல்லபெருமாள்	26.00
பாவம் செய்யாதவர்கள்	நீல.பத்மநாபன்	17.00
தலைமுறைகள்	,,	57.00
வானதி சிறப்புச் சிறுகதைகள் – I தொகுப்பாசிரியர்:	மகரம்	40.00
வானதி சிறப்புச் சிறுகதைகள் – II		40.00
வானதி சிறப்புச் சிறுகதைகள் – III		40.00
வானதி சிறப்புச் சிறுகதைகள் – IV		40.00
மனம் கொத்தி மனிதர்கள்	சு.சமுத்திரம்	30.00
இன்னொரு உரிமை		27.00
அவனுக்காக		14.00
ராஜ பீடம்	கௌதம நீலாம்பரன்	28.00
பல்லவ மோகினி		56.00
நிலா முற்றம்		45.00
கரிகாலன் கனவு	அய்க்கண்	57.00
கறை படிந்த கரங்கள்	பொன்.பரமகுரு	30.00
ஆசையால் ஆபத்து	,,	18.00
ஒரு கல் வைரமாகிறது	டி.ஜானகி	18.00
மண்ணின் மலர்கள் (நாவல்)	அய்க்கண்	22.00
நீலன் நமது தோழன்	கொ.மா.கோதண்டம்	12.00
குறிஞ்சித்தாம் பூ நாவல்	,,	34.00

தேவையான பிரதிகளை V. P. P. யில் பெற கடிதம் எழுதுங்கள். V. P. P. தபால் செலவு தனி. புத்தக வியாபாரிகளுக்கும் பள்ளி, கல்லூரி நூலகங்களுக்கும் தக்க கழிவு தரப்படும். கங்கையின் புதிய புத்தக விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

விவரங்களுக்கு :

வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 600 017.

P. B. No : 6151

வீட்டின் பேரில் கடன்



சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வீடு/ஃப்ளாட்/மனை பேரில்
மிகக் குறைந்த வட்டிக்கு விரைவாக கடன் வழங்கப்படும்.



நகையின் பேரில் கடன்

★ 22ct தங்க நகைகளுக்கு ஒரு கிராமுக்கு ரூ. 300 வீதம் கடன் வழங்கப்படும்.
★ அப்ரைசர் சார்ஜ், இன்ஷூரன்ஸ், RD, வட்டிக்கு வரி வசூலிப்பதில்லை.
★ கடன் உடனடியாக வழங்கப்படும்.

திரு.வி.க.நகர் பெனி:ஃபிட் :ஃபண்டு லிமிடெட்

தலைமை அலுவலகம் :

10, 2வது தெரு, ஆண்டாள் அவின்யூ, (திரு. வி. க. நகர் பஸ் நிலையம் அருகில்),
சென்னை – 600 082. போன் : 610390
வேலை நேரம் : 9.00 முதல் 12.30 வரை. 2.00 முதல் 5.00 வரை. ஞாயிறு விடுமுறை.

பாரீஸ் கிளை :

49, வெங்கடாசல முதலி தெரு, முதல் மாடி,
(பட்டணம் கோயில் அருகில்), பார்க்டவுன், சென்னை – 600 003. போன் : 565760
வேலை நேரம் : 10.00 முதல் 1.00 வரை. 2.00 முதல் 5.00 வரை. ஞாயிறு விடுமுறை.

கம்ப்யூட்டர் சேவை பெறுவீர்

பெற்ற பிள்ளையைக் குற்றம் சொல்லாதீர்.

கீழ்கண்ட அறிகுறிகளும் காரணமாக இருக்கலாம் அல்லவா?

1. மனதில் அலைகடல் போல் ததும்பி அடிக்கடி மாறுகிறதா?
2. எத்தனை தடவை சொல்லிக் கொடுத்தாலும் அல்லது படித்தாலும் கிரகிக்க முடியவில்லையா?
3. பள்ளிக்கூடம் செல்ல குழந்தைகள் பயப்படுகிறார்களா?
4. படித்த மாணவர்கள் பரிட்சை எழுதப் பயப்படுகிறார்களா?
5. அறிமுகம் இல்லாதவர்களைக் கண்டால் வெறுப்படைகிறார்களா?
6. ஞாபகமறதி ஏற்படுகிறதா? படிக்கச் சொன்னால் தப்பித்து ஓடுகிறார்களா?
7. பெற்றோர் சொல்லுக்கு டிமிக்கிக் கொடுக்கிறார்களா?
8. உடம்பு வளர்ச்சியிலும் மனவளர்ச்சியிலும் பின் தங்கிக் கிடக்கிறார்களா?
9. தன்னம்பிக்கை இல்லாமல் தடுமாறுகிறார்களா?
10. எடுத்ததற்கெல்லாம் சோம்பலாக இருக்கிறார்களா?
11. வைத்த பொருளை இடம் தெரியாமல் திகைக்கிறார்களா?

மனம் உடைந்தவர்கட்கு மறு மலர்ச்சியை உண்டாக்குகிறது எது?

சிறுவர்களுக்கு: ரூ. 15/-
பெரியவர்களுக்கு: ரூ. 20/-
ரிஜிஸ்தர் செலவு: 1 பாட்டில் ரூ. 7/-
ரிஜிஸ்தர் செலவையும் சேர்த்து M.O. செய்யவும்
உங்கள் விலாசத்தை PIN CODE உடன்
தெளிவாக எழுதவும்

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்



ANAC® அனக்

ஹோமியோபதி மாத்திரைகள்
ஞாபக சக்தியை அதிகரிக்கிறது

ஹோமியோ கிளினிக் & ரிசர்ச் சென்டர்

5, சீதா நகர் முதல் தெரு, (ஸ்டாலின் ரோடு பஸ் ஸ்டாப்)
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தேவைக்கு எங்களது ஸ்டாக்கிஸ்ட்களை அணுகவும்

- கல் ஹோமியோ பார்மஸி, (சரவணா ஸ்டோர்ஸ் எதிரில்), 46, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17.
- கல் ஹோமியோ பார்மஸி 340 A, பேப்பர் மில்ஸ் ரோடு, மாதா சர்ச் எதிரில், பெரம்பூர், சென்னை-11.
- ரவி ஹோமியோ பார்மஸி, 34, கண்ணகர் தெரு, சென்னை-1.
- ஹானிமன் பார்மசூட்டிகல்ஸ், 133, கீழ்க்கு வெளி வீதி, மதுரை-1. (சூ.டீ.பி பேங்க் அருகில்).
- ஸ்மார்ட் ஹோமியோ மெடிக்கல்ஸ், 5 B, மதுரை ரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.
- DR. P. சுப்ரமணியன், 1, காந்தி ரோடு, கள்ளக்குறிச்சி-606202.
- நேத்தாஜி மெடிக்கல் ஸ்டோர்ஸ், மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.
- மீனாட்சி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 69, கடைவீதி, ஸ்ரீமுஷ்ணம்-608703.
- ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 166, லாங் பஜார், (வேம்புலி அம்மன் கோவில் அருகில்) வேலூர்-1.
- சர்வோதயா பாலி கிளினிக், (கணபதி ஸ்டோர்ஸ் எதிரில்) எம்.ஜி. ரோடு, கோரெகாவ், (W) பம்பாய்-400062.
- டாக்டர் சித்திரைக்கண்ணு D.H.M.S., எம்.கே. புரம், 37, போலீஸ் ஸ்டேஷன் தெரு, கடையநல்லூர்-627751.
- S.S. நாதன் C/o கஸ்ராஜ் ஹோமியோபதி ஆஸ்பத்திரி, 62, கச்சேரி ரோடு, சித்தூர், PC. 638001.
- டாக்டர் P. நாராயணசாமி, ஹோமியோ கிளினிக், 10, சு.வே.ரா. காலனி, புதுகோட்டை, சர்ச் அருகில், சென்னை-91.
- ஹானிமன் ஹோமியோ ஹால், AVN காலேஜ் ரோடு, விசாகப்பட்டினம்-530001.
- தென்றல் மெடிக்கல்ஸ், 1, சின்னதனம் மாரியம்மன் தெரு, திருப்பத்தூர்-631601.
- உபேந்திரா அண் கோ, மெயின் ரோடு, குண்டூர்-(AP) 522003.
- விஜயன் மெடிக்கல்ஸ் ஹால், 15, எம் எம் தெரு, காரைக்குடி - 623 001.

AAR TEC

செய்து கொள்வதால் பிரச்னை இருப்ப தில்லை.

ஆன்மீக யாத்திரைக்குப் பெரும்பாலும் பெண்களே அதிகம் வருகிறார்கள். கணவ ருக்கு விடுமுறை கிடைக்காதவர்கள், பெண் கள் சமாஜத்திலிருந்தும், தனிமையில் இருக்கும் பெண்களும் வருவதால் ஆண்கள் குறைவாக வருகிறார்கள். யாத்திரையுடன் நான் செல்லும்போது என் மருமகள் இந்து மதியை அழைத்துச் சென்று யாத்திரை சம் பந்தப்பட்ட அனைத்து அனுபவங்களும், அலுவலகங்களையும், அதிகாரிகளையும் அறிமுகப்படுத்தினேன். பயந்த சுபாவமாக இருந்த அவளுக்கு நேர்மையாக நடந்து கொண்டால் அதிகாரத்துடன் நம் நியாய மான தேவைகளுக்கு வேலைவாங்கிக் கொள்ள முடியும் என்று உணர்த்தி தேவை யற்ற பயத்தை நீக்கித் தன்னம்பிக்கை அளித்ததில் 84ஆம் ஆண்டு முதல் அவளே தனியாக மானேஜராக, மேற்பார்வை செய்து வருகின்றாள். மிக சாமர்த்தியமாக, அதட்டி வேலை வாங்கி யாத்திரிகர்கள் மனம் கோணாமல் உதவி செய்து நல்ல பெயர் எடுத்து வருகிறாள். வேறு ஒருவ ரிடமும் கைகட்டி வேலை செய்யாமல் நம் தொழிலை கவனிக்க வாரிசாக உருவாக்கி யுள்ளேன். வந்தவர்களே திரும்பத் திரும்ப 17.18, முறை எங்களுடன் டூர் வருவதற்கும் எங்கள் தனியான கவனிப்புதான் காரணம். ஹிந்தி பேசவும் கற்றுக் கொண்டு விட்ட தால் தெலுங்கு தாய்மொழி, தமிழ், ஆங்கி லம் பேசத் தெரியும் அதனால் அவளுக்கு மொழிப் பிரச்னையும் இல்லை.''

யாத்திரையின் போது ஏற்பட்ட சுவை யான நிகழ்ச்சிகள் ஏதாவது....?

''இருபது வருடங்கள் இருக்கும். துவா ரகா யாத்திரையின்போது குஜராத்தில் வெள் ளம். ஒரே இரவில் வெள்ளம் வந்து தண்ட வாளம் பன்னிரண்டு கிலோ மீட்டர் அடித் துக் கொண்டு போய்விட்டது. சாலை வழி யும் பாழாகிவிட்டது. நிதி மந்திரி, இரயில்வே ஜி. எம். இன்ஜினியர்கள் அனை வரும் வந்துவிட்டனர். அவர்களிடம் நாங் கள் மாட்டிக்கொண்டதைத் தெரிவித்தோம். உணவுக்கு 500/-ரூபாய் தருவதாக சொன் னார்கள். எங்களிடம் உணவுக்குப் பஞ்ச மில்லை. எப்படியாவது டிரான்ஸ்போர்ட் தேவை என்றோம். லாரி ஒன்று ஏற்பாடு செய்து தலைக்கு இரண்டு ரூபாய் பேசி ரோடு உடைப்பு வரை சென்று விட்டோம். மூன்று கிலோ மீட்டர் தூரம் விட்டுவிட்டு பாதை உடைந்திருந்தது. கூலிகள் மூலம் நடக்க முடியாதவர்களை அந்தப் பக்கம் அனுப்பி நாங்களும் அடைந்தோம். அங்கு வந்திருந்த குஜராத் மந்திரி எங்கள் நிலை கண்டு டிரான்ஸபோர்ட் இல்லாத தால் போலீஸ்காரர் தலையிலேயே சாமான் களை ஏற்றி பஸ் ஏற்றிவிடச் செய்து ஒரு வழியாகத் திரும்பி வந்தோம்'' என் றார்.

''கடந்த மே மாதம் பத்ரிநாத் சென்ற போதும் வெள்ளம். ஜுன் 15ந் தேதி டில்லி வரவேண்டும். 13ந் தேதி வரை பத்ரியில் இருக்கிறோம். எப்படியோ மூன்று மைல் ஏறி இறங்கி, வேறு பஸ் பிடித்து வந்ததில் நஷ்டம் 35 ஆயிரம் ரூபாய். நான் மாமா விடம் அவ்வப்போது தொடர்பு கொண்டு (எஸ்.டி.டி) நிலவரம் சொல்லி, ஆலோ சனை கேட்டு என் தலைமையில் ஜாக்கிரதை யாக வந்து சேர்ந்தது ஒரு அனுபவம்தான்'' என்கிறார் இந்துமதி.

பெற்றோருடன் வராத இளைஞர் கள் அடங்குவதில்லை. படிகளில் பிரயா ணம் செய்வார்கள். இளம் பெண்களை மிக வும் பாதுகாக்க வேண்டும். இந்த அனுபவங் களால் தனியாக வரும் இளைஞர், பெண் களைச் சேர்ப்பதில்லை.

'நாக்டர் என்ற ஊரில் எங்கள் இரயிலை நான்கு மணி நேரம் நிற்கும்படி செய்து விட்டதால் மிகவும் போரடித்தது என்று ஸ்டேஷனுக்கு எதிரே இருந்த தியேட்ட ருக்குச் சிலர் சினிமா பார்க்கச் சென்றனர். பெற்றோருடன் வந்த இளம் பெண் என்னி டம் அனுமதி கேட்டபோது இரவுக் காட்சி என்பதால் மறுத்து விட்டேன். பெற்றோர் சம்மதித்தும் நான் தடுத்ததால் அழுதாள். ஊர் பேர் தெரியாத இடத்தில் பெரியவர் களுக்கு ஏதேனும் ஏற்பட்டால் ஏற்படும் பாதிப்பைவிட இளம்பெண்ணான உனக்கு ஏதேனும் நேர்ந்தால் உனக்கும் கஷ்டம். எங்கள் யாத்திரை சர்வீஸின் பெயரும் கெட்டு விடுமே''என்று எடுத்துரைத்ததும் ஒப்புக்கொண்டாள். பிறகு அவள் திருமணத் துக்கும் கூடச் சென்று வந்தோம். நண்பர்க ளாகி விட்டோம். ஓர் இளம் பெண் மருத்து வர் சிறந்த டி.ஜி.ஓ. மருத்துவமனையில் பணியாற்றிய அவரை, அரைக் கட்டணத்

1944 இல் ஏற்பட்ட புயலில் தனுஷ்கோடியின் (18 கிலோ மீட்டர் தொலைவு) தென்கோடி முனை முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டது. ஆனால் கோதண்ட ராமஸ்வாமி கோவில் மட்டும் சேதமடையவில்லை.

தில் அழைத்துப்போக நினைத்ததில் நாற் பத்தி ஐந்து நாள் விடுமுறை கஷ்டப்பட்டு வாங்கினாள். எங்கள் சப்ளையர் ஒருவருடன் நெருங்கிப் பழகியதில் காதலிக்க ஆரம்பித்து விட்டனர். அனைவரும் அசிங்கமாகப் பேசும் அளவு வளர்ந்துவிட்டது. இதுபோன்ற சில கசப்பான அனுபவங்களால்தான் புதிய சட்டம் போட்டோம்.

யாத்திரை செய்பவர்களை அவர்கள் வீட்டினர் முக்கியமாகத் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தால் என்ன செய்வது?

நாங்கள் கிளம்பும் தினத்திலிருந்து வந்து சேரும் தினம் வரை, தங்கும் ஊர், இடம் அங்குள்ள தொலைபேசி எண், விலாசம் துண்டுப் பிரசுரம்போல் அச்சடித்து ஐந்து காப்பிகளை ஒரு வாரம் முன்பே தந்துவிடுகிறோம். அதன்படி தொடர்புகொள்ளலாம். அங்குள்ள உறவினர்களையும் சந்தித்து மகிழலாம். கடைசியாக இப்படி டூர் போகும் போது எத்தனையோ முன் ஏற்பாடுகள் செய்தாலும், தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படும் சங்கடங்களைக் குழுவினர் சகித்துக் கொள்ள வேண்டும். இரயில்வே நிர்வாகத்தினரின் சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டும். நிர்வாகத்தில், சிப்பந்திகளிடம் குறை இருந்தால் வளர விட்டு மனச் சோர்வு அடையாமல் உடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் இப்படிப்பட்ட யாத்ரா டூர் செல்பவர்களுக்கு நல்லது'' என்கின்றனர்.

-பானு

மங்கையர் மலர் & புதிய மீரா

வழங்கும்

கூந்தல் பராமரிப்புப் பக்கங்கள்

தேர்ந்த அழகுக்கலை நிபுணர் கூந்தலைப் பற்றிய உங்கள் ஐயங்களுக்கு விடை அளிக்க இருக்கிறார். கேள்விகளை எழுதிப் போட ஆரம்பித்து விடுங்களேன்.

தவிரவும் போட்டி ஒன்று....

'என் ஆரோக்கியமான கூந்தலின் இரகசியம்...'

இந்தத் தலைப்பில் முழுப்பக்கத் தாளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதுங்கள். தேர்ந்தெடுக்கப்படும் ஒரு கட்டுரைக்கு ரூ. 1000/- மதிப்புள்ள பொருள் பரிசு!


ஆரோக்கியமான உணவிற்கு,
சுவையான வழி!
SUNDROP
SUPER-REFINED SUNFLOWER OIL
I.T.C. LIMITED
Buy pure, be sure

ஸ்ரீரஸ்து சுபமஸ்து ஸ்ரீவெங்கடேசப்ரசன்ன

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடன்

14.3.94 முதல் 25.3.94 வரை நேபாள தேச யாத்திரை

2.5.94 முதல் 18.5.94 வரை பத்ரி கேதார் யாத்திரை

3.6.94 முதல் 35 நாட்கள் கொண்ட ஆக்ரா மதுரா, டில்லி, பத்ரி, கேதார்நாத், காசி, கயா, நேபாளம், கல்கத்தா, பூரி உள்ளிட்ட பூரண யாத்திரை

18.6.94 முதல் 20 நாட்கள் கொண்ட காசி, நேபாள் யாத்திரை

18.6.94 முதல் 14 நாட்கள் கொண்ட காசி, கயா, பிரயாகை த்ரிஸ்தளி யாத்திரை.

3.6.94 முதல் 18.6.94வரையிலான பத்ரி கேதார் யாத்திரை

மேலும் விவரங்களுக்கு

ஸ்ரீமஹாலஷ்மி யாத்ரா சர்வீஸ்

1, யூசுப் லேன் - அருணாசல ஆசாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை - 600 005.
டெலிபோன் 841 957

"சூர்யா" வழங்குகிறது...

நற்பவி டெபாசிட் திட்டம்.

24% (ஆண்டுக்கு வட்டி விகிதம்)

சோழன் மறுமுதலீட்டுத் திட்டம்.

உங்கள் முதலீடு 36 மாதங்களில் 2 மடங்குகளாக ஆகிறது

சிறப்பு அம்சங்கள்:

1. வட்டிக்கும், டெபாசிட் தொகைக்கும் பின் தேதியிட்ட செக்குகள் ரூ. 10,000க்கும், அதற்கும் மேலும் டெபாசிட் செய்பவர்களுக்கு வழங்கப்படும்.
2. பென்சன்தாரர்களுக்கு கூடுதலாக 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.
3. குறைந்த அளவு டெபாசிட் ரூ. 3,000/- காலம் - ஒரு ஆண்டு
4. கவர்ச்சிகரமான பரிசுகள் உண்டு.

மேலும் விவரங்களுக்கு அணுகவும்

SEF

சூர்யா எஸ்டேட் பைனான்ஸ்

No. 12, வெங்கடேசன் தெரு, தி.நகர், சென்னை-600 017
போன்: 442405 (G.R. தங்க மாளிகைக்கு எதிரில்)
செவ்வாய் வார விடுமுறை

John

பொருள் : காலை அவசர டிபன்

முதல் பரிசு ரூ. 300/-

நியூட்ரிஷன் கட்லெட்

காலை நேரம் வேலைக்குப் போகும் பெண்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே ஓர் அவசர நேரம்தான். அந்த அவசரத்துக்கு ஏற்ற அவசர டிபன் செய்ய, ஆசுவாசமாக மாதத்தில் ஒரு சனி, ஞாயிறில் நியூட்ரிஷன் மாவைத் தயார் செய்து கொண்டு விட்டால் ஐந்து நிமிடங்களில் டிபன் தயார் ஆகி விடும்.

* கனகவல்லி



* கிரிஜா



* விசாலாட்சி



* கீதா



* சந்திரா



தேவையான பொருட்கள் :

¼ லிட். - பச்சரிசி
¼ லிட். - புழுங்கல் அரிசி
100 கிராம் - கொண்டை கடலை
100 கிராம் - கறுப்பு உளுந்து
¼ கிலோ - கம்பு
¼ கிலோ - ராகி
50 கிராம் - கொள்ளு
100 கிராம் - சம்பா கோதுமை
¼ கிலோ - பாசிப்பயறு
100 கிராம் - பட்டாணி
100 கிராம் - காராமணி
100 கிராம் - சோயாபீன்ஸ்
100 கிராம் - பார்லி
100 கிராம் - ஓட்ஸ்
25 கிராம் - வற்றல் மிளகாய்
உப்பு தேவையான அளவு
200 கிராம் - வெல்லம்
2 - ஏலக்காய்
டால்டா, நெய் - தேவையான அளவு

செய்முறை :

முதலில் மாவு தயாரித்துக் கொள்ள, பச்சரிசி, புழுங்கல் அரிசி, பார்லி, ஓட்ஸ் இவற்றைக் கல் பொறுக்கி, கை பொறுக்க வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். கொண்டைக் கடலை டு சோயா பீன்ஸ் வரையிலான பயறு வகைகளைக் கல் பொறுக்கி, முதல் நாள் (வெள்ளி) இரவு ஊற வைத்து, மறுநாள் காலை ஒரு முறை களைந்து படிய விட்டு, மெல்லிய துணியில் தளர முடிந்து காற்றோட்டமாக வைத்திருந்தால் அழகாக முளை கட்டிவிடும். முளை முறியாமல் அகலத் தாம்பாளத்தில் கொட்டி, நிழல் உலர்த்தலாய் உலர்த்தி, முளை முறியாமல் லேசாய் வறுக்க வேண்டும். (முளை முறியாமல் வறுக்கும் முறை

இம்மாத இல்லத்தரசி

தென்னந் துடைப்பம் அல்லது பூந்துடைப் பம் உபயோகிக்காததை 20, அல்லது 25 குச்சிகளைத் தளர முடிந்து, மேற்புறத்தால் கடலைக் கடைகளில் வறுப்பது போல் கிளறி வறுக்க வேண்டும்.)

மிக்ஸி அல்லது மில்லில் நைஸாய் அரைத்து வைத்துக் கொள்ளவும். மேலே குறிப்பிட்ட அளவு தயாரித்தால் நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் வாரம் மூன்று முறை விதம் ஒரு மாதம் உபயோகிக்க முடியும்.

நியூட்ரிஷன் கட்லெட் செய்யும் முறை:

200 மிலி அளவு மாவை ஒரு வாயகன்ற பேசினில் எடுத்துக் கொண்டு 1 ஸ்பூன் காரப் பொடி, உப்புத் தூள், மஞ்சள் தூள் கலந்து பிசிறி. தளதள வென்று நீரைக் கொதிக்க வைத்து மாவில் கொட்டி கெட்டியாகப் பிசிறி மூடிவைக்க வேண்டும். ஆவி விட்டுக் கொண்டு வெந்து விடும். இதற்குள் ஒரு பெரிய தக்காளி, 2 பச்சை மிளகாய், ஒரு பெரிய வெங்காயம் இவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பேசினில் உள்ள மாவை துடுப்பு அல்லது கத்தியால் வெட்டி, அடை கல்லை அடுப்பில் போட்டு அடுப்பை 'சிம்மில்' வைத்துப் பத்து அல் லது பன்னிரண்டு கட்லெட் துண்டுகளை வரிசையாக பரப்பி அடுக்கி, சுற்றி 2 (அ) 3 ஸ்பூன் டால்டா விட்டு திருப்பிப் போட்டு வெங்காயம் முதலியவற்றைத் தூவி பரிமாற வும். மாவு பிசிற 2 நிமிடம் ஆறுவதற்கு 2 நிமிடம் அடைக்கல்லில் வேக 2 நிமிடம் தான். சுடச்சுட மட்டுமல்ல, ஆறினாலும் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

இதையே இனிப்பு கட்லெட் செய்ய 1 டம்ளர் மாவிற்கு 200 கிராம் வெல்லம், 1 மூடி தேங்காய்த் துருவல், 2 ஏலக்காய், 2 ஸ்பூன் நெய் (அலங்கரிப்பதானால் 20 திராட்சை) தேவை. வெல்லம் கரையவிட்டு வடிகட்டி, தளதளவென்று கொதிக்கும் போது, தேங்காய்த் துருவல், ஏலக்காய்ப் பொடி போட்டு மாவைக் கொட்டி கிளறி மூடவும். ஆறியதும் துண்டம் போட்டு அடை கல்லில் நெய்விட்டு அடுப்பை சிம் மில் வைத்துப் பத்துப் பன்னிரண்டு கட் லெட் செய்து விடலாம். உலர்ந்த திராட்சை யால் அலங்கரிக்கலாம்.

இந்த மாவை அரை டம்ளர் புளித்த மோரில் கரைத்து தோசை வார்க்கலாம். 1/4 கிலோ தக்காளியைப் பொடியாக அரிந்து மாவுடன் கலந்து இட்லி மாவாகக் கரைத்து, இட்லித் தட்டிலும், டம்ளரிலும் ஊற்றி இட்லி வார்க்கலாம். சுடச் சுட வெந்நீர் விட்டுப் பிசிறி ஆவியில் வைத்து, உதிர்த்து விட்டு குழவுச்சீனி, தேங்காய்த் துருவல் கலந்து இனிப்புப் புட்டு செய்யலாம். ரவா உப்புமா போல் வெங்காயம் தக்காளி போட்டு செய்யலாம். திடீர் விருந்தாளி களுக்கு நியூட்ரிஷன் கீர் செய்து 1/2 டம்ளர் பால் கலந்தாலே பாயசம் கம் கீர் ஆக விருந்துக்குப் பரிமாறலாம். காப்பிப் போடும் போதே, வெந்நீர் ஊற்றி கஞ்சியாக வைத்து பால் சர்க்கரை சேர்த்து beverage ஆக அருந்தலாம். மோர், உப்பு, காயம் பவுடர் சேர்த்து குளிர்ச்சி பானமாய் அருந்தலாம்.

– எஸ். கனகவல்லி சாரங்கபாணி,
கும்பகோணம்.

இரண்டாம் பரிசு ரூ. 200/-


ஓட்ஸ் கிச்சடி

தேவையான பொருட்கள் :

ஓட்ஸ் - 1 கப்
பயத்தமாவு/கடலைமாவு - 1/4 கப்
பச்சைமிளகாய் - 6
இஞ்சி - 1 அங்குலத்துண்டு
கடுகு - 1 டீஸ்பூன்
உப்பு - 1 டீஸ்பூன்
நெய் - 2 டேபிள் ஸ்பூன்
எலுமிச்சம்பழம் - 1
நறுக்கிய கொத்தமல்லி தழை
- 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை :

பச்சைமிளகாய் இஞ்சியைப் பொடிப் பொடியாக அரிந்து கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து நெய் ஊற்றி கடுகு தாளித்து இஞ்சி பச்சை மிளகாயை வதக்கிக் கொள்ளவும். ஓட்ஸ், கடலை அல்லது பயத் தம் மாவு இரண்டையும் கலந்து 5 கப் நீர் ஊற்றிக் கரைத்துக் கொள்ளவும். உப்புச்



தாணுமாலயன் கோவிலில் அமைந்துள்ள இடம் சுசீந்திரம். இது குமரியி லிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 'குமரி அன்னை' தாணுமாலயனைத் திருமணம் செய்து கொள்ள - முன்பு போட்ட கட்டளையின்படி அவன் கேட்ட 'கணுவில்லாத கரும்பு, காம்பில்லாத வெற்றிலை, கண்ணில் லாத தேங்காயுடன் பொழுது விடியுமுன்பு வரவேண்டுமென விரைய அவர் சுசீந்திரத்தில் நுழையும்போதே நாரதர் சேவல் உருக் கொண்டு கூவிவிட அவரும் பொழுது விடிந்துவிட்டதென அங்கேயே நின்றுவிடுகிறார். அன்னையும் தவக்கோலம் பூண்டு விடுகிறாள். சுசீந்திரத்தில் உள்ள 18 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் சிலை பிரசித்தமானது - மிகவும் சக்தி வாய்ந் தது.

கோயமுத்தூரில் பிறவி மேதையாகிய ஜி. டி. நாயுடு அவர்களின் அரிய கண்டுபிடிப்புகள் அடங்கிய ஜி. டி. நாயுடு பொருட்காட்சி காண வேண்டிய ஒன்று. அவருடைய 'தொழிற் பொருட்காட்சி' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



சேர்த்துக் கலக்கவும். கலக்கிய நிரவத்தை வாணலியில் விட்டுக் கை விடாமல் கலக்கவும். கெட்டியாகிக் கூழ் போல் ஆனதும் இறக்கி எலுமிச்சம் பழம் பிழிந்து கொத்த மல்லி தழை சேர்த்துக் கலக்கவும். ரெடி மேட் சாஸ்/கெச்சப் தொட்டுக் கொண்டு சாப்பிடவும். இதுவே காலை நேர அவசர ஆனால் சத்துள்ள கிச்சடி. செய்யும் நேரம் 5 நிமிடம்.

– கிரிஜா வைத்தியநாதன்,
பெங்களூர் – 96.

மூன்றாம் பரிசு ரூ. 100/–

புளி அவல்

தேவையான பொருட்கள் :

அவல் - பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.
மிளகாய் வற்றல் - 6
தேங்காய் - ½ மூடி
பெருங்காயம் - சிறிது
வெல்லம் - சிறிதளவு
புளி - நெல்லிக்காய் அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

கெட்டி அவல் வாங்கி மிக்ஸியில் ரவை பதத்திற்குப் பொடி செய்து வைத்துக் கொண்டால், தேவையான போது உபயோகிக்கலாம். இதில் ½ ஆழாக்கை நீரில் பிசிறி வைத்தால் 2-3 நிமிடங்களில் உதிரியாகி விடும்.

மிளகாய் வற்றல், தேங்காய் மூடி, பெருங்காயம், வெல்லம், புளி, தகுந்த அளவு உப்பு இவற்றை மிக்ஸியில் நைஸாக அரைத்து, பிசிறி வைத்துள்ள அவலுடன் சேர்க்கவும். கொஞ்சம் எண்ணெயில் நிலக் கடலை, கருவேப்பிலை வறுத்து, இத்துடன் கலந்து விட்டால் மிகவும் சுவையாய் இருக்கும். அடுப்பில் வைத்துக் கிளற வேண்டிய அவசிய மில்லாததால், இதை 10 நிமிடத்துக்கு உள்ளாகவே தயார் செய்ய முடியும். தொட்டுக் கொள்ள எதுவும் தேவையில்லை. வற்றல் இருந்தால் நல்ல காம்பினேஷன்.

– சீதா ராமன், பெங்களூர் – 79.

ஆறுதல் பரிசு ரூ.. 50/–

உப்பு சேமியா பாத்

தேவையான பொருட்கள் :

சேமியா - ½ கிலோ
உப்பு - கொஞ்சம்
வெங்காயம் சிறிதாக - 10
பச்சைமிளகாய் - 4
தேங்காய் மூடி - 1
கடுகு - 1 ஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 1 ஸ்பூன்
மோர் - ¼ கப்
க. எண்ணெய் - 4 ஸ்பூன்

செய்முறை :

வாய் அகன்ற பாத்திரத்தில் 6 டம்ளர் தண்ணீர் கொதிக்க வைத்து பின்பு சேமியாவை வெந்நீரில் கொட்டி 5 நிமிடம் கழிந்து, அதை இறக்கி வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி, காய்ந்தவுடன் கடுகு உளுத்தம் பருப்பு போட்டுப் பின்பு அரிந்து வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், திருகிய தேங்காய்ப்பூ இவை அனைத்தையும் எண்ணெயில் கொட்டி வேக விடவும். பின்பு மோரில் உப்பைக் கரைத்து மண் இல்லாமல் அதில் விடவும் பின்பு அவித்து வைத்து உள்ள சேமியாவை இதில் கொட்டி கிண்டி உடனே இறக்கவும். இதற்குத் தொட்டு கொள்ள இட்லி பொடி நன்றாக இருக்கும். இந்த அளவு 3 பேருக்குப் போதுமானது.

இனிப்பு சேமியாபாத் :

தேவையான பொருட்கள் :

சேமியா - ¼ கிலோ
சர்க்கரை - 150 கிராம்
தேங்காய் மூடி - 1
ஏலம் - 5 காய்
பாசிப் பருப்பு - 100 கிராம்
நெய் (அ) டால்டா - 50 கிராம்

செய்முறை :

ஒரு அகன்ற பாத்திரத்தில் 6 டம்ளர் தண்ணீர் வைத்து ஒன்றாகக் கொதிக்க விட

வும். பின்பு சேமியாவை கொதித்த நீரில் கொட்டவும் 5 நிமிடம் கழித்த பின்பு அதை இறக்கி தண்ணீரை வடிகட்டி விடவும். பாசிப்பருப்பு அரை அவியல் அவித்து வைத்துக் கொள்ளவும். பின்பு சேமியா உடன் பாசிப் பருப்பு, தேங்காய் துருவிய பூ, ஏலக்காய் தூள், நெய், சர்க்கரை அனைத்தையும் கலந்து சாப்பிடவும்.

– விசாலாட்சி, காரைக்குடி.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

தவலை இட்லி

தேவையான பொருட்கள் :

புழுங்கல் அரிசி - $1\frac{1}{2}$ ஆழாக்கு
பச்சை அரிசி - $1\frac{1}{2}$ ஆழாக்கு
உளுத்தம் பருப்பு - 1 ஆழாக்கு
மிளகு - 2 டீஸ்பூன்
சீரகம் - 2 டீஸ்பூன்
கடலை பருப்பு - 1 கரண்டி
பச்சை மிளகாய் - 8
தேங்காய் - 1 மூடி (துருவியது)
நல்லெண்ணெய் - 1 கரண்டி
உப்பு, பெருங்காயம்,
கறிவேப்பிலை
- தேவையான அளவு

செய்முறை :

பச்சரிசி, புழுங்கல் அரிசி, பருப்பு, மிளகு எல்லாவற்றையும் கலந்து பம்பாய் ரவை போல் சன்னமாக மிஷினில் அரைத்துக் கொண்டு, இதில் கடலைப் பருப்பு, சீரகம், உப்பு, பெருங்காயம் இவற்றைப் போட்டு வெது வெதுப்பான நீர் அல்லது சிறிது மோர் சிறிது நல்லெண்ணெய் இவற்றை விட்டு இட்லி மாவு பதத்தில் கரைத்து முதல் நாள் இரவே ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலை தேங்காய்த் துருவல், ப.மிளகாய், கறிவேப்பிலை எல்லாம் போட்டு அந்த மாவில் கலக்கவும். பின் வெங்கல உருளி அல்லது வாணலியில் அடுப்பில் வைத்து 6 ஸ்பூன் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், மாவு 4 கரண்டி எடுத்து ஊற்றி மேலே மூடி போட்டு மூடவேண்டும். அடுப்பை சிம்மில் வைக்கவும். 5 நிமிடம் ஆனதும் திறந்து அதைத் திருப்பிப் போட்டு திறந்தபடி 2 நிமிடம் வைக்கவும். அடியில் சிவந்த நிறமாக கர கரவென்று காந்தலும், நடுவில் இட்லியுமாகவும் இருக்கும்.

– சந்திரா கிருஷ்ணன், சென்னை – 61.

மங்கையர் மலர்

&

வி. ஜி. பி. கோல்டன் பீச்

இணைந்து வழங்கும் சுற்றுலா போட்டியைச் சென்ற இதழில் அறிவித்து இருந்தோம் அல்லவா? மங்கையர் மலர் வாசகிகள் எழுதிக் குவித்துவிட்டார்கள். அந்தக் கட்டுரைப் புதையலுக்குள் புகுந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்த இதழில்... பரிசு அறிவிப்பு!

சுற்றுலா போக என்ன செலவாகும்?

சேர்ந்தாற்போல இரண்டு மூன்று நாட்கள் கிடைக்கும் விடுமுறையை ஏன் வீணாகக் கழிக்க வேண்டும்? குடும்பத்துடன் சில சிறந்த இடங்களுக்குச் சுற்றுலா சென்று வரலாமே? என எண்ணுவோர் நம்மில் பலருண்டு.

''ஆமாம்! இந்த இரண்டு மூன்று நாளிலே பாதிநேரம் பயணத்திலே போய் விடும். மீதி பாதிநேரம் பஸ்ஸிற்கோ, ரயிலுக்கோ காத்து நிற்பதில் போய்விடும். அப்புறம் எதைப் பிரமாதமாகச் சுற்றிப் பார்க்க முடியும்? நேரத்தோடு பணமும் ஆயிரக் கணக்கில் செலவழியும். அலுப்புதான் மிஞ்சும்'' என அலுத்துக் கொள்வோர் அநேகம்.

குறிப்பிட்ட நேரத்திற்குள், செலவழிக்கும் பணத்திற்கும் பயனுள்ளதாக, உடல் அலுப்புத் தெரியாமல், குடும்பத்திலுள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் திருப்தி செய்யும் வண்ணம் ஒரு சுற்றுலா அமைய வேண்டுமானால் செய்ய வேண்டியவைகள் என்ன?- இதில் பார்க்கக் கூடிய இடங்கள் போன்ற விவரங்களை அறிய ''மதுரா டிராவல்ஸ்''-ன் நிர்வாக இயக்குனர் திரு. வி.கே.டி.பாலன் அவர்களைச் சந்தித்தபோது:-



● பாலன்

''ஒரே ஒருநாள் விடுமுறையில் கூடச் சுற்றுலா சென்று வர முடியும். நம்முடைய இந்திய அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் - இவைகள் இதற்காகப் பல இடங்களைத் தேர்வு செய்து பயண ஏற்பாடுகளையும் செய்து தருகிறது. எங்களுடைய 'மதுரா டிராவல்ஸ்'ம் இவைகளுடன் இணைந்து- பிரதிநிதி போலச் செயல்படுகிறது. பஸ்ஸிற்காக அலையவோ, காத்துக் கிடக்கவோ தேவையில்லை. எங்களைப் போன்ற பிரதிநிதிகள் அல்லது இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இவைகளிடம் நேரடியாகவோ முன்கூட்டியோ பதிவு செய்து கொண்டால் போதும்.

சென்னையைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்க்க கூட இந்த வசதி உண்டு. காலை 7.30 மணி முதல் பகல் 1.30 மணி வரை ஒரு ஷிப்டும், மதியம் 1.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையில் ஒரு ஷிப்டும் உண்டு. உங்களுக்குச் சௌகரியமான 'ஷிப்டில்' போய்ச் சுற்றி வரலாம். செயின்ட் ஜார்ஜ் கோட்டை, வள்ளுவர் கோட்டம், பாம்புப் பண்ணை, கபாலி கோவில், மியூசியம் (இது வெள்ளியன்று விடுமுறை), மெரினா கடற்கரை, பிர்லா பிளானட்டேரியம்(இது வெள்ளியன்று மட்டும்)- ஆகியவைகளைப் பார்க்கலாம் ஏசி இல்லாத பஸ்ஸில் இதற்கான கட்டணம் ரூ.60/- மட்டுமே!

இதேபோல காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை முழுநாளும் சென்னையைச் சுற்றிப் பார்த்து வரவும் வசதி உண்டு. மெரினா கடற்கரையை மிக மெதுவாக (பஸ்ஸில் தான்!) கடந்து சென்று பார்க்கலாம். அரை நாள் சுற்றுப் பயணத்தில் குறிப்பிட்ட இடங்கள் தவிர முட்டுக்காடு படகுத்துறையும், வி.ஜி.பி.யின் தங்கக் கடற்கரையும் இதில் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏஸி இல்லாத பஸ்ஸில் கட்டணம் ரூ.120/- மட்டுமே இதில் மதிய சைவ சாப்பாடும் அடக்கம்.

இதே போல ஒரு நாள் டூரில் காஞ்சிபுரம், மஹாபலிபுரம், முதலைப் பண்ணை, முட்டுக் காடு படகுத் துறை மற்றும் வி.ஜி.பி.கோல்டன் பீச் முதலியவைகளைப் பார்க்கலாம். காலை 6.20 மணிக்குக் கிளம்பி மாலை 7 மணிக்குத் திரும்பும் இந்தச் சுற்றுலாவில் காலை டிபனும், மதிய சைவ சாப்பாடும் அடங்கிய கட்டணம் ரூ.200/- மட்டும்.

இதே போல் ஒரு நாள் சுற்றுலாவில் திருப்பதி, திருமலை, திருச்சானூர் சென்று வரலாம். காலை டிபன், மதிய உணவு, திருமலையில் சிறப்பு

தரிசனத்திற்கான டிக்கெட் அடங்கிய கட்டணம்- ஏஸி வசதி யில்லாத பஸ்ஸில் ரூ.295/- 10வயதுக்குட் பட்ட குழந்தைகளுக்கு ரூ.210/- மட்டுமே. ஏஸி வசதி கொண்ட பஸ் ஸென்றால் பெரியவர்களுக்கு ரூ.325-ம், குழந்தைகளுக்கு ரூ.240/- ஆகும். இது காலை 6 மணிக்குக் கிளம்பி இரவு 10 மணிக்குத் திரும்பலாம்.

வார இறுதிக்கான டூர் என்றால் (வெள்ளி இரவு 10 மணிக்குக் கிளம்பி ஞாயிறு இரவு 7.30மணிக்குத் திரும்பிவர) தஞ்சை, வேளாங்கண்ணி, நாகூர், திருநள்ளார், பூம்புகார், வைதீஸ்வரன் கோவில், சிதம்பரம், பிச்சாவரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களைச் சென்று பார்க்க முடியும். இரண்டே நாட்களில் 850கி.மீ. தூரம் பயணம் செய்யலாம். இரண்டு படுக்கைகள் கொண்ட அறையைப் பகிர்ந்து கொள்பவர்களுக்கு இந்த டூருக்கான கட்டணம் ரூ.450/- தனி அறை வேண்டுவோருக்குக் கட்டணம் ரூ.500/-.

6 நாட்கள் மட்டுமே கொண்ட சுற்றுலாவில் சிரவணபெலகுளா, ஹாசன், பேலூர், ஹளபேடு, சிருங்கேரி, மூகாம்பிகா (கொல்லூர்), உடுப்பி, தர்மஸ்தலா, மைசூர், பெங்களூர் ஆகிய இடங்களைப் பார்க்க முடியும். தனியறையில் தங்க விரும்புவோருக்கான கட்டணம் ரூ.1700/-ஆகும். இதுவே ஏஸி ரூம் என்றால் ரூ.2250/-அறையைப் பகிர்ந்து கொள்வோருக்கு ரூ.1600/-ம் (ஏஸி அறையென்றால் ரூ.2100/-) ஆகும். இரண்டு படுக்கைகள் கொண்ட அறையில் பெரியவர்களுடனே 'அடிஷனலாக' தங்கும் குழந்தைகளுக்கான கட்டணம் ரூ.1500/- (ஏஸி அறைக்கும் இதே கட்டணம்தான்). ஞாயிறு காலை 6.30 மணிக்குக் கிளம்பி தொடரும் வெள்ளி இரவு 8மணிக்குத் திரும்பும் சுற்றுலா இது.

5 நாட்களில் சென்று பார்க்கக் கூடிய தென்னிந்திய சுற்றுப் பயணம் ஒன்றும் உண்டு. இதில் பெங்களூர், ஸ்ரீரங்கப்பட்டிணம், பிருந்தாவன் கார்டன்ஸ், மைசூர், முதுமலை சரணாலயம், ஊட்டி ஹொகேனக்கல், திருவண்ணாமலை ஆகிய இடங்களைப் பார்க்கலாம், ஞாயிறு காலை 6.30 மணிக்குக் கிளம்பிதொடரும் வியாழனன்று மாலை 7 மணிக்குத் திரும்பி வரலாம். தனியறையில்தங்குவோருக்கு ரூ.1800/-ம்அறையைப் பகிர்ந்து கொள்வோருக்கு ரூ.1600/-ம் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.1550/-ம் இந்த சுற்றுலாவிற்கான கட்டணம் ஆகும்.

7 நாட்கள் கொண்ட டூரில் மந்திராலயம் மற்றும் கோவா சென்று வரலாம். சனிக்கிழமை காலை 6.30 மணிக்குக் கிளம்பி தொடரும் வெள்ளி இரவு 8.30 மணிக்குத் திரும்பலாம். இதில் காணக்கூடிய இடங்கள் அஹோபிலம், மஹாநதி (சினிமா இல்லை!), நந்தியால், ஸ்ரீசைலம், மந்திராலயம், ஹம்பி, ஹஸ்பெட், கோவா, பெங்களூர், சென்னை ஆகியவை. தனியறை ஏஸியுடன் கூடியதற்கு ரூ.2425/-ம், அறையைப் பகிர்ந்து கொண்டால் ரூ.2250/-ம், ஏஸி இல்லாத தனியறைக்கு ரூ.1950/-ம், பகிர்ந்து கொண்டால் ரூ.1800/-ம், குழந்தைகளுக்கு ரூ.1675-ம் (ஏஸி என்றால் ரூ.2075-ம்) செலுத்த வேண்டும்.

கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரையோரங்களை 7 நாட்களில் சுற்றி வரும் வசதியும் கூட உண்டு. இதில் பார்க்கும் இடங்கள் திருச்சி, மதுரை, குற்றாலம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், ஆலப்புழை, கொச்சி, காலடி, குருவாயூர், மலம்புழா அணை, கோவை, ஏற்காடு, திருவண்ணாமலை - சென்னை. தனியறை வசதி என்றால் ரூ.1950/- அறையைப் பகிர்ந்து கொள்வோருக்கு ரூ.1800/-ம், குழந்தைகளுக்கு ரூ.1675-ம் ஆகும் இதற்கான கட்டணம்.

14நாட்கள் கொண்ட தென்னிந்தியச் சுற்றுலா ஒன்றும் கூட உண்டு. தனியறை வசதி வேண்டுவோருக்கு ரூ.3700/-ம் அறையைப் பகிர்ந்து கொள்வோருக்கு ரூ.3500/-ம் குழந்தைகளுக்கு ரூ.3300/-ம் கட்டணம் கொண்ட இந்த சுற்றுலா மாதத் தின் முதல் மற்றும் மூன்றாவது (வார)புதன் கிழமையன்று துவங்கும். இதில் திருத்தணி, திருப்பதி, திருச்சானூர், பெங்களூர், மைசூர், முதுமலை சரணாலயம், மருத மலை, கோவை, மலம்புழா அணை, குரு வாயூர், கொச்சி, திருவனந்தபுரம், சுசீந்திரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், ராமேஸ் வரம், திருப்பரங்குன்றம், மதுரை, பழனி, திருச்சி, ஸ்வாமிமலை, பூம்புகார், சிதம்பரம், பாண்டிச்சேரி முதலிய இடங்களைக் காணலாம்.

முன் கூட்டியே திட்டமிட்டு இது போன்ற சுற்றுலாவில் கலந்து கொண்டு சென்றால் கொடுக்கும் பணத்திற்கும், ஆகும் காலத்திற்கும் நஷ்டமில்லாமல் பல இடங்களையும் நன்கு சுற்றிப் பார்க்க முடியும். உடல்களைப்போ, அலுப்போ இல்லாமல் சகல விதமான வசதிகளுடனும் பயணம் செய்ய முடியும்'' - என்கிறார் ''மதுரா''- பாலன் அவர்கள்.

எப்படியும் பணம் செலவழிக்காமல் நாம் ஊர் சுற்றப் போவதில்லை. அதில் கொஞ்சம் கூட குறைய இருந்தாலும் வசதிகள் குறையாமல் இருந்தால்தானே பயணங்களை நன்கு அனுபவிக்க முடியும்?

– வைதேகிதேசிகன்

சுற்றுலா விரும்பிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் 'ஹாலிடே ரிசார்ட்ஸ்'. மலை வாசஸ்தலங்களில் வீடுகளைக் கட்டி 'சுற்று' முறையில் வாடகைக்கு விடுவது. குறிப்பிட்ட பணத்தைக் கட்டினால் நீங்கள் வருடத்தில் ஒரு வாரம் அங்கு சென்று தங்கலாம். 'ஹலின் கன்ட்ரி ஹாலிடேஸ் ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்' என்ற நிறுவனம், ''நீங்கள் தொடர்ந்து ஒரு வாரம்தான் தங்கவேண்டும் என்பதில்லை. வருடம் முழுக்க அந்த நாட்களைப் பிரித்துக் கொள்ளலாம்'' என்கிறது. இவர்கள் ஒரு பெட்ரூம் ஃப்ளாட், இரண்டு பெட்ரூம் ஃப்ளாட் என பல வகைகளில் வைத்திருக்கிறார்கள்.

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

SGBF

Fully Computerised A/C Office

(கம்பெனி சட்டத்தின் பதிவு எண் : 18&24962)

பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர், லஸ்
மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241/4990953

கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003
போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

1. *Prompt and satisfying service*
2. *Efficient Management*
3. *Financial strength backed by a prosperous and reputed group*
4. *Loans secured by gold and immovable assets.*

இயக்குநர்கள் :

திரு T. V. சீனிவாசன்

திரு P. K. சந்திரசேகரன்

திரு ப்ரவின் கோவிந்தராவ்

திருமதி P. C. சுந்தரவதனி

திரு K. G. கிருஷ்ணன்

திரு P. K. C. ரமேஷ்

திரு D. தனுஷ்கோடி

திரு P. C. பாஸ்கர்

திரு K. R. நிரஞ்ஜன் குமார்

திரு P. C. சியாம் சுந்தர்

OUR VALUED DEPOSITORS



Mr. D. B. SAXENA
Past President
The Institute of
Company Secretaries
of India



'இன்னிசைப் பேரரசு'
T. V. SANKARANARAYANAN

சேமிப்பேசெழிப்புக்குவழிகாட்டும்

எல்லாச் சுற்றுலாக்களும் சென்னையிலிருந்து கிளம்புவது போல் அமைக்கப்பட்டிருக்கின்றனவே என்று வெளியூர் வாசகர்கள் கோபிக்க வேண்டாம். ஒரு குறிப்பிட்ட இடத்தினைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே என்பதற்காகத் தமிழகத் தலைநகரை உதாரணமாக வைத்திருக்கிறோம். மற்றபடி வெளிமாவட்டத்தினர் தங்களது இடம், கொடுக்கப்பட்டுள்ள சுற்றுலாவில் முதலில் செல்லுமிடம் - ஆகியவற்றில் எது தங்களுக்கு அருகில் உள்ளதோ, அந்த இடத்திலிருந்து கிளம்பலாம்.

சுற்றுலா -1

மொத்த நாட்கள் - 10 நாட்கள்

பார்க்கும் இடங்கள் - பெங்களூர், பேலூர், ஹளபேடு, சிரவணபெல்கோலா, மைசூர், முதுமலை வனவிலங்குகள் சரணாலயம், ஊட்டி.

பெங்களூருக்குச் சென்னையிலிருந்து செல்ல ரயில், பஸ், விமானம் என்று பலவகைப் போக்குவரத்து உண்டு. இரவு பெங்களூர் மெயில் (இரவு 10 மணி) ஏறினால் மறுநாள் காலை ஆறு மணிக்குள் பெங்களூரை அடைந்து விடலாம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அல்லது பல தனியார் நிறுவனங்களின் பேருந்துகளும் உண்டு.

பெங்களூரில் நகரச் சுற்றுலா. அரை நாளுக்கான கண்டக்டட் டூரை கர்நாடக


எத்தனை நாட்களில் எங்கு

மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது. காலை 7.30லிருந்து 2 மணி வரை ஒரு ட்ரிப். மாலை 1.30லிருந்து இரவு 7.30வரை மற்றொரு ட்ரிப். இரண்டில் ஏதாவதொன்றில் கலந்து கொள்ளலாம். காலை ட்ரிப்பில் சென்றால் நகரத்தில் மனதுக்குப் பிடித்த இடமொன்றுக்கு மாலை தனியாக குடும்பத்தோடு சென்று களிக்கலாம். ஆட்டோவில் கூட செல்லலாம். நிறைய ஆட்டோ கிடைக்கும். பெரும்பாலும் மீட்டருக்கு மேல் கேட்காத ஆட்டோக்கள்.

மூன்றாவது நாள் பெங்களூரிலிருந்து 'பேலூர், ஹளபேடு, சிரவண பெல்கோலா' ஆகிய இடங்களுக்குச் செல்லும் கண்ட்க்டட் டூரில் சேர்ந்து கொள்ளலாம். கர்நாடக மாநில சுற்றுலா வளர்ச்சிக்

✱ கொனாரக் : சூரியக் கோயிலின் நுழைவாயில்.





✱ டெல்லிக் கோட்டை

போகலாம்?

கழகம் நடத்தும் இந்த டூர் காலை 7.15க்குக் கிளம்பி இரவு பத்து மணிக்கு முடிவடைகிறது. ஒருவருக்கான கட்டணம் 185 ரூபாய்.

மீண்டும் பெங்களூர் வந்து விட்டீர்கள் அல்லவா? மைசூர் சென்று வரவும் ஒருநாள் கண்டக்டட் டூர் உள்ளது. என்றாலும் ஒரு மாறுதலுக்கு நீங்களே மைசூருக்குப் பயணம் செய்யலாமே. பெங்களூரிலிருந்து மைசூருக்கு நிறைய பஸ்கள் உண்டு - 15 நிமிடங்களுக்கு ஒன்று வகையில். ரயிலிலும் போகலாம். பயண நேரம் சுமார் 3 மணிகள்.

மைசூரில் பல தங்குமிடங்கள் உள்ளன. தன்வந்தரி சாலையிலுள்ளவை பர்ஸின் வீக்கத்தை அதிகம் குறைக்காதவை.

மைசூரில் இரண்டு நாட்கள் தங்கலாம். சாமுண்டீஸ்வரி கோயிலைத் தரிசித்து விட்டு, அங்கிருந்து ஸ்ரீரங்கபட்டினம் (16கிமீ), பிருந்தாவன் தோட்டம் (19 கிமீ) மற்றும் சோம்நாத்பூர் (40 கிமீ) ஆகிய இடங் களுக்குச் சென்று வரலாம். ஒரு முக்கிய விஷயம். இப்போதெல்லாம் பிருந்தாவன் கார்டன்ஸில் கண்கவர் வண்ண ஒளி விளக்குகளை ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே (இரவு ஏழிலிருந்து ஒன்பது மணி வரை) பார்க்க முடியும். எனவே மைசூர்





✱ இரவில் ஜொலிக்கும் டெல்லி ராஷ்டிரபதி பவன்...

போவது ஞாயிற்றுக் கிழமையாக வரும் படி வைத்துக் கொள்ளலாம்.

மைசூரைப் பார்த்தா யிற்று. அடுத்தது அங்கிருந்து 94 கிமீ தொலைவிலுள்ள முது மலை வனவிலங்குகள் சரணாலயத்துக்குப் போகலாம். நேரடியான பஸ்ஸு"ம் உண்டு. ஊட்டிக்குப் போகும் பஸ்களும் முதுமலை யில் நிற்கும்.

காலை 6லிருந்து 9மணிவரை மற்றும் மாலை 4லிருந்து 6 மணி வரை சரணாலயம் திறந்திருக்கும். குழுவாகச் செல்பவர் களுக்கு யூத் ஹாஸ்டல் தங்க ஏற்றது. வனத் துறையினரின் விருந்தினரகமும் உண்டு. 'ரேஞ்சு ஆபீசர், வனவிலங்குகள் வார்டன் அலுவகம், குன்னூர் சாலை, ஊட்டி என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டால் முன் னதாகவே முதுமலையில் தங்குமிடத்தைப் பதிவு செய்து கொள்ளலாம்.

யானையின் மீது அமர்ந்தவாறே முது மலைப் பகுதிகளைப் பார்க்கலாம். ஒரு மணி நேரத்திற்கு சுமார் 25 ரூபாய் வாடகை. இதற்கும் சற்று முன்பே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முதுமலையிலிருந்து 73 கிமீ தொலை வில் ஊட்டி. இங்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கலாம். (பார்க்க - மலைவாச ஸ்தலங்கள் கட்டுரை). ஊட்டியை அடிப் படையாக வைத்துக் கொண்டு குன்னூர் (17 கிமீ) கோத்தகிரி (29 கிமீ)ஆகிய இடங் களுக்குச் சென்று வரலாம்.

ஊட்டியிலிருந்து மேட்டுப்பாளையம் வழியாகவோ, கோவை வழியாகவோ சென்னை திரும்பலாம். இரவு 7.20க்குக் கிளம்பும் நீலகிரி எக்ஸ்பிரஸ் அடுத்த நாள் காலை 5.50க்குச் சென்னை வந்து சேரு கிறது.

சுற்றுலா -2

மொத்த நாட்கள் - 15

பார்க்கும் இடங்கள் - கொடைக்கானல், மதுரை, தேக்கடி, கொச்சி, எர்ணா குளம், திருவனந்தபுரம், கன் னியாகுமரி, கோவளம்.

இரவு 7.05க்கு சென் னையிலிருந்து கிளம்பும் பாண்டியன் எக்ஸ்பிரஸ் மறுநாள் காலை 5 மணிக்கு 'கொடைரோடை' அடை கிறது. அங்கிருந்து கொடைக்கானலை மூன்று மணி நேரத்தில் பஸ்ஸில் அடைய லாம். அங்கு இரண்டு நாட்கள் தங்க லாம் (பார்க்க - மலை வாசஸ்தலங்கள் கட் டுரை).


கொடைக்கானலிலிருந்தும் 120 கிமீ தொலைவிலுள்ள மதுரைக்குப் பஸ்ஸில் போகலாம். நிறைய பஸ்கள் உண்டு. நான்கு மணி நேரப் பயணம். மீனாட்சி அம்மன் ஆலயம் காலை 4.30லிருந்து 12.30 வரையிலும், மாலை 4லிருந்து இரவு 9.45 வரையிலும் திறந்திருக் கிறது.

திருமலை நாயக்கர் மகாலின் ஒலி- ஒளிக் காட்சியைத் தவறாமல் பார்க்கவும். நேரம் இரவு 7-8 (ஆங்கில வர்ணனை யுடன்).


திருப்பரங்குன்றமும் அருகேதான் உள்ளது.

மதுரையில் இரண்டு நாட்கள் இப்படி ஆகிவிடக் கூடும். பிறகு பெரியார் வன விலங்குகள் சரணாலயத்துக்குப் போகலாம் (தேக்கடி). மதுரையிலிருந்து 140கிமீ.யில் உள்ளது. ஆரேபாளையம் பஸ்நிறுத்தத்தி லிருந்து காலை 6.20 மற்றும் மாலை 5.50 ஆகிய நேரங்களில் இரண்டு பஸ்கள் (பாண் டியன் ரோட்வேஸ்) கிளம்புகின்றன. கட்ட ணம் 19 ரூபாய்.

இதற்குப் பதிலாக குமிலி சென்று அங்கிருந்து தேக்கடியை ஜீப் அல்லது வேனி லும் அடையலாம். குமிலிக்கு ஒரு மணிக்கு ஒரு பஸ் என்ற விகிதத்தில் உண்டு. குமிலி யில் தங்குவது நல்லது. நிறைய கட்டணக்



எழில் கேசத்தின்
ரகசியம்!



அஸ்வினி

ஹோமியோ ஹேர் ஆயில்

புதிய நற்குணங்களுடன் கூடிய சுத்தமான தேங்காய் எண்ணெய் கலந்தது

- பிசுபிசுப்பற்றது.
- நரைமுடி, மற்றும் முடி உதிர்வதைத் தடுக்கிறது.
- வளமான ஆரோக்கியமான முடி வளரத் தூண்டுகிறது.

இதற்கு மேலும் கூறிட வேண்டுமா...
இன்றே உபயோகித்துப் பாருங்கள்.

அஸ்வினிக்கு நன்றி!

வணக்கம். நான் தற்பொழுது தங்களின் அஸ்வினி ஹேர் ஆயிலை பயன்படுத்தி வருகின்றேன். அதை உபயோகித்ததில் இருந்து எனது தலைமுடி மிக நன்றாக வளரத் தொடங்கியுள்ளது. மேலும் ஒருவித உற்சாகத்தை உணர்கின்றேன்.

தங்களது தயாரிப்புக்கு எனது வாழ்த்துக்கள்.

நாராயணன்
ஸ்ரீ மலர் மெடிக்கல்ஸ், சாயிபாபா காலனி
கோவை 641 011.

தயாரிப்பாளர்:
அஸ்வினி ஹோமியோ பார்மஸி
5-263 A, HP ரோடு, மூஸாபேட், ஹைதராபாத் 500 018.

அனைத்து பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

விரைவில் எல்லோர் நினைவிலும் நிலைத்து நிற்கும் ஹேர் ஆயில் — அஸ்வினி!

MAC/1510

இலவசம்

100 கிராம் MTR வடை மிக்ஸ்

ஒவ்வொரு 200 கிராம் MTR குலாப் ஜாமூன் மிக்ஸுடன்



MTR

தூய்மையின் பிறப்பிடம்

எம்.டி.ஆர். ஃபுட் புராடக்ட்ஸ்

இருப்பு உள்ளவரை மட்டுமே இச்சலுகை

இச்சலுகை தமிழ்நாட்டில் மட்டுமே.

Sista's-09/93

குறைவான தங்குமிடங்கள் உண்டு. பெரியார் சரணாலயத்துக்கு ஜூனிலிருந்து செப்டம்பரில் போவது சிபாரிசு செய்யத் தக்கது அல்ல. அக்டோபரிலிருந்து ஏப்ரல் மாதம் வரைதான் பெஸ்ட். பெரியாரிலும் ஒரு நாள் தங்கலாம்.


தேக்கடியில் ஆரண்ய நிவாஸ் ஓட்டல் தினமும் படகுச் சவாரியை ஏற்பாடு செய்கிறது. காலை ஏழு மணியிலிருந்து மாலை 3 மணி வரை ஏதாவது இரண்டு மணிநேரப் படகுச் சவாரி செய்யலாம். பெரியவர்களுக்குத் தலா 25ரூபாய் கட்டணம் (12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அதில் பாதி கட்டணம்).

அடுத்து கொச்சிக்குப் போகலாம். தேக்கடியிலிருந்து 200 கிமீ தொலைவில் அமைந்துள்ள கொச்சிக்கு அங்கிருந்து நிறைய பஸ் வசதி உண்டு. சுமார் ஆறு மணி நேரத்தில் அடையலாம்.

கொச்சியில் உங்கள் பர்ஸுக்கேற்ற தங்குமிடத்தைத் தேர்ந்தெடுக்க முடியும். கேரள மாநில சுற்றுலாக் கழகம் ஏற்பாடு செய்யும் டூரில் பஸ் மற்றும் படகு ஆகிய இரண்டு போக்குவரத்து அனுபவமும் உண்டு. தினமும் காலை 9 மணியிலிருந்து மதியம் 12.30 வரை ஒரு ட்ரிப்பும், மாலை 2 முதல் 5.30 வரை மற்றொரு ட்ரிப்பும் உண்டு. எர்ணாகுளத்திலிருந்து கிளம்புகிறது இந்த ட்ரிப். (எர்ணாகுளமும் கொச்சியும் வெகு அருகில் உள்ள இடங்கள்).

கொச்சியில் இரு நாட்கள் தங்கலாம்.

* இராஜஸ்தான் கனோசர்....



கொச்சியிலிருந்து கொயிலோனுக்குப் போக ஒரு அற்புத வழி உண்டு. கொச்சியிலிருந்து 64 கிமீ தள்ளியுள்ள ஆலப்பே என்ற இடத்துக்குப் பஸ்ஸில் செல்லலாம். அங்கிருந்து கொயிலோன் வரை உள்ள 79 கிமீ தொலைவை படகு மூலம் கடக்கலாம். இருபுறமும் தென்னையும், பசுமையுமாக கண்ணுக்கு இந்த வழி ரொம்ப ரம்மியமாக இருக்கும். வழியில் அங்கங்கே நிறுத்தங்களும் உண்டு.

கொயிலோனில் பார்ப்பதற்குப் பிரமாதமாக எதுவுமில்லை. அங்கிருந்து திருவனந்தபுரத்துக்குச் (71 கிமீ) செல்லலாம்.

திருவனந்தபுரத்தில் அந்த மாநில கண்டக்டட் டூரை (நகரச் சுற்றுலா) நடத்துகிறது. காலை 8 மணிக்குக் கிளம்பி இரவு 7 மணிக்குத் திரும்பும் இதற்கான கட்டணம் 60 ரூபாய்.

அருகிலுள்ள (19 கிமீ) அழகிய கடற்கரையான கோவளத்துக்குத் தவறாமல் சென்று வரவும்.

திருவனந்தபுரத்திலிருந்து 88 கி. மீ. தொலைவிலுள்ள கன்னியாகுமரி நோக்கிப் போகலாம். அங்கிருந்து சுசீந்திரம் கோயிலின் தாணுமாலய ஸ்வாமி கோயிலை தரிசிக்கலாம். கன்னியாகுமரியில் இரு நாட்கள் தங்கிப் பல இடங்களைப் பார்க்கலாம். முக்கியமானது விவேகானந்தர் கேந்திரம்.

மீண்டும் சென்னை திரும்பலாம்.

சுற்றுலா –3

மொத்த நாட்கள் – 15

பார்க்கும் இடங்கள் – புவனேஸ்வர், பூரி, கொனாரக், கல்கத்தா, டார்ஜிலிங்

சென்னையிலிருந்து புவனேஸ்வருக்குச் செல்ல கொரமாண்டல் எக்ஸ்பிரஸ் ஏற்றது. காலை 8.10க்குக் கிளம்பினால் மறுநாள் காலை 4.10 க்குப் போய் விடலாம். புவனேஸ்வரில் இரண்டு நாட்கள் தங்கலாம். ஒரு நாள் ஒரிஸா மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் நகரச் சுற்றுலா. கண்டக்டட் டூர். காலை 9

மணியிலிருந்து மாலை 5 மணி வரை. கட்டணம் 65 ரூபாய். அடுத்த நாள் பூரி மற்றும் கொனாரக் டூர் காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை. கட்டணம் 75 ரூபாய்.

புவனேஸ்வரிலிருந்து கல்கத்தா செல்ல முக்கிய ரயில் தடங்கள் மூன்று உண்டு. ஹௌரா மெயில் இரவு 10.10க்குக் கிளம்பி மறுநாள் காலை 7 மணிக்கு கல்கத்தாவை அடைகிறது. பூரி எக்ஸ்பிரஸ் இரவு 8.10 க்குக் கிளம்பி காலை 5.30க்குக் கல்கத்தாவை அடைகிறது. ஜெகன்னாத் எக்ஸ்பிரஸ் இரவு 10.55க்குக் கிளம்பி காலை 8.25க்குக் கல்கத்தா சேருகிறது.

கல்கத்தாவில் நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதுடன் (கண்டக்டட் டூர் - காலை 7.30 லிருந்து மாலை 5.30 வரை. கட்டணம் 55 ரூபாய்), சுந்தரவனப் புலிகள் சரணாலயத்தையும் விசிட் செய்யலாம். இப்படி கல்கத்தாவில் மூன்று நாட்கள் தங்கிய பிறகு டார்ஜிலிங்குக்குச் செல்லலாம்.

கல்கத்தாவிலிருந்து நேரடியாக டார்ஜிலிங் செல்ல முடியாது. காம்ரூப் எக்ஸ்பிரஸ் ஹௌரா (கல்கத்தா)விலிருந்து மாலை 5.33க்குக் கிளம்பி 'நியூ ஜல்பைகுரி'யை காலை 7.05க்கு அடைகிறது. நியூ ஜல்பைகுரிதான் டார்ஜிலிங் மலைத் தொடரின் அடிவாரம். தினமும் காலை 7.15 மற்றும் 9.00 ஆகிய நேரங்களுக்கு மட்டுமே இந்த இடத்திலிருந்து டார்ஜிலிங்குக்குச் செல்ல வண்டி இருக்கிறது.

குறுகிய பாதையில் பொம்மை ரயில் போன்ற ஒன்றில் நாம் பயணம் செய்யும்போது இயற்கையின் அற்புதம் நம் கண்களையும் மனதையும் நிறைக்கும் விதத்தை அனுபவித்தால்தான் புரிந்து கொள்ள முடியும். 90 கிமீ மட்டுமே உள்ள இந்தத் தூரத்தைக் கடக்க எட்டு மணி நேரம் எடுத்துக் கொள்கிறது இந்த ரயில் (அவ்வளவு உயரமான பாதை). டார்ஜிலிங்கில் 2 நாட்கள் தங்கி ரசிக்கும் அளவுக்கு இடங்கள் உண்டு. (பார்க்க மலைவாசஸ்தலங்கள் கட்டுரை). டார்ஜிலிங்கிலிருந்து நியூ ஜல்பைகுரிக்குத் திரும்ப காலை 8.25க்கும், காலை 10.00 மணிக்கும் ரயில் கிளம்புகிறது. அடிவாரத்தை அடைய முறையே மாலை 4.20 மற்றும் 5.45 ஆகும். அங்கிருந்து மறுநாள் காலை 10.30க்குக் கிளம்பும் கௌஹாதி எக்ஸ்பிரஸ் ஏறினால், அதற்கு அடுத்த நாளைக்கு அடுத்த நாளில் விடியற்காலை 4.10க்குச் சென்னை அடையலாம்.

– ஜி. எஸ். எஸ்.

கல்கி


6.3.94 இதழில்...

●● வளம் கொழிக்கும் மினி இந்தியா : ஒரு லிட்டர் பெட்ரோல் ஒரு ரூபாய் பத்து பைசா!

– ஓர் ஆச்சர்யமான உண்மை

●● வேலவன் கையில் வில்லும் அம்பும்!

– ஓர் ஆன்மிக யாத்திரை



●● பட்ஜெட் பஜார்!

– ஹஹஹா பக்கங்கள்

பேக்கேஜ் டூர்

"அசம்பாவிதம் நடந்தால் சுற்றுலாப் பயணிகள் குறைவார்கள்!"

இந்திய அரசு பயணிகளைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்ல சில தனியார் நிறுவனங்களுக்கும் அனுமதி அளிக்கிறது. அப்படிப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான 'சீதா வேர்ல்ட் ட்ராவல் ஏஜென்ஸி' நிறுவனத்தின் சென்னைக் கிளை மேலாளரான அச்சுத மேனனைச் சந்தித்தோம்.



* அச்சுத மேனன்

"சில ஆண்டுகளுக்கு முன்வரை இந்தியச் சுற்றுலாக் கழகமே இரண்டு ஏஸி கோச் (பஸ்)களைத்தான் வைத்திருந்தது. ஆனால் இப்போது தனியார் நிறுவனங்களையும் அங்கீகரித்திருப்பதால் பல சிறந்த வண்டிகள் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைத்துள்ளன. எங்களிடம் மட்டுமே இரண்டு ஏ. ஸி.பஸ்கள் உள்ளன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நம் நாட்டில் பல இடங்களில் சாலை வசதிகள் போதாது. உதாரணமாக மழைக் காலத்தில் மைசூரிலிருந்து ஊட்டிக்குச் செல்லும் பாதையில் பஸ்ஸில் போகும்போது பயணிகள் பாடு வெகு கஷ்டம். அடிக்கடி தூக்கிப் போடும்.

இப்போதைக்கு இந்தியாவில் டெல்லி - சிம்லா - குல்லு - மணாலி டூருக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஊட்டியில் 'ட்ரெக்கிங்', லட்சத் தீவுகளுக்கான சுற்றுலா ஆகியவைகளுக்கு கிராக்கி அதிகமாகியுள்ளது. அதேசமயம் நாட்டின் சில பகுதிகளில் ஏதேனும் அசம்பாவிதம் நடக்குமானால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணிகள் ஆகிய இரு வகையினரும்தான்) கணிசமாகக் குறையும். அயோத்தி சம்பவமும், மகாராட்டிர பூகம்பமும் சில சமீபத்திய உதாரணங்கள்.

வெளிநாடுகளுக்குச் செல்லவும் எங்களைப் போன்ற நிறுவனங்கள் கண்டக்டட் டூர்கள் நடத்துகிறோம். இவற்றில் கலந்து கொள்ள விரும்பும் பயணிகள் முதலில் பாஸ்போர்ட்டுக்கு மனு செய்து வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு எங்களிடம் முன்னமேயே மனு செய்தால் 'குழு விசா' வாங்க ஏற்பாடு செய்வோம். ஐந்து நாட்களிலிருந்து பத்து நாட்கள் வரை வெவ்வேறு கால கட்டங்களுக்குச் செல்லும்படியான பேக்கேஜ் டூர்களை நாங்கள் நடத்துகிறோம். ஹாங்காங், பாங்காக், பட்டயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று வரும் டூருக்குச் சென்ற ஆண்டு ஒருவருக்கு 31,600 ரூபாய் வசூலித்தோம். பொதுவாக இதுபோன்ற பேக்கேஜ் டூரில் நாங்கள் வசூலிக்கும் கட்டணத்தில் விமானத்தில் எகானமி வகுப்புக்கான கட்டணம், இருவர் தங்கும்படியான ஓட்டல் அறைகள், உள்ளூர்களில் விமான நிலையத்திலிருந்து

ஓட்டலுக்கும், சுற்றுலா மையங்களுக்கும் வேன்/பஸ்களில் அழைத்துச் செல்லும் தொகை, காலைச் சிற்றுண்டி, இரவு உணவு ஆகியவை அடங்கும்.

சிங்கப்பூர், மலேசியா, மாலத் தீவு, ஸ்ரீலங்கா, மொரிஷியஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்வதானால் (கடந்த மூன்று வருடங்களுக்குள் இந்த நாடுகளுக்குப் பயணம் சென்றிருக்கவில்லையென்றால்) ஆளுக்கு 250 அமெரிக்க டாலர்கள் (ரூபாய்க்குப் பதிலாகத்தான்) தருவார்கள். தவிர விமான நிலையத்திலும் 50 அமெரிக்க டாலர்கள் தருவார்கள். இதற்குள் செலவுகளை அடக்கிக் கொள்ள வேண்டும். உலகின் மற்ற நாடுகளுக்குச் செல்ல ஐந்நூறு அமெரிக்க (அதாவது யு. எஸ்.) டாலர்கள் தருவார்கள்.

முன்பு சிங்கப்பூர், மலேசியா போன்ற கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் அதிகமாகி விட்டதாலோ என்னவோ) தென்னாப்பிரிக்காவின் பக்கமாகப் பார்வை திரும்பியிருக்கிறது. ஆஸ்திரேலியா ஒரு சிறந்த சுற்றுலா நாடு என்றாலும் அந்நாடு விசா வழங்குவதில் ஏகக் கெடுபிடி செய்கிறது. சரித்திரப் பின்னணி இல்லாத நாடான யு. எஸ். ஏ. வுக்கு ஒரு பெருமைக்காகவே சென்றுவர விரும்புபவர்கள் எப்போதுமே உண்டு.

வெளிநாடுகளுக்குச் செல்லும்போது உடை விஷயத்தில் கொஞ்சம் கவனம் தேவை. வெளிநாட்டினர் இங்கு அரைக்கால் ட்ரௌஸருடன் வந்தால் கூட நாம் அவர்களை வரவேற்கிறோம். ஆனால் பல வெளிநாட்டு ஹோட்டல்களில் வேட்டி அல்லது லுங்கியோடு (முக்கியமாக அவற்றை மடித்துக் கட்டிக் கொண்டு) சென்றால் அனுமதிப்பதில்லை."

கண்டக்டட் டூர்கள் சௌகரியமா, அசௌகரியமா?

- ஓர் அலசல்

சுற்றுலாக் கழகங்களும், சில தனியார் நிறுவனங்களும்



கண்டக்டட் டூர்களை இந்தியாவில் நடத்து கின்றன. இவற்றில் உங்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொண்டு வெவ்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு உங்களை அழைத்துச் சென்று மீண்டும் கிளம்பிய இடத்திலேயே உங்களைக் கொண்டு விட்டு விடுவார்கள். இப்படி அவர்கள் வசூலிக்கும் தொகையில் போக்குவரத்துச் செலவு, இரவில் தங்குவதற்கான தேவை ஏற்பட்டால் தங்குமிடத்திற்கான கட்டணம் ஆகியவை அடங்கும். பொதுவாக சிற்றுண்டி, உணவு போன்றவற்றிற்கு நீங்கள் தனித்தனியாக அவ்வப்போது பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

இதுபோன்ற கண்டக்டட் டூர்களில் சாதகமான அம்சங்களும் உண்டு. அவஸ்தைகளும் உண்டு.

முக்கியமான நன்மை என்னவென்றால் நமது நேரம் நிறைய மிச்சமாக இவற்றில் வாய்ப்பு உண்டு. தனியாகக் குடும்பத்துடன் ரயிலிலோ பஸ்ஸிலோ போனால் இரண்டு நாட்களில் ஐந்து இடங்களைப் பார்க்க முடியுமென்றால், இதுபோன்ற டூர்களில் ஒரே நாளில் அவற்றைப் பார்க்க முடியும். இதனால் நேரம் மட்டுமல்ல, சேமிக்க முடிந்த காலத்துக்கான உணவு, தங்குமிடச் செலவு ஆகியவையும் லாபமாகும்.

ஒவ்வொரு சுற்றுலா மையத்திலும் மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. பஸ்ஸிலேயே வைத்துவிட்டுப் போகலாம். ஓட்டுனர் பெரும்பாலும் அருகிலேயே காவல் இருப்பார்.

சில இடங்களில் உள்ளே நுழைய அனுமதி வேண்டியிருக்கும். நுழைவுக் கட்டணமும் செலுத்த வேண்டியிருக்கலாம். கண்டக்டட் டூரின் பிரதிநிதி அடிக்கடி அந்த இடங்களுக்குச் செல்வதாலும், மொத்தமாக அனைவருக்கும் சேர்த்து நுழைவுச் சீட்டை வாங்குவதாலும் அலைச்சலும் வரிசையில் காத்திருக்கும் நேரமும் மிச்சமாகிறது.

ஒவ்வொரு டூரிலும் பயிற்சியளிக்கப்பட்ட ஒரு வழிகாட்டி ஒருவரும் அனுப்பப்படுவதால் சுற்றுலா இடங்களைப் பற்றிய சரியான விவரங்களை அவர் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. எந்தப் பொருளை எங்கே வாங்குவது போன்ற விஷயங்களைத் தீர்மானிக்கவும் இந்த வழிகாட்டி உதவுவார்.

''சுற்றுலா மையம் நாம் போகும் நேரத்துக்குத் திறந்திருக்குமா? அங்கே தங்க இடம் கிடைக்குமா? அங்கிருந்து இரவே கிளம்பி விடுவதானால் அங்கிருந்து அடுத்த சுற்றுலா மையத்துக்கு ரயிலோ பஸ்ஸோ கிடைக்குமா?'' என்பது போன்ற டென்ஷன் அளிக்கக் கூடிய மன நிலையைத் தவிர்க்கலாம்.

குடும்பத்துடன் செல்வது ஒருவித மகிழ்ச்சி என்றால் பலவித சக பயணிகளோடு செல்வதும் அவர்களோடு சில நாட்களுக்கு ஒரு குடும்பம் போல் பழகுவதும் தனி அனுபவம்தான்.

ஆனால் கண்டக்டட் டூர்களில் சில உறுத்தலான அம்சங்களும் இல்லாமல் இல்லை.

ஒவ்வோர் இடத்திலும் நேரம் முன்னமேயே நிர்ணயிக்கப்பட்டு விடுவதால் சில இடங்களை முழுமையாகப் பார்த்து ரசிக்க முடியாமல், திருப்தியே இல்லாமல் அவசர அவசரமாகப் பேருந்தில் ஏறிவிட வேண்டியிருக்கும். அப்படி ஏறிய பிறகு யாராவது ஒரு சக பயணி ஆடி அசைந்து கொண்டு பல நிமிடங்கள் கழித்து வந்து சேரும் வரை வண்டி கிளம்பாமல் இருக்கும் போது அதிருப்தி கோபமாகவே மாறக் கூடும்.

எல்லா வழிகாட்டிகளும் நமக்குப் போதிய அளவு உதவியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. கோட்டை போன்ற உயரமான இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் ''இப்போது மணி மூணரை. ஐந்து மணிக்குத் திரும்ப வந்து



இப்போது விதவிதமான பிளாஸ்டிக் கண்டெய்னர்களில் ஷாம்பூக்கள் வருகின்றன. உபயோகித்து முடிந்தவுடன் தூக்கி எறியாமல் சுத்தம் செய்து நல்லெண்ணெய் ஊற்றி வைத்துக் கொள்ளவும். பூஜையறையில் விளக்குக்குப் பக்கத்தில் அதை வைத்தால் விளக்கு ஏற்றும் போது எண்ணெய் விட எளிதாக இருக்கும். கீழே சிந்தாது. கறை படியாது. பார்க்கவும் அழகாக இருக்கும்.

- ஏ. பி. உஷா



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ் குரூப்

வர்த்தக அலுவலகம்: 221, சத்தியமூர்த்தி சாலை, இராம் நகர்,
கோயமுத்தூர் - 641 009. போன்: 230463.

50 ஆண்டுகளுக்கு
மேலான
அரிய சேவை

டெபாசிட் திட்டங்கள்

குறுகிய கால டெபாசிட் | பிக்சட் டெபாசிட்

காலம்	1 நாள் முதல் 90 நாட்கள் முடிய	91 நாட்கள் முதல் 180 முடிய	181 நாட்கள் முதல் 365 முடிய	12 மாதங்களுக்கு	25 மாதங்களுக்கு	36 மாதங்களுக்கு	48 மாதங்களுக்கு	60 மாதங்களுக்கு
வட்டி விகிதம் ஆண்டுக்கு	15%	16%	17%	18%	18.5%	19%	19.5%	20%
				17%	17.5%	18%	18.5%	19%
				16%	16.5%	17%	17.5%	18%

சுபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- செலுத்தினால் 45 மாதங்களில் ரூ. 21,000/- கிடைக்கிறது.

ரூ. 10,000/-ம் அதன் மடங்கில் பணம் செலுத்துவோர் மட்டுமே பங்கு பெற முடியும்

ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

மாத தவணைத் தொகை ரூ.	காலக்கெடுவில் பெறவுள்ள முதிர்வுத்தொகை				
	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
100	1310	2850	4680	6870	9490
250	3275	7125	11700	17175	23725
500	6550	14250	23400	34350	47450

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்


டெபாசிட் தொகை ரூ.	முதிர்வு அடையும் போது பெறும் தொகை		
	45 மாதங்கள்	68 மாதங்கள்	90 மாதங்கள்
1000	2000	3000	4000
5000	10000	15000	20000
7500	15000	22500	30000
10000	20000	30000	40000

- 45 மாதங்களில் இரு மடங்கு
- 68 மாதங்களில் மூன்று மடங்கு
- 90 மாதங்களில் நான்கு மடங்கு

நகைக்கடன் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கு கடனுதவியும் வழங்கப்படும்

செழுமை தரும் சேமிப்பு திட்டங்கள்! ஐஸ்வர்யத்தின் அட்சயபாத்திரம் - ஐசிஎஸ்!


வெல்வெட் ஹங்காமா
5 வெல்வெட் ஷாம்பூ
சேஷே வாங்கினால்
1 சேஷே இலவசம்
New Velvette
JASMINE
1 வெல்வெட் ஷாம்பூ 100ml பாட்டில் வாங்கினால்
5 சேஷே இலவசம்
இந்தியாவில் முதல் முறையாக ஷாம்பூவை சேஷேயில் அறிமுகப்படுத்திய வெல்வெட், இப்போது உங்களுக்கு அளிக்கிறது இரட்டிப்பு மகிழ்ச்சி...
மகத்தான ஹங்காமா சலுகை... காலி சேஷேக்களை சேமிக்க தேவையில்லை. வெல்வெட் ஷாம்பு வாங்கினால் கைமேல் பலன் — உடனடி சலுகை.
ஒப்பற்ற கூந்தல்... வெல்வெட்டின் பிளாக், எக், ரோஸ், ஜாஸ்மின், சாண்டல் மற்றும் பல்வேறு நறுமணங்களிலிருந்து உங்களுக்கு விருப்பமானதை வாங்குங்கள். உங்கள் கூந்தலில் மென்மை, பொலிவு, அழகைக் கூட்டிடுங்கள்.
New Velvette
PLUS
ROSE
Velvette
இச்சலுகை தென்னிந்தியாவில் மார்ச் 31, 1994 வரை மட்டுமே.



புத்தாண்டிற்காக என் கணவருக்கு ஒரு சிகரெட் கம்பெனிக்காரர் டிராவல் ஏர் பேக் ஒன்றைக் கொடுத்தார். மிகவும் நன்றாக இருந்த அந்தப் பையை என் கணவர் டூர் போகும் போது கொண்டு செல்வதற்கு வெட்கப்பட்டார். காரணம் : அதில் எழுதியிருந்த சிகரெட் வாசகங்கள். நான் பெரிய சைஸில் உள்ள மிக்கி மௌஸ் ஸ்டிக்கர்களை வாங்கி விளம்பர வாசகங்களின்மேல் ஒட்டிவிட்டேன். புதுப் பொலிவுடன் கூடிய அந்தப் பையை என் கணவர் இப்போதெல்லாம் விடுவதேயில்லை.

– என். பங்கஜம்

விடுங்கள்'' என்று கூறிவிட்டுக் கீழே ஹாய் யாக நின்றுவிடும் வழிகாட்டிகளை நாம் சந்தித்ததுண்டு. கோட்டையிலுள்ள சரித்திரச் சின்னங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளாமலே நாம் பார்த்துவிட்டு வரவேண்டியதுதான். லக்னோவைச் சுற்றிப் பார்த்தபோது அந்த கண்டக்டட் டூரில் வழிகாட்டிக்கு ஆங்கிலமே தெரியாமல் போய் பல விவரங்களை அறியாமல் வந்த ஏக்கமும் நமக்கு உண்டு.

ஏதாவது இடத்தில் உடல்நலமில்லாமல் போய் இங்கேயே அதிக நேரம் இளைப்பாறிவிட்டு மறுநாள் அடுத்த இடத்துக்குப் போகலாம் என்று இருக்க முடியாது. மற்றவர் எவ்வழி நாமும் அவ்வழி என்று கிளம்ப வேண்டியதுதான்.

ஏற்கெனவே குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே குதிரைக்குக் கடிவாளம் போட்டது போல் கண்டக்டட் டூரில் செல்வார்கள். அருகிலேயே நமக்குப் பிடித்த வேறு ஏதாவது சுற்றுலா மையம் இருந்தால் கூட அதற்குப் போக முடியாமல் போகக் கூடும்.

இரவுத் தங்கலுக்காகச் சில இடங்களில் நிறுத்திவிட்டு டார்மிடரி அகாமடேஷன் கொடுப்பார்கள். இவற்றில் குடும்பம் குடும்பமாகத் தங்க முடியாது. பொத்தம் பொதுவாக நீண்ட ஹால் போன்று இருக்கும். ப்ரைவஸி இல்லாமல் ரொம்பக் கஷ்டப்பட வேண்டி இருக்கும்.

சில இடங்களில் தினமும் நகரத்திலுள்ள இடங்களைச் சுற்றிக் காட்டும் கண்டக்டட் டூர்கள் இருக்கும். அந்த இடங்களில் பல ஒரு குறிப்பிட்ட நாளில் வார விடுமுறை காரணமாக மூடப்பட்டிருக்கும்.

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது நமக்கு இருக்கும் நாட்களையும், பொருளாதாரத்தையும், பொறுத்துச் சில இடங்களுக்குக் கண்டக்டட் டூர்களையும், ஓரிரு இடங்களுக்காவது தனியாகவும் குடும்பத்தோடும் செல்வது சரியான யோசனையாக இருக்கும்.

அனுபவம் புதுமை

சென்ற ஆண்டு பேக்கேஜ் டூரில் ஹாங்காங் - சிங்கப்பூர் சென்று வந்த திருமதி மீனா ராமனாதனின் அனுபவங்களும், யோசனைகளும்.

''சமீபத்தில் குடும்பத்தில் நடந்த துக்கத்தால் மனம் இடிந்துபோய் எனக்கு மாறுதல் தேவை என்று எண்ணினேன். தனியாகவே ஒரு வெளிநாட்டுச் சுற்றுலா போனால் என்ன என நினைத்து அந்த யோசனையைச் செயல்படுத்தினேன். அதுபோல் செல்லத் தீர்மானிப்பவர்களுக்கு என்னுடைய சில அனுபவரீதியான யோசனைகள் உதவுமென்று எண்ணுகிறேன்.

பேசுவதற்காவது ஆங்கிலம் தெரிந்திருப்பது அவசியமெனப்படுகிறது. ஒரு சூட்கேஸ், ஒரு கைப்பை இவற்றுடனே கிளம்ப வேண்டியிருக்கும். அதிகபட்சம் முப்பது கிலோதான் எடை அனுமதிப்பு உண்டு.

ஐந்நூறு டாலர்கள் அன்னியச் செலாவணியாகக் கொடுக்கிறார்கள் என்றாலும் விமான நிலையக் கட்டணம், விசா வாங்க ஆகியவற்றுக்கே சுமார் 200 டாலர்கள் செலவழிந்து விடுகின்றன.

பேக்கேஜ் டூர்களின்போது சில நாட்களில் ''இன்று முழுவதும் உங்களை ஃப்ரீயாக விட்டு விடுகிறோம். உங்களுக்குத் தேவையான ஷாப்பிங்கோ, பிடித்த வேறு இடங்களுக்கோ செல்லலாம்'' என்று சொல்லி விடுகிறார்கள் ட்ராவல் ஏஜென்ஸிக்காரர்கள். அன்றெல்லாம் மதிய உணவு நம்மைச் சேர்ந்துவிடும். படகுச் சவாரி போன்ற சிலவற்றிற்கு அனுமதிக் கட்டணத்தையும் நாமே செலுத்த வேண்டியிருக்கும். ஆயிரக்கணக்கான ரூபாயைக் கட்டிவிட்டோமே மற்றபடி நமக்குச் செலவு இருக்காது என்று எண்ணினால் ஏமாற்றம்தான் உண்டாகும்.

சமயோசிதமும், நினைத்ததை வெளிப்படுத்தும் திறமையும் சமயத்தில் கைகொடுக்கும். ஹாங்காங் விமான நிலையத்தில் எங்கள் குழுவினரைத் தவற விட்டு விட்டேன். விமான நிலையப் பணிப்பெண்ணிடம் கேட்டால் ஆங்கிலம் அறியாத

சமையல் எண்ணை வாங்க,



அதை *வெண்டீ* மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

இது கலப்படமற்ற, தூய சமையல் எண்ணையை தானாக வழங்கும் மெஷின்... (ஆட்டோமேட்டிக்)

விலைகளின் ஒப்பீடு (1 லிட்டர்)			
ரிஃபைன்ட் சூரியகாந்தி எண்ணை		டபிள் ஃபில்டர்ட் கடலை எண்ணை	
பாக்கேஜ்	ரூ. 39 - 40	பாக்கேஜ்	ரூ. 38 - 39
தனியாக அளந்து வாங்குவது	ரூ. 37 - 38	தனியாக அளந்து வாங்குவது	ரூ. 29 - 30
வெண்டீ மூலம் அனுராக்	ரூ. 33.00	வெண்டீ மூலம் டெய்லி	ரூ. 32.50

பாக்கேஜ் எண்ணெயைப் போல் தூய்மையானது. தனியே விற்கப்படும் எண்ணையைப் போல் விலை குறைவானது.

அனுராக்

டெய்லி




புதியதொரு புரட்சிகரமான வழி!

தற்போதுள்ள வெண்டீ நிலையங்கள்:

• நேஷனல் டிரேடர்ஸ், 109, பைகிராப்ட்ஸ் ரோடு, (அமீர் மஹால் அருகில்), இராயப்பேட்டை, சென்னை 14. போன்: 835839. • S.K. புரவிஷன்ஸ் ஸ்டோர்ஸ், 61, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை 15. போன்: 459683. • ICA மெட்ராஸ் (பிரைவேட்) லிட்., எண் 67, C.P. இராமசாமி சாலை, (கார்னிவல் ரெஸ்ட்டாரண்ட் கீழே) சென்னை 18. • ரிலையன்ஸ் ஏஜென்சீஸ், 212/5, செயின்ட் மேரீஸ் ரோடு, (முக்தா கல்யாணமண்டபம் அருகில்) மந்தைவெளி, சென்னை 28. போன்: 72134,72788. • பிரியகாந்த் & பிரதர்ஸ் 385, மிண்ட் தெரு, (சௌகார்பேட்டை தபால் நிலையம் எதிரில்), சென்னை 79. போன்: 5225790,5226333. • திவ்ய லக்ஷ்மி என்டர்பிரைஸ், நெ. 248, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, அமைந்தகரை, (ஐ.ஓ.பி. காம்பவுண்டின் உள்ளே), சென்னை 29, போன்: 6412606, 6427869. • ஸ்ரீ ஸ்கந்தர் மெடிக்கல்ஸ், நெ. 2 எ. ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை 33. போன்: 421339. • விஜய் என்டர்பிரைசஸ், 21, நாகேஸ்வரா சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 34. (சைல்டு ட்ரஸ்ட் ஹாஸ்பிடல் அருகில்), போன்: 8270547 • செல்வி ஏஜென்சீஸ், 30-C, ஸ்டேஷன் ரோடு, வில்லிவாக்கம், சென்னை 49. (டாக்டர் பிரபாகர் கிளினிக் எதிரில்), போன்: 6216878. • சூரஜ் என்டர்பிரைசஸ், 358, லக்ஷ்மணசாமி சாலை, கே. கே. நகர், சென்னை 78. (பத்மா சேஷாத்திரி ஸ்கூல் அருகில்), போன்: 427735. • ஸ்ரீராம் என்டர்பிரைசஸ், 12, 39வது தெரு, நங்கநல்லூரர், (மார்க்கெட் குளம் அருகில்) சென்னை 61. போன்: 2348324. • வாங்கல் ஏஜென்சீஸ், 6, முதல் பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை 20. (கெனால் பேங்க் பஸ் ஸ்டாப் அருகில்) போன்: 410480. • ஜோதி என்டர்பிரைசஸ், 194, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை 7. போன்: 4992552. • அஸ்வின் ஏஜென்சீஸ் ப்ளாட் எண் 33, 3 வது பிரதான சாலை, தன்டீஸ்வரம், வேளச்சேரி, சென்னை 42. • சத்தியநாராயண ஸ்டோர், 6, வண்டிகாரன் தெரு, நேரு நகர், கிண்டி, சென்னை 32. போன்: (பி.பி) 2343759. • பொன்மணி ஸ்டோர்ஸ், கடைஎண் 4, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக்கட்டிடம், பெசன்ட்நகர் (பஸ் நிலையம் அருகில்) சென்னை 90. • ஸ்ரீ ராகவேந்திரர் என்டர்பிரைசஸ், A.P - 723, 'H' ப்ளாக், முதல் தெரு, 12வது மெயின் ரோடு, அண்ணாநகர் (மேற்கு), சென்னை 40. • உமா ஆபீஸஸ், 59/2, கெனால் பேங்க் ரோடு, கிழக்கு சி.ஐ.டி. நகர், சென்னை 35. • ஆர்.பி.எஸ். என்டர்பிரைசஸ், 51-D,' ஹஸ்தினாபுரம் மெயின் ரோடு, நேரு நகர், குரோம்பேட்டை, (எம்.ஐ.டி. மெய்ன் கேட் எதிரில்), சென்னை 44 தொ.பே: 403714 (பி.பி) • ஸ்ரீபுஷ்பா மில்க் பார்லர், 37, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, பல்லாவரம், சென்னை 43. • அரவிந்த் டிரேடர்ஸ், 6, [illegible] துலுக்கு தெரு, (விளையாட்டு மைதானம் எதிரில்), டிரஸ்ட்புரம், சென்னை 24. தொ.பே: 422873. • ஓம் ஸ்ரீ சரஞ் சாய் ஆபீஸஸ், 49, ஆர்க்காட் ரோடு, வளசரவாக்கம், (பஞ்சாயத் போர்டு பஸ் ஸ்டாப் அருகில்), சென்னை 87. தொ. பே. 4827035 (பி.பி). • விஸ்வசாரதி என்டர்பிரைசஸ், 15, பார்த்தசாரதி நகர், 3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை 88. தொ. பே: 2349046 (பி.பி). • பா. துரைராஜ் டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ், (நியாய விலைகடை அருகில்), 72&73, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை, மூலக்கடை, சென்னை 51. • ஸ்வாதி என்டர்பிரைசஸ், 90, காசி எஸ்டேட், ஜாபர்கான்பேட்டை, (காசி தியேட்டர் அருகில்), சென்னை 83. • ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ், 745, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, புது வண்ணாரப்பேட்டை, சென்னை 81. தொ.பே: 551673. • A.K.R. என்டர்பிரைசஸ், 37, நீடராஜப்பய்யர் தெரு, பாண்டிச்சேரி 1. • A.K.R. என்டர்பிரைசஸ், 158, பிரதான சாலை, பாக்குமுடையான்பேட்டை, பாண்டிச்சேரி 8.

பாண்டிச்சேரியில் விலை: அனுராக் ரூ. 33.70, டெய்ஸி ரூ. 33.20.



வெண்டீ

FOUNTAINHEAD 659-83

The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	: Madras
2. Periodicity of Publication	: Monthly
3. Name of Printer	: V. Murali
Nationality	: Indian
Address	: AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
4. Name of Publisher	: V. Murali
Nationality	: Indian
Address	: AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
5. Name of Editor	: Manjula Ramesh
Nationality	: Indian
Address	: 7, Arunachalapuram 2nd street, Adyar, Madras - 600 020

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1994

அவள் கேள்விக்குறியுடன் என்னையே பார்த்தாள். சைகைகளாலேயே என் தவிப்பை விளக்கினேன். புரிந்து கொண்டு அவள், ''உங்கள் குழு மேலே சென்று விட்டது'' என்று கைகாட்டினாள்.

வெளிநாடுகளில் ஓட்டல்களில் 'வாலட்' ஒன்றை இலவசமாகத் தருவார்கள். அதில் நமது பாஸ்போர்ட் போன்றவற்றைப் பத்திரமாக வைத்துப் பூட்டிவிட்டு வெளியே சுற்றிப் பார்க்கச் செல்வது நல்லது; பாதுகாப்பானதும் கூட.

விமானங்களில் சைவ உணவு வேண்டுபவர்கள் ''இந்திய சைவ உணவு'' என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால் முட்டையும் உணவு ஐட்டங்களில் இடம் பெற்றுவிடும்.

நம் நாட்டில் காண முடியாத பல அற்புதங்கள் வெளிநாடுகளில் உண்டு. ஹாங்காங்கில் நான் பார்த்த டால்ஃபின் விளையாட்டுகளும், வைரங்கள் தயாரிப்புத் தொழிலக விசிட்டும், தாய்லாந்து கோயில்களும் மரகத புத்தரும், சிங்கப்பூரிலுள்ள மீன் காட்சியகமும் (நம்மைச் சுற்றியும் கண்ணாடிக் கூண்டுகள். அவற்றில் மீன்கள் நமது தலைக்கு மேலும் பக்கவாட்டிலுமாக நெருக்கமாக விளையாடுகின்றன. சுமார் ஒரு மணி நேரம் இதில் நாம் எஸ்கலேட்டரில் சென்று திரும்புவது அற்புத அனுபவம்). தாய்லாந்தில் உள்ள அலிகள் நடனமும் (முதலில் வழிகாட்டி அழகான பெண்களின் நடனம் என்றுதான் கூறியிருந்தார். அற்புதமான அரங்க அமைப்பு மற்றும் வண்ணச் சேர்க்கையும் நிரம்பிய அந்த நடன நிகழ்ச்சி நடந்த பிறகே பங்கு பெற்றவர்கள் அலிகள் என்ற உண்மையை அறிந்து வியந்தோம்) இவற்றில் சில.

பேக்கேஜ் டூர்களில் பெரும்பாலும் சிறந்த (ஃபைவ் - ஸ்டார் ஓட்டல்களில்) தங்க வைக்கிறார்கள். காலைச் சிற்றுண்டிகளிலேயே பல விதம். ஓட்டலில் அறையில் தங்குமுன் அங்கு என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதை முதலில் பார்ப்பது நல்லது. நான் பாட்டுக்கு பாங்காக்கில் ஓட்டலுக்குள் நுழைந்ததும் ''என் அறைக்குக் காப்பி அனுப்புங்கள்'' என்றேன். எனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்றதும் காப்பி வந்தது. குடித்து விட்டு அறையைச் சுற்றிப் பார்த்தால் காப்பிப் பொடி, பால் பொடி, சர்க்கரை, ஹீட்டர் ஆகியவை வைக்கப்பட்டிருந்தது! ஒரு காப்பி செலவு வீண்.

புதிய உற்சாகமான அனுபவங்களை ஏற்று மகிழத் தயக்கம் வேண்டாம். கேபிள் காரும், கோரல் கடற்கரையும் (படகின் கீழ்ப் பகுதியிலுள்ள மரத் தடுப்பை நீக்கினால் அதற்குக் கீழே கண்ணாடித் தடுப்பின் வழியாகப் பவழங்கள் தெரிந்து ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்துகிறது) அவற்றில் சில. தாய்லாந்திலுள்ள பட்டயா கடற்கரையில் சிறிது நேரம் பாரசூட்டில் பறக்கும் வாய்ப்புக் கிடைத்தது. விடவில்லை. இதில் எந்த ரிஸ்க்கும் இல்லை. படகு ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் பாரசூட்டில் நாம் கட்டப்படுகிறோம். படகு நகர, விசையில் பாரசூட் விரிகிறது. சுமார் பத்து நிமிடங்கள் மேலே ஆகாயம், கீழே கடல் என்று பறந்த அற்புதம் இருக்கிறதே, அதை இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது.

ஷாப்பிங் போகும்போது அந்த நாட்டுப் பழக்க வழக்கத்தை மனத்தில் கொள்வது நல்லது. பாங்காக்கில் பேரம் பேசுவதில் தவறில்லை. ஆனால் பேரம் பேசிக் கொண்டிருக்கும்போதே பாதியில் மனத்தை மாற்றிக் கொண்டு, 'வேண்டாம் இந்தப் பொருள்' என்று நகர்ந்தால் உண்டு இல்லை என்று ஆக்கி விடுகிறார்கள் கடைக்காரர்கள்.

ஷாப்பிங்கின்போது பெருமூச்சு விடுவதோடு நிறுத்திக் கொள்வது நல்லது. சுட்டு மேனிக்கு வாங்கிக் கொண்டு வந்து பிறகு இங்கு அவற்றின் மீது வரிகள் நீட்டப்படும்போது இடிந்து போவது தவிர்க்கக் கூடிய ஒன்று.

– அருண் சரண்யா

கங்கை வழங்கும் வாழ்வு முன்னேற்ற அறிவு நூல்கள், கட்டுரைகள்.

	ரூ.பை
எண்ணங்கள்	
- டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி :	20.00
ஜேம்ஸ் ஆலனின் வாழ்க்கையை அமைக்கும் எண்ணங்கள் ,,	16.00
சிந்தனை தொழில் செல்வம் ,,	20.00
மனம் பிரார்த்தனை மந்திரம் ,,	17.00
உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள் ,,	16.00
தன்னம்பிக்கையும் உயர் தர்ம நெறிகளும் ,,	18.00
பிரச்சினைகளுக்கு முடிவு காண்பது எப்படி? ,,	20.00
நம்மால் முடியும் தம்பி ,,	16.00
மனித உறவுகள் ,,	18.00
நெஞ்சமே அஞ்சாதே ,,	14.00
தட்டுங்கள் திறக்கப்படும் ,,	14.00
ஆத்ம தரிசனம் ,,	10.00
நாடு எங்கே செல்கிறது? ,,	18.00
தலைவன் ஒரு சிந்தனை ,,	18.00
நீதான் தம்பி முதலமைச்சர் ,,	20.00
பி. சி. கணேசன் :	
பொது அறிவு நூல் - I ,,	27.00
பொது அறிவு நூல் - II ,,	22.00
தேர்வுக்கான பொது அறிவுக் கட்டுரைகள் ,,	20.00
மன வலிமையின் மூலம் நோக்கங்களைக் குணப்படுத்தலாம் ,,	12.00
வேலை பார்க்கும் பெண்களின் பிரச்சினைகள் ,,	12.00
ஏகநாதரின் மனைச் சொற்பொழிவும் மனித வாழ்க்கையும் ,,	10.00
இவர்கள் சாதனை புரிந்தது எப்படி? ,,	14.00
யோகங்கள் வெற்றி பெறுங்கள் ,,	12.00
வெற்றிக்கு மாற்றம் தேவை ,,	14.00
திரு.சம்பத்தும் :	
பொது அறிவுக் களஞ்சியம் ,,	23.00
நேருஜி சில நினைவுகள் ,,	10.00
வாழ்வில் வசந்தம் டாக்டர் என்.ஸ்ரீதரன் :	16.00
இனியது இனியது வாழ்க்கை	24.00

	ரூ. பை
உரை அலைகள்	20.00
ஹாத்தியில் போவது எப்படி?	30.00
பாணன் கிரிக்கெட் விநோதங்கள்	7.00
கவிஞர் கண்ணதாசன் :	
வாழ்க்கை எனும் சாலையிலே ,,	5.00
தோட்டத்துப் பூக்கள் ,,	6.00
தெய்வ தரிசனம் ,,	6.00
ஒரு நதியின் கதை ,,	6.00
ஒரு பெண்ணின் கதை ,,	20.00
சினிமா சந்தையில் 30 ஆண்டுகள் ,,	10.00
தமிழ்த் திரைப்பட வரலாறு முக்தா வி.சீனிவாசன் :	100.00
நேரு நூறு பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர்	14.00
வெற்றிக்கு வழிகாட்டும் மேலாண்மை டி.ஆர்.சுன்வப்பிரான்	65.00
கவிஞர் கண்ணதாசனிடம் கண்டதும் கேட்டதும் இராம.கண்ணப்பன்	30.00
மக்கள் வாழ்வில் மரங்கள் வி.வி.வி.ஆனந்தம்	85.00
வாழ்க்கைத் துணை புலவர் கோ.இளையபெருமாள்	5.00
இல்லற வாழ்க்கையை இனிதாக்குவது எப்படி? மா.வரதராஜன்	14.00
திருமணப் பொருத்தம் திரு.காழியூர் நாராயணன்	12.00
நவரத்தினங்கள்	9.00
இளந்தேவன் கவிதைகள் ஒரு பார்வை மு.விவேகானந்தன்	7.50
அறிவு நூல்கள்	
என்ன ஏன் எப்படி? எஸ்.சங்கரன்	13.00
கோமப்படாதீர்கள் பி.சி.கணேசன்	15.00
வாழ்க்கையில் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவை எஸ்.எல்.எஸ்.	12.00
வாழ்க்கை வாழ்வதற்கே சு.சு.ராமலிங்கம்	10.00


தேவையான பிரதிகளை வி.பி.பி. மூலம் பெற கடிதம் எழுதுங்கள். வி. பி. பி. தபால் செலவு தனி. புத்தக வியாபாரிகளுக்கும் பள்ளி, கல்லூரி நூலகங்களுக்கும் தக்க கழிவு தரப்படும். கங்கையின் புதிய புத்தக விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

விவரங்களுக்கு :

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.

THERE CAN BE SO MANY BUILDERS IN THE MARKET LIKE SO MANY FLOWERS IN THE GARDEN BUT ALL THAT YOUR HARD EARNED MONEY NEEDS IS QUALITY



ஃப்ளாட்டுகள் கட்டப்படவுள்ள இடங்கள்:

அக்ஷயா	ஐஸ்வர்யா	ஆசீர்வாத்	ஆதித்யா
16, 3வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 61.	பிளாட் 1 & 2, 2வது மெயின் ரோடு, [illegible] நகர், வேளச்சேரி, சென்னை - 42.	முதல் மெயின், 2 வது மெயின் ரோடு, [illegible], கோடம்பாக்கம், சென்னை - 24.	15/4, ஜெகநாதன் தெரு விரிவு, அமிஞ்சிக்கரை, சென்னை - 29

- உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் டீலக்ஸ் ஃப்ளாட்டுகளும் பங்களாக்களும் சென்னை நகரின் பல்வேறு கௌரவமான பகுதிகளில் கிடைக்கும்.
- கட்டடப் பணியின் முன்னேற்றத்தை ஒட்டி, வட்டியில்லாத தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம். அல்லது மொத்த கட்டணமும் செலுத்தி பத்து சதவிகிதம் தள்ளுபடி பெறலாம்.
- முன்னணி நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி செய்து தரப்படும்.
- நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் ரசனையுடன் அழகாக வடிவமைக்கப்படுகின்றன.
- தரமான கட்டமைப்பு; நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் முடிக்கப்படும்.

CREATORS
NOT JUST BUILDERS

ASSOCIATED BUILDERS

II FLOOR, 26, RANGANATHAN STREET,
T. NAGAR, MADRAS - 600 017. INDIA.
✆ OFF : 440210 / 440224
Res : 2345244 Fax : 2344338

இருந்தாற்போலிருந்து ஏன் இப்படி அடிவயிற்றில் சுரீர் சுரீர் என்று மின்னலாய் வலி தோன்றுகிறது! ஐந்து நிமிடம் பொறுத்தாள். பத்து நிமிடம் பொறுத்தாள். அதற்கு மேல் மாத்யூசால் உட்கார முடியவில்லை. சமூக சேவை நிறுவனத்தின் பொதுக் கூட்டம் பாதிதான் முடிந்திருந்தது. பல்லைக் கடித்து வலியைப் பொறுத்துக் கொள்ளப் பார்த்தாள். ம்ஹூம் முடியவில்லை. ஏதேனும் விபரீதமாகி விட்டால் இல்லை... அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அருகிலிருந்த மிஸஸ் மேனனிடம் தன் சிரமத்தை மெல்லிய குரலில் சொல்லி விட்டு எழுந்து கொண்டாள்.

''நா வேணும்னா உங்க கூட வரட்டுமா? தனியா போறீங்களே.''

''பரவால்ல. போய்டுவேன்'' என்று சொன்னவளால் வாசல் வரைதான் போக முடிந்தது. வலி அதிகமாகி விட்டது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு அவள் உட்கார்ந்ததும் மிஸஸ் மேனன் பதறியபடி எழுந்து ஓடி வந்தாள். மற்ற உறுப்பினர்களும் அவள் நிலை கண்டு ஓடி வர, மாத்யூஸ், ''கூட்டம் நடக்கட்டும் யாராவது ஒருத்தர் என் கூட வாங்க போதும்'' என்று சொல்ல மிஸஸ் மேனன் புறப்பட்டாள்.

இன்னும் மாதம் ஆகாத போது ஏன் இப்படி அவசர வலி? ப்ரீமெச்சூர்ட் பேபியா? ஓ காட்! நல்லபடியா என் கொழந்தை பொறக்குமா? மாத்யூஸ் வலியில் துடித்தாள்.

அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. முன்னேற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. டாக்டர் பதறியபடி வந்தாள். குழந்தையின் ஹார்ட் பீட் பார்க்கப்பட்டது. வயிற்றில் குழந்தையின் பொஸிஷனை பரிசோதித்துப் பார்த்தாள். இல்லை நாளாகவில்லை. எட்டு மாதம் முழுவதும் முடியவில்லை. இந்த வலியை எப்படியும் நிறுத்தியாக வேண்டும். இல்லையென்றால் குழந்தைக்கு ஆபத்துதான்.

டாக்டரின் கெஞ்சல்களை அந்த சிசு துளியும் மதிக்கவில்லை. டாக்டரின் முயற்சிகள் தோல்வியடைந்து கொண்டே வந்தன. மாத்யூஸ் வலியில் பெரிசாய்க் கத்தினாள்.

வலி அதிகமாயிற்றே தவிர வயது தாண்டிய பிரசவமாதலால் இடுப்பெலும்புகள் சிசுவுக்கு வழி விட மறுத்தன. உள்ளே சிசு போராடியது. வெளியே மாத்யூஸ் போராடினாள். இரண்டு பேருக்கும் சேர்த்து டாக்டர்களும் நர்ஸ்களும் போராடினார்கள்.

அப்படியும் இப்படியுமாய்ப் போராடி, குழந்தை பாதி தூரத்தைக் கடந்து விட்டதால் இனி சிசேரியனுக்கும் சாத்தியமில்லாத நிலையில் டாக்டர்கள் தவித்தனர். ''ப்ளீஸ் மாத்யூஸ் கொஞ்சம் டிரை பண்ணுங்க. கொஞ்சம் கொஞ்சம் அப்படித்தான் இன்னும்...ம்... இன்னும் கொஞ்சம் அதே மாதிரி....''

''முடியலையே....'' மாத்யூஸ் பெரிசாய் கத்தி விட்டு இதுவரை குழந்தையை வெளித் தள்ள உள்ளுக்கு இழுத்த மூச்சையெல்லாம் பெருமூச்சாய் வெளித்தள்ள குழந்தை உள்ளே சிரமப்பட்டது.

உச்சிதனை முகர்ந்தால்...

- வித்யா சுப்ரமணியம்

''அய்யோ மூச்சை வெளில இழுத்து விடாதீங்க. குழந்தை மேலுக்கு ஏறிட்டா ஆபத்து. உள்ளுக்கு இழுத்து அமுக்குங்க ப்ளீஸ் மாத்யூஸ்...''

மாத்யூஸ் பலங் கொண்ட மட்டும் மூச்சை உள்ளுக்கு இழுத்தாள். கடவுளே என் குழந்தைக்காக நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சுவாசத்தை விடாம லிருக்கத் தயார்.

அவள் உடம்பில் தெம்பு குறைந்தது. குழந்தையின் வெளியேற்றத்திலேயே கவன மாயிருந்த டாக்டர்கள் மாத்யூஸ் அளவுக் கதிகமாய் சிரமப்பட்டு முயற்சித்து மூச்சை அடக்கிக் கொண்டதால் அவளது நாடி மெலிவதை கவனிக்கத் தவறினர்.

ஒரு வழியாய் குழந்தையின் தலை தெரிந்ததும் அந்த இடம் கத்திரிக் கோலால் கிழிக்கப்பட்ட போது மாத்யூஸ் கடைசி முறையாய் பெரிசாய் அலறினாள். குழந்தை இன்னும் வெளிவரவில்லை என்று மீண்டும் முச்சிழுத்து பலங்கொண்ட மட்டும் முக்கினாள்.

குழந்தை வெளியே வந்ததும் மாத்யூ ஸின் உடம்பு இரண்டு முறை தூக்கிப் போட் டது. ''தண்ணி'' என்றாள் முக்கால் மயக்கத் தில். தண்ணீர் கொண்டு வந்தார்கள். டாக் டர் அவளது நாடியை பரிசோதித்து ''ஆக்ஸி ஜன் ஆக்ஸிஜன்'' என்று கத்த ஆக்ஸிஜன் சிலிண்டர் பொருத்தப்படுவதற்குள் மாத் யூஸ் அடங்கிப் போனாள்.

''ஓ!'' என்று பதறினாள் டாக்டர். அவ ளையும் மீறி பொங்கின கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குழந்தையிடம் போய் பார்த்தாள்.

குழந்தை செத்தே பிறந்திருந்ததை அறிந்து கொள்ளாமலே போய் விட்ட மாத்



ஹாலை அனைவரும் பரிதாபமாய் பார்க்க ஒரு நர்ஸ் அவளது முகத்தை வெள்ளைத் துணியால் மூடினாள்.

விஷயம் தெரிந்ததும் மிஸஸ் மேனன் அழுது கொண்டே மாத்யூசின் வீட்டுக்கு டெலிபோன் செய்தாள்.

"அம்மா யாரோ ஒரு அம்மா உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க" அபிராமி வந்து சொன்னதும் யாரது என்று கேட்டபடி எழுந்து கொண்டாள் வாஞ்சியின் அம்மா.

"ஏம்மா கண் ஆபரேஷன் பண்ணிக்கிட்டீங்களா? நல்லாருக்கீங்களா?"


"நல்லாருக்கேன் நீங்க யாருன்னு சொல்லலையே."

"நா... அனுபமாங்க."

"எந்த அனு...? ஓ! நடேச முதலியார் பொண்ணா? நல்லாருக்கியாமா. அப்பா தங்கச்சிங்க எல்லாரும் சௌக்யமா? எப்படி இந்த வீட்டைக் கண்டுபிடிக்க வந்தே?"

"இதே தெருவுல தெரிஞ்சவங்க ஒருத்தரை பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன். அப்போ இந்த வீட்டு வாசல்ல கார்ல ஏறி ஒருத்தர் உக்கார்றத பார்த்தேன். வாஞ்சி தம்பி மாதிரியே இருக்கேன்னு சந்தேகப்பட்





சப்தரிஷி ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 87, பஜுல்லா ரோடு, தி.நகர்,
சென்னை - 600 017. போன்: 8265326.

நாணயம், நிர்வாக திறமை நிறைந்த பப்ளிக் லிமிடெட் பைனான்ஸ் கம்பெனி, உங்கள் டெபாசிட்டை வரவேற்கிறது.

14% PER ANNUM

* ஃபிக்சட் டெபாசிட் திட்டம்.
* குமுலேட்டிவ் டெபாசிட் திட்டம்.


மாதாந்திர வட்டியும், கவர்ச்சியான ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.
(ரிசர்வ் வங்கியின் விதிமுறைப்படி)

சிறப்பு அம்சங்கள்:

1) ஹையர் பர்ச்சேஸ் அண்டு லீசிங்
2) கோரிக்கைகளை துரிதமாக முடிவெடுத்தல்
3) சுலபமான செயல்முறைகள்
4) எளிதான நிபந்தனைகள்

ஓய்வு பெற்ற IAS ஆபீசர்கள், தொழிலதிபர்கள், சார்ட்டட் அக்கௌண்டன்ட் மற்றும் அனுபவமுள்ள நிர்வாகிகள் கொண்ட இயக்குனர்கள் இந்நிறுவனத்தில் உள்ளனர்.





அடை பிரதாபம் - 1

அடை மாவுடன் கொஞ்சம் ஜவ்வரிசியைச் சேர்த்து அரைத்தால் அந்த மாவில் செய்த அடை மிகவும் கரகர வென்றிருக்கும்.

- பங்கஜம்

டேன். கிட்ட வந்து கேக்கறதுக்குள்ள கார் போய்டுச்சு..அதான் சந்தேகத்துக்கு உள்ள வந்து விசாரிக்கலாம்னு.''

''அப்படியா... அபிராமி காப்பி கொண்டாம்மா. ஆமா கல்யாணமாயி எத்தனை கொழந்தைங்க, தங்கச்சிங்க எல்லார்க்கும் கல்யாணமாய்டுச்சா?''

''.....''

''என்னம்மா பதிலையே காணோம்?''

''என்ன பதில் சொல்றதும்மா? வாஞ்சி தம்பிக்கு நாங்க செஞ்ச துரோகம் எங்க வாழ்க்கையைச் சிரழிச்சதையா?''

''எ.... என்னது?''

அனுபமா எல்லாவற்றையும் விளக்கமாக சொன்னாள். வாஞ்சியின் தாய் சிலையாய் உட்கார்ந்திருந்தாள். நான் பெற்ற பிள்ளையை எப்படி நானே நம்பாமல் போனேன்! கடவுளே அந்தப் பிள்ளை எப்படி அன்னிக்குக் கதறித்து. நம்பலையே! ஒரு குத்தமும் செய்யாதவனையா இத்தனை வருஷமா குத்திண்டிருந்தோம்? இப்பக்கூட அவனை அதே ஆயுதத்தாலதான குத்தினோம். பெத்த தாய் புள்ளைய சந்தேகப்படலாமா? அது தாங்க முடியாமதான் அது வீட்டுக்கே வரலையா? அப்படின்னா.... இந்தத் தப்பையும் அந்தப் புள்ள நிச்சயம் செய்திருக்காது. கண்ணிருந்தாலும் முகத்தைப் பார்த்தே சொல்லிடலாம் குற்றவாளியா நிரபராதியான்னு. அதுவும் இல்லாமயே போய்டுச்சே. கண்ணில்லன்னா என்ன? பெத்த வயிறு சொல்லாது புள்ளைய பத்தி?

''ஏம்மா என்னமோ மாதிரி ஆயிட்டீங்க?''

''ஒண்ணுமில்ல அனு... இப்பவாவது வந்து உண்மையைச் சொன்னியே... அந்த ஒரு தப்பை வெச்சு வீட்ல எத்தனை பழி அவனுக்கு?''

''அம்மா அவங்க வந்திருக்காங்க.''

''யாருடி?''

''அன்னிக்கு வந்தாங்களே ஒரு அய்யாவும் அம்மாவும்.''

''வரச் சொல்லு.''

நந்தகோபால் அந்தப் பெண்ணோடு உள்ளே நுழைந்ததும் திடுக்கிட்டு எழுந்தாள் அனுபமா. ''மீனா நீயா!'' என்ற சொற்கள் பதற்றத்தோடு அவள் வாயிலிருந்து விழுந்தது. தொடர்ந்து நந்தகோபாலைப் பார்த்து ''நீங்க பிருந்தாவோட புருஷன்தானே' என்றாள்.

''என்ன.. பிருந்தாவோட புருஷனா'' என்று பதறினாள் வாஞ்சியின் அம்மா. ''உனக்கெப்படித் தெரியும்'' என்றாள் அனுபமாவிடம்.

''எட்டு வருஷம் எங்க வீட்ல இருந்தப்போ பிருந்தாதான் அடிக்கடி வருமே. அப்போலேர்ந்தே பழக்கம்தான். ஒரு நாள் பீச்சல இவரோட அவளைப் பார்த்தேன். ஓடிப்போய் கல்யாணம் செய்துக்கிட்டேன்னு அவளாவே சொல்லிட்டா.''

''ஏம்பா கண்ணு தெரியாதவன்னு எல்லாரும் சேர்ந்து என்னை ஏமாத்தப் பாக்கறீங்களா? எம்பிள்ள மேல ஏம்பா இப்படி அநியாயமா பழி சொல்றீங்க? இப்ப சொல்றேன் இந்த காரியத்தை என் பிள்ள செஞ்சிருக்கவே மாட்டான். வெளிய போய்டுங்க மரியாதையா.''

மீனா அக்காவைப் பார்த்து விட்டு குலை நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள். இவள் எப்படி இங்கே வந்தாள் என்று யோசித்தாள். யார் முகத்தில் விழிக்கவே கூடாது என்று ஒதுங்கி ஒதுங்கிப் போனாளோ அவள் முகத்திலேயே முழிக்க வைத்து விட்டான் ஆண்டவன்.

நந்தகோபாலுக்குச் சர்வ நாடியும் ஒடுங்கி விட்டது. அடுத்தடுத்து தோல்விகள் அவரைத் தழுவத் தொடங்கியிருந்தன. வீட்டில் சரண்யா கொடுத்த சூடிலேயே பாதி நடுங்கியவர் இப்போது வாஞ்சியின் வீட்டுக்குத்தான் தான் வந்திருக்கிறோம் என்று யாரோ ஒருத்தி மூலம் அவன் அம்மா தெரிந்து கொண்டு விட்டது இரண்டாவது சூடு! அங்கிருந்து எப்படியாவது நழுவி விட வேண்டும் என்று நினைத்தவர் ''ஒரு நாள் பீச்சல இந்தப் பொண்ணு தற்கொலை பண்ணிக்க போயிட்டிருந்தா. தடுத்து என்ன ஆச்சுன்னு கேட்டேன். ஒருத்தர் கல்யாணம் பண்ணிக்கறதா சொல்லி ஏமாத்திட்டார்னு அழுதா. யாரு என்னன்னு சொல்லு முடிஞ்சா சேர்த்து வைக்கறேன்னு சொல்லி அழைச்சுண்டு வந்தேன். இந்த வீட்டை அடையாளம் காட்டி, பேரு வாஞ்சின்னா. இந்தப் பொண்ணுக்கு உதவி பண்ணத்தான்

நா உள்ள வந்தேன். இந்தப் பொண்ணு பொய் சொன்னாளா நிஜம் சொன்னாளான்னு அவளதான் கேக்கணும்.''

''அடப்பாவி!'' மீனா திடீரென்று கத்திக் கொண்டே அவர் சட்டையைப் பாய்ந்து பிடிக்கும் போது வாஞ்சி உள்ளே நுழைந்தான். அவன் முகத்தில் துயரம் படிந்திருந்தது.

அத்தியாயம் - 15

வாஞ்சி நேராக நந்தகோபாலிடம் வந்தான். ''நீங்க இங்கயார்க்கீங்க மிஸ்டர் நந்தகோபால்'' என்று லேசாய் ஆச்சரியப் பட்டான். பிறகு மீனாவைப் பார்த்தான். உப்பிய அவள் வயிற்றைப் பார்த்தான். ''ஓ! நீதான் அந்தப் பெண்ணா'' என்றான் விரக்தியோடு.

''ஏண்டி என்னடி இதெல்லாம்'' என்றாள் அனுபமா மீனாவைப் பார்த்து.

வாஞ்சி திடுக்கிட்டு மீனாவைப் பார்த்தான்.... ''இவங்க... இவங்க....''

''மீனா வாஞ்சி. என் கடைசித் தங்கை யாரோடயோ ஓடிட்டான்னு சொன்னேனே அவளேதான்.''

வாஞ்சி திகைத்தான்.

''ஆமா வாஞ்சி கூட்டிட்டு போனவன் என்னை இப்டி ஒரு நிலமைக்கு ஆளாக்கிட்டு வேற ஒருத்தியோட ஓடிட்டான். சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டேன். திரும்பி வீட்டுக்குப் போய் அப்பா மூஞ்சில முழிக்க அவமானமாயிருந்தது. கடசில பசி தாங்காம பிச்சை எடுத்தேன். அப்பதான் இவரைப் பார்த்தேன். என்னையே ஒரு நிமிஷம் பார்த்தவரு உனக்கு நா நிறைய பணம் தரேன் நா சொல்றபடி செய்வயான்னு கேட்டார். பணத்துக்காக நானும் சம்மதிச்சேன். எங்க வீட்ல குடியிருந்தவருக்கே துரோகம் பண்ணப் போறோம்னு எனக்குச் சத்தியமா தெரியாது. வறுமை என்னை தப்பு பண்ண வெச்சுடுச்சு.''

''வாஞ்சி... நா...'' நந்தகோபால் குழறலாய் ஏதோ சொல்ல வாயெடுத்த போது கையை மேலே தூக்கி அவரை, ''நிறுத்துங்க'' என்று ஜாடை காட்டினான் வாஞ்சி.

''மிஸ்டர் நந்தகோபால், நீங்க எதுவுமே சொல்ல வேண்டாம். நா உங்களை எதுவுமே கேக்கலையே. நடந்ததெல்லாம் நடந்து போச்சு. பழசை பேச வேண்டாம். உங்களுக்கு ஒரு துக்கச் செய்திய நா சொல்லிதான் தீரணும். மாத்யூஸ்... செத்துப் போய்ட்டாங்க. எங்க ஆபீஸ்க்கு தகவல் வந்துது. அதைத் தாங்க முடியாமதான் வீட்டுக்கு வந்தேன். நீங்க இங்க இருக்கீங்க. போங்க சீக்கிரம் போங்க!'' என்று ஆஸ்பத்திரி பேரைச் சொன்னான்.

ஆடிப் போய்விட்டார் நந்தகோபால். அவர் உடல் நடுங்கியது. கால்கள் பலமிழந்து விட்டது போலிருந்தது. ''மா.... மாத்யூஸ்... போய்ட்டாளா?'' சொற்கள் குழறலாய் அழுகை கலந்து பிசிறடித்தது. ''வாஞ்சி... எ...என்ன கூட்டிட்டுப் போயேன்'' என்றார்.

அடுத்த நிமிடம் வாஞ்சியின் மாருதி, காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது.


யாருமே எதிர்பார்க்காத செயலைச் செய்திருந்தார் நந்தகோபால். மாத்யூஸின் பிரிவு அவரை வேரிலிருந்து உலுக்கியிருந்தது.

அவர் செய்த தவறுகளுக்கு ஆண்டவன் அவரைப் பலமாய் தண்டித்து விட்டான். மாத்யூஸின் சிதையிலிருந்து கொழுந்து விட்டெரிந்த அக்னியில் தன்னையே முதன் முறையாக சுயதரிசனம் செய்து கொண்டார். அந்த சிதைக்கு முன்தான் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பாய் அவர் செய்த காரியங்கள் எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தின. திருமணமான உடனேயே தன் சொத்துக்களுக்கு அவரை நாமினியாக்கியிருந்தாள் மாத்யூஸ். சட்டப்படி அவருக்குச் சேர வேண்டிய சொத்துக்கள் அவை. சொத்துக்களை முதலில் கணக்கெடுத்தார். நிலமாய், வீடாய், பணமாய் நகைகளாக இருந்த எல்லாவற்றையும் கணக்கெடுத்தார். நகைப்பெட்டி ஒன்று தனியாக வைத்திருந்தாள் மாத்யூஸ். அதைத் திறந்தார். மூடியின் உட்புறம் 'என் பிரியமுள்ள சரண்யாவுக்கு இந்த அம்மா தரும்

அடை பிரதாபம் - 2

அடைக்குத் தொட்டுக் கொள்ளும் அவியலில் பிரெட் துண்டுகளை நெய்யில் வறுத்துப் போடுங்கள். அவியல் மிகவும் ருசியாக இருக்கும்.

- பங்கஜம்



உங்களைப் போன்றே உங்கள்
கூந்தலும் அக்கறையிலும்
அன்பிலும் வளர்கிறது.



சாதாரண கூந்தலுக்கும் செழிப்பான, மினுமினுப்பான கூந்தலுக்கும் உள்ள வேறுபாடுதான் சாதாரண தேங்காய் எண்ணெய்க்கும் ஆயில் ஆஃப் மலபாருக்கும் உள்ள வேறுபாடு.

மலபார் கடலோரத்தில் விளையும் மிகச் சிறந்த தேங்காய்களைத் தேர்ந்தெடுத்து, பிழிந்து, வடிகட்டி, மிக தூய்மையான தேங்காய் எண்ணெயை உங்களுக்குத் தருகிறோம்.



ஆயில் ஆஃப் மலபாரின் ஒவ்வொரு துளியிலும் உங்கள் கூந்தலுக்குத் தேவையான போஷாக்கும் அக்கறையும் நிறைந்துள்ளது: இது உங்கள் கூந்தலைக் கண்ணும் கருத்துமாய் நிச்சயம் போற்றி வளர்த்திடும்.



இதுவரை மற்றவரின் அழகுக் கூந்தலைக் கண்டு பொறாமைப்பட்ட உங்களுக்கு பட்டுப் போன்ற மென்மையும், அடர்த்தியும் நிறைந்த அழகிய கூந்தலை இது தந்திடும். என்றென்றும்.

ஒவ்வொரு துளியும் உங்கள் கூந்தலுக்கு

மினுமினுப்பூட்டுகிறது.

Oil Of
MALABAR
PURE COCONUT OIL

வெஸ்ட் கோஸ்ட் ஹோம் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,
த. பெ. எண் – 5533, பெங்களூர் – 560 055
அவர்களின் தரமான தயாரிப்பு.

வியாபார விவரங்களுக்கு : செந்தில் ட்ரேட் லிங்க்ஸ், ஹோசூர் – 635125 PH : 22669

MAA COMMUNICATIONS 2756/94 TAM


தக தக தக ன்னு
தங்கம்போல நிறம்
கம கம கம ன்னு
கும்முனு மணம்
Classic
GINGELLY OIL
கிளாசிக்
கிளாசிக் நல்லெண்ணெய் சமையல் பிரமாதம்
தயாரிப்பாளர் : K. வேலாயுதம் செட்டியார் சன்ஸ் & கம்பெனி
280, மெயின் ரோடு,
கோவில்பட்டி - 627 701. போன் : 3250
மார்கெட்டிங் ஏஜெண்ட் : பரணி அசோசியேட்
96, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 600 001. போன் : 569306

திருமணப் பரிசு' என்று எழுதியிருந்தாள். எப்போது சரண்யாவுக்குத் திருமணம் நடந்தாலும் அதைக் கொடுக்க வேண்டும் என்று எழுதி வைத்திருந்தாள்.

தன் பெயரில் அவள் போட்டு வைத்திருந்த பணத்தை மட்டும் பிருந்தா மூலம் தான் பெற்ற குழந்தைகளுக்கு எழுதி வைத்தார். மாத்யூசின் நகைகளையும் மூன்று பங்காய்ப் பிரித்து சரண்யா, நந்தினி, திவாகருக்குக் கல்யாணமானால் அவன் பெண்டாட்டிக்கு என்று பிரித்து எழுதி வைத்தார். மற்றபடி அத்தனை சொத்தையும் மாத்யூஸ் தொடர்பு கொண்டிருந்த சமூக சேவை இல்லங்களுக்கு எழுதி வைத்தார். மாத்யூசின் சொத்துக்கள் இனியும் பல பேரை வாழ வைக்கும் என்ற நினைவு சந்தோஷத்தை அளித்தது. இது வரை தான் செய்த தவறுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

மாத்யூசின் அஸ்தியைக் கங்கையில் கரைப்பதற்காகப் புறப்பட்டார். புறப்படு முன் அனைவரிடமும் விடைபெற வேண்டும் என்று முடிவு செய்தவர் வேலைக்காரனை அனுப்பி எல்லாரையும் அழைத்து வரச் சொன்னார்.

அனைவரும் வந்துவிட்டனர். நந்தகோபாலுக்கு அடுத்தபடியாக மாத்யூசின் பிரிவினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது சரண்யாதான் என்பதை அவளது முகமே காட்டியது. ஒரு வாரமாய் சரியாய்ச் சாப்பிடாமல் தூங்காமல் அழுதழுது வீங்கிச் சிவந்த கண்களும் முகமுமாய் பொலிவிழந்திருந்தாள்.

''நீங்க எல்லாரும் என்னை பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும். நா... நா... ரொம்ப பொல்லாதவனார்ந்துட்டேன்'' என்று சொல்லி விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

அனைவரும் ஸ்தம்பித்துப் போயிருந்தனர். மனிதன் திருந்தி விட்டால் அவன் முகத்தில்தான் எத்தனை தேஜஸ் வந்து விடுகிறது. பத்மாவாலும் பிருந்தாவாலும் செய்ய முடியாத, சாதிக்க முடியாத காரியத்தை மாத்யூஸ் தன் மரணத்தின் மூலம் சாதித்து விட்டதை நினைத்து அவர்கள் வேதனையும் சந்தோஷமும் அடைந்தனர்.

மறுநாள் மாலை ஒருவருக்கொருவர் பேசி வைத்துக்கொள்ளாமலே அனைவரும் அவரை வழியனுப்ப வந்ததிலிருந்து அவர் மீது அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பாசத்தைப் புரிந்து கொண்ட நந்தகோபால் கண் கலங்கினார்.

''சரண்,,, நா... உனக்கு... உங்கம்மாக்கு பண்ணின அவமானம்... உன் மூஞ்சில முழிக்கக் கூட எனக்கு அருகதையில்லடா! இந்தா.. இது உங்கம்மா.. நா மாத்யூசை சொல்றேன்... நீ அவளை எப்படி நெனச்சியோ என்னமோ அவ உன்னைத் தன் பெண்ணாதான் நினைச்சிருந்தா. அவ உனக்குன்னு எடுத்து வெச்சுட்டு போயிருக்கா இதை. தொறந்து பாரு'' என்றபடியே நகைப் பெட்டியை நீட்டினார்.

நடுங்கும் கரங்களால் அதை வாங்கித் திறந்து பார்த்து மாத்யூஸ் தன் கைப்பட எழுதியிருந்ததைப் படித்ததும் பெட்டியை நெஞ்சோடு சேர்த்தணைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள் சரண்யா.

சற்று நேரம் யாருமே எதுவுமே பேசாமல் அங்கு ஒரு மௌனப் பரிமாறல்கள் நடந்தன. வாஞ்சி நந்தகோபாலின் கையைக் குலுக்கி விட்டு பரிவோடு தோளில் கை வைத்து அழுத்தி சமாதானப்படுத்தினான்.

பச்சைக் கொடி காட்டப்பட்டது. வண்டி புறப்படுவதற்கான விசில் சப்தம் கேட்டது. நந்தகோபால் கை கூப்பி விடை பெற்றுக் கொண்டு வண்டியிலேறி மெதுவாகக் கையாட்ட, அனைவரும் பதிலுக்குக் கையாட்டினர். அதுவரை சிலை போல் பிரமித்துப் போய் கண்ணீர் வழிய நின்றிருந்த சரண்யாவின் அடிவயிற்றிலிருந்து அந்த சப்தம் வெளிப்பட்டது.

''அ....ப்...பா...அ.... அ.....''

(முற்றும்)



சிறு குழந்தைகள் இருக்கும் வீடுகளில் சாவி கொடுக்கும் பொம்மைகள் இருக்கும். பொம்மை உடைந்தாலும் சாவியைத் தனியாக ஒரு டப்பாவில் போட்டு வைக்கவும். வேறு பொம்மைக்கு சாவி தொலைந்து போனாலோ, சரியாக இல்லையென்றாலோ இந்தச் சாவியை உபயோகிக்கலாம்.

- ஏ. பி. உஷா



● சந்தோஷ நீரூற்று...

சுற்றுலாவால் கிடைப்பது

சந்தோஷம்



சென்னையில், பார்க்க வேண்டிய இடங்கள் பட்டியலில் கண்டிப்பாக கோல்டன் பீச் இடம் பெறும். இங்கே மட்டுமில்லை, வெளி நாட்டு 'கைடு' புக்குகளி லும் இடம்பெறும் அளவிற்கு உலகின் கவனத்தைக் கவர்ந்துள் ளது வி. ஜி. பி. சகோதரர்கள் படைத்த 'கோல்டன் பீச்'. திரைப் படங்களில் டூயட் பாட்டுக்களில் எல்லாம் இந்த இடங்கள் எடுத்துத் தள்ளப்பட்டு விட்டன. அந்த அளவிற்குச் சுற்றுலா மையமாக இதனைப் புகழ்பெறச் செய்தவர்கள் வி. ஜி. பி. சகோதரர்கள். இளம் வயதில் பேப்பர் போடும் பையனாகத் தன் வாழ்வை ஆரம்பித்து இன்று பெரும் தொழில்

சாம்ராஜ்யத்தையே படைத்துள்ள வி. ஜி. பி. சகோதரர்களில் ஒருவரான வி. ஜி. சந்தோஷம், 'சுற்றுலா' துறையில் நிறைய ஆர்வம் உள்ளவர். வெளிநாடுகளில் உள்ள முக்கியமான சுற்றுலா தலங்கள் அனைத்தையும் பார்த்தவர். அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது -

எங்களுக்கு வந்தது. வால்ட் டிஸ்னியையே ஆரம்பத்தில் பைத்தியக்காரன், வேலையில்லாமல் இப்படி நேரத்தைச் செலவழிக்கிறான் என்று கேலிதான் செய்து கொண்டு இருந்தார்கள். ஆனால் அவருடைய விடாத முயற்சி இன்று உலகப் பிரசித்தி பெற்றது. அமெரிக்கா போய் டிஸ்னிலேண்ட் பார்க்காமல் வந்தால் அவன் அமெரிக்கா போனதற்கே அர்த்தமில்லை என்பார்கள். அதே போல இன்று சென்னைக்கு வந்து கோல்டன் பீச் பார்க்காமல் போவது என்பது ஏதோ பெரிய வாய்ப்பை இழந்துவிட்டது போல நினைக்கிறார்கள். இது எங்களுடைய தளராத முயற்சிக்கு வெற்றி என்றுதான் சொல்ல



''தவணை முறையில் பொருட்களை விற்கும் தொழில்தான் உங்களுடைய ஆரம்ப காலத் தொழில். அப்புறம் எப்படிச் சுற்றுலா பக்கம் உங்கள் கவனம் திரும்பியது?''

''நான், பன்னீர்தாஸ் அண்ணாச்சி, செல்வராஜ் ஆரம்ப காலத்தில் பட்ட கஷ்டங்கள் எல்லாம் எல்லோருக்கும் தெரிந்தது தான். ஓரளவு எங்களுடைய பிஸினஸ் வெற்றிகரமாக நடக்கத் தொடங்கியவுடன் வெளிநாடுகளுக்குப் போக வேண்டும் என்ற ஆசை வந்தது. அப்படித்தான் பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா எனப் போனோம்.

அமெரிக்காவில் 'டிஸ்னி லேண்டை'ப் பார்த்தவுடன் பிரமித்துப் போய்விட்டோம். இந்த மாதிரி நம் தமிழ்நாட்டிலும் ஏன் செய்யக் கூடாது என்ற ஆசை அப்போதுதான் வேண்டும்.

ஆனால் ஆரம்பத்தில் நாங்கள் ஐம்பத்தியாறு ஏக்கரில் இவ்வளவு பெரிய இடத்தில் அமைப்போம் என நினைக்கவே இல்லை. சிறியதாக ஒரு பார்க் அமைக்க வேண்டும் என்றுதான் நல்ல இடத்தைத் தேடிக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுடைய குடும்ப நண்பரான பார்வதி ஸ்ரீனிவாசன் தான் ஒருநாள் திடீரென்று, ''மகாபலிபுரம் போகும் வழியில் நூறு ஏக்கருக்கு வேண்டி இருக்கு. வேண்டுமா?'' என்றார். அட்வான்ஸ் கொடுக்கக் கூட அப்போது எங்களிடம் பணம் இல்லை. ஆனாலும் துணிந்து விட்டோம். அதுதானே எங்கள் தாரக மந்திரமே!

வெறும் மணல் காடாக இருந்த இந்த நிலங்கள் இன்று அருமையான சுற்றுலா



"இப்போது அரசாங்கம் செய்வது போதாது என நினைக்கிறீர்களா?"

"அரசாங்கம் நிறைய முயற்சிகளை எடுத்துக் கொள்கிறார்கள். படிப்படியாக சுற்றுலா துறையை முன்னேற்றி வருகிறார்கள். நான் சொல்வது மக்களிடையே கூட விழிப்புணர்வு வரவேண்டும். சுற்றுலா என்பது தேசத்தை எத்தனையோ வகையில் முன்னேற்றும்.

முதலில் நாம் கலாசாரத்தையும், புராதனத்தையும் செழிக்கக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு மேம்பட மேம்பட 'இது நம் தாய்நாடு, நம் தேசம்' என்ற தேசப்பற்று வரும்.

இன்னொன்று, நாடு கடந்த மனிதநேயம். சுற்றுலாவிற்கு ஜாதி, மதம், இனம், நாடு என்ற பேதமே கிடையாது. எனவே, பிற மாநிலங்களில் இருந்தோ, தேசத்திலிருந்தோ சுற்றுலா வரும்போது அவர்களை மனித நேயத்தோடு வரவேற்போம். நிச்சயமாக அங்கே சகோதர மனப்பான்மைதான் இருக்கும். இந்த வன்முறை, காட்டுமிராண்டித்தனம் எல்லாம் போய்விடும்.

சுற்றுலா மேம்படும்போது அந்நியச் செலாவணி நிறைய கிட்டும். ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்ட வேண்டும். முதலீடு, தொழிற்சாலை என எத்தனையோ உள்ளது. ஆனால் நம் நாட்டில் மண்டிக் கிடக்கும் கலைச் செல்வங்களைச் சரியாக உலகுக்குக் காட்டி சுற்றுலா பயணிகளை வரவழைத்தாலே போதுமே! அந்நியப் பணம் கொட்டுமே!

அதற்கேற்ற அளவிற்கு மனித சக்தியும் நம் நாட்டில் இருக்கிறதே!"

வியந்து போய் அவரைப் பார்த்துக் கொண்டிருந்த நாம் இடைமறித்தோம் :

"ஆனால் நம் தேசத்திற்கு வருகிறவர்கள் சொல்வது இங்கு சுத்தம் இல்லை என்பதுதானே!"

"அதை அந்தக் கண்ணோட்டத்தில் நாம் ஒதுக்கக் கூடாது, நம் நாட்டில் 'பேயிங் கெஸ்ட்' சிஸ்டம் இல்லை. அந்நிய நாட்டிலிருந்து வருபவர்கள் இங்கே இருக்கும் குடும்பத்தோடு தங்கி அந்தக் கலாசாரப் பின்னணியில் நம் கலைகளைப் பார்க்க விரும்புகிறார்கள். ஆனால் விருந்தினரிடம் பணம் வாங்குவது கௌரவக் குறைச்சலாக நாம் நினைக்கிறோம். ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் தங்கி அவர்கள் செலவழிப்

தலமாகி விட்டது. முழுக்க முழுக்க நம்முடைய தமிழக பண்பாட்டினை விளக்கும் வகையில் கோட்டை கொத்தளங்கள், இந்து, கிறித்தவ, முகமதிய கோவில்கள், குழந்தைகளுக்கான ராட்டின வகையறாக்கள், சிலைகள் என தேடித் தேடி அமைத்தோம். தினம்தோறும் ஆயிரக்கணக்கில் சுற்றுலா பயணிகள் வந்து பார்க்கிறார்கள்..."

"வெளிநாடுகளில் இப்படிப்பட்ட அதிசயங்களைப் பார்க்கும்போது 'ஆஹா', என வியப்பார்களே தவிர நம் நாட்டில் அதைப் போலச் செய்ய வேண்டும் என நினைக்க மாட்டார்கள். நீங்கள் வித்தியாசமாகச் சிந்தித்திருக்கிறீர்களாக்கும்...?"

"எங்கள் நினைவே எப்போதும் நம் நாட்டிற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்பதுதான். இந்தியா ஒன்றும் ஏழை நாடு அல்ல. கலாசாரமும், பாரம்பரியமும் உள்ள நாடு. இங்கு எத்தனை கோயில்கள், புராதனச் செல்வங்கள் இருக்கு? அவற்றையெல்லாம் சுற்றுலா தலங்களாக மேம்படுத்தினாலே போதும், நம் நாட்டிற்கு ஏராளமான அன்னியச் செலாவணி கிடைக்கும்..."

If

you'd like to know what efficiency can do to a company's growth, take a look at Ashok Leyland Finance. It has helped us take our asset base beyond Rs. 400 crores. Manage money better. Make available more funds to borrowers. Earn the trust of more and more depositors. And offer greater satisfaction to customers.

Growth through efficiency. At Ashok Leyland Finance it is both a belief and a practice.

(Rs. in lakhs)

Year ended 30th June	Networth	Asset Base	Profit After Tax	Deposits	Dividend %
1993	3,580	40,571	1,274	4,800	40
1992	2,441	25,329	919	4,012	40
1991	1,647	17,675	719	3,045	35
1990	1,040	10,704	403	1,986	30
1989	465	5,993	161	1,100	25

Ashok Leyland Finance Limited
Sudarsan Building, 86 Chamiers Road, Madras 600 018.

ALF 12522

பதைவிட, வீட்டில் தங்குவதால் மிச்சப்படும் அந்தப் பணத்தில் இன்னும் நாலு இடம் பார்ப்பார்கள்.

அதேபோல விருந்தினர்கள் வருகிறார்கள் என்றால் வீட்டினரும் சுத்தமாக வைத்திருப்பார்கள். வீடு, ரோடு, சுற்றுப்புறம் எல்லாம் தானாகச் சுத்தமாகும். நமக்கே யாராவது தெரிந்தவர் வருகிறார் என்றால் தாறுமாறாக இருப்பதையெல்லாம் சரி பண்ணுவதில்லையா? அதுபோலத்தான்!''

எல்லாவற்றையும் 'முடியும்' என்றே பேசுகிறார் சந்தோஷம். சுற்றுலா துறையைப் பற்றி எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்து வைத்திருக்கிறார்!

''நீங்கள் வெளிநாடுகளில் போனபோது உங்களை ரொம்பக் கவர்ந்த இடம் எது?''

''டிஸ்னி லேண்ட்தான். நானும் அண்ணாச்சியும் ரொம்ப வியந்து போனோம். பிரான்சில் பீட்டர்ஸ் சர்ச்சும், இத்தாலியில் ஓர்துமாதா கோவிலும் எங்களுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதேபோல ஜப்பானில் ஒரு கோவில் அமைத்திருக்கிறார்கள் ஆறடுக்குகளில். ஒவ்வோர் அடுக்கும் திறந்து கொள்ளும்போதும் ஒவ்வொரு காட்சி தோன்றும். ஓர் அடுக்கில் புத்த பிட்சுக்கள் பாடுவார்கள். ஓர் அடுக்கில் இசைப்பார்கள். இப்படி ஒவ்வொன்றாக முடிந்தவுடன் கடைசி அடுக்கு திறந்தவுடன் அங்கே ஓர் ஒளி தோன்றும். இதற்கு ஐந்து டாலர்.

இப்படி வெளிநாடுகளில் எல்லாம் இருக்கும் ஓரிரண்டு விஷயங்களை வைத்துக் கொண்டு சுற்றுலா பயணிகளை அப்படிக் கவருகிறார்கள். பிரான்ஸ், இத்தாலியில் எல்லாம் சர்ச்சையும், மாதா கோவிலையும் பார்க்க அப்படி ஒரு கூட்டம். அதற்கு வெளி நாட்டினருக்கு முழு சௌகர்யங்களையும் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

நம் நாட்டிலோ சிறிய கிராமங்களில் கூட கலைச் செல்வங்களைப் பாதுகாத்து மற்ற நாடுகள் அளவிற்கு நம் நாட்டைப் பற்றிப் பிரபலப்படுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நம் முக்கிய பிரச்னை ரோடு, போக்குவரத்து, தகவல் தொடர்பு. அதுவும் இப்போதைய மறைக்கப்புறம் நம் சாலைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். வெளிநாடுகளில் அற்புதமான போக்குவரத்தும், தகவல் தொடர்பும் வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நம் நாட்டிலும் மேம்படுத்துவோமானால் உலகம் முழுக்க நம் இந்தியா பக்கம் திரும்பும் என்பதில் சந்தேகமேயில்லை!''

நாங்கள் பேட்டிக்குப் போன போது சந்தோஷம் நீரூற்று அருகிலுள்ள 'வெல்கம் லேடி'யைச் சுற்றி நான்கு கருங்கல்லால் ஆன 'ப்ளவர் வாஸ்' அமைத்துக் கொண்டிருந்தார், ஆட்களின் உதவியோடு.

''அதொண்ணுமில்லை. இன்னோர் இடத்தில் எண்ணெய் செக்கு உபயோகமில்லாம கிடந்தது. அதை இங்கு 'ஃப்ளவர் வாஸா' வைக்கலாமேன்னு நேத்து நினைச்சேன்...''

மறுநாள் காலை அந்த செக்குகள் லாரியில் கொண்டு வரப்பட்டு, முப்பதுக்கும் மேற்பட்ட மனிதர்களின் கடும் முயற்சியில் அவை நடப்பட்டன. அதை மேற்பார்வை பார்த்துக் கொண்டே எங்களுக்குப் பேட்டியும் கொடுத்தார்.

''இன்னிக்குச் சாயங்காலம் அதுல பூச்செடிகளை நட்டுடுவோம். பாருங்களேன், அதுக்குப் பக்கத்திலே நின்னுக்கிட்டு நிறைய பேர் ஃபோட்டோ எடுத்துப்பாங்க. சொன்னாத்தான் தெரியும், அது பழைய எண்ணெய் செக்குன்னு...''

என்று சிரிக்கிறார். இப்படி நிறைய ஐடியாக்கள். வெளிநாட்டில் பார்த்துவிட்டு வந்து நடனமாடும் சந்தோஷம் நீரூற்று நிறுவியிருக்கிறார். இசைக்கேற்ப வண்ணமயமாக நடனமாடுகிறது அந்த நீரூற்று. நாம் பாடினாலும், ஆடினாலும் அது நடனமாடும்! ஒலியதிர்வுகளை கம்ப்யூட்டரில் பதிவு செய்து நீரலைகளுக்கு அனுப்புகிறார்கள். இரவில் விளக்கொளியில் சொர்க்கபுரி போல இருக்கிறது. சோர்ந்து போகும் உள்ளங்கள் கூட மகிழ்ச்சியில் துள்ளும்!


ஆம், இதுதானே சுற்றுலாவின் நோக்கமே!

நாளுக்கு நாள் போட்டி, பொறாமை, வன்முறை, கொடூரம், சுயநலம் என வளர்ந்து வருகிறது மனித சமுதாயம். அதை மாற்றவல்ல ஆற்றல் சுற்றுலாவிற்குத்தான் உண்டு. இங்கே ஒற்றுமை, சேர்ந்து மகிழ்தல், பகிர்தல் கிடைக்குமே!

இதைப் படிப்படியாகச் சாதித்துவரும் வி.ஜி. சந்தோஷம் மனித சமுதாயத்திற்குச் சந்தோஷத்தைத் தர முயன்று கொண்டு இருக்கிறார். அவருக்குப் பெயர் எத்தனை பொருத்தமாக இருக்கிறது!

– பவித்ரா

படங்கள் : ராஜு



பழச்சாறுகள் செய்யும்பொழுது வடிகட்டியினால் வடிகட்டுவது சிரமம். வெகு நேரமாகும். பெரிய கண் உள்ள சல்லடையில் வடிகட்டினால் உடனே சக்கைகள் தங்கி ஜூஸ் இறங்கிவிடும். சிரமமே இல்லை.

– மங்களா கிருஷ்ணன்



* கோனார்க்

இந்தியாவின் முக்கிய சுற்றுலாத் தலங்கள்

ஜம்மு - காஷ்மீர்

(பயங்கரவாதத்தால் சுற்றுலா செல்வது ரிஸ்காக கருதப்பட்டாலும் ரசித்து அனுபவிக்கத்தான் இங்கு எத்தனை இடங்கள்!)

ஸ்ரீநகர் : மயக்கும் ஏரிகள். அற்புதத் தோட்டங்கள். படகு வீடுகள்.

பகல்காம், குல்மார்க், சோனாமார்க் : காஷ்மீரின் பிரபலமான மலைவாசஸ்தலங்கள். அமர்நாத் குகைகளுக்குப் புனிதப்பயணம் செய்ய பகல்காம் ஆதார இடமாக அமைகிறது. குல்மார்க்கில் குளிர் காலத்தில் பனிச்சறுக்கு விளையாட்டு மிகவும் பிரபலம். சோனாமார்க்கில் குதிரைச் சவாரி பிரசித்தம்.

லடாக் : பல பெரிய புத்த விகாரங்கள்.

ஜம்மு : பிரபல வைஷ்ணவி தேவி கோவில்.


பஞ்சாப்

(செழிப்பான இந்தப் பகுதி, மக்களின் தீவிர உழைப்பை எடுத்துக் காட்டுகிறது.)

அமிர்தசரஸ் மற்றும் அனந்த்பூர் சாஹிப் : சீக்கியர்களின் புனிதத் தலமான தங்கக் கோவில், ஹோலி

இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி
அளிக்கும் உழைக்கும் மகளிருக்கான
ஒப்பற்ற திட்டம்

அபிலாஷா



ரூ.2000க்கும் மேல்
மாத சம்பளம் பெறும் மகளிருக்கு
IOB தரும் கடன் வசதி

குறிப்பிட்ட கிளைகளில் 24 மாத தவணை RD கணக்கு துவங்கி, மூன்று மாதங்களுக்குப் பிறகு ரூ.10,000/- வரை கடன் பெறலாம். பண்டிகை மற்றும் குடும்ப விழாக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற உழைக்கும் மகளிருக்கான திட்டம் 'அபிலாஷா'.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்.

IOB.173.93 TM B

✱ பாலி



சமயத்தில் நடைபெறும் வசந்த விழாவில் அனந்தபூர் சாஹிப்பில் பிரம்மாண்டமான திருவிழா.

சண்டிகர் : அகலமான தெருக்கள், பூத்துக் குலுங்கும் மரங்கள், ஷிவாலிக் மலைத் தொடரின் கீழ் அழகான ஏரி. சகலவித ரோஜா வகைகளையும் கொண்டுள்ள பெரும் தோட்டம்.

டெல்லி : செங்கோட்டை, ஜும்மா மசூதி, காந்தி, நேரு, இந்திரா சமாதிகள். கண்ணைக் கவரும் பஹாய் கோவில். லோடி தோட்டம். ரெயில் ம்யூசியம், பிரகதி மைதானத்திலுள்ள பொருட்காட்சியங்கள், அப்புகர் என்னும் குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா. குதுப்மினார், தீன் மூர்த்தி பவன்.


ஹரியானா

(பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தம் இந்த பூமியில்தான். வட இந்தியாவின் தலை விதியை நிர்ணயித்த 'பானிபட்' சண்டைகளும் இந்த பூமியில்தான்.)


சூரஜ் கண்ட் : புகழ்பெற்ற வருடாந்திர கைவினைப் பொருட்காட்சி.

✱ ஜெய்பூர்





கோவையிலிருந்து
முறையே 98, 70, 115
கிலோமீட்டர் தூரத்தில்
அமைந்துள்ளது உதகமண்டலம்,
கூனூர், கோத்தகிரி முதலியவை.
இந்த மலைவாசஸ்தலங்களில் மிகவும்
பழைமையானது ஊட்டி என அழைக்கப்படும்
உதகமண்டலமே! ஸ்விஸ் ராக் ரெயிலின்
அமைப்பில் உள்ள மலையேறும் டிரெயினில்
பயணம் செய்வது மறக்க முடியாத அனுபவம்.



கல்தான்பூர் : பறவைகள் சரணாலயம்.
சோஹனா : வெந்நீர் ஊற்றுகள்.

ஹிமாசல பிரதேசம்

(இமயமலைத் தொடர்களின் மேல் பாகம் திபெத்தின் எல்லை ஆக, கீழ் பாகத்தில் புகழ் பெற்ற மலை வாசஸ்தலங்கள்.)

சிம்லா : அருமையான மலைவாச ஸ்தலம்.

குலு, மணலி : பியாஸ் நதிக் கரையில் குலு பள்ளத்தாக்கு. வஸிஷ்ட் கந்தக நீரூற்றை அருகில் கொண்டது மணலி மலை வாசஸ்தலம்.

சம்பா : பாலும், தேனும் ஓடும் என்று பரம்பரையாகச் சொல்லப்படும் அழகிய பள்ளத்தாக்கு. புல்வெளிகள், ஆறுகள், ஏரிகள், நீரூற்றுகள், அடர்ந்த காடுகள்.

ராஜஸ்தான்

(பாலைவன பிரதேசமானாலும் பலமும் புகழும் நிறைந்த வீரர்களை (ராஜ்புத்) கொடுத்த மாநிலம்.)

ஜெய்பூர் : தலைநகரம். பிங்க் நகரம், சாஜாவின் அரண்மனை. அருங்காட்சியகம். ஜன்தர் மந்தர் எனப்படும் வானிலை ஆய்வுக் கூடம், புகழ் பெற்ற 'ஹவா மஹல்'.

ஆஜ்மீர் : முகமதியர்களின் மிகவும் புனிதமான யாத்திரைத் தலம். பிற மதத்தினரையும் கவரும் மசூதிகள்.

புஷ்கர் : புனித ஏரி. இந்துக்களின் புண்ணிய தீர்த்தம்.

மவுண்ட் அபு : ராஜஸ்தானின் ஒரே மலை வாசஸ்தலம். வெள்ளை சலவைக் கற்களாலான மிக அழகிய தில்வாரா ஜெயின் கோயில்கள். நக்கி ஏரி.

பரத்பூர் : ஆசியாவிலேயே பெரிய பறவைகள் சரணாலயம்.

ராத்தம் பூர் பார்க் : சுமார் 40 புலிகள் உள்ள பாதுகாப்பிடம்.

உத்தர ப்ரதேசம்

(வடக்கே மலைத் தொடர்களாலும், தெற்கே குன்றுகள் சமவெளிகள், கங்கைக் கரைப் பிரதேசமென்றும் இயற்கை அமைப்பே பிரித்திருக்கிறது.)

ஆக்ரா : ஷாஜஹான் தன் அன்பு மனைவிக்காக சலவைக் கல்லால் ஆன சமாதி கொண்ட, உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹல், நகரத்தின் நடுவிலிருக்கும் கோட்டை.

பதேபூர் சிக்ரி : மொகலாயப் பேரரசர் அக்பரின் சாம்ராஜ்யத்தின் தலைநகராக 16 வருடங்கள் இருந்த இடம்.

மதுரா, பிருந்தாவனம் : இவைகள் ''பிரிஜ்பூமி'' என்று சொல்லப்படுகின்றன. யமுனை நதிக்கரையிலுள்ள இவை பகவான் கிருஷ்ணனுடன் தொடர்பு கொண்ட புண்ணியத் தலம்.

லக்னோ : உத்தரபிரதேசத்தின் தலைநகர் கோமதி நதிக்கரையை ஒட்டியுள்ளது. அசஃ உத் தௌலாவால் கட்டப்பட்ட தொழுகைக் கூடங்களும், விமானங்களும், கொண்ட புகழ் பெற்ற ''பாரா இமாம் பாரா''.


கர்வால் இமயமலைப் பகுதி : கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத், கங்கை, யமுனை உற்பத்தி ஸ்தலங்கள். இப்பகுதியின் அடிவாரத்திலுள்ள ரிஷிகேஷ், ஹரித்வாரம் அதுவரை ஆரவாரத்துடன் வந்த கங்கை தன் சீற்றத்தைச் சிறிது அடக்கி, அமைதி கொண்டது போன்ற தோற்றம்.

மலை வாசஸ்தலங்கள் : மசூரி, நைனிடால், அல்மோரா ராணிகெட்.

காசி : இந்துக்கள் வாழ்நாளில் ஒரு முறை கட்டாயம் வந்து கங்கையில் குளித்து தன் பாவங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கை இடம். காசி விஸ்வநாதர், விசாலாட்சி அம்மன் கோயில் பிரசித்தம்.

சிறுசேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்


சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்



உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1. சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் அல்லது 25 H.P.H.M.T. டிராக்டர் (இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்
2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமி ஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள் - ரூ. 100 மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்



இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக்கூப்பன் பெறுங்கள்

பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP) ★
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP) ★
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8- வது வெளியீடு (NSC VIII ISSUE) ★
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS 92) ★
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF) ★
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS) ★
- ஓய்வு பெறும் அரசு / பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் ★
- 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D.) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D.) ★
- அஞ்சலக தொடர் வைப்புத்திட்டம் வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D. / C.T.D.)

மேலும் **2%** ஊக்கத்தொகை ★(குறிப்பிட்ட திட்டத்திற்கு)

சேமிப்பு பத்திரங்கள் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு) சென்னை-3. ☎ 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம் 92.அண்ணா சாலை, சென்னை-2. ☎ 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

வெளியீடு:

இயக்குநர், சிறுசேமிப்புத் துறை,
621, அண்ணா சாலை, சென்னை - 600 006.
☎ 8251784, 8251685

சிறு குடும்பம் - செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/91/DIS/94/ad*bureau


தாய்மார்களின் பேராதரவுடன்
வெற்றி நடை போடுகிறது !
இளையராஜா
அளிக்கும்
உங்கள்
பாக்யராஜின்
வீட்ல
விசேஷங்க
K·பாக்யராஜ்
தயாரிப்பு என். பழனிச்சாமி
சென்னை
ஆல்பட் A/C
அகஸ்தியா 70mm
கிருஷ்ணவேணி
3 காட்சிகள்
அலங்கார் A/C
உதயம் A/C
பகல் காட்சி
சக்தி அபிராமி A/C
4 காட்சிகள்
மற்றும் தமிழ்நாடெங்கும்
Elegant

சாரநாத் : கௌதமபுத்தர் முக்தியடைந்த இடம். நான்கு புறமும் அசோக சக்ரம் சிங்கம் பொறித்த தூண் உள்ள அருங்காட்சியகம். (பின்னாளில் இது தேசிய சின்னம் ஆனது.)

அயோத்தி : ராமனின் அவதாரத் தலம். மற்றபடி உங்களுக்குத் தெரியும்.

அந்தமான், நிகோபார் தீவுகள்

(வங்காளவிரி குடாவில் கல்கத்தாவுக்கு 1000 கி.மீ. தூரத்திலுள்ள சிறு சிறு 321 தீவுகளில் 38 ல் தான் மக்கள் வசிக்கிறார்கள்.)

போர்ட்ப்ளேர் : தலைநகரம், ஒரு காலத்தில் சுதந்திரப் போராட்ட கைதிகள், ஆயுள் தண்டனை கைதிகளை அடைத்த ஜெயில்கள் உள்ள இடம். அழகிய கடற்கரையும், பவழத் தீவும், பார்க்க ரம்மியம்.

பீஹார்

(மௌரியப் பேரரசன் அசோகன் ஆண்ட பூமி.)

பாட்னா : தேன் கூட்டின் வடிவத்தில் கட்டப்பட்ட 'கோல் கர்''. இந்து மற்றும் பௌத்தமத மர, கல், பித்தளை வேலைப்பாடுகள் காணும் அருங்காட்சியகம்.

நாளந்தா : 5 முதல் 12 ம் நூற்றாண்டில் பௌத்தர்கள் பல்கலைக் கழகம். 9 லட்சம் புத்தகங்கள் கொண்ட நூலகம்.

கயா : ஹிந்துக்கள் தங்கள் பாவங்களைப் போக்கும் என்று நம்புமிடம். அவர்கள் பித்ரு கர்மாக்கள் செய்யுமிடம்.

புத்தகயா : புத்தர் ஞானம் பெற்ற ''போதி மரம்''.

ஒரிசா

புவனேஸ்வரம் : லிங்கராஜ், வைதல், சிசிரேஸ்வரர், உத்தரேஷ்வர், முடேஷ்வர் ஆகிய பல கோயில்கள் ''பிந்து' எனப்படும் பெரிய குளம் (இதற்கு இந்தியாவிலுள்ள எல்லாப் புனித நதிகளிலிருந்தும் தண்ணீர் வருவதாகச் சொல்லப்படுகிறது).

பூரி : ஜகந்நாத் கோயில் - வருடாந்திர ''ரத யாத்திரை'', அழகிய கடற்கரை.

கொனாரக் : ஏழு குதிரைகளால் இழுக்கப்படும் தேர் போல் கல்லால் வடிவமைத்த சூரிய பகவானின் கோயில் உலகப் பிரசித்தம்.

சிலிகா ஏரி : இந்தியாவிலேயே பெரிய ஏரி. மிருகங்கள் மற்றும் பறவைகள் சரணாலயம்.

மேற்கு வங்காளம்

(இந்தியத் துணைக் கண்டத்திற்கு பெருமை சேர்த்த பக்கிம் சந்தர சட்டர்ஜி, ரவீந்திரநாத் தாகூர், விவேகானந்தர் ஆகியோர் பிறந்த மாநிலம்.)


கல்கத்தா : விக்டோரியா மெமோரியல், பொட்டானிகல் தோட்டம், (உலகத்திலேயே அதிக கிளைகள் கொண்ட ஆல மரமுள்ளது) காளி கோயில், பேலூர் ராமகிருஷ்ணா மடம், வில்லியம் கோட்டை, பாதாள மின்சார ரயில், தட்சிணேஷ்வர் கோயில், சலவைக் கல் மாளிகை, நகோடா மசூதி, ஹூக்ளி நதிமேலுள்ள தொங்கு பாலம்.

சாந்திநிகேதன் : ரவீந்திரநாத் தாகூர் ஆஸ்ரமமாக அமைத்தது இப்போது ஒரு பல்கலைக் கழகமாகவுள்ளது. இங்கு பழங்கால முறையில் வகுப்புகள் திறந்த வெளிகளில் நடக்கின்றன.

சுந்தர்பன்ஸ் : வங்காள புலிகளை புகலிடமாகக் கொண்ட அடர்ந்த காடுகள்.

ஆந்திர பிரதேசம்

ஹைதராபாத் : சுற்றிலும் முத்து, விலை மதிப்பற்ற கற்கள், வேலைப்பாடமைந்த வளையல்கள், நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடிய மணமக்கள் அணிகலன்கள் விற்கும் கடைகளின் நடுவே கம்பீரமாக அமைந்த ''சார்மினார்''. அரிய கலைப் பொருட்கள், நுண்ணிய வேலைப்பாடுகள்



குமரி அம்மனின் கோயிலுக்குத் தென் கிழக்குப் பக்கம் இரண்டு பாறைகள் கடலில் இணைகின்றன. ''ஸ்ரீ பாத பாறை'' எனப்படும் இதன்மீது, 'கன்னியாகுமரி' அம்மனின் பாதச் சுவடுகளைக் காணலாம். மற்றொன்று ஸ்வாமி விவேகானந்தர் நீண்ட நேரம் அமர்ந்து தியானம் செய்தது.



கொண்ட பளிங்குச் சிலைகளும், அருமையான சலவைக்கல் சிலைகளும், நூதன நாட்காட்டியும் கொண்ட ''சாலார்ஜங்'' அருங்காட்சியகம், பழமையான உஸ்மானியா பல்கலைக் கழகம், சிறப்பு வாய்ந்த ''கோல்கொண்டா கோட்டை'', ஆசியாவிலேயே பெரிய ''நேரு வனவிலங்கு பூங்கா'', அழகிய உசேன் சாகர் ஏரி, அதைச்சுற்றி சரித்திரப் புகழ் வாய்ந்த 33 பெரியோர்களின் வெண்கலச்சிலைகளும், ஏரியின் நடுவிலுள்ள மண்டபத்தில் நிற்கும் இந்தியாவிலே உயரமான புத்தர் சிலை.

நாகார்ஜுனா கொண்டா : பெரிய அணைக்கட்டு, புத்தர் சிலை.

புண்ணியத்தலங்கள் : திருப்பதி, காளஹஸ்தி, ஸ்ரீசைலம்.

கர்நாடகா

(சந்தன மரத்திற்கும், பட்டுத் துணிக்கும் பேர் போனது.)

பெங்களூர் : லால் பாக், கப்பன் பூங்கா, போன்ற பசுமையிடங்கள், கம்பீரமான விதான் சௌதா (சட்டசபை), பசவங்குடியில் பிரம்மாண்ட நந்திதேவர், விஸ்வேஸ்வரய்யா தொழில் நுட்ப அருங்காட்சியகம், அல்சூர் ஏரி.

பன்னார்கட்டா : சிங்கமும், புலியும் சுதந்திரமாய்த் திரிய, பல்ஸுக்குள் நாம்.

நந்திஹில்ஸ் : குட்டி மலைவாசஸ்தலம்.

மைசூர் : சாமுண்டி மலை, மிருகக் காட்சிசாலை, அரண்மனை, கலைக்கூடம், தென்னிந்தியாவிலேயே பெரிய புனித பிலோமினா மாதா கோவில்.

பந்திபூர் : வனவிலங்குகள் சரணாலயம்.

ஸ்ரீரங்கபட்டணம் : திப்பு சுல்தானின் பல கவடுகள் இன்றும்.

பேலூர், ஹலபேடு : சிற்ப அற்புதங்கள், ஹோய்சளர்கள் எழுப்பிய கலைக் கோயில்கள்.

ச்ரவணபெலகொலா : 57 அடி உயர கோமடேஸ்வரர் சிலை.

ஸ்ரீருங்கேரி : சலசலக்கும் துங்கா நதிக் கரையில் ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட சாரதா பீடம்.

ஜோக் நீர் வீழ்ச்சி : ஷராவதி ஆறு 960 அடி உயரத்திலிருந்து விழுகிறது.

உடுப்பி : பாலகிருஷ்ணனின் பிரபல கோயில்.

தர்மஸ்தலா : ஆந்திராவுக்கு வெங்கடேச பெருமாள் போல் கன்னடக்காரர்களுக்கு இங்குள்ள மஞ்சுநாதர்.

பீஜபூர், பதாமி, கோல்கும்பஸ், பட்டடகல் : சாளுக்கியர்களின் சரித்திரச் சின்னங்கள்.

ஹம்பி : விஜய நகரப் பேரரசின் மிச்சங்கள்.

கேரளா

கொச்சி : அற்புதமான இயற்கைத் துறைமுகம்.

குருவாயூர் : பிரபல சனாதன கிருஷ்ணன் கோயில்.

காலடி : அத்வைதத்தின் ஆணி வேரான ஆதிசங்கரர் அவதரித்த இடம்.

மலம்புழா : அணை, ஏரி - கண்ணுக்கு குளிர்ச்சி.

மூணார் : தேயிலை, ஏலக்காய் தோட்டங்கள்.

சபரிமலை : சர்வ மதத்தினரும் சரணமய்யப்பா.


திருவனந்தபுரம் : சயனக்கோலத்தில் பத்மனாபர்.

தமிழ்நாடு

சென்னை : நீண்ட மெரினா, குழந்தைகள் பூங்கா, காந்தி மண்டபம், பாம்புப் பண்ணை, கோளரங்கு, அற்புதக் கோயில்கள் (மயிலை, திருவல்லிக்கேணி, பெசன்ட் நகர்.)

ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி (ஓரளவு) : மலை வாசஸ்தலங்கள்.

மதுரை, ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், திருச்சி, திருவண்ணாமலை, சிதம்பரம்,




குமரி மாவட்டத்தில் உள்ள 'முட்டம்' - மிகவும் அழகான இடம். குமரியிலிருந்து 32 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அழகிய கடற்கரையும், கலங்கரை விளக்கமும் கொண்ட இந்த இடம் சுற்றுலா செல்ல உகந்த இடம்.



உங்கள் வரிசேமிப்பு திட்டம் அளிக்கும் நன்மைகள் ஒன்ரு ? இரண்டா ? மூன்ரு ?

யூலிப்

அளிக்கும் நன்மைகள் 5 !



யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டம்

ஒன்றுக்கு மேல் அதிக நன்மைகளை அளிக்கும் வரிசேமிப்பு திட்டம் இது.

- வருடாந்திர டிவிடெண்ட் திட்டத்தில் திரும்ப முதலீடு செய்யப்படும். கடந்த வருடத்தில் (அதாவது 1992-93) டிவிடெண்ட் 16.5% வரை அதிகரித்தது.
- முதிர்வு போனஸ் திட்டம் முடிவடையும் போது இலக்கு தொகையில் 10 வருட திட்டத்திற்கு 5% மற்றும் 15 வருட திட்டத்திற்கு 7.5% போனஸ்.
- வரிவிலக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 88ன் கீழ் வரி விலக்கு.
- ஆயுள் இன்சூரன்ஸ் காப்பு மருத்துவ பரிசோதனை இல்லாமலேயே உங்கள் இலக்குத் தொகைக்கு ஈடாக ஆயுள் காப்பு.
- இலவச விபத்துக்காப்பு உங்கள் இலக்குத் தொகை எத்தனையாக இருப்பினும் ரூ.30,000 ற்கு இலவச விபத்துக்காப்பு.

10 வருட அல்லது 15 வருட திட்டம் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து: இலக்குத் தொகை ரூ.6,000 லிருந்து ரூ.60,000 வரை முதலீடு செய்யலாம்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கென.

எல்லா செக்யூரிட்டீஸ் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். முதலீடு செய்வதற்கு முன் உங்கள் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.

கிளை அலுவலகங்கள்: • **கோயம்புத்தூர்.** போன்: 210399 • **சென்னை.** போன்: 517101, 517190 • **மதுரை.** போன்: 38156 • **திருச்சி.** போன்: 27060.

Sista's.UTI.190.93 TM C

வைத்தீஸ்வரன் கோயில், பழநி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி, தஞ்சாவூர், ஹிந்துக்களின் பெரு நம்பிக்கையைப் பெற்ற அருள்மிகு கோயில்களில் இவை சாம்பிள் மட்டுமே.

கன்யாகுமரி : இந்தியாவின் தென் எல்லை. முக்கடல் சங்கமம், காந்தி மண்டபம், விவேகானந்தா பாறை.

கல்லணை, சாத்தனூர் : சுற்றுலா மையங்களான அணைக்கட்டுகள்.

நாகூர், வேளாங்கண்ணி கோயில் : முகமதியர்களும், கிருத்துவர்கள் மட்டுமல்ல, ஹிந்துக்களும் திரளும் தலங்கள்.

குற்றாலம், ஹோகனேகல் : சிலிர்க்க வைக்கும் நீர்வீழ்ச்சி.

தாராசுரம், மகாபலிபுரம், காஞ்சிபுரம் : சிற்ப அற்புதங்கள்.

வேடந்தாங்கல் : பறவைகள் சரணாலயம்.

பாண்டிச்சேரி

தமிழும், பிரெஞ்சும் பேசும் மக்கள், ஆரோவில், அரவிந்தர் ஆஸ்ரமம், கண்ணாடி வீடு, ஜிப்மர் மருத்துவமனை, மணக்குளவிநாயகர் கோயில், கடற்கரை.

கோவா

அழகிய கடற்கரைகளும், மாதா கோவில்களும் நிறைந்த இடம். புனித ப்ரான்ஸிஸ் சேவியர் உடல் பாதுகாக்கப்படும் பாம் ஜீஸஸ் பாசிலிகா மாதா கோயில், கத்தோலிக்கர்களின் புனித யாத்திரை கோயில், இந்துக்கள் மங்கேஷ் கோயிலுள்ள, பலமாடிகள் கொண்ட விளக்குக் கம்பங்கள் பிரபலம். மண்டோவி நதியில் மனிதர்கள் மட்டுமல்ல, விலங்குகள், கார், வண்டிகள் முதலியவற்றுடன் நீராவிப் படகு சவாரி.

குஜராத்

அஹமதாபாத் : ஹிந்து முஸ்லிம் பாணி கட்டடங்கள், அசையும் மினாரட்ஸ் உள்ள மசூதிகள் அதிசயம், பிரசித்தி பெற்ற காலிகோ, பாத்திரங்கள், விதவிதமான காற்றாடிகள், அருங்காட்சியகம், காந்தி நகரிலுள்ள "அக்ஷர் தாம்".

பாலிதானா, கர்நார் : நூற்றுக் கணக்கான ஜெயினர்கள் கோயில்.

துவாரகா : மறைந்த கடல் நகரத்தின் சிறுபகுதி. ஆதிநாளில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அரசாண்ட இடம். துவாரகீஷ் கோயில்.

சோம்நாத் : அழகு, செல்வமுள்ள கோயில், அன்னிய தேசத்தவரால் பலமுறை படையெடுப்பில் கொள்ளையடிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்ட கோயில்.

மத்திய பிரதேசம்

கஜுராஹோ : உலக அதிசய சிருங்கார சிற்பங்கள்.

போபால் : தலைநகர், இந்தியாவிலேயே பெரிய "தாஜ் உல்" மசூதி. பாரத் பவன், கல்லில் பெய்ன்ட் செய்யப்பட்ட பீம்பெட்கா குகைகள்.

சாஞ்சி : புத்த மதச் சின்னங்கள் ஸ்தூபி.

மார்பல் ராக் : வண்ணத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் சுண்ணாம்பு பாறைகளை இருபுறமும் பார்த்துக் கொண்டு நர்மதை நதியில் படகுச் சவாரி.

உஜ்ஜயின் : மஹாகால் ஜோதிர்லிங்க கோயில்.

மகாராஷ்டிரா

பம்பாய் : இந்தியாவின் நுழைவு வாயில், மரைன் ட்ரைவ், (அ) க்வீன்ஸ் நெக்லெஸ், ஜுஹூ கடற்கரை, எலிபெண்டா குகைகள், மகாலக்ஷ்மி கோயில், அருங்காட்சியகங்கள்.


அஜந்தா, எல்லோரா : புத்த, ஜைன, ஹிந்து மத நம்பிக்கை பிரதிபலிக்கும் 34 எல்லோரா கற்கோயில்கள். 29 பௌத்த குகைகளிலுள்ள வேலைப்பாடமைந்த கல் சிற்பங்கள், அருமையான ஓவியங்கள்.

லோனாவாலா, மஹாபலேஷ்வர், பஞ்சாக்னி, ஜாவ்ஹர், அம்போலி : மலை வாசஸ்தலங்கள்.

தொகுப்பு : அருண் சரண்யா



முருகனின் அறுபடை
வீடுகளில் ஒன்றான
திருச்செந்தூர் - அழகிய கடற்கரை
யுடன் கூடிய திருத்தலங்களில் ஒன்றாகும்.
கன்னியாகுமரியிலிருந்து இராமேஸ்வரம்
செல்லும் வழியில் 91 கிலோமீட்டர்
தொலைவில் உள்ளது.



A BEAUTIFUL HOME
IS NOW WITHIN YOUR REACH

STUDY AT HOME **INTERIOR DECORATION**

A SMART CAREER MOVE NOW CAN MAKE YOUR ENTIRE LIFE.

JOIN

INTERIOR DECORATION

CORRESPONDENCE COURSES

- Study in your own free time
- No minimum qualification needed
- Course fee payable in instalments
- No need to buy costly books
- Study material prepared by experts
- Choice of Hindi medium also

ADMISSION OPEN

I am very thankful to your full descriptive guidance and lessons. I have learnt many things by the course.
— **Nikhil J. Mehta (Civil Engineer) Gujarat**

I have enjoyed your course. I was impressed with the systematic lessons and they were easy to follow and understand. Thank you for making the course so enjoyable and for making learning a pleasure.
— **Nalini Raj, Indira Nagar, Bangalore**

This is the best correspondence course for those who do'nt have time to attend classes. In my views this is the best course without purchasing costly books. I have studied all about Interior Decoration and I am proud that I joined your Academy. I will also suggest my friends and relatives, who are interested, to join your Academy.
— **Vipul Kotecha, Bombay**

AID

For details send a self addressed envelope to
ACADEMY OF INTERIOR DECORATION
10A/14 SHAKTI NAGAR, DELHI-110 007

SANSKRIT THROUGH CORRESPONDENCE

संस्कृतम्
சமஸ்கிருதம்

தபால்மூலம் 6 மாதகால தமிழ் ஆங்கில
வாயிலாக சிறப்புப் பயிற்சி


SANSKRIT THROUGH CORRESPONDENCE

சமஸ்கிருத மொழியை இப்பொழுது நீங்களும் தபால் மூலம் ஆறே மாதங்களில் பேச, எழுத படிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

தேர்ச்சிபெற்ற சமஸ்கிருத பண்டிதர்களால் இயற்றப்பட்ட பாடங்கள் மாதம் ஒரு முறை தபால் மூலம் அனுப்பப்படும். நூற்றுக்கணக்கானோர் இப்பயிற்சியில் சேர்ந்து தேவ மொழியான சமஸ்கிருதத்தை கற்றுக் கொண்டுள்ளனர். ஏன் நீங்களும் இன்றே சேர்ந்து ராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை போன்ற காவியங்களை சமஸ்கிருத மொழியிலேயே படித்து பயன் பெறலாமே! அவைகளில் நல்ல செய்திகள் அடங்கியுள்ளன.

இலவச Prospectus பெற இன்றே எழுதுங்கள். இறுதி தேதிக்குள் சேரும் அனைவருக்கும் பரிசு புத்தகம் ஒன்று உள்ளது எனவே தங்களை நினைவில் நிறுத்துங்கள்.

INDIANA SANSKRIT ACADEMY
C/o. INDIANA ACADEMY OF MANAGEMENT SCIENCES,
Post Box No. 1108, Bhashyakarlu Road,
Coimbatore - 641 002, Tamil Nadu.



திருமணம் நடத்தி வைக்கும் பெண் புரோகிதர்கள்!

இதுவரை, ஆண்களின் கோட்டையாக இருந்த புரோகிதத் தொழிலை, தற்போது பெண்கள் முற்றுகையிட்டுப் புரோகிதத் தொழிலைப் பிடித்துக் கொண்டிருப்பது, ஒரு புதுமையான, சுவாரசியமான விஷயம். இப் பெண்கள் யார்? மிகவும் ஆசாரமான, பழமைக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்ட, மகாராஷ்டிர குடும்பங் களைச் சேர்ந்த இல்லத்தரசிகள், பூனாவில் உள்ள உத்யான் பிரசாத் மங்கள் கார்யாலயா எனும் வேத பாடசாலையில் வேதங்களையும், பூஜா மற்ற சடங்குகள் நடத்தும் முறைகளையும், மந்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள்.

மங்கல வாத்தியங்கள் முழங்க, மணமக்கள் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அமர்ந்திருக்க - திடீரென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு - திருமணத்தை நடத்தி வைக்க, நடுத்தர வயதுள்ள மஹாராஷ்டிரப் பெண்மணிகள் - மேடைக்கு வந்ததுதான் சலசலப்புக்குக் காரணம்.

பூனாவுக்கு வெளியேயிருந்து வந்தவர்களில், மிகச் சிலரே, பெண்கள் சடங்குகளை நடத்தி வைப்பது பற்றி அறிந்திருந்ததால் பெண்கள் சடங்குகளை நடத்தி வைப்பது பற்றி அறியாத - அதுவும் திருமணச் சடங்குகளை நடத்துவது பற்றி அறியாத, பலர் வெருண்டு, திருமண மண்டபத்தை விட்டு வெளியேற முயற்சித்த போது, சமாதானப் படுத்தப்பட்டு, மறுபடி மண்டபத்திற்குள் வந்து அமர்ந்தனர். சடங்குகள் தொடங்கி, திருமணம் முடிந்த போது, சடங்குகளை நடத்தி வைத்த பெண் புரோகிதர்களை ஆர்வமுடன் நோக்கினர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் குறிப்பாக, பூனாவில், இதுவரை ஆசாரமான பிராமணர்களின் தனியுரிமையாக இருந்த, புரோகிதத் தொழிலைத் தற்போது, பெண்களும் நடத்தி வருகிறார்கள். இப் பெண் புரோகிதர்கள் குருஜிகா என்று அழைக்கப்படுகிறார்கள். பயிற்சி பெற்றுள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட இப் பெண் புரோகிதர்கள் சடங்குகளை நடத்தி வைக்கும் தொழிலில் தங்களுக்கென்றே ஒரு சிறப்பிடத்தை அமைத்துக் கொண்டுள்ளார்கள். இவர்கள்

பூனாவில் மட்டுமல்ல, மகாராஷ்டிர மாநிலத்துக்கு வெளியிலும், சிலர் மேற்கு ஆசியா, ஐரோப்பா போன்ற இடங்களுக்கும் சென்று பூஜை மற்றும் பிற மத சடங்குகளைச் சிறப்பாக நடத்தி வைத்திருக்கின்றனர்.



இப் பெண்கள், இல்லற வாழ்வைத் துறந்து விட்ட சந்நியாசிகள் அல்ல. இவர்கள், மிகவும் ஆசாரம் நிறைந்த, பழைமையில் நம்பிக்கை கொண்ட, குடும்பங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள். பலர் 40 வயதுக்கு அதிகமானவர்கள். மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தங்களின் புதிய தொழில் காரணத்தால் தங்கள் குடும்ப வேலைகளைக் கவனிப்பதில் எந்த சுணக்கமும் இன்றி, தங்கள் அன்றாட குடும்ப வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

இப் பெண் புரோகிதர்கள், பூனாவில் சதாசிவ பேட்டையிலுள்ள உத்யான பிரசாத் மங்கள் கார்யாலயா எனும் பயிற்சிக் கூடத்தில் வேதங்கள், மந்திரங்கள், சடங்குகள் நடத்துவது போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்தவர்கள். இப் பயிற்சியைப் பெற, ஆசிரியைகள், நர்சுகள், ஏன் பெரிய பெண் அதிகாரிகளும் முன்வந்துள்ளனர்.

1975-ம் ஆண்டில், சங்கர் தட்டேயும், அவர் மனைவி புஷ்பா தட்டேயும், உத்யான் கார்யாலயாவில், புரோகிதத் தொழிலைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த போது, பலத்த ஆட்சேபம் எழுந்தது.

இத் தொழிலில் பயிற்சி பெற, மிகக் கடின உழைப்பும் நிறைய பொறுமையும் தேவை. எனவே, இப் பயிற்சியில் சேரும் இளம்பெண்கள், தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்லாததும், மிக அபூர்வமாகவே, நீண்ட காலம் கற்று இறுதிவரை, இப்பயிற்சி பெறுகிறார்கள் என்பதும் ஆச்சரியமானதல்ல.

"நாங்கள் புரோகிதத் தொழிலை ஏற்று நடத்தும் வரை, ஆண் புரோகிதர்கள், மிக அதிகமான தட்சிணையைக் கறந்து கொண்டிருந்தார்கள். இப்போது நாங்கள் இருப்பதால் முன் போல் அதிக தட்சிணையைக் கறக்க முடியவில்லை என்பதால் எங்களைக் கண்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை" என்கிறார் ஒரு பெண் புரோகிதர்.

"ஆண் புரோகிதர்கள் தட்சிணை வாங்குவது ஒன்றையே குறியாகக் கொண்டுள்ளார்களே ஒழிய, மந்திரங்களைச் சிரத்தையாகச் சொல்வதில்லை. மேலும் மந்திரங்களை விளக்கிப் பொருள் கூறுவதில்லை. பிராம்மணர்

களுக்கு மட்டுமே பூஜை செய்ய தெய்வீகச் சக்தி இருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். இதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. எல்லா ஜாதியினரும், மந்திரங் களைக் கற்றுக் கொள்ளலாம் என்று நாங்கள் ஊக்குவிக்கிறோம்'' என்கிறார் இன்னொரு பெண் புரோகிதர்.


காலம் மாறிக் கொண்டே வருகிறது. புனா நகரில் பலர் பூஜை, சடங்குகள் போன்ற வற்றை நடத்தி வைக்கப் பெண் புரோகிதர்களையே அழைக் கிறார்கள். ''பெண்கள் மந்தி ரங்களை உச்சரிக்கும் போது, இனிமையாக மிருதுவாக இருக் கிறது. மந்திரங்களில் இலயித்து உச்சரிப்பதால் ஈடுபாடு ஏற்படு கிறது'' என்கிறார் மற்றொரு பெண் புரோகிதர்.

''பூஜைக்கு நீண்ட நேரம் ஆனாலும், நாங்கள் பூஜைக்கு வேண்டிய எல்லா மந்திரங்களை யும் கூறி, மந்திரங்களுக்கு விளக்கமும் கூறுகிறோம்'' என்கிறார் ஒருவர். இவர்கள் பிரபலமாக ஆகியுள்ளதற்கு இன்னொரு காரணம், இவர்கள் தட்சிணையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதே. தட்சிணையாக எவ்வளவு கொடுத்தாலும், பேரம் பேசாமல் வாங்கிக் கொள்கிறார்கள். பல சமயங்களில் இலவசமாகவே சடங்குகளை நடத்திக் கொடுக்கிறார்கள் என்பதே, இவர்களுக்கும் ஆண் புரோகிதர்களுக்கும் உள்ள வேறுபாடு.

இப் பெண் புரோகிதர்கள், வெற்றிகரமாகத் தம் தொழிலை நடத்தி வருவதன் காரணம், இவர்கள் குடும்பங்கள் இவர் களுக்கு ஆதரவாக நிற்பதுதான். ''என்னுடைய மனைவி பற்றி நான் பெருமைப்படுகிறேன். இப்போதெல்லாம் அவள் பாக்கெட் மணி கேட்பதில்லை. முற்றிலும் புதிய தொழிலைச் செய்கிறாள். என் மனைவிக்கு பூஜைகள் செய்வதில் எப்போதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு'' என்கிறார் பெண் புரோகிதர் ஒருவரின் கணவர்.

''மக்கள் எங்களை அங்கீகரித்து வருகிறார்கள். புதியதான எதுவும் உடனே ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. காலக்கிரமத்தில்தான் மாறுதல் ஏற்படும். மந்திரங்களைச் சொல்லிக் கொடுக்கப் பல இடங்களிலிருந்து அழைப்பு வருகிறது'' என்கிறார் இன்னொருவர்.

பழமையான பழக்கங்கள் மாறி வந்தாலும், இப் பெண் புரோகிதர்கள், தாங்கள் வீட்டுக்கு விலக்காகும் நாட்களில் தொழிலைச் செய்வதில்லை.



இறப்பு சம்பந்தப்பட்ட சடங்குகளை நடத்திக் கொடுக்க மட்டும் இப் பெண் புரோகிதர்களுக்கு பயிற்சி இல்லை. காலக்கிரமத்தில் இந்த ஆட்சேபம் மடியாவிடினும், இது பற்றி பலத்த விமர்சனம் செய்யப்படுவது கணிசமாகக்

விரைவாக நகை கடன் பெறுவீர்.

RBF

சவரனுக்கு ரூ. 2400/- விகிதம் நகைக்கடன் பெறுவீர் !

அப்ரைசர் கட்டண வசூலிப்பு
புதுப்பிக்கும் கட்டணம்
வட்டிக்கு வரி
ரிக்கரிங் டெபாசிட்
அதிகபட்ச கடனுக்கு வரம்பு
முன்னதாக டோக்கன் வாங்கும் முறை

இல்லை

RBF நிதி லிமிடெட்

(மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற 'நிதி' நிறுவனம்)

பதிவு அலுவலகம்: 'கோகலே பவன்' 8, வெஸ்ட் காட் சாலை, இராயப்பேட்டை,
சென்னை-600014. தொலைபேசி: 831180, 846445, 831755
கிளை அலுவலகம்: "பார்க் சென்டர்" 14, வெங்கட்நாராயணா சாலை,
சென்னை-600017. தொலைபேசி: 443703, 446137

ரொக்க நடவடிக்கைகள்: காலை 8.30 முதல் மாலை 4.00 வரை
(எல்லா நாட்களிலும்)

நகைக்கடன்: காலை 8.30 முதல் மாலை 3.30 வரை (எல்லா நாட்களிலும்)
நகைகளை மீட்க: காலை 9.00 முதல் மாலை 3.30 வரை (எல்லா நாட்களிலும்)

வெள்ளிக்கிழமை விடுமுறை — ஞாயிறு: காலை 8.30 முதல் பகல் 12.00 வரை

மற்ற எந்த இடத்தைக் காட்டிலும் மிகமிக விரைவான சேவை.
கடன் பெறும்போதும், நகையை திரும்பப் பெறும்போதும் !

* வரவு செலவுகள்: அங்கத்தினர்களுடன் மட்டுமே

S.சுப்ரமணியன்
Chairman & Managing Director

குறையும். இப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற பெண் புரோகிதர்கள் தங்கள் வீட்டிலேயே பெண்களுக்கு இலவசமாக புரோகிதம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தனர்.

உத்யான் கார்யாலயாவின் பழைய மாணவிகள் தங்கள் பயிற்சிக்குப் பிறகு பல ஆண்டுகள் கழிந்தும், பயிற்சிக் கூடத்தோடு தொடர்பு வைத்துள்ளனர். "கடந்த ஆறு ஆண்டுகளாக, நான் இங்கு பயிற்சி பெற்று வருகிறேன். மதியம் ஆஸ்பத்திரியை விட்டு நேரே, பயிற்சிக் கூடத்திற்குச் சென்று, பயிற்சிக்குப் பிறகு இரவில் வீடு சேர்கிறேன். எனக்கு விருப்பமான ஒன்றை நான் செய்வதால், எனக்குக் களைப்பு ஏற்படுவதில்லை" என்கிறார் தியா கோஸ்வாமி எனும் நர்ஸ்.

எல்லா ஜாதிப் பெண்களும், எந்த வயதுப் பெண்களும் இப் பயிற்சியில் சேரலாம். ஆனால் ஆண்களுக்கு இப் பயிற்சிக் கூடத்தில் சேர அனுமதி கிடையாது - அவர்கள் பயிற்சி பெற, வேறே பல பயிற்சிக் கூடங்கள் இருப்பதுதான் காரணம். பயிற்சியின் முதல் ஆண்டிலேயே, மந்திரங்களைக் கரைத்துக் குடித்து விடும் பெண்கள் இருக்கிறார்கள். இவர்கள், தாங்களாகவே, மந்திரங்களைச் சொல்லி, பூஜைகளைச் செய்யும் திறமையுடையவர்கள். பயிற்சி முடிந்து தொழிலை ஆரம்பிக்கும் போது, சடங்குகளை நடத்த, தொழிலில் நன்கு பழக்கப்பட்ட, பெண் புரோகிதர்களைத் தங்களுடன் அழைத்துச் செல்கிறார்கள். ஓரளவு தைரியம் வந்தவுடன், தாங்களே சடங்குகளை நடத்துகிறார்கள். புரோகிதத் தொழிலை ஆரம்பித்து விட்டாலும், தொடர்ந்து, பயிற்சி வகுப்புகளுக்குச் செல்கிறார்கள். மரணச் சடங்குகளுக்காக, மந்திரங்களைக் கற்றுக் கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை" என்கிறார் திருமதி புஷ்பா தட்டே.

இப் பயிற்சிக்கூடம் புனாவில் மிகப் பெரிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக் கட்டிடத்திலேயே திருமணம் நடத்த திருமண மண்டபமும் இருக்கிறது.

- ராஜி

ஆதாரம் : தி வீக்

அழுத பிள்ளை சிரிக்குமாம்!
அழகாய் கோகுலம் படிக்குமாம்!

கோகுலம்

விற்பனையாகும்
மார்ச் இதழில்....

- பரீட்சைன்னு சொன்னதுமே ஒரு தீவிரம் வந்துடறதே!
  - ஒரு பெற்றோர்.
- எங்களை ஏகமாய் பயப்படுத்தறாங்க!
  - மாணவி சித்ரா
- டியூஷனும் ஒரு மாலை நேரப் பள்ளிதான்!
  - தந்தை ஆறுமுகம்
- சந்தேகங்களை தைரியமாக் கேளுங்க!
  - ஆசிரியை
- முதலில் தன்னம்பிக்கை பரீட்சையில் பாஸ் மார்க் எடுப்பது கடினமே இல்லே!
  - ஆசிரியர்

இவை எல்லாமே "பரீட்சைக்கு பயமேன்?" கருத்துக் கோர்வையில் அலசப்படு கின்றன.

இன்னும் :

- மாயா உலகில் காஸிம்
  - படக்கதை



+ அறிவியல், போட்டி, ஏராளக் கதைகள்.

மூன்றே ரூபாய்க்கு 96 பக்கங்கள்!

கோகுலம், ஈக்காடுதாங்கல், சென்னை - 97.

சொல்ல விரும்புகிறோம்!

அடுத்தது இராமேஸ்வரமா?

★ "மங்கையர் மலரைத் திறந்தவுடன் காஞ்சிப் பெரியவாளின் அருள்மிகு தோற்றம் நெஞ்சைப் பரவசப்படுத்தியது. அவர்களை எக்கணமும் தரிசிக்கும் வகையில் அப்பக்கத்தை அப்படியே எடுத்து பிரேம் போட்டுப் பூஜையறையில் வைத்து விட்டேன்!"
அரசரடி, நெல்லை. வி. சிவா.

★ "உள்ளே ஓர் இன்ப ஊற்று கதையைப் படித்ததும் எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. இந்த மாதிரி ஒவ்வொரு குடும்பத்திலும் மாமியார் மருமகள் அன்பு, பாசம், ஒற்றுமையோடு சண்டை போடாமல் இருந்தால் மாமியார் மருமகள் சண்டை என்பதே இல்லாமல் எல்லா குடும்பமும் சந்தோஷமாக இருக்கும்."
சென்னை-53, லக்ஷ்மிஸ்ரீநிவாசன்.

★ தெருவோர பிளாட்பார கூடாரங்களுக்குள், வாழ்க்கையோடு போராடி, பட்டினி கிடந்து நம் பூஜை அறை கடவுள்களை படைக்கும் பிரம்மாக்கள் பற்றிய கட்டுரை(தெருவோர சரித்திரம்) படித்ததும் மனம் கலங்கித்தான் போனது. அழகான பொம்மைகளைச் செய்யும் இந்த அழுக்கு மனிதர்களின் வாழ்க்கை நெஞ்சை நெகிழச் செய்து விட்டது.
சென்னை-90, அனுபல்லவி.

★ சேலத்தில் நடந்த 'மகளிர் விழா' பற்றிய தொகுப்பை படித்ததும் அதிசயித்தேன். அதுவும் கோலப் போட்டி அபாரம் போங்கள். ஃபோட்டோக்களைப் பார்த்தே எல்லாமே அழகாய் இருக்கு எதற்கு முதல் பரிசு என நாங்களே பிரமித்தோம் என்றால் நிஜத்தில் எல்லா கோலங்களையும் பார்த்து போட்டிக்குப் பரிசு பெற்றதை முடிவு செய்ய நடுவர்கள் எத்தனை குழம்பியிருப்பார்களோ...?
பெசன்ட்நகர், ஸ்ரீநிவாஸ்பிரபு.

★ "வேண்டாம் இந்த விபரீதம்" நிகழ்ச்சி வார்த்தைக்கு வார்த்தை சரி. ஆனால் இதில் திருமதி ஜானகி விஸ்வநாத் w.w.f. விளையாடுபவர்களுக்காகத் தயாரிக்கப்படும் பட்டைகள், கச்சை மற்றும் இடுப்புப் பெல்டுகள் இன்னும் இந்திய மார்க்கெட்டுக்கு வரவில்லை என்று சிறிது நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார். ஆனால் என்ன வேதனை! இங்கு அதுவும் மார்க்கெட்டுக்கு வந்து எல்லாக் குழந்தைகளும் அதன்பின்னால் பவித்திரம் அடையாத குறையாக அலைகின்றனர். இதற்கு விடிவு பெற்றோர்களாகிய நம் கையில் தான் இருக்கிறது.
பம்பாய், பானுமதிசுப்பிரமணியம்.

★ 'காசிக்குப் போகலாமா' கட்டுரையைப் படித்ததுமே எங்களுக்கு காசிக்குப் போன புண்ணியம் கிடைத்து விட்டது. காசியில் சாப்பாட்டுக்கும், சாஸ்திரிகளுக்கும், சிரார்த்தத்துக்கும் எவ்வளவு பணம் ஆகும் என்று தெரிவித்திருந்தால் எல்லோருக்கும் இன்னும் பயனுள்ளதாக இருந்திருக்கும். அடுத்தது ராமேஸ்வரமா?
தஞ்சை, கோ.ஹேமமாலினி.

★ சின்னவர்களை விட்டு பெரியவர்களிடம் இடக்கு மடக்கு கேள்விகளை கேட்க வைத்து... பலே, நல்ல கலகலப்பான திருவிளையாடல்தான் போங்க!
வேலூர், திருமலை நாயகன்.


★ தங்களுக்குத் தாங்களே ஒரு "இன்ஃபீரியாரிட்டி" காம்ப்ளெக்ஸை வளர்த்துக் கொண்டு வாழ்பவர்களுக்கும் சரி, பிறர் தன்னை அவமானப்படுத்தி விட்டார்களே?! என்று மனம் புழுங்கி வாழுபவர்களுக்கும் சரி, கமலநாதனின் "அவமானங்களை அவமதிக்காதீர்கள்" என்ற கட்டுரை மன உறுதியுடன் கூடிய ஒரு வகையான தெம்பினை அளிக்கும்.
தோட்டக் குறிச்சி, கலைச்செல்வி வளையாபதி.

★ அன்னைதெரசா மட்டுமே அமைதி வேண்டிய பெண் என்றும் இதற்காக அவர் மட்டுமே நோபல் பரிசு பெற்றார் என்று மட்டுமே அறிந்திருந்த எனக்கு அன்னை தெரசாவைத் தவிர நோபல் பரிசு பெற்ற மற்ற பெண் மணிகளைப் பற்றி விரிவாகத் தெரியாது. இதனை விரிவாக அறியச் செய்த உங்களுக்கு நன்றி. மற்றும் அட்டை வண்ணப் படமாக அன்னை தெரசாவை மிகவும் அற்புதமாக வரைந்த ஓவியர் வேதாவுக்கு என்னுடைய மனங்கனிந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.
திருச்சுழி, சுந்தர்.அழகேசன், பி.ஏ.

★ தங்களின் 'சில பிரச்சனைகள், சில வார்த்தைகள்' கட்டுரை மிக அருமை. எனது உள்ளத்தில் உள்ள கருத்துக்களின் பிரதி பிம்பமாக அவை அமைந்திருந்தன. சமுதாயச் சீர்கேட்டுக்கு, அதிலும் பன் ஏழு ஆண், பெண்களுக்கு மனச் சிதைவு ஏற்படுத்தும் வகையில் உள்ள இன்றைய சினிமா, டி.வி.நிகழ்ச்சிகள் இலைமறைவுகாய் மறைவாக இல்லாமல், கவர்ச்சி காட்டும் விதத்தில் உள்ளதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். கட்டுரையில் வந்த "படிக்க வெகு தூரம்போக வேண்டிய நகர வாழ்க்கை. வழியில் காத்துக் கிடக்கும் கவர்ச்சிகள்" என்ற இரண்டு வாக்கியங்களும் மனதைத் தொட்டன. இன்றைய நடைமுறை வாழ்க்கையின் முத்தாய்ப்பாக இவ்வரிகள் உள்ளன.
திருவண்ணாமலை, வெங்கடேசன்.

★ "கூவல்" கதையை இதுவரை பலமுறை படித்து விட்டேன். ஒவ்வொரு முறையும் கண்ணில் நீர்த் துளிர்க்கிறது. அருமையான கதை.
புதுடெல்லி, லட்சுமிராஜகோபால்.

இந்த மாயாஜால கம்பளத்தின் இரகசியங்களை கண்டுகொள்ளுங்கள்



- **துவைக்கக் கூடியது & கறை எதிர்க்கவல்லது**
  ஸப்னா கறையை எதிர்க்க வல்லது மற்றும் துவைக்கும் ஒவ்வொரு முறையும் புத்தம் புதியதாக விளங்கும்.
- **நீடித்துழைக்கக்கூடியது**
  ஸப்னா கார்பெட்கள் மற்றும் மேட்கள் கிழிக்க முடியாத நூல்களைக் கொண்டு நெய்யப்படுவதால் வருடாவருடம் நீடித்துழைப்பதை உறுதிப்படுத்துகிறது.
- **கவர்ச்சிகரமான டிசைன்கள்**
  பரவசமூட்டும் வண்ணங்கள் மற்றும் டிசைன்களின் அணிவரிசையிலிருந்து நீங்கள் உங்கள் அறைகளின் வண்ண எழிலுக்கேற்ப தேர்ந்தெடுக்கலாம்.
- **பன்முக உபயோகம்**
  உங்கள் இல்லத்தின் பல்வேறு உபயோகங்களுக்கு ஸப்னா கார்பெட்கள் & மேட்கள் கச்சிதமானவை. பூஜை செய்ய, உட்கார, உண்ண, படுக்க, உல்லாசப் பயணத்திற்காக மற்றும் குழந்தைகள் விளையாட போன்ற உபயோகங்களுக்கான மேட்களிலிருந்து உங்கள் இல்லத்தின் பிரதான அறைக்கு தேவையான அலங்கார மைய விரிப்பு வரையிலான மேட்கள் அணிவரிசை உள்ளது.
- **அளவு வரிசை**
  ஸப்னா கார்பெட்கள் & மேட்கள் (30x45 செ.மீ. லிருந்து 270x360 செ.மீ.) வரையிலான அளவுகளில் கிடைக்கின்றன.
- **ஜப்பானிய தொழில் நுட்பம்**
  அஸாகோ மெஷின் மேன்யூஃபேக்சரிங் கம். லிட்., ஒகயாமா, ஜப்பான் நிறுவனத்தினர் வழங்கும் ஜப்பானிய தொழில்நுட்பத்தின்படி ஸப்னா கார்பெட்கள் & மேட்கள் தயாரிக்கப்படுகின்றன.

Sapana
CARPETS & MATS

SAPANA POLYWEAVE PVT. LTD.
158, C.S.T. Road, Kalina, Santacruz (East), Bombay 400 098.

AXIS/S001/17

அஸ்வினி மசில் ஆயில்

மூட்டு வலி, சுளுக்கு மற்றும் இதர வலிகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது.



அஸ்வினி மசில் ஆயில்

மூட்டுவலிக்கு நான் கடந்த சில மாதங்களாக உங்களுடைய அஸ்வினி மசில் ஆயிலை உபயோகிக்கிறேன்.

எனது மனைவியும், தனது இடுப்பு வலிக்காக, அஸ்வினி மசில் ஆயிலைத்தான் உபயோகிக்கிறாள். நாங்கள் இப்பொழுது இங்கிலீஷ் மருந்துகளை உபயோகிப்பதை முழுமையாக நிறுத்திவிட்டோம்.

வருங்காலத்திலும் தாங்கள் இதன் தரத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

V.T. பெருமாள்
கே.கே. நகர், சென்னை.

தயாரிப்பாளர்கள்:
அஸ்வினி ஹோமியோ பார்மஸி
மூஸாபேட், ஐதராபாத் 500 018

அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில் தயாரிப்பாளர்களின் மற்றுமோர் தயாரிப்பு

இல்லந்தோறும் இருக்கவேண்டிய வலி நிவாரணி

திருமண மலர்

மணமகள் தேவை

* Educated employed Madras based girl for Thengalai Iyengar boy Kousika, Magam, Techinician BPL Company, Madras. 32/2000/160 cms. Reply with horoscope subsect no bar. Box No.10844

★ மணமகள் வக்கீல்/டாக்டர்/கௌரவமான குடும்பத்து பாசமிகு விதவைகள் விரும்பப்படுகிறது. நிறம், ஜாதி மத பேதமில்லை. நாட்டுக்கோட்டை செட்டியார் (அரும்பாக்கம்), வயது 39/ரூ. 5000/-, சொந்த அழகான எக்குறையு மற்ற எப்பிரச்னையு மற்ற சட்டப்படி விவாகரத்தான வழக்கறிஞர் எம். ஏ., பி. எல். பெட்டி எண் : 10846

* Wanted alliance from fair good looking tall unemployed graduate Kerala Iyer girl of good family for boy 33/180 cms B.Com., Vadamal, Bharani, Bharadwaja, shudha jadagam, working in family owned Pharmaceutical Company in Hyderabad. Box No.10848

* Fair graduate non-Gargaya girl for Brahacharanam B.Com., boy 27/174, Branch Manager, Delhi based Limited Company, only son, own house, South Delhi. Subsect no bar. Reply Box No.10849

* Suitable alliance invited from good looking educated, homely girl with musical background for Delhi's leading mridangam vidwan, Iyer, Brahacharanam, Sankruthi, Aswini 25/172/5000 p.m. simple marriage. Apply Box No.10850

* Wanted suitable alliance from employed/unemployed graduate girl for Brahacharanam, Krithigai, Haritha Gothram, boy B.Com., DBM., 30/5'.7"/2800 working as Admn. Assistant in Bangalore (Private Ltd.). Box No.10851

★ பிருகசரணம், பார்க்கவ கோத்ரம், செவ்வாய் தோஷமுள்ள 33 வயதான தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தில் சேர்ந்த பையனுக்கு தகுந்த பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 10852

* Wanted employed/unemployed widow without encumbrance for broadminded bachelor 29/3000/5'.9" Vadama, Bharadwaja, Poorattadhi, employed Central Railway. Subsect no bar. Reply with full family details. Box No.10853

* Tamil Pillai boy 26/160/5000 Civil Engineer Bombay seeks fair educated career minded vegetarian/non-vegetarian girl from well educated upper middle class family. Subsects no bar. Box No.10854

★ முஸ்லிம் பி. ஏ., 5000/- வருமானமுள்ள தந்தை மட்டும் உள்ள 30 வயதுடைய ஒரே பையனுக்கு கௌரவமான உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த அழகிய தமிழ் முஸ்லிம் பெண் தேவை. வீட்டு மாப்பிள்ளையாக சம்மதம். பெட்டி எண் : 10855

* Alliance invited for Vadama Commerce graduate bridegroom/Haritha/183 cms., 31/4000 Ayilyam 3rd padam, only son, employed in Reputed Organisation, only home loving employed Tanjore Vadama girl required. Box No.10856

* Vadama Kousika, Bharani, 36/180/2500 B.Com handsome very fair reputed firm Coimbatore employed boy seeks tall good looking graduate employed or unemployed girl. Reply with horoscope to Box No.10857

★ அஷ்டசஹஸ்ரம், ஆத்ரேய கோத்ரம், மிருகசீரிஷம், 25/172/2800, தமிழக அரசு [illegible] செகண்டரி கிரேட் ஆசிரியர், நாகை ஜில்லா. நல்ல வசதியுள்ள வரனுக்கு வேலை அல்லது இல்லாத அழகுள்ள குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 10858

★ வடமாள், கௌசிக கோத்ரம், அவிட்டம், 28, 5', 3000-/ சம்பளம் வாங்கும் பம்பாயில் சொந்த வீடு உள்ள பையனுக்கு தெய்வ பக்தி உள்ள, வேலை பார்க்கும் பெண்கள் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் : 10859

★ தமிழ் விஸ்வகர்மா (தட்டார்) 26 வயது, 165 செ.மீ. உயரம், டிப்ளோமா படித்து ரூ. 2000/- மாத வருமானமுள்ள கைதொழில் புரியும் மணமகனுக்கு அந்த இனத்தைச் சேர்ந்த +2 அல்லது டிகிரி படித்த அழகான, குடும்பப்பாங்கான தென் மாவட்டங்களைச் சேர்ந்த பெண் தேவை. எளிமையானத் திருமணம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10860

* Vadama, North-Arcot, Bharadwaja Gothram, Pooram Star, 28 Years, 163 cms, Medical Representative in a leading Pharmaceautical Company, Salary Rs. 4500/- p.m. requires Graduate Bride age not exceeding 24 Years. Apply with Horoscope and Family details to Box No. 10861.

* Tamil Viswakarma parents seek alliance for only son 28/168, Bharani Diploma Engineer own business from fair educated girl from well-to-do family. Reply with details to Box No.10862

★ தஞ்சை சோழிய வெள்ளாளர் பி.எஸ்ஸி/ 30/5'.3''/5000 சொந்த வீடு, நிலம் உள்ள மருத்துவ பிரதிநிதிக்கு அழகிய பட்டதாரி மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10863

* Brahacharanam, Bharadwaja Tamil Iyer, Thivuvonam B.Sc., CAIIB, clerk Nationalised Bank 32/173/5000 seeks well employed girl below 27 years transferable, Madras. Subsect no bar. Write to Box No.10864

★ வன்னிய கவுண்டர், மிருகசீரிஷம், வயது 29, எஸ்.எல்.சி. தெர்மோஸில் பணி, 2500/-.

எம்.எஸ்ஸி., பி.எட்., படித்த வரனுக்கு அதே இனத்தில் படித்த வேலைக்கு போகும்/போகாத மணமகள் தேவை. குடும்ப விவரம் மற்றும் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண் : 10865

* Alliance for Vadama, Bharadwaja 43, 180 cms handsome Professionally qualified Top Executive from graduate home loving attractive fair tall musically talented girls. Box No.10866

★ தென்கலை ஐயங்கார், பாரத்வாஜ/பரணி/ 36/173/3500 மத்திய அரசு பணியில் உள்ள விவாகரத்தான வில்லங்கமற்ற குழந்தை இல்லாத மணமகனுக்கு மாற்றலாகக்கூடிய அரசுப் பணியில்/வங்கியில் உள்ள ஐயங்கார்/ஐயர் மணமகள் தேவை. பெட்டி எண் : 10867

★ திருநெல்வேலி சைவப்பிள்ளை, திருவோணம், 33, பிஎச்டி., மத்திய பல்கலைக் கழகத்தில் வடஇந்தியாவில் வேலை பார்க்கும் வரனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த, முதுகலைப்பட்டம் படித்த, 24-28 வயதிற்குள் மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10868

★ வயது 31, இந்து வன்னியர் மூலம் 8 ல் செவ்வாய், ராகு உள்ள, மகாராஷ்டிராவில் தனியார் தொழிற்சாலையில் நிரந்தர ஆபரேட்டராக ரூ. 4000/- மாத வருமானமுள்ள மணமகனுக்கு படித்த அதே இனத்தை சேர்ந்த மணமகள், தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10869

* Correspondence invited from parents of fair Arya Vysya graduate girls for active computer graduate 24/174/5000 presently consulting in States having birth star Moolam 2nd padam. Box No.10870

★ ஐயர் வடமாள் ஸ்ரீவத்ஸ கோத்ரம் அவிட்டம் 28/5'.4''/பி.காம். கல்கத்தாவில் நல்ல கம்பெனியில் 3000 சம்பளத்தில் உள்ள பையனுக்கு வேலைக்கு செல்லும் பெண் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 10871

* Wanted non-Haritha, tall, slim, beautiful, Brahmin graduate girl of 23 to 28 age group for Senior class I Officer ONGC., 32, early registered marriage only. Box No.10872

* For Madhwa Brahmin graduate Engineer (Kashyapa Gothram, Pushya star), 26 years 6' tall working with a leading company in Pune salary 5000 + stating own house, educated good looking and accomplished bride. Please contact Box No.10873

* Wanted educated bride below 35 for handsome young looking Palghat Iyer SBI, Madras employed, Moudgalyam Poosam divorcee without encumberances, separated a month after marriage. 45/160/6500/-, owning flat in city. Reply with horoscope to Box No.10874

* Wanted transferably employed girl for post graduate Brahacharanam, Astham, Kashyabha boy employed in GIC subsidiary, Coimbatore, 3500/27/160 cms. Box No.10875

* Saiva Vellala Pillai, Bank Officer with clean habits 38/165/8500/- seeks good looking girl preferably P.G. Asst. (Science), or with P.G. (Science) and teaching qualifications. Box No.10876

* Sankrithi, Brahacharanam, Pooram, own profession with B.Com., (C.A.) 33/4000 well settled, propertied seeks graduate employed/unemployed Tamil Iyer girls, good family background. No dowry. Box No.10877

* Vadamal boy aged 29 years Garga/Thiruvadhirai, graduate/LDC State Govt. 2500/160 cms/owns house in city, suitable alliance invited. Box No.10878

* Alliance wanted for Tirunelveli Saiva Vellala Pillai well settled boy M.Sc., M.Ed., M.Phil., 30/172/5000 Govt. Permanent P.G. teacher from well settled parents of good looking bride. Apply with horoscope. Box No.10879

★ ஸ்மார்த்த கன்னட பிராமின் காசிப கோத்ரம், சதயம் வயது 31/5'.2'' ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மணமகனுக்கு அதே இனத்தில் அல்லது தமிழ், தெலுங்கு பிராமின் பட்டதாரி டிப்ளமா படித்த அழகான பெண் தேவை. ஜாதகத்துடன் அனுப்பவும். வயது 27 க்குள் இருக்க வேண்டும். பெட்டி எண் : 10880

* Alliance invited for Brahacharanam, Bharadwaja Jeashta medium complexion Iyer boy M.Sc., (Maths)/Diploma Computer Scientist ISRO Bangalore 28/180/4800 from graduate employed Tamil Iyer girls. Reply with horoscope to Box No.10881

* Graduate Vadama Brahmin widower (45) getting fixed income 3500 invites bride below 40 soft, submissive and not stout, short. Subsects, divorcees, widows no bar. Box No.10882

